கோடல் இயற்கைக்கு முற்றும் விரோதமாயிருத்தலின் அந்தத் துணைச் சிறப்பன்றாம்; ஆண் பெண் ஆகிய இரண்டு அன்றில்களில் ஒன்றுக்கு அழிவு நேருமேல் மற்றொன்று உடனே உயிர்விடும்; இச் செய்கையைப் பலர் நேரில் கண் கூடாகக் கண்டு மிருக்கலாம்; இதனாலேயே 'அன்றில் பிரிந்து பேடு ஆற்றுமோ மயல்தன்னை' என்றும், ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

இழப்ப- காரணப் பொருட்டாக வந்த செயவெனெச்சம். நீள் கழி, விரிகதிர்-வினைத் தொகைகள். இழப்ப எனவரும் நான் கிடத்தும் எண்ணும்மைகள் தொக்கன; இவை வினைச் செவ்வெண் எனப்படும்; "வினையொடு வரினுமெண்ணினையேற்பன" என்னுஞ் சூத்திரத்தில் 'ஏற்பன' என்றமையின் (இடையியல்-கூம்) சூத்திர விதிப்படி இத்தனையென்று கணக்கிடுந் தொகைச் சொல்லைப் பெறுவாயின. பைய- குறிப்பு வினையெச்சம்; பை-பண்புப் பகுதி, அ-பெயரெச்ச விகுதி, ய்-உடம்படுமெய்; பை என்பது மந்தம் எனப்பொருள்படும், வெவ்வாய் என்பதை இரண்டாம்வேற்றுமைத் தொகையாகக் கொண்டு 'வெவ்விய வாயையுடைய' எனப்பொருள் விரிப்பினுமமையும், கதிரோன்-எழுவாய்; அடைந்தான்-பயனிலை.

இதுவுமது.

98. மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கிற்
பாயிருளென்னும் படாம் வாங்கிச்—சேய்நின்
றறைந்தா ரணம்பாட ஆடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை.

(இ-ள்.) மாயிரு-மிகவும் பெரிய, ஞாலத்து-பூமியிலுள்ள, உயிர்-பிராணிகள், காண-பார்க்கும்படி, வான்-ஆகாயமாகிய, அரங்கில்-நடனசாலையில், பாய்-பரவிய, இருள் என்னும்-இருட்டு என்கிற, படாம் வாங்கி-திரைச்சீலையை விலக்கி, ஆரணம்-பூமியிலுள்ள வேதமானது, சேய்நின்று-தூரத்தில் நின்று, அறைந்து-உயர்ந்த வாக்கியங்களைச் சொல்லி, பாட-பாடுதலைச்செய்ய, வெய்யோன்-சூரியன், (ஒரு நாடகக்காரன் போல நின்று,) ஆடிப்போய்-நாட்டியஞ்செய்து கொண்டே சென்று, குடபால்-மேற்குத் திக்கில் உள்ள வரை-அஸ்தமய கிரியில், மறைந்தான்-ஒளிந்தான்; [எ-று.]

சூரியன், இருள் நீங்கவும் வேதகோஷங்கள் முழங்கவும் உதயஞ் செய்து, ஆகாயத்திற் சஞ்சரித்து அஸ்தமயகிரியிற் போய் அஸ்தமித்ததை, ஒரு நாடகக் காரன் நாடக மேடைமேல் நின்று ஆடிப்போனது போல உருவகப்படுத்தினர். இது சிறப்புருவகவணி யெனப்படும்; சிறப்புருவக மாவது: ஒரு பொருளை யெடுத்து அதற் குச் சிறந்த அடைகளை உருவகஞ் செய்து அவற்றானே யுருவக

மாக்கி யுரைப்பது. நாடகக்காரன் அரங்கில்வந்து முன்னிடப்பட்டுள்ள திரையை விலக்கிக்கொண்டு ஆடித் தன் ஆட்டம் முடிந்தபின் மறைவிடத்திற் செல்வது வழக்கமாதலின், அவ்வாறே தோன்றி மறைந்த சூரியனை அவனுக்கு நிகராகக் கூறினார்.

மா, இரு ஒரு பொருட் பன்மொழி; ஒரு பொருளை விசேஷப்படுத்திக் காட்டுதற்கு இங்ஙனம் இரண்டு சொற்கள் சேர்ந்து ஒரு சொன்னீர்மையனவாய் வருதல் இயற்கை; "ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்பது நன்னூற் பொதுவியல் சூத்திரம். மா - உரிச்சொல்லாதலின், வருமொழி முதலுயிர் புணர வகரந்தோன்று மிடத்து அது தோன்றாது "இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்" என்ற விதியால் யகரந்தோன்றிற்று.

இதில், அந்திப் பொழுது வந்தவிதம் கூறப்படுகின்றது.

99. மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

[இ-ள்] மல்லிகையே-மல்லிகை யரும்பினையே, வெண்சங்கா-வெண்மையான சங்காக, [வாயில் வைத்து], வண்டு-வண்டுகள், ஊத-ஊதி முழக்கவும், வான்- சிறந்த, கருப்புவில்லி-கரும்பு வில்லையுடைய மன்மதன், கணைதெரிந்து-பாணங்களை ஆராய்ந்து பார்த்தெடுத்து, [வில்லிற்றொடுத்து வைத்துக்கொண்டு], மெய்காப்ப-தேகத்தைக் காத்துவர, முல்லை எனும்-முல்லை மலர் என்கிற, மென்மாலை - மெல்லிய மாலையானது, தோள் அசைய-தோளில் அணியப்பட்டு ஆடாநிற்க, புன்மாலை-அற்பமான இருளையுடைய, அந்திப்பொழுது-மாலைக்காலமானது, [ஓர் அரசன் பவனிவருதல் போல்], மெல்ல நடந்தது-மிருதுவாக நடந்து வந்தது; [எ-று.]

அந்திப் பொழுது வந்ததை, சங்க முழக்கம் முதலிய சிறப்புக்களுடன் பவனிவரும் அரசன் வருவதுபோல உருவகப்படுத்திக் கூறினார் ஆசிரியர். மல்லிகை யரும்புகளில் மகரந்தம் உண்ணும் பொருட்டுச் சேர்ந்திருந்த வண்டுகள், அரசன் பவனிவருங்காலத்தில் சங்கத்தை வாயில்வைத்தூதி முழக்குவாரைப் போன்றிருந்தன. மாலைக்காலம் வந்தவுடனே தணந்தாரை வருத்துதற்கு மன்மதன் மலர்ப்பாணங்களுடன் ஆயத்தமாவது இயல்பு; அங்ஙனம் அவன் ஆயத்தமானது அந்திப்பொழுதாகிய அரசனுக்கு ஆயுதங்களுடன் மெய்காப்பாளன் வருவதுபோன்றிருந்தது; அரசன் வெளிச்செல்லுங்கால் மெய்காப்பாளர் உடன்செல்லுவது வழக்கம். முல்லை

மலர்கள் எங்கும் மலர்ந்தன. அந்திக்கால மாகிய அரசன் தோளில் மாலை அசைவது போன்றிருந்தது. இராஜநடை மந்தமான நடையாதலின் அதற்கேற்ப 'மெல்லநடந்தது' என்றார். அந்திப்பொழுதும் மெல்லவருதல் இயற்கை. அந்திக்காலம் வரும்போது சிறிது இருள் கலந்திருக்கு மாதலின் 'புன்மாலை அந்திப் பொழுது' என்றார்; மாலை இருள். இதில், கூறப்பட்டதும் சிறப்புருவகமெனப்படும்.

ஊத, காப்ப, அசைய என்பன வினையெச்சங்கள்; இவை நடந்தது என்னும் வினை முற்றைக்கொள்ளும்; இவற்றிற்கு 97-ம் செய்யுளிற் கூறிய இலக்கணங்களை அமைத்துக்கொள்க. மல்லிகை, முல்லை யென்பன பொருளாகு பெயர்கள். கரும்பு கருப்பு என்றாயது வலித்தல் விகாரம். வெண்சங்காவண்டூத, கணைதெரிந்து மெய்காப்ப என்பன இசை யெச்சங்களாதலின், இவற்றிற்கேற்ற சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன; இசையெச்சமாவது-வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற் கேற்ப ஒரு சொல்லும் பலசொல்லும் வருவித்துரைக்கப்படுவது. மெல்ல-குறிப்பு வினை யெச்சம்; மெல் பண்படிப் பகுதி, அ-வினை யெச்சவிகுதி, லகர மிரட்டியது சந்தி, மாலைக் காலமானது தணந்தார்க்கு மிகவுந் துன்பத்தைச் செய்வதாதலின், அதுகுறித்து, "புன்மாலை அந்திப்பொழுது" என்பதற்கு 'அற்பமான இயல்பினை யுடைய மாலைக்காலம்' எனப்பொருளுரைப்பினும் அமையும்; இங்கே மாலை-இயல்பு, அந்திப்பொழுது-எழுவாய், நடந்தது-பயனிலை.

இதில் அந்திக்காலத்தின் இயல்பு கூறப்படுகின்றது.

100. புற்கென்ற ரந்தி புனைமலர்க்க ணீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான்—முற்கொண்
டடைகின்ற வேந்தர்க்கும் ஆண்டெஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போ லின்று.

[இ-ள்] அந்தி-[மேற்கூறியபடி தோன்றிய] அந்திப் பொழுதானது, புற்கு என்றார்-விரகதாபத்தினால் கபிலநிற மடைந்தவர்களுடைய, புனை-அழகிய, மலர்க்கண்-நீலோற்பல மலர் போன்ற கண்களில், நீர் அரும்ப-நீர் சுரக்கும்படி, நிலம்காப்பான்-ஓர் அரசனிடத்திலுள்ள பூமியைக் கைப்பற்றிக் காக்கும்பொருட்டு, முற்கொண்டு - முன்னேறி, ஆண்டு - அரசாண்டு, அடைகின்ற - சேர்கின்ற வேந்தர்க்கும்-அரசர்க்கும், எஞ்சினோர்க்கும்-இறந்துபோன பழைய அரசர்க்கும் இடை நின்ற காலம் போல்-நடுவில் நின்றகாலம் அவர்களுக்குக் கலக்கத்தைச் செய்வதுபோல, நிற்கின்றது. அவ்விரகதாபத்தை யுடையார்க்குக் கலக்கத்தைத் தருவதாய் நின்றது. அந்தோ; [எ-று.]

ஓர் இராஜ்ஜியத்தைக் கைப்பற்றத் துணிந்து முன்னேறிச் சென்றவர்க்கும், ஆண்டு அழிந்தவர்க்கும் இடையிலுள்ள காலம் 'நமக்கு வெற்றியுண் டாக்குமோ' தோல்வி யுண்டாக்குமோ' என்னும் கலக்கத்தை யுண்டாக்கும்; அதுபோல் அந்திப் பொழுதும் விரகதாபத்தை யுடையார்க்கு, 'நம் காதலர் நம்மைச் சேர்வரோ சேரமாட்டாரோ' என்னும் கலக்கத்தை யுண்டாக்கக் கூடியதாதலின், இஃது அதற்கு நிகராகச் சொல்லப்பட்டது; விரக தாபத்தை யுடையாரென்பது மணஞ்செய்து காதலரைப் பிரிந்தாரையும், மணஞ்செய்யாது ஒரு காதலர்மேல் காந்தர்வ முறைப்படி விருப்பங் கொண்டிருப்பாரை யுங் குறிக்கும்; ஆகவே, மேலே 'முன்னேறிச் சென்றவர்க்கும்' 'எஞ்சிநின்றவர்க்கும்' என்ற உவமை இவ்விருபாலார்க்கும் பொருந் திற்று. இன்னும் அந்திப்பொழுது, சூரியனால் விடப்பட்டும், சந்திர னால் கைப்பற்றப்படாமலுமிருப்பதாதலின், மேற் கூறப்பட்டவர்க ளின் காரியத் தொடக்கத்திற்கும் முடிவிற்கு மிடையிலுள்ளகாலத் தோடிதனை ஒப்பிட்டது மற்றொருவகையிலும் மிகப் பொருத்த முடைத்தென்க. இன்னும், 'நிலங்காப்பான் முற்கொண்டடைகின்ற வேந்தர்க்கும் ஆண்டெஞ்சினோர்க்கும் இடைநின்ற காலம் போல்; என்ற தொடருக்கு, "தாங்கள் நிலத்தைக் காக்குந் தன்மையினால் [அதாவது தாம் அரசராயிருப்பதால் தம்மைத் தமயந்தி மணம் புரிந்து கொள்வாளென்னும் எண்ணத்தினாலே] சுயம்வரம் ஏற்படுத் தப்பட்டிருக்கும் அவ்விடத்தில் முன்னேறி அடைந்தவர்க்கும், தம்மை அவள் மணம் புரியமாட்டாளென்னும் எண்ணத்தால் எஞ்சி அங்குப்போகாமல் நின்றவர்க்கும், தமயந்தியின் மணம் நிகழ்வதற் கிடையில் நின்றகாலம் 'தமயந்தி எவரை மணஞ்செய்வாளோ' 'நளன் நம்மை மணஞ்செய்து கொள்ளுவானோ' என்னுஞ்சந்தேகத் தால் கலக்கத்தையுண்டாக்கியது போல்" எனப் பொருள்கொள்ளி னும் அமையும்.

புற்கு-கபிலநிறம்; அதாவது கருமை கலந்த பொன்னிறம்; இதுபசுமையாயிருக்கும். எனல் என்பது என்றிருத்தல் எனப் பொருள் படுதலால் புற்கென்றார் என்பது கபில நிறம் பெற்றிருப்ப வர் எனப் பொருள் பட்டது; இதனை, 'தண்ணென்றிருந்தது' என் பது 'குளிர்ந்தது' எனப் பொருள் படுவது போலக் கொள்க. புற்கென்றார் என்பதில் என்று என்னும் இடைச்சொல் பண்போ டியைந்தது; "வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும், என வெனு மொழிவரு மென்று மற்றே" என்னும் [நன்- இடை-5-ஆம்] சூத்திரவிதியா லிஃதமைந்ததென்க. இனி, 'புற்கென்றாரந்தி புனை மலர்க்கணீ ரரும்ப நிற்கின்றது' என்பதை 'புற்கென்று ஆர் அந்தி புனைமலர்க்கண் நீர் அரும்ப' எனப்பிரித்து, கபில நிறமாகப் பொருந்திய

அந்திப் பொழுதானது அழகிய மலர்களாகிய கண்களில் தேனாகிய நீர் சுரக்கும்படி நிற்கின்றது' எனப் பொருள் கொண்டு, அந்தியை ஒரு விரகியைப்போல ஆசிரியர் உருவகஞ் செய்தாரெனினும் அமையும்; இங்ஙனங் கொள்ளுமிடத்து, அந்திக்கால சூரியகிரணஞ் சிறிதும் இருள் சிறிதும் கலப்பதால் மாலையில் கபிலநிறமுண்டாகுமென்க; அந்தி-அந்த்யம் என்னும்வடசொற்றிரிபு; இதற்குக் கடைசியென்று பொருள். இதுபகலின் முடிவுகால மாதலின். அந்தோ-இரக்கக் குறிப்பிடைச்சொல். 'புற்கென்றார் கண்ணீர் அரும்ப' என்பதற்கு கபிலநிறமடைந்த விரகிகள் கண்ணீர் வடிக்க' என்றும் பொருள், கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின், "உயர் திணை தொடர்ந்த பொருண்முதலாறும், அதனொடு சார்த்தி னத்திணை முடிபின" என்னும் [நன்-பொ-26] சூத்திர விதியால் இஃதமைந்ததென்க. 'நிற்கின்றது' என்பது இயல்பினால் வந்த காலவழுவமைதி. "விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும், பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி" என்பதுவிதி. இச்செய்யுள் ஆசிரியர் கூற்றாக அமைந்தது. இன்று-அசை.

இதில் சந்திரோதயம் சொல்லப்படுகின்றது.

101. பைங்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன—வந்ததால்
மையார்வேற் கண்ணாள் வனமுலைமே லாரழலைப்
பெய்வா னமைந்த பிறை.

[இ-ள்] பைங்தொடியாள்-பசியவளையலையணிந்த தமயந்தியினது, ஆவி-உயிரை, பருகுவான்-குடிப்பதற்கு, நிற்கின்ற-மேற்கூறியபடி தோன்றிநின்ற, அந்தி-மாலைக்காலமானது, முறுவலித்தது ஆமென்ன-[தன் காரியம் சித்தியாதற்குச் சந்தோஷித்து] சிரித்ததாமென்று சொல்லும்படி, மைஆர்-அஞ்சனம் பொருந்திய, வேல்-வேலைப்போன்ற, கண்ணாள்-கண்களையுடைய தமயந்தியின், வனம்-அழகு பொருந்திய, முலைமேல்-தனங்களின் மீது, ஆர்-நிறைந்த, அழலை-நெருப்பை, பெய்வான்-சொரியும் பொருட்டு, அமைந்த-பொருந்திய, பிறை-சந்திரன், வந்தது-ஆகாயத்தில் தோன்றியது; [எ-று.]

நளன் மீது காதல் கொண்டு அவனைக் கூடாதிருந்த தமயந்திக்கு அந்திப்பொழுதானது மரண வேதனைக்குச் சமமாகிய வேதனையைச் செய்வதாதலின் அதனை 'பைங்தொடியாள் ஆவி பருகுவானிற்கின்ற அந்தி' என்றார். ஒருவர்க்குக் காரியசித்தியில் சிரிப்புண்டாவது இயற்கை யாதலின், இங்கே ஆவிபருகநின்ற அந்திக்கு முறுவல் சொல்லப்பட்டது. மாலைக்காலத்தில் சந்திரன் தோன்றி

யது அம்மாலை சிரித்தது போன்றிருந்த தென்க. விரகதாபத்தை யுடையார்க்குச் சந்திரன் வெம்மை செய்யக்கூடியதாதலின், அதனை 'அழலைப் பெய்வான் அமைந்த பிறை' என்றார். அந்தி முறுவலித்தல் என்பது இல் பொருளுவமை.

பருகுவான், பெய்வான் என்பன வினை யெச்சங்கள். நிற்கின்ற அமைந்த-பெயரெச்சங்கள். ஆல்-அசை.

இதில் திங்கள், தமயந்தியின் மீது நெருப்பைச்
சொரிந்தமை கூறப்படுகின்றது.

102. கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்—ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேற் போதச் சொரிந்ததே
நீணிலா வென்னு நெருப்பு.

[இ-ள்] கூட்டுமைபோல்-சேர்க்கப்பட்ட மையைப் போல, சிறந்த-நிறத்தினால் சிறப்புற்ற, கூர்-மிகுதியான, இருளை-அந்தகாரமென்னும் மண்ணை, கூன்-வளைவாகிய, கோட்டால்-பக்க மென்கிற கொம்பினால், கோட்டு மண்கொண்ட-[குத்திப் பெயர்த்தெறிந்து அதனால் அக் கொம்பில் தங்கிய] கோட்டு மண்ணாகிய களங்கத்தைக் கொண்ட, குளிர் திங்கள்-குளிர்ச்சி பொருந்திய சந்திரனென்னும் விருஷபம், ஈட்டும்-சேர்க்கப்படுகின்ற, மணிப்பூண்-இரத்தினாபரணங்கள், நிலாம்-பிரகாசிக்கின்ற, மென்முலைமேல்-[தமயந்தியின்] மெல்லிய தனங்களின் மேல், நீள்-அதிகமான, நிலா என்னும்-சந்திரிகையென்கின்ற, நெருப்பு-அக்கினியை, போத-நிறைய, சொரிந்தது-(துன்பம் விளையுமாறு) பெய்தது; [எ-று]

இருளைப் பெயர்த்தெறிந்து தன்னிடத்தே களங்கத்தைக் கொண்டு விளங்கிய சந்திரனைப் பூமியைக் கொம்பினால் பெயர்த்தெறிந்து அக்கோட்டில் மண்ணைக் கொண்டு செருக்குற்றுத்திரியும் ஓர் இடபமாக உருவகப்படுத்தினார். 'கோட்டு மண்கொண்ட' என்ற குறிப்பினால் விருஷபம் குறிப்பிடப்பட்டது; அதற்கேற்ப இருள் மண்ணாகவும், வளைந்த பக்கம் கொம்பாகவும், திங்கள் விருஷபமாகவுங் கொள்ளப்பட்டன. கோட்டால் என்பதற்குப் பின், 'குத்திப் பெயர்த்தெறிந்து அதனால் அக்கொம்பில் தங்கிய' என்ற சொற்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. 'கூன்கோடு' என்பது சிலேடையாய் வளைவாகிய சந்திரனுடைய ஓரப்பக்கத்தையும், வளைந்த கொம்பையும் உணர்த்திற்று. யானை, விருஷபம் முதலியன மதர்த்துக் கொம்பினால் பூமியைக் குத்திப்பெயர்த்தெறியுங்காலத்தில் அவற்றின் கொம்பில் சிறிது மண் தங்கி யிருக்கும்; அது

கோட்டு மண்ணென்று சொல்லப்படும்; அம்மண் மதர்த்துத்திரியும் யானை, எருது முதலியவற்றிற்கு ஒரு வீரசின்னமாம். தமயந்தி பெயர் கூறப்படாமல், 'திங்கள் தனத்தின்மேல் நெருப்பைச் சொரிந்தது' என்று கூறப்பட்டிருப்பினும் அந்தி, நிலாத் தோற்றம் முதலியன அவள் பொருட்டே கூறப்படுவன வாதலின், தமயந்தி என்னும் பெயர் கூட்டியுரைக்கப்பட்டது. சந்திரனிடத்தே உள்ள களங்கம் இருளின் சிறு கூறுபோற் கரியதாதலின், அதனை இருளிற் பெயர்த்தெடுத்ததாகக்கூறினர்.

கூட்டுமை-வினைத்தொகை. சிறந்த, கொண்ட, நிலாம் என்பன பெயரெச்சங்கள். நிலாவும் என்னும் பெயரெச்சம் ஈற்றயலுயிர் மெய் கெட்டு நின்றது; "செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்....." என்னும் [நன்-வினை. 22-ம்] சூத்திரத்தை உய்த்துணர்க. நிலா வென்னு நெருப்பு-இருபெயரொட்டுப் பண்பு. நெருப்பு-நெருப்பை; இரண்டன் தொகை.

தமயந்தி தன் காதற் றுன்பத்தை அன்னங்களிடத்தே கூறுதல்.

103 அன்னங்கா ணீங்களுமவ் வாதித்தன் றானும்போய்
மன்னும் படியகலா வல்லிரவில்—மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள்
பிழைத்தால்வந் தேனென்னும் பேர்.

[இ-ள்] அன்னங்காள்-அன்னங்களே!, நீங்களும்-நீவிரும், அ-அந்த, ஆதித்தன் தானும்-சூரியனும், போய்-சென்று, மன்னும்படி-உங்கட் குரியவிடங்களிற் பொருந்தி யிருக்கும்படி, அகலா-நீங்காத, வல்இரவில்-வலிமையான இவ்விராத்திரியில், மின்னும்-மின்னிப் பொழிகின்ற, மழை-மேகங்களின், தாரை-நீரொழுக்காகிய, வல் இருட்கும்-வலிமையாகிய இருட்டுக்கும்,வாடைக்கும்-வடகாற்றுக்கும், நாங்கள்-நானும் என்னைப் போன்றவர்களும், பிழைத்தால்-உயிர் நீங்காமல் தப்பினால், [நாளை நீங்கள் வரும்போது உங்களிடத்தில்] பேர்-எம்முடைய பேரும், வந்தேன் என்னும்-நானும் பிழைத்து வந்தேன் என்று கூறும், [நாங்கள் பிழைப்போம் என்பதும் எங்கள் பேர் நிலைக்கும் என்பதும் சந்தேகந்தான் என்றபடி.]

மேற்கூறியபடி நிலவு தோன்றிய பின்னர் சிறிது மழையும் வாடைக்காற்று முண்டாகத் தமயந்தி வருந்தித் தன்னைப்போலவே அவற்றிற்கு விரோதமுடையனவாகிய அன்னங்களை விளித்து அவற்றினிடம் இங்ஙனங் கூறினள். சூரியனும் மழைக்கு விரோதியாதலின் அதனையுஞ் சேர்த்து 'நீங்களும் அவ்வாதித்தனும் போய் மன்னும்படி' என்றான். ஒரு வகுப்பார்க்கு விரோதிகளான மற்றொரு

வருப்பார் தங்கள் குறைகளையும், விரோதிகளின் கொடுமைகளையும் கலந்து பேசிக்கொள்ளுதல் இயல்பு. மழையும், வாடையும் உண்டான விடத்துச் சூரியன் மறைதலும், அன்னங்கள் ஒடுங்குதலும் இயற்கை. இன்னும் இரவும், சூரியனை ஒழித்து, அன்னங்களையொடுக்கி, தமயந்தியையும் வருத்தக் கூடியதாதலின் 'நீங்களும் ஆதித்தனும் போய் மன்னும்படி அகலாவல்லிரவில்' என்பதற்கு, "நீங்களும், சூரியனும் சென்று மறைந்திருக்கும்படி நீங்காத இராத்திரியில்" எனப்பொருள் கொண்டு அவற்றின் ஒடுக்கத்திற்கு இரவையே காரணமாகக் கூறினும் அமையும். இந்த இரவிலும், மழையிலும், வாடையிலும், அன்னங்களும், ஆதித்தனும், மறைந்திருந்தாலும் மறுதினம் வெளிவருவதில் நிச்சயமுண்டு; விரகிகளுக்கோ தாங்கள் வாதனைப்படுவதால் தங்கள் உயிர்நிலைக்கும் விஷயத்தில் ஐயமே நிகழும்; ஆதலினாலேயே, தமயந்தி அன்னங்களிடத்தே "நீங்களும் எங்களைப் போலவே ஒடுங்கினீரெனினும் நாளை வெளிப்படுவீர்கள்; நாங்கள் பிழைத்து வருவது நிச்சயமில்லை" என்னும் குறிப்புத்தோன்ற "நாங்கள் பிழைத்தால் வந்தேனென்னும் பேர்" என்றாள்; பேர்நிலைத்து நிற்றலே ஒருவர் நிலைபெற்றிருத்தற்கும், பேர்மறைதலே ஒருவரின் அழிவுக்கும் முக்கிய அறிகுறிகளாதலின் 'பிழைத்தால் பேர் வந்தேன் என்னும்' என்றாள். 'பேர்வந்தேன் என்னும்' என்பதாவது, 'பேரானது உங்களைப்போலவே நானும் பிழைத்து வந்தேன் என்று சொல்லும்' என்பதாம். 'நாங்கள் பிழைத்தால் எங்கள்பேர் இந்த உலகின் கண் நிலைநின்று வழங்கும்' என்றபடி.

அ ஆதித்தன் என்பதில் அகரம் சேய்மைச் சுட்டு. ஆதித்தன் றானும் என்பதில் தான்-அசையிடைச்சொல். மின்னுதலே மழை பொழிதலுக்குக் காரணமாதலின் 'மின்னும்' என்பதற்கு 'மின்னிப் பொழியும்' என்று பொருளுரைக்கப்பட்டது. மழைத்தாரைகள் நெருங்கிய விடத்து இருளுண்டாவது இயற்கையாதலின் 'தாரை வல்லிருள்' என்றார். இருட்கும், வாடைக்கும் என்பவற்றுள் நான்கனுருபு நீக்கப்பொருளில் வந்தது; இஃதுருபு மயக்கம், "யாதனுருபிற் கூறிற் றாயினும், பொருள்சென் மருங்கில் வேற்றுமை சாரும்" என்பது விதி. 'பிழைத்தால் வந்தேன் என்னும் பேர்' என்பதில் 'நாங்கள் பிழைப்பது மில்லை, எங்கள் பேர் நிலைத்து நிற்பதுமில்லை' என்ற கருத்து அடங்கியிருப்பதால் இஃது எதிர்மறையெச்ச மெனப்படும்.

தமயந்தி, ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களைச் சந்திரன் வெம்மையால் ஏற்பட்ட கொப்புளம் என்று கூறுதல்.

104. செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்

மீன்போதிந்து நின்ற விசும்பென்ப தேன்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து.

[இ-ள்] செப்பு-பொற் செப்பை நிகர்த்த, இளம் கொங்கைமீர்-இளமையாகிய தனங்களையுடைய தோழிப்பெண்களே!, இப்பொழுதும்-இக்காலத்திலும்; திங்கள்-சந்திரனது, சுடர்பட்டு-கிரணம் தாக்கியதனால், கொப்புளம் கொண்ட-கொப்புளங்களை யடைந்த, குளிர்வானை-குளிர்ச்சிபொருந்திய ஆகாயத்தை, (நீங்கள்) தெரிந்து-அறிந்திருந்தும், தேன்பொதிந்த-தேன்போலும் இனிய சொற்கள் நிறைந்த, வாயால்-உங்கள் வாயினாலே, மீன் பொதிந்து நின்ற-நக்ஷத்திரக்கூட்டங்கள் நிறைந்து நிலைபெற்ற, விசும்பு என்பது-ஆகாயம் என்று சொல்வது, என்கொலோ-என்ன புதுமை! [எ-று.]

தமயந்தி நெடுந்தூரத்திலிருக்கும் தன்னையே சுடுகின்ற சந்திரன், தான் சஞ்சரிக்குமிடத்திலுள்ள ஆகாயத்தை மிகவும் தகிப்பானென்றும், அதனாலேயே அங்குக் கொப்புளங்கள் அதிகமாகக் கிளம்பின வென்றும் தன் காதல் மயக்கால் இங்ஙனம் ஒன்றை மற்றொன்றாகக் கருதிக் கூறினளென்க. தோழிகள் உள்ளதை உள்ளபடி உணர்ந்து இனிய வார்த்தைகளால் சொல்லக்கூடியவர்களாயிருந்தும் தன்னுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஆகாயத்தை மீன்பொதிந்ததென்று கூறியதால், அதன் பொருட்டு அதிசயித்து "கொப்புளங்கொண்ட குளிர்வானை, தேன்பொதிந்த வாயாற்றெரிந்து, மீன்பொதிந்துநின்ற விசும்பென்பதென்கொலோ" என்றாள். இங்ஙனம் நக்ஷத்திரங்களைக் கொப்புளங்களாக உருவகித்துக் கூறியது அவநுதி யுருவகவணி எனப்படும்; அவநுதியுருவகமாவது உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளை யுடன்பட்டுக் கூறுதலாம்; இதில் உண்மைப் பொருள்களாகிய நக்ஷத்திரங்களை மறுத்து ஒப்புமைப் பொருள்களாகிய கொப்புளங்களை உடன்பட்டுக் கூறினமை யுணர்க. "ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ வீற்றயல்" என்னும் (நன்-பெய 52-ஆம்) சூத்திர விதிப்படி, 'கொங்கைமார்' என்னும் ரகரவீற்றுயர் திணைப் பல்லோர் படர்க்கைப்பெயர் ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகத்திரிந்து விளியாயிற்று. கொல் என்னும் அசையிடைச் சொல் இங்கே வியப்புப் பொருளில் வந்தது. தேன் இனிமைக்காய் இனிமை சொல்லுக்காயிற்று; இஃது இருமடி யாகுபெயரெனப்படும்.

மன்மதனைச் சிவன் கொன்றதாகச் சொல்வது
பொய்யென்று தமயந்தி கூறுதல்.

105. கானுந் தடங்காவுங் காமன் படைவீடு
வானுந்தேர் வீதி மறிகடலும்—மீனக்
கோடியாடை வையமெல்லாங் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய்.

[இ-ள்.] கானும்-காடுகளும், தடம்-விசாலமான, காவும்-சோலை களும், காமன்-மன்மதனுடைய, படைவீடு-பாசறை [அதாவது சண்டைக்கு ஆயத்தமான சேனைகள் தங்குமிடமாம்.] வானும்-ஆகாயமும், தேர்வீதி இரதத்தைச் செலுத்துகின்ற தெருவாம், மறி-அலைகள் மடங்குகின்ற, கடலும்-சமுத்திரமும், மீனக்கொடி ஆடை-மச்சவுருவம் எழுதப்பெற்ற கொடிச் சீலையாம், வையம் எல்லாம்-பூமி முழுதும், கோதண்ட சாலை-வில் வைக்குமிடமாம், [இவை இங்ஙன மிருப்ப] பொடியாடி-சிவபெருமான், கொன்றதெல்லாம்-[அக்காமனைக்] கொன்றதாகச் சொல்லுவதெல்லாம், பொய்-அபத்தமேயாம்; [எ-று]

மன்மதனுடைய படைவீடு, தேர்வீதி, கொடி முதலியன வெல்லாம் நிலைபெற்றிருந்தலாலும், தனக்கவன் வேதனையைச் செய்வதனாலும் தமயந்தி அம்மன்மதன் இருப்பதை யுணர்ந்தாள். ஆதலின், அவன் இங்ஙனமிருப்பது மெய்யாயிருக்க, உலகத்தவர், பொடியாடி அவனைக் கொன்று விட்டாரென்று சொல்வது பொய் யென்று கூறினாள் என்க. அடவியிலும் சோலையிலும் மன்மதன் படைக்குறிகளாகிய மலர்களும், மயில், குயில், கிளி, வண்டு முதலியவைகளும் தங்கியிருப்பதால் அவற்றை அவனுக்குப்படைவீடென்றும், ஆகாயத்தில் அவன்தேராகிய தென்றல் சஞ்சரிப்பதால் அதனைத் தேர் வீதியென்றும், கடலில் அவன் கொடியாகிய மீனத்தின் இனங்கள் சஞ்சரிப்பதால் அதனைக் கொடியென்றும், பூமியெல்லாம் அவன் வில்லாகிய கரும்பு நிறைந்திருப்பதால் அதனைக் கோதண்ட சாலையென்றும் உருவகப்படுத்தினார் ஆசிரியர். காடு குறிஞ்சியைச் சார்ந்தது; சோலை மருதத்தைச் சார்ந்தது. இவ்விரண்டிலும் மன்மதன் படைகள் உண்டு. கான் என்பது காட்டை உணர்த்து மென்பதையும், கா என்பது சோலையை உணர்த்து மென்பதையும், "துடவை நந்தனவனம் பூந்தோட்டமே யரியுய்யானம், கடிபொழிலுத்தியானங் காமரச் செறிவாராமம், நெடியதண்டலையினோடு நீருபவனமே சோலை" "அடவிகான் புறவம் பொச்சை யாரணியங்காந்தாரம், கடம்வன முளரி தில்லங் ககனங் கண்டகமே தாவம், விடர்சுரம் பழுவங்கானல் விபினமே கட்சிகானம், கடறு கானனமே யத்தங் களரிகாடிருபானாற்பேர்" என்னும் சூடாமணி நிகண்டுச் செய்யுளடிகளாலுணர்க.

படை-பாசறை, அதாவது பகைமேற் சென்றோர் உறைவிடம், மறிகடல்-வினைத்தொகை; வையமெல்லாம்-என்பது ஒருமையிற் பன்மைவந்த பால் வழுவமைதி "ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும், ஒரிடம் பிறவிடந் தழுவலுமுளவே" என்பது [நன்-பொது-29-ஆம்] சூத்திரம். கொன்றதெல்லாம் என்பதையும் இங்

னமே கொள்க. பொடி-திருவெண்ணீறு அதனைப் பூசியவர்-பொடியாடி.

தமயந்தி நிலவு, இரவு முதலியவற்றை நிந்தித்துப் புலம்புதல்.

106. கொள்ளைபோ கின்ற துயிரென்னுங் கோளரவின்
முள்ளெயிறே மூரி நிலாவென்னும்—உள்ளம்
கோடிதிரா வென்னுங் குழையுந் தழல்போல்
நெடிதிரா வாய்புலரா நின்று.

[இ-ள்.] உயிர்-என்னுடைய ஆவி, கொள்ளைபோகின்றது-மன்மதனால் பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்ட பொருளாகச் செல்கின்றது, என்னும்-என்று [தமயந்தி] சொல்லுவாள், மூரி-வலிமையுள்ள, நிலா-சந்திரன், கோள்-கொல்லுந் தொழிலையுடைய, அரவின்-பாம்பினது, முள் எயிறே-முள்ளைப்போன்ற விஷப்பல்லோ, என்னும்-என்று பிதற்றுவாள். இராகொடிது என்னும்-இந்த இரவானது கொடுமையுடையது என்று கூறுவாள். [இவ்வாறு] நெடிது இரா-நீண்டதாகிய இரவில், [பல கூறி] தழல்போல்-நெருப்பைப்போல, வாய்புலராநின்று-வாய் உலர்ந்து, உள்ளம் குழையும்-மனம் வாடுவாள்; [எ-று]

மன்மத பாணத்தாலும், சந்திரனாலும், இரவாலும் வருந்திய தமயந்தி, உயிர் கொள்ளைபோகின்றதென்றும், நிலவு பாம்பின் விஷப்பல்லென்றும், இரவு கொடிதென்றும் கூறி வாய்புலர்ந்து மனம் வாடினளென்பது இதன்கருத்து. கொள்ளை-பலாத்காரமாக ஒருபொருளைப் பறிக்குந் தொழில்; இஃதிங்கே ஆகுபெயராய்க் கொள்ளையிடும் பொருளையுணர்த்திற்று. இங்கே இவள் சம்மதமின்றியே மன்மதன் இவளுடைய உயிரை வருத்திக் கவரத்துணிந்தானாதலின், 'உயிர் கொள்ளை போகின்றது' என்றாள். காதலால் ஆவி கலங்குதல் கொள்ளை போதலாகக் கூறப்பட்டது. நிலவு, விரகிகளுக்கு விஷத்தைப்போல வெப்பத்தைச் செய்வதாதலின் அதனை, 'கோளரவின்முள்ளெயிறே' என்றாள். இரவு சீக்கிரம் கழியாமலிருந்து துன்பத்தைச் செய்ததாதலின் அதனை,' இரா கொடிது' என்றாள்.

என்னும்-செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; பெண்பாலைக் கொண்டு முடிந்தது; இது படர்க்கையிற் பலர்பால் ஒழிந்த ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின் பால்களிற் செல்லும்; "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகும் செய்யுமென்முற்றே" என்பது [நன்-வினை-29] ஆம் சூத்திரம். கோளரவு-இரண்டனுருபும் பயனும் தொக்க தொகை. கோள்-முதனிலை

திரிந்த தொழிற் பெயர். முள்ளெயிறு-உவமைத்தொகை. உள்ளங் குழையும் எனக்கூட்டியது, கொண்டுகூட்டுப் பொருட் கோள்; "யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை, ஏற்புழியிசைப்பது கொண்டு கூட்டே" [நன்-பொது-67-ஆம் சூத்திரம்] என்பது விதி. கொடிதிரா-மொழிமாற்று. 'வாய்புலராநின்று உள்ளம் குழைந்தாள்' என்பதில் சினைவினை முதலொடுமுடிந்தது. "சினைவினை சினையொடும் முதலொடுஞ்செறியும்" என்பது [நன்-வினை-26-சூத்திரம்] விதி. புலராநின்று-புலர்ந்து, இது செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இதில், புலராநில்-பகுதி; புலர்-பகுதியெனின், ஆநில்-சாரியை யெனக் கொள்ளப்படும்.

103-ஆம் செய்யுளில், 'நாங்கள் பிழைத்தால் வந்தேனென்னும் பேர்' என்பது முதலாக, இச் செய்யுளில், 'கொள்ளை போகின்ற துயிர்' என்பதீறுகக்கூட்டி, என்னும் என்ற முற்றோடு முடிக்க.

தமயந்தி சந்திரனை நோக்கிக் கூறி மாரனையும் சூரியனையும் பழித்தல்.

107. ஈர மதியே இளநிலவை இங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவதேவன்—மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
இரவளித்தா னல்லனே வின்று.

[இ-ள்.] ஈரம்-குளிர்ச்சி பொருந்திய, மதியே-சந்திரனே, இளநிலவை-இளமையாகிய சந்திரிகையை, இங்ஙனே-இவ்வாறு வெப்பமாயிருக்கும்படி, சோர்குழலின் மீது-தளர்கின்ற கூந்தலையுடைய பெண்ணாகிய என்மேல், சொரிவது-பொழிவது, எவன்-யாது காரணம்?, மாரன்-மன்மதன், பொர-இவ்வாறு என்னோடு போர் செய்து வருத்தி என்னை வெல்லும்படி, உனக்கு-நினக்கு, கண்ணி-வெற்றி மாலையை, அளித்தான்-கொடுத்தான், [இப்படி உனக்கவன் வெற்றி மாலையைத் தரவும் நீ ஜெயங்கொள்ளவும் அநுகூலமாயிருக்கும்படி] இன்று - இன்றைக்கு, புலரா-விடியாத, இரவு-இராத்திரியை, அளித்தான்-கொடுத்துவிட்டுப் போய் மறைந்து இன்னும் வாராமலிருக்கிற சூரியன், நல்லனே-நன்மையையுடையவனே, [மிகவும் கொடியன் என்றபடி.]

இச்செய்யுளும் அடுத்த பாட்டும் குளகமாதலின் இதன் ஈற்றிலுள்ள 'இன்று இரவளித்தான் நல்லனே' என்பதையும், அடுத்த செய்யுளின் முதலிலுள்ள, "வெங்கதிரோன்றன்னை விழுங்கிப்புழுங்கியோ' என்பதையும் கூட்டி முடித்துக் கொள்க. இச்செய்யுள் 'ஆடிவரிவண் டருகே பறக்கவே' என்ற பாடலுக்குப்பின் 110-வதாக முன் அச்சுப் பிரதிகளில் சேர்க்கப்பட்டிருந்ததெனினும், ஆங்கு

முன் பின் தொடர்ச்சியின்றியும், முடிபில்லாமலும் இருந்ததை நோக்கி, உரைக்குப் பொருத்தமாயிருக்குமாறு ஈண்டுச் சேர்த்துக் கொள்ளப்பட்டது; பொருத்தமில்லாததோரிடத்தில் ஒருசெய்யுளை வைத்து இசை யெச்சமாகப் பல சொற்களைக் கூட்டி வலிந்து பொருள் கொண்டு முடித்தலினும், அதனைப் பொருத்தமுள்ள விடத்திற் சேர்த்து உரை யெழுதல் கிரமமென்பது எமது துணிபு. ஏட்டுச் சுவடிகளில் செய்யுள் வரிசை, மாறுபட்டுக் கிடத்தலுங் கூடுமாதலின், அச்செய்யுட்களை அந்த வரிசையின்படியே வைத்து வலிந்து பொருள் முடிபு கண்டெழுதுதல் அத்துணைச் சிறப்பன்று. பொருண் முடிபுக்குத்தக அவற்றை இடமாற்றிச் சேர்த்தல் மிகவும் பொருத்த முடைத்தாம். இதனால் நூலுக்கு எவ்விதமான குறைவுபாடுமின்றென்பதை அறிஞர் உணர்வர்.

சந்திரன் குளிர்ச்சியையுடையதா யிருந்தும் தன்னுடைய விரக தாபத்தினாலே தமயந்திக்கு அது வெப்பமுடையதாய்த் தோற்றியமையால் அவள் அதை நோக்கி, 'குளிர்ச்சி பொருந்திய இளநிலவை நீ இப்படி வெப்பமாகச் சொரிதற்குக் காரணமியாது?' என்று வினவினாள். எவரும் பெண்ணென்றால் இரங்குவார்கள்; உனக்குப் பெண்பாலாகிய என் மீதும் இரக்கமில்லையே என்பது தோன்ற 'சோர்குழலின் மீது சொரிவதெவன்' என்றாள். சந்திரிகை மிகுந்த காலத்தில் விரகதாபத்தை யுடையார்க்குக் காதல் அதிகப்பட்டு அவர்கள் மன்மத வாதனையால் இளைத்துப்போதல் இயற்கையாதலானும்; மாரனுடைய செய்கைக்குச் சந்திரன் துணையாயிருத்தலானும், அச்சந்திரனே அவனுக்குக் குடையாக அமைதலானும், 'மாரன் உனக்குப் பொரவளித்தான் கண்ணி' என்றுங் கூறினாள். அரசர் தம் சேனாதிபதிகட்கு வெற்றிக்கறிகுறியாக வெற்றிமாலையை அளித்தல் இயல்பு; அதுபோலவே மன்மதன் தன் துணைவனாகிய சந்திரனுக்கு வெற்றிமாலையைக் கொடுத்தானென்க. கண்ணி-இங்கே பூமாலை, இனி, கண்ணி யென்பதைப் புட்படுக்குங் கயிறெனக் கொண்டு, பறவையாகிய என்னைப் பிடித்து, வருத்துதற்கு மன்மதனாகிய வேடன், தன் துணைவனாகிய சந்திரனிடம் மையலாகிய புட்படுக்குங் கயிற்றைக் கொடுத்தான் எனினும் அமையும்; இங்கே, கண்ணி-புட்படுக்குங்கயிறு. சூரியன் மறைந்ததே இரவு உண்டாதற்குக் காரணமாதலானும், இரவு நீடித்தலும் தன்துயர்க் கேதுவாதலானும், சந்திரனுக்கும் மாரனுக்கும் வெற்றிக்கிடமாதலானும், தமயந்தி, சூரியனையும், 'புலரா இரவளித்தான் நல்லனோ' என்றுங் கூறினாள்.

ஈரமதியே-சேய்மைவிளி. இளநிலவு-பண்புத்தொகை. சோர்குழல்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

சோர்குழலின் மீது என்றது தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி; என்மீது எனச் சொல்லவேண்டுந் தன்மையில் சோர்குழலின் மீது எனப் படர்க்கைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. எவன்-வினாவிடைச்சொல். பொர-வினையெச்சம்; புலரா-பெயரெச்சம். இரவளித்தான் என்பது சூரியனுக்கு வினையாலணையும் பெயர், 'நல்லனோ' என்பதில் ஓகாரம் ஒழியிசைப் பொருளைத்தந்து நின்றது. ஒழிந்த சொற்களைத் தருவது ஒழியிசை யெனப்படும்; 'நல்லனோ' என்பதில் நல்லவனில்லை, கெட்டவன் என்ற சொற்கள் அமைந்து நிற்றல் காண்க. "ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை, கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே" என்பது (நன்-இடையியல்-4) சூத்திரம்.

தமயந்தி இரவின் வெம்மை கூறல்.

108. வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ—திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ விரா.

[இ-ள்.] இரா-இந்த இரவானது, வெம்-வெப்பமாகிய, கதிரோன் தன்னை-சூரியனை, விழுங்கி-உட்கொண்டு, (அதனால்) புழுங்கியோ-வெப்பத்தை அடைந்தோ, (என்னைப்போன்ற விரகதாபத்தையுடையவர்களின்) கொங்கை அனலில்-தனங்களி லுண்டாகின்ற அக்கினியால், கொளுந்தியோ-பற்றப்பட்டோ, திங்கள்-சந்திரனிடத்தே, விரிகின்ற-பரவியிருக்கின்ற, வெண்ணிலவால்-வெண்மையாகிய சந்திரிகையின் வெப்பத்தால், வேகின்ற தேயோ-தகிக்கப்படுகின்றதினாலோ, என்னோ-வேறு எதனாலோ, எரிகின்றது (என் உடம்பில்) காந்துதலைச்செய்கின்றது; [எ-று.]

சூரியனை விழுங்கியதனாலோ, கொங்கை அனலால் கொளுவப்பட்டோ சந்திரகிரணத்தால் வெந்ததனாலேயோ, வேறு யாது காரணத்தாலோ இரவானது என் உடம்பில் எரிதலைச் செய்கின்றது என்பது இதன் கருத்து. சூரியன்மறைய இருள்வந்தபடியால் அதனை அவ்விரவு விழுங்கிவிட்டதாகத் தமயந்தி குறித்தாள்; விரகதாபத்தால் கொங்கை அதிகவெப்பமடைந்திருக்குமாதலின் அதனை அனலென்று கூறினாள்; விரகிகளுக்குக் குளிர்ந்த நிலவும் வெப்பத்தைச் செய்யக்கூடியதாதலின் அதனையும் அக்கினியாகவே குறித்தாள். அவ் விரவில் வேட்கை வெப்பம் அவளுக்கதிகரித்து மிக்க துயரத்தைச்செய்தபடியால், அவ்விரவு உஷ்ணமிக்க சூரியன் முதலியவற்றோடு சேர்ந்து தகிக்கின்ற தென்று அவள் கூறினாள். "நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல்வதூஉம், எரிப்பச்சுட்டெவ்

வகோ யாக்கும்'' என்றபடி இரவு குளிர்ச்சியுடையதாயிருந்தாலும், வெப்பமானவற்றோடு சேர்ந்தால் தானும் வெம்மையடைவது இயற்கையாதலின் அதனை இவ்வாறு கூறினாள். இரவு சூரியனை விழுங்குதலும், கொங்கையனலால் அவ்விரவு கொளுவப்படுதலும், நிலவால் வேதலும் இல்லையெனினும், விரக தாபத்தை யுடையார் மனம் மாறுபட்டு இயற்கைக்கு விரோதமான மாற்றங்களைக் கூறுதல் சுபாவமாதலின், தமயந்தியும் இவ்வாறு கூறினாள். இது புலம்பல் என்னும் மெய்ப்பாடு.

வெங்கதிரோன்-பண்புத்தொகை; வெம்மையென்னும் பண்புப் பகுதி மையீறுகெட்டுப் புணர்ந்தது. கதிரோன்-கிரணங்களை யுடையவன், தன்-அசைமொழி, புழுங்கியோ, கொளுந்தியோ, வேகின்ற தேயோ, என்றோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் ஐயப்பொருளில் வந்தன. கொங்கையனல்-ஆறும் வேற்றுமைத் தொகை. வேகின்றதே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப்பொருளது. நெருப்பு என்னைச் சுடுகின்றது என்பது போல இரவு என்னை எரிக்கின்றது என்பது அமைந்தது.

இரவு நீட்டித்ததற்குத் தமயந்தி அரற்றல்.

109\. ஊழி பலவோ ரிரவாயிற் றேவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும்—ஆழி
துயிலாதோ வென்னுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து.

[இ-ள்.] ஊழி பல-அநேகம் யுகங்கள், [கூடி] ஓர் இரவு ஆயிற்றே-இந்த ஓர் இராத்திரியாயினவோ, என்னும்-என்று தமயந்தி கூறுவாள்; [விடியற்காலத்திற் குறிகுறியாகக்கூவும்]கோழி-கோழிச் சேவலானது, குரல் அடைத்ததோ-தான் கூவாமலிருக்குமாறு குரல் அடைக்கப் பெற்றதோ, என்னும்-என்று சொல்வாள்; ஆழி-சமுத்திரமானது, துயிலாதோ-தூங்கமாட்டாதோ, என்னும்-என்று சொல்லிவருந்துவாள், [இவ்வாறு இரவு நீட்டித்தபடியால் மேலும்] சுடர்-பிரகாசமுள்ள, மதியம் சந்திரன், கான்ற-கக்கிய, வெயிலால்-[சந்திரிகையாகிய] வெய்யிலினாலே, உடல்-தேகமானது, உருகா-உருகி, வீழ்ந்து-படுக்கையிற் சாய்ந்து கொண்டு; [எ-று.]

விரகதாபத்தை யுடையார்க்கு ஒரு விநாடி நேரமும் ஒரு யுகம் போலத் தோற்றுதல் இயற்கையாதலின், அவ்விரவில் நித்திரையின்றி வருந்திய தமயந்திக்கு, ஒவ்வொரு நாளிலும் ஏற்பட்ட நாழிகையைக் கொள்ளும் இராக்காலம் பலயுகங்கள் சேர்ந்த காலம்போல நீட்டித்துத்தோற்றிற்று. அதனால் அவள் ஒவ்வொரு விநாடியிலும் 'நெடுநேரமாயிற்றே, இன்னும் விடியவில்லையே' என்று கலங்கினாள்.

அதுபற்றியே 'ஊழிபலவோரிரவாயிற்றே, கோழிகுரலடைத்ததோ, ஆழி துயிலாதோ' என்றாள். ஊழி-யுகமுடிவு; பிரமனுடைய ஆயுட்காலம். விடியற்காலத்தில் கோழிச்சேவல் கூவுதலும், இராக்காலத்தில் அதிக ஆர்ப்பரிப்பையும் பகற் காலத்தில் அடங்கிய ஒலியையுமுடைய சமுத்திரம் விடியுந் தருணத்தில் முழக்கங்குன்றுதலும் இயற்கையாதலின் இரவு நீட்டித்தபோது வருந்திய தமயந்தி, 'கோழி குரலடைத்ததோ, ஆழி துயிலாதோ' என்றாள். விரகிகட்குச் சந்திரன் குளிர்ச்சி வெம்மையாகத் தோற்றுமாதலின், அதனைச் 'சுடர்மதியங் கான்ற வெயில்' என்றார் ஆசிரியர்.

மேலைப்பாட்டும், இச்செய்யுளும், கீழ்ப்பாட்டும் குளகமாதலின், மேலைப்பாட்டின் ஈற்றிலுள்ள 'எரிகின்ற தென்றேவிரா' என்பதனோடு, இச்செய்யுளில், 'ஊழிபல வோரிரவாயிற்றே வென்னும்' என வருவதைக் கூட்டி முடிக்க. இச்செய்யுளின் ஈற்றிலுள்ள 'வீழ்ந்து' என்னும் எச்சத்தைக் கீழ்ப்பாட்டில் 'மெலிவாள்' என வரும் முற்றோடுகூட்டி முடித்துக்கொள்க. ஆயிற்றே, அடைத்ததோ, துயிலாதோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் ஐயப்பொருளன. கோழி குரலடைத்ததோ என்பதில் சினைவினை அச்சினைக்குரிய முதல்வினையோடு முடிந்தது. ஆழி-ஆழத்தையுடையது. சுடர்மதியம்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. கான்ற-பெயரெச்சம்; இது வெயில் என்ற பெயருடன் முடியும். உருகா-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இது வீழ்ந்து என்னும் எச்சத்திலுள்ள தன் கருத்தாவின் வினையைக்கொண்டது. "சினைவினை சினையொடும் முதலொடுஞ்செறியும்" என்பது [நன்-வினை-26]சூத்திரம். வீழ்ந்து-வினையெச்சம்; இது, கீழ்ப்பாட்டில் வந்துள்ள 'மெலிவாள்' என்ற முற்றோடு கூடி முடியும்.

வண்டு பறக்கத் தமயந்தி மெலிவாள் என்பது.

110. ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல்—ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோகத்
துறைவா யடங்காத் துயர்.

[இ-ள்.] வரிவண்டு-இரேகைகளையுடைய வண்டானது, அருகே-சமீபத்தில், பறக்கவே-[மார்பிலணிந்திருக்கும் மாலையிலுள்ள மகரந்தம் முதலியவற்றை விரும்பி] பறந்து ஆடுதற்கே, வாடி-மேனி வாட்டமடைந்து, மெலிவாள்-இளைப்பாள், [இங்ஙனம் அவள் மெலியும்போது மேலும் அவ்வண்டு] வனம்-அழகு பொருந்திய, முலைமேல்-தனங்களின்மீது, ஓடி-விரைந்துசென்று தங்கி, [அதனாலே இயற்கையிலேயே பாரமாயிருக்கும் தனங்களில் இன்னும் அதிகமாக] பொறையாக-பாரமாக. [அப்பாரத்தால் இடை

முன்னிலும் மெலிவதாலே] சோர்வாள்-முன்னிலும் அதிகமாகத் தளர்ச்சியடைவாள், [இங்ஙனம்] மோகத்துறைவாய்-ஆசைவழியினிடத்தே, [உண்டாகிய] அடங்காத்துயர்-தணியாத துன்பத்தை, [பெண்பாலாகிய அத்தமயந்தி] பொறுக்குமோ-தாங்குவாளோ, தாங்கமாட்டாள். என்றபடி [எ-று.]

வண்டு மோகத்தை வளர்த்து விடுவதாதலின், அஃதருகே பறக்கவும் வருந்தினாள் தமயந்தி. இயற்கையில் கனத்திருக்கும் தனங்கள் ஆசை மிகுதியால் இன்னும் வீங்கும்; அதனோடு வேறு பொருளுஞ் சேர்ந்தால் பாரம் அதிகரிக்கும்; அங்ஙனம் கனம் அதிகரிக்கவே இடைமிகவும் தளர்ச்சியடைவதால் விரகதாபத்தை யுடையார் மிகவும் வாட்டமடைவார். ஆதலின், சமீபத்தில் வண்டு பறப்பதற்கே துயர் கொண்டு வருந்திய தமயந்தி மேலும் அது, தனங்களின்மேற் சேர்ந்து, பாரத்தை அதிகப்படுத்த அதனால் மேலும் வாட்டமடைந்தனளென்க. 'வனமுலைமேல்-ஓடிப்பொறையாக' என்பதற்கு 'அழகு பொருந்திய தனமே பூரித்துச் சுமையாக' எனப் பொருள் கோடலுமொன்று; 'வண்டு அருகே பறக்கவே மெலிவாள்' என்பதில் குறைவுப்பொருளை உறுதிப்படுத்திக்காட்டும் தேற்றேகாரங் கொடுத்துச் சொன்னதற்கேற்ப 'அவ்வண்டு முலைமேற்சேர முன்னிலும் வருந்தினாள்' என்றுகூறலே சிறப்புடைத் தாகலானும், ஓடுதற்றொழில் வண்டுக்கேயன்றித் தனங்களுக்கின்மையானும் அங்ஙனம் 'முலைமேல் ஓடி' என்பதற்குத் 'தனம்-பூரித்து' எனப் பொருள் கோடல் அத்துணைச் சிறப்பன்றென்க. மேற்கூறிப்போந்த சிறந்த பொருள் இல்லாதவிடத்து வேண்டுமெனின், இங்ஙனம் வலிந்து பொருள் கோடல் அமையும். மோகத்தா லுண்டாந்துயர் எவராலுஞ் சகித்தற்கருமையாதலின், பெண்ணாயிருக்கும் இவள் பொறுப்பாளோ என்றார் ஆசிரியர். மெலிவாள், சோர்வாள் என்பவற்றில் இயல்பினால் இறந்த காலம் எதிர்காலமாகச் சொல்லப்பட்டது; இது காலவழுவமைதி "விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும, பிறழவும் பெறாஉமுக் காலமு மேற்புழி" என்பது [நன்-பொது-33] சூத்திரம்.

இதில், தமயந்தி, நிலவால் வருந்தித் தனியே
தளர்ந்தமை கூறப்படுகின்றது.

111. தாங்கு நிலவின் தழல்போய்த் தலைகோள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப—ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக வின்று.

[இ-ள்.] தாங்கும்-சந்திரனால் சுமக்கப்படுகின்ற, நிலவின்-சந்திரிகையினுடைய, தழல்-நெருப்பானது, போய்-சென்று, தலை

கொள்ள-தமயந்தியின் சிரசைத் தனக்கிருப்பிடமாகப் பற்றிக் கொண்டமையினாலே, [அதாவது சிரசில் அந்நெருப்பு அதிகரிக்க அத்தழலினாலே] தேம்-வாசனைபொருந்திய, குழல் சேர்-கூந்தலில் சேர்ந்திருக்கின்ற, வண்டு-வண்டானது, சிறைவெதும்ப-இறகு வெந்து வருந்தவும், ஓங்கு-அதிகரிக்கின்ற, உயிர்ப்பின்-அவளுடைய உஷ்ணமாகிய பெரு மூச்சினாலே, [அவளால் மார்பில் அணியப்பட்டிருக்கும்] தாமம்-பூமாலையானது, கரியாக-எரிந்து கரியாகவும், இன்று-இந்த நாளில், யாமம்-இரவே, கரியாக-இவற்றிற்கெல்லாம் சாட்சியாக, [வேறோர் துணையுமின்றி] தனியே-தனியாக, தளர்கின்றாள்-தமயந்தி வாடுகின்றாள்; [எ-று.]

சந்திரிகையானது, சந்திரனிடத்தே எப்பொழுதும் பொருந்தியிருக்கின்றமைபற்றி அதனைச் 'சந்திரன் தாங்கும் நிலவு' என்றார் ஆசிரியர். நிலவின் தன்மை குளிர்ந்திருக்குமெனினும், காமவேதனைப்பட்ட தமயந்திக்கு அது வெப்பத்தையே தருவதாயிருக்குமாதலின் அதனைத் 'தழல்' என்றார். சந்திரிகையாலுண்டான நெருப்பானது தமயந்தியின் தேகத்திற்பட அவ்வுடல் வெதும்பி அவ்வெப்பமானது சிரசிற்கேறியது; விஷம் முதலியன சிரசிற் கேறியவுடன் வேதனை அதிகரித்தல் இயல்பாதலின், தமயந்திக்கும் அழல் தலைக்கேற வருத்தம் மிகைப்பட்டது. சிரசில் வெப்பம் அதிகரிக்கவே குழலில் சேர்ந்திருந்த வண்டும் இறகு கருகியது. தமயந்திக்கு இங்ஙனம் உடல் முழுதும் வெப்பம் அதிகரித்திருந்தமையால் அவளுடைய மூச்சும் தழலாகவே யிருந்தது; அது படவே நெஞ்சிலணியப்பட்டிருந்த மாலையும் கரிந்தது, தமயந்தி வருந்தும் அக்காலத்தில் பக்கத்திலிருந்த இரவேயன்றி வேறொருவருமில்லையாதலின், அவ்விரவே அவளின் துன்பத்தையறியும் சாட்சியாக நின்றது என்றும், தனியே தளர்கின்றாள் என்றும் கூறினார்.

கொள்ள, வெதும்ப, கரியாக என்பன வினையெச்சங்கள்; தளர்கின்றாள் என்பதனோடு முடிந்தன. தாமம் கரியாக என்பதில் ககரந் தொக்கது. தளர்ந்தாள் என இறந்தகாலமாக வரற்பாலது, கால வழுவமைதியால் நிகழ்காலமாக வந்தது. இங்குக்கூறிய விஷயம் முன்நடந்ததெனினும், இந்நூலில் எதிர்நோக்கில் வருதல் குறித்து அதைச்சுட்டி இன்று என்றார் ஆசிரியர். இன்று என்பதற்கு 'நூலில், முன்னே அந்த விஷயம் நடந்த நாளாகக் கூறப்படும் இந்நாளில்' என்று பொருள்படும்.

தமயந்தி வருந்தி யிருந்த நிலைமையை அவள் தவஞ் செய்ததாக இதில் ஆசிரியர் உருவகஞ் செய்து கூறுகின்றார்.

112. மையிட்ட கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து—மெய்வருந்தித்

தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்வாள் தவம்.

[இ-ள்.] மை இட்ட - அஞ்சன மெழுதப் பெற்ற, கண்-கண்களினின்றும், அருவி-மலையாறு போன்ற நீரொழுக்கானது, வார-ஒழுக, வளை-வளையல், சோர-கழன்றுவிழ, கையில்-கரத்தின்மேல், கபோலத்தலம்-கன்னத்தை, வைத்து-சேர்த்து, மெய்வருந்தி-தேகவருத்தங்கொண்டு, தேன்-மதுவானது, இருந்த - தங்கிய, பூங்கணையே - மன்மதனுடைய புஷ்பபாணமே, தீயாக - நெருப்பாக அமைய, தேம்-தேன்போலும் இனிய, மொழியாள்-வார்த்தைகளையுடைய தமயந்தி, இருந்து-அவ்விரவில் தனித்திருந்து, தவம்செய்வாள்-[நளனை அடையவேண்டுமென்று தியானித்தலாகிய]தவத்தைச் செய்பவளாயினாள்;[எ-று]

தமயந்தி கண்ணீர் சோர, வளைகழல, உடல்மெலிந்து வருந்திக் கையிற் கன்னத்தைச் சேர்த்து, வெப்பமான மன்மத பாணத்தின் சேர்க்கையைப் பெற்றுத் தனித்து நளனையே தியானித்துக் கொண்டிருந்த நிலைமை, முனிவர் தவஞ்செய்தது போன்றிருந்தமையால், ஆசிரியர் அவளைத் 'தவஞ்செய்வாள்' என்றுகூறினார். முனிவர் பகவானிடத்துக் கொண்டபக்தியால் மனமுருகிக் கண்ணீர் விட்டு ஆகார மின்றி உடல் மெலிந்து சங்குவளை முதலியன சோரப் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவஞ்செய்தல் இயற்கை; இச்செய்கைகளைப் போன்ற செயல்கள் தமயந்தி யிடத்தும் பொருந்தி யிருந்தனவாதலின் அவள்பாற் றவம் கூறப்பட்டது. இருடியரிற் சிலர் சங்குவளை முதலியவற்றைக் கையிலணிந்திருப்பது வழக்கம். தவ நிலைகளில் கன்னத்திற் கை வைத்திருத்தலும் ஒரு நிலை. முனிவர்க்குப் பஞ்சாக்கினி யிருத்தல் போலத் தமயந்திக்கு வெப்பமாகிய மலர்ப்பாணங்களே அக்கினியாயின.

மையிட்ட - இரண்டாம் வேற்றுமைத்தொகை. இட்டகண் - இதில் செயப்பாட்டுவினை செய்வினையாக மாறி வந்தது. கண்ணருவி-நீக்கப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத் தொகை. வார, சோர, வைத்து, வருந்தி, ஆக, என்பன வினையெச்சங்கள்; செய்வாள் என்பதனோடு முடியும். கபோலத்தலம்-கன்னத்தினிடம். தேன் இருந்த என்பதற்கு, வண்டு தங்கிய எனப்பொருள் கோடலுமொன்று. அருவி-உவமையாகு பெயராய் அதனைப் போன்ற கண்ணீரை யுணர்த்திற்று. தேம்-இனிமை யெனினும் அமையும். செய்வாள் என்பதில் கால வழுவமைதியால் இறந்தகாலம் எதிர்காலமாக மாறி வந்தது. தான்-அசை.

இதில், நிலவு மறைந்து, இருள் மிகுந்தது கூறப்படுகின்றது.

113. அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா.

[இ-ள்.]இரா-அந்த இராத்திரியானது, [மேற்கூறியபடி நிலவால் தமயந்தி வருந்திக் கொண்டிருக்கும்போது நடுச்சாமத்தில் அந்நிலவு மறைந்தமையால்] அள்ளிக் கொள்ளுத லாகும்படி[அதாவது: அள்ளிக் கொள்ளும்படியான வடிவ முடையதாகி]அடையத் திரண்டு-முழுவதுங் கூடி, ஒன்றாய்-ஒன்றாகி, கொள்ளிக்கும்-கொள்ளிக்கட்டைக்கும், விள்ளாத - இடைவிட்டுநீங்காத, கூர் - மிகுந்த, இருளாய்-இருளாக, [அதனால்] உள்ளம்-மனதை, புதையவைத்த-மறையவைத்த, [அதாவது மனதை வேறொரிடத்திற் செலுத்தி மறைத்துத் தம்மைக் கூடுவாரிடத்தில் மிகுதியாக வைத்தவர்களைப் போல நடிக்கின்ற]பொது மகளிர் தங்கள்-பரத்தையர்களுடைய, இதயம்-உள்ளத்தை, போன்றது-நிகர்த்தது;[எ-று]

கபடம் நிறைந்த வேசிகளுடைய மனதைப்போல, நிலா மறைந்த காலத்தில் தோற்றிய இரவானது இருள் நிறைந்ததாய்த் தோற்றியது என்பது இதன் கருத்து. தமயந்தி, முன்னிரவில் தோற்றிய சந்திரனால் மிகவும் வாடி மயங்கினாள். அங்ஙனம் அல்லற்படும்போது நள்ளிரவு வர, அன்று பாதியிரவில் நிலவு மறையுந்திதியாதலால், அப்பொழுது அச்சந்திரன் மறைந்துவிட இருள் மிகுந்த தென்க. சந்திரன் மறைந்தது நள்ளிரவிற்றானென்பதை அடுத்த பாட்டில், 'இடையாமங் காவலர்கள் போந்தார்' என வருதலால் உணர்க. இருள் கைக்கு அகப்படக் கூடாததெனினும், அப்பொழுது மிகுந்த கருமையாய்ச் செறிந்து கட்புலனுக்கோர் வடிவமுடையதுபோலத் தோற்றினமையின், கைகளினால் அள்ளிக்கொள்ளும் பொருள்போல விளங்கிற்று. இதுபற்றியே ஆசிரியர், 'அள்ளிக் கொளலாய் அடையத்திரண்டு' என்றார். எத்தகைய இருளும் நெருப்பின் பிரகாசத்தைக்கண்டால் விலகும். அங்ஙனமிருந்தும் இவ்விருள் அதற்கும் நீங்காத தன்மையுடையதென்று சொல்லும்படி மிகுந்திருந்தது; அது குறித்தே 'கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள்' என்றார். நெருப்பைக் கண்டவுடனே எத்தகைய இருளும் நீங்குதல் இயற்கையாயிருக்க, ஆசிரியர், இங்ஙனம் கூறிய தென்னையோவெனின், இருளின் மிகுதிப்பாட்டை விளக்கற்கென்க; இதனாலே அவ்விருள் கொள்ளிக் கட்டைக்கும் நீங்காதிருந்ததெனக் கொள்ளலாகாது. தாசிகள் பணத்தின்மீதே மிகுதியும் மனத்தைச் செலுத்தி, அதனைக் கொடுத்தாரிடம் எட்டுணையும் விசுவாசம் செ

லுத்தாதவர்களா யிருப்பார்கள்; இவ்வாறு நடிக்கும் அவர்களுடைய கபட உள்ளமானது மகா அந்தகார முடையதாய்ச் சேர்ந்தார்க்கு நீங்காத் துன்பம் பயப்பதாயிருக்கும்; அவர் சேர்க்கை யின்பமும் பயனற்றதாகும்; இது குறித்தே நாயனாரும் குறளில்,

"போருட்பேண்டிர் போய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று"

என்று கூறினார். இவர்களின் நடிப்புள்ளத்தைப் போலவே இருளும் மனிதர்க்கு மிக்க துயரைச் செய்வதாகும்; ஆதலினாலே, அவ்விருள் தாசிகளுடைய மனதிற்குவமையாகக் கூறப்பட்டது; தாசிகள் கபட நெஞ்சைக் கொண்டதுபோல, இரவு இருளைக்கொண்ட தென்க. பரத்தையர், பணங் கொடுத்தார் பலர்க்கும் பொதுவாக ஒவ்வொரு நாளினு மனைவியரா யிருந்து ஜீவிப்பவர்களாதலின், அவர்கட்குப் பொதுமகளிர் என்ற பெயர் ஏற்பட்டது. பொதுமகள் - எவர்க்கும் உரிய பெண்.

கொளளாய், திரண்டு, ஒன்றாய் என்பன வினையெச்சங்கள்; விள்ளாத என்ற எதிர்மறைப் பெயரெச்சத்திலுள்ள வினைகொண்டு முடியும். கொள்ளி-நெருப்புறுவிறகு. விள்ளுதல் - இடைவிடுதல். இருளாய்-என்பதில், ஆகவென்னும் செயவெனெச்சம், செய்தெனெச்சமாகத் திரிந்து வந்தது. 'கூர் இருளாக இரா பொதுமகளிர் தங்கள் இதயமேபோன்றது' என முடிக்க. கொள்ளிக்கும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. புதையவே, இதயமே என்பவற்றி னீற்றிலுள்ள ஏகாரங்கள் தேற்றப்பொருளன. வைத்த-பெயரெச்சம். மகளிர் தங்கள்-என்பதில், தம்,கள் இரண்டும் சாரியையிடைச்சொற்கள்; கள் என்பதைப் பன்மை விகுதியெனக் கொண்டு விகுதிமேல் விகுதியெனினும் அமையும். 'உள்ளம் புதைய வைத்த பொதுமகளிர்' என்பதற்கு, பணங்கொடுத்துத் தங்களைச்சேர்ந்தாருடையமனதைத் தங்களிடமே பதியும்படி பொய்யன்பு காட்டி நடித்த பரத்தையர் எனவும் பொருள்.

இதில் இரவில் நகர் காப்போர் வந்தமை கூறப்படுகின்றது.

114. ஊக்கிய சொல்ல ரொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
இடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று.

[இ-ள்] ஊக்கிய -மேலே உயர்த்தப்பட்ட, (அதாவது உரத்த சப்தத்தோடு கூறும்)சொல்லர் - வார்த்தையை யுடையவர்களும், ஒலிக்கும்-சப்திக்கின்ற, துடி-துடியெனும் பறை முழக்கத்தைப் போன்ற, குரலர்-கண்டத்தொனியை யுடையவர்களும், வீக்கிய-இறுக்கிக் கட்டிய, கச்சையர்-இடைவாரை யுடையவர்களும், வேல்

வாளர்-வேலும்வாளுமாகிய ஆயுதங்களையுடையவர்களுமான, காவலர்கள்-காவற்காரர்கள், இருளின்புடை - இருட்டின் பக்கத்திலே, வாய்-பொருந்திய, இருள் - மற்றொரு இருளானது, புடைத்தால் போன்று-அதனை அடித்துத் தள்ளினதைப் போல, இடையாமம்-நடுச்சாமத்தில், காக்க-நகர்க்காவல்புரிவதற்கு, போந்தார்-வந்தார்கள், [எ-று.]

நடுநிசியில் நகர்காப்போர், தங்கள் காவற்றொழிலைப் புரிதற்கு வந்தனரென்பது இதன்கருத்து. ஊக்கிய சொல்லர்களும் ஒலிக்குந் துடிக்குரலரும், வீக்கியகச்சையரும், வேலாயுதத்தையும் வாளாயுதத்தையுமுடையவர்களுமாகிய இடையாமங்காவலர்கள், இருளின் புடைவாய் இருள்புடைத்தாற்போன்று நகர் காக்கப் போந்தார் என இயைக்க. ஒவ்வொரு இராஜாங்க நகரத்திலும், சோரரால், மனிதர்க்குத் தீங்குநேராதிருக்கும்வண்ணம் இராக்காலத்தில் நகர்காப்போர்,இராஜ கட்டளைப்படி தெருக்கட்டோறும் சுற்றிச் சுற்றித் திருடர் அஞ்சியோடுமாறு, பெருந்தொனியிட்டுக் காவல்புரிவது வழக்கம்; அவ்வழக்கத்தின்படியே அன்று இராக்காவலர்கள் வந்தனர். 'இடையாமங்காவலர்கள் போந்தார்' எனவே, அப்பொழுது நடுச்சாமமாயிற்றென்பது தானேபோதரும். காவற்காரர்கள் பெருந்தொனியிட்டுக் கூவுவார்களாதலின், 'ஊக்கிய சொல்லர்' என்றும், 'துடிக்குரலர்' என்றும் கூறினர்ஆசிரியர். துடி-மலைச்சார்பாகிய குறிஞ்சி நிலத்திலும், பாலைநிலத்திலும் முழக்கப்படும்பறை; இது திடுக்கிடக்கூடிய பேரொலியையுடையது. கச்சையர் என்பதற்குச் சல்லடத்தை யணிந்தவர்களென்றேனும், கவசத்தை யணிந்தவர்களென்றேனும், பொருள் கூறினும் அமையும். காவலர்கள், இருளில் கரிய இருட்டொகுதிகள் போன்று விளங்குவார்களாதலின், அவர்கள் வந்தது, அவ்விருளில் வேறு சில இருள்கள் புகுந்து அதனை அடித்து விலக்குவதுபோன்றிருந்தது. சொல்லர், குரலர், கச்சையர், வேல்வாளர் என்பன இருபெயரொட்டுப் பண்படிகளாய்க் காவலர் என்றபெயரோடு, சொல்லரும் குரலரும் கச்சையரும், வேல்வாளருமாகிய காவலர்கள் என்றுவிரிந்து முடியும்; இவற்றுள் எண்ணும்மைகள் தொக்கன. யாமங்காவலர்-என்பதில், "வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும், அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள" என்னும் (நன்-மெ-பு.17. ஆம் சூத்திர) விதியால் மெலி உறழ்ந்தது. புடை-ஏழனுருபு.

நடுநிசியில் உலகத்தார் உறங்கினமை
இதில் கூறப்படுகின்றது.

115. சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளுறைபுகுதத் தார்வண்டு—காமன்றன்

பூவாளி யைந்திற் புகத்துயில் புக்கதே
ஓவாது முந்நீ ருலகு.

[இ-ள்.] களிறு-யானையானது, சேமம்-காவலிடத்தை, புக-சேரவும், தீம்-தித்திப்பான, பாலின்-பாலைப்போன்ற, செவ்வழி-செவ்வழி என்னும் பண்ணையுடைய, யாழ்தாம்-வீணைகள், உறையுள்-உறையினுள்ளே, புகுதவும் - சேரவும், தார் - புஷ்பங்கள் மொய்க்கின்ற, வண்டு-வண்டுகள், காமன்றன் - மன்மதனுடைய, பூவாளி ஐந்தில்-ஐந்து பாணங்களாகிய மலர்களில், புக-சேரவும், முந்நீர்-மூவகை நீர்களாகிய சமுத்திரத்தாற் சூழப்பட்ட, உலகு - உலகமானது, ஓவாது-நீங்காமல், துயில் புக்கது-தூக்கத்திற் சேர்ந்தது; (நித்திரை செய்தது) எ-று.

களிறு காவலிடத்தைச் சேரவும், யாழ் உறையுட்பிரவேசிக்கவும், வண்டுகள் புஷ்பங்களிற்சேர்ந்து பறவாமல் தங்கவும், உலகம் நித்திரை செய்தது என்பது இதன்கருத்து. நள்ளிரவில், யானை, கூடத்திற் கட்டுத்தறியிற் கட்டப்படுதலும், முன்னிரவில் யாழ் வாசித்துக் கொண்டிருந்தவர்கள் அதனை நிறுத்தி வீணையை உறையிற் சேர்த்தலும், பறந்து பற்பலவிடங்களிற் சஞ்சரிக்கும் வண்டுகள் பறத்தல் ஒடுங்கி நல்ல மலர்களிற் சேர்ந்தொடுங்கலும், மனிதர் எல்லாக்காரியங்களையுமொடுக்கி நித்திரைசெய்தலும்இயற்கையாதலின், 'யானை முதலியன இங்ஙனமாக உலகம் நித்திரை செய்தது' என்றுரைத்தார் ஆசிரியர். பண்களில் செவ்வழிப்பண்ணானது நெய்த நிலப் பண்; மிக்க இனிமை பொருந்தியது; வீணையில் வாசிக்கப்படும் பண்களில் இது மிக உயர்ந்ததாம்; ஆதலின், இவ்விசை தீம்பாலின் சுவையோடு உவமை கூறப்பட்டது; யாழுக்குச் செவ்வழி மிகச் சிறந்ததென்பது தோன்ற, 'செவ்வழி யாழ்' என்றுங் கூறினர். முன்னிரவு நேரத்தில் மலர்கள் மலரும்; அங்ஙனம் மலருந்தருணத்தில் வண்டுகள் ஒவ்வொரு மலரிடத்தும் இசை பாடிப் பறந்து சென்று இதழ் குடைந்து மகரந்தமுண்டு தேன் பருகிக் களித்தாடிச் சஞ்சரிப்பனவாம்; எனினும், நடுச்சாமத்தில் அவை ஒவ்வொரு உயர்ந்த மலரிற் சேர்ந்து இதழ்குடைந்தபடியே பறத்தல் ஒடுங்கித் தங்கிவிடும்; சில வண்டுகள், இராக்காலத்திலும் சஞ்சரிக்கக் கூடியனவாயினும், நடுநிசியில், இரவிற்சஞ்சரிக்கும் பேயு முறங்கு மாதலின், அவைகளும் ஒடுங்குதல் இயற்கை. வண்டுகள் பற்பல மலர்களிற் சேர்வனவெனினும், விசேஷமாக உயர்ந்த மலர்களிற் சேர்வது இயற்கையினாலும், மலர்களில் மன்மதனுக்குப் பாணங்களாக அமைந்த மலர்களே சிறந்தன வாதலினாலும் 'தார்வண்டு காமன்றன் பூவாளி ஐந்திற்புக' என்றார் ஆசிரியர்.

'சேமங்களிறு புக' என்பதை, 'களிறு சேமம்புக' எனமாற்றுக. புக, புகுத என்பன செய வென்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்;

புக்கது என்ற முற்ருேடு முடியும். தீம்பால்- பண்புத்தொகை, பாலின் என்பதில், இன்-உவமவுருபு, செவ்வழியாழ்-இரண்டாம் வேற்றுமைத் தொகை. யாழ்தாம் என்பதில், தாம்-சாரியை, 'காமன் தன்' என்பதில், தன் - சாரியை. 'பூவாளி ஐந்தில்' என்பதை, 'வாளி ஐந்து பூவில்' என மாற்றிப் 'பாணங்களாகிய ஐந்து மலர்களில்' என்று பொருளுரைக்க. முந்நீர்-மூன்றுவகை நீர்கள்; அவை யாவன: ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் என்பனவாம்; சமுத்திரம் இம்மூன்று நீர்களையுடையதாம்; அதனாற் கடல் முந்நீர் என்னும் பெயர் பெற்றது. நீரின் பெயர் கடலுக்காய் வந்தமையின் இஃதாகு பெயராம். உலகு-இடவாகு பெயராய் உலகத்திலுள்ள மனிதரை யுணர்த்து மாதலின், 'உலகு துயில் புக்கது' என்பதற்கு, 'உலகத்தார் உறங்கிஞர்கள்' என்று பொருள்.

அந்த யாமத்தில் பேயும் உறங்கிற்றென்பது
இதில் கூறப்படுகின்றது.

116. ஊன்றின் றுவகையா லுள்ள வுயிர்புறம்பே
தோன்றுங் கழுதுந் துயின்றதே—தான்றன்
உரைசோரச் சோர உடல்சோர வாயி
னிரைசோரக் கைசோர நின்று.

(இ-ள்.) ஊன்-மாமிசத்தை, தின்று-புசித்து, உவகையால்-அதன்பொருட்டு உண்டாகிய சந்தோஷத்திஞல், உள்ள-தனக்குள்ளே அடங்கியிருக்கின்ற, உயிர்-மூச்சு, புறம்பே-வெளியில், தோன்றும்-அதிகரித்து வீசும்படியான, கழுதும்-பேயும், தன்உரை-தன்னுடைய வார்த்தை, சோரச்சோர-மிகத் தளரவும், உடல் சோர-தேகமானது தளர்ச்சியடையவும், வாயின் இரை-வாயினிடமாகவுள்ள உணவானது, சோர - சோர்ந்து விழவும், கைசோர - கரங்களும் தளரவும், நின்று-தள்ளாடி நின்று கொண்டு, துயின்றது-தூங்கிற்று.

இராக்காலத்தில் தூக்கமின்றிச் சஞ்சரிக்கக் கூடிய பேயும் அந்த இடையாமத்தில் நித்திரை செய்ததென்பது இதன் கருத்து. எனவே, அந் நள்ளிரவு எத்தகையினரையும் மயக்கிவிடக் கூடியதென அவ்விடை யாமத்தின் வன்மை கூறப்பட்டது. நள்ளிரவில் பேயும் ஒரு முகூர்த்த நேரம் தூங்குமென்பது உலக வழக்கு; இங்ஙனம் பேயுந் தூங்கும் இடையாம நேரத்தை, வயிரவர் காவல் நேரமென்பர் சிலர்; வயிரவர் காவலில் எதுவும் இயங்கா தென்பது தொன்றுதொட்டு வரும் வழக்கு. பேய் விலாப் புடைக்க ஊனைத் தின்றிருப்பதால் மூச்சுத் திணறிவிடுதல் இயற்கை. தூக்கம் வருங் காலத்தில் வார்த்தை தடுமாறுதலும், உடல் சோருதலும், வாயி

ளுள்ள உணவும் நழுவி வீழ்தலும், கை சோர்தலும் இயற்கையாத லின் இங்கே தூக்கத்தில் நின்ற பேய்க்கும் அக் குணங்களுண்டாயின.

உயிர் புறம்பே தோன்றுங் கழுது என்பதில், உயிர் தோன்றும் என்னும் சினைவினை கழுது என்னும் முதலொடு சேர்ந்து முடிந்தது. தோன்றும்-பெயரெச்சம், கழுதுந் துயின்றது என்பதில், 'இரவில் தூங்காத வலிய இயற்கையுடைய பேயையுந் தூங்கவைத்தது அவ் விடையாமம்' எனப் பொருள்பட்டுக் கழுது முகத்தான் அந்நள்ளிரவின் வலியதன்மை தோன்றுதலால், கழுதும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புப் பொருளது; 'குறவருமருளுங் குன்று' என்பது இதற்குதாரணமாம்; இனி, அவ்விரவுங் கழுதும் இழிதன்மையுடையன வாதலின், உம்மையை இழிவு சிறப்புப் பொருளதெனக் கோடலு மொன்று. தான்-அசை. சோரச் சோர-மிகையென்னும் பொருணிலையால் வந்த சொல்லடுக்கு. "அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல், இரண்டு மூன்று நான் கெல்லைமுறை யடுக்கும்" என்பது விதி.

நள்ளிரவில் தமயந்தி வருந்தினமை கூறப்படுகின்றது.

117. அன்றி லொருகண் டுயின்றொருகண் ணார்வத்தால்
இன்றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ்சொல்—இன்று
தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்ற போதே
அவிழ்ந்ததே கண்ணீ ரவட்கு.

[இ-ள்.] அன்றில்-அன்றிலென்னும் பறவையானது, ஒருகண்-ஒரு கண்ணால், துயின்று-நித்திரைசெய்து, ஒருகண்-மற்றொரு கண்ணை, ஆர்வத்தால்-அன்பினாலே, இன்-இனிமையாகிய, துணை மேல்-தன் இணையின்மேல், வைத்து-செலுத்தி, உறங்கும் என்னும்-தூங்கும் என்று சொல்லக்கூடிய, சொல்-வார்த்தையானது, இன்று-இன்றைக்கு, தவிர்ந்ததேபோல்-நீங்கிவிட்டதைப்போல, அரற்றி-கதறி, சாம்புகின்றபோது- கூட்டில் தூக்கத்தால்தன் இயற்கையையும் விட்டுப் பிரிந்தொடுங்கும் அந்நள்ளிரவில், அவட்கு-அந்தத் தமயந்திக்கு, கண்ணீர்-கண்ணீரானது, அவிழ்ந்தது-விரகவேதனையால் ஒழுகலாயிற்று; [எ-று.]

இணைபிரியாத அன்றிலும் இணைபிரிந்து நித்திரையால் கூட்டில் ஒடுங்கத்தக்க இடையாமநேரத்தில், தமயந்தி கண்ணீர் விட்டுக் கலங்கினாள் என்பது இதன் கருத்து. அன்றில் இராக்காலத்தில் நித்திரை செய்யும்போது கூட இணைபிரியாது ஒரு கண்ணைத் தன் துணையின்மீது செலுத்தி விழித்துக் கொண்டு மற்றொரு கண்ணை

மூடி நித்திரைசெய்யும். இதுபற்றியே 97-ஆம் செய்யுளில், 'அன்றில் துணை யிழப்ப' என்பதற்கு, 'அன்றிலானது இரண்டென்னுந் தன்மை நீங்கிக் கழுத்தொடு கழுத்தைச் சேர்த்துத் துணை யோடொன்றாய்க் கூட்டில் சேர' என்று பொருள் கூறப்பட்டது. இங்ஙனம் அன்றில் இணைபிரியாதிருப்பினும் நடுச்சாமத்தில் தூக்கம் மிகுதிப்படுமாதலின் அச்சமயத்தில் சிலமுறைகூவி இரண்டு கண்களையும் மூடி இணையைப் பிரிந்து சற்றே தூங்கும்; அதுபற்றியே, "அன்றில் ஒருகண் துயின் றொருகண் ஆர்வத்தால் இன்றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ்சொல் இன்று தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்றபோது" என்றார் ஆசிரியர்; இதனானே இடையாமத்தின் வன்மை கூறப்பட்டது; இது, மேலைப்பாட்டில் 'கழுதுந்துயின்றது' என்றதால் இடையாமத்துயர்வை விளக்கினதுபோல அமைந்தது. அன்றில் பிரிந்தொடுங்குஞ் சமயத்தில் கூவியது, 'ஒரு கண்ணைத் துணைமேல் வைத் துறங்கும்' என்னுஞ் சொல் தன் பிரிவால் பொய்த்துப் போய் விட்டதென்று கருதி அதன்பொருட்டுக் கதறுவது போன்றிருந்தது. அதனானே, "ஒரு கண் ஆர்வத்தால் இன்றுணைமேல் வைத் துறங்கு மென்னுஞ் சொல் தவிர்ந்ததே போலரற்றி" என்றார் ஆசிரியர். அன்றிலும் இங்ஙனம் கதறித் துணையைப் பிரிந்தொடுங்கக் கண்ட தமயந்திக்கு அந் நள்ளிரவில் முன்னைக் காட்டிலும் விரகவேதனை அதிகரித்தமையால் அவள் கண்ணீர்விட்டுக் கலங்கினாளென்க.

அன்றில் என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. போதே, தவிர்ந்ததே என்பவற்றி னீற்றேகாரங்கள் ஈற்றசைகளாம்.

இதில் தமயந்தி இரவு விடியாதிருந்ததற்கு வருந்திப் புலம்பினமை கூறப்படுகின்றது.

118. உடைய மிடுக்கெல்லா மென்மேலே யோச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ—கொடியன்மேல்
மாகாதல் வைத்ததோ மன்னவர்த மின்னருளோ
வேகாத தென்னோ விரா.

[இ-ள்.] (மேலைச் செய்யுளிற் கூறியவாறு கண்ணீர் விட்டுக் கலங்கிய தமயந்தி இரவு நீட்டித்திருப்பதை நோக்கி) இரா-இந்த இரவானது, உடைய மிடுக்கெல்லாம்-தனக்குரிமையான பல மெல்லாவற்றையும், என்மேலே-தனித்திருப்பவளாகிய என்மீது, ஓச்சி-செலுத்திவிட்டு, விடிய-விடுவதற்கு, மிடுக்கின்மையாலோ-வல்லமையில்லாமற் போனபடியினாலோ, கொடியன்மேல்-(இவ்வாறு என்னைத் தனித்திருந்து கலங்கச்செய்த) கொடியவனாகிய நளன் மீது, மா-சிறந்த, காதல் வைத்ததோ-தான் ஆசையை வைத்துப் பிரிய மன

மில்லாமலிருப்பதனுலோ, மன்னவர்தம்-அங்ஙனம் தன்னால் விரும்பப்பட்ட நளபூபதியினுடைய, இன் அருளோ-இனிய கிருபையினுலேயோ, (அதாவது அவர் தன்மீது கிருபையைச் செலுத்திக் கொண்டிருப்பதினுலோ) என்றோ-வேறு எக்காரணத்தாலோ, ஏகாதது நீங்கி விடியாமலிருப்பது; [எ-று.]

இரவு நீங்காமலிருப்பது, தன்பலமுழுவதையும் என்மேற் செலுத்தித் தனக்கு விடிவதற்கு வல்லமையில்லாமற் போனதினுலேயோ, தான் நளன் மீது ஆசை வைத்து அவனை விட்டு நீங்கத் தனக்கு இஷ்டமில்லாமலிருப்பதனுலோ, மன்னவர் அருளைப் பெற்றுக்கொண்டதனுலோ, வேறு எக்காரணத்தாலோ, என்பது இதன் கருத்து. தமயந்தி, தனக்குமிக்க துயரத்தைச் செய்து கொண்டிருந்த இரவை தன்னைப்போலவே ஒரு பெண்ணெனவும், அதுவும் தன்னைப்போல நளன்மீது காதல்கொண்டிருப்பதாகவும், அதனுலேயே சக்களத்திப்பகைமை கொண்டு தனக்கிடர்செய்வதாகவும், அது காதல் கொண்டிருப்பதற்கு நளனும் அதன் மீது கிருபை செலுத்தியதாகவும் அங்ஙனம் அவன் கிருபையைப்பெற்றுக்கொண்டிருப்பதனுலேயே அது நீங்க இஷ்டமில்லாதிருப்பதாகவும் குறித்து இங்ஙனம் கூறினுளென்க. நளன் தனக்கு மாத்திரம் கொடுமை செய்தவனுதலின் அதற்குத் தக அவனை முதலிற் கொடியன், என்றும், இரவின் மேல் இன்னருளைச் செலுத்தியதால் அதற்குத் தகப் பின்னே மன்னவர் என்றும் தமயந்தி கூறினுளென்க. காதன் மிக்குடையார் தம் காதலரை இங்ஙனம் தாழ்த்தியும் உயர்த்தியும் கூறுவது இயற்கை. இரவின் மேல் இவ்வாறு இல்லாத தன்மைகளையேற்றி ஒரு பெண்ணெனக் குறித்துக் கூறியது காதன் மயக்கா னிகழ்ந்ததென்க. ஒருவர் ஒரு காரியத்தில் தங்கள் பலமுழுவதையும் செலுத்திவிட்டால் மற்றெருகாரியத்தைச் செய்வதற்கு வலியற்றவராய் விடுவது இயற்கை; அதனுலேயே 'மிடுக்கெல்லாம் என்மேலே ஓச்சி விடிய மிடுக்கின்மையாலோ' என்றுள் தமயந்தி.

இன்மையாலோ, வைத்ததோ, இன்னருளோ, என்றோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் ஐயப்பொருளில் வந்தன. ஈற்றடியை 'வேகாத தென்றோ விரா' எனப்பாடமோதி, 'இரா வெந்துபோகாம லிருப்பதென்றோ' எனப்பொருள் கூறுவாருமுளர்; வேதற்கேது வேது மின்மையானும், இங்கு நீங்காதிருத்தலே எடுத்துக் கூறுதலே மிகப்பொருத்த முடைத்தாகலானும் அவ்வுரை பொருந்தாமை யுணர்க. வைத்ததோ, இன்னருளோ, என்றோ என்பவற்றுள் ஆலுருபுகள் தொக்கின்றன. முன் அச்சுப்பிரதிகளில் இச்செய்யுள் 122-ஆவதாகச் சேர்க்கப்பட்டிருந்த தெனினும் அந்வயத்திற்கும் பொருண்முடிபுக்கும் தக இவண் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இதிலும், இராவின் கொடுஞ் செயல் குறித்துத்
தமயந்தி புலம்பினமை கூறப்படுகின்றது.

119. ஏழுலகுஞ் சூழிருளா யென்பொருட்டால் வேகின்ற
ஆழ்துயர மேதென் றறிகிலேன்—பாழி
வரையோ வெனுநெடுந்தோண் மன்னவோ தின்னும்
இரையோ விரவுக் கியான்.

[இ-ள்.] என்பொருட்டால்-என்நிமித்தமாக, ஏழ் உலகும்-ஏழு உலகங்களையும், சூழ்-சூழ்கின்ற, இருள் ஆய்-இருள் உண்டாகி, எரிகின்ற-எரிகின்றதனாலேற்பட்ட, ஆழ்துயரம்-ஆழ்ந்த துன்பமானது, ஏதென்று-எதனால் உண்டானதென்று, அறிகிலேன்-நான் அறியேன், பாழி-வலிமையுள்ள, வரை-மலைபோன்ற, நெடுந்தோள்-நீண்டதோள்களையுடைய, மன்ன-நளமகாராசனே!, இன்னும்-இன்னமும், யான்-நான், இரவுக்கு-இவ்விராத்திரிக்கு, இரையோ-உண்ணும் உணவோ?, ஓ-ஐயோ!, ஓது-நீ கூறுவாயாக, என்னும்-என்று தமயந்தி கூறுவாள்; [எ-று.]

ஏழுலகு என்றது சப்த தீவுகளை; ஏழுதீவுகளைக் கொண்டதே இவ்வுலகமாதலின், இதனை ஏழுலகென்றார் ஆசிரியர். இருளின் மிகுதி, தமயந்திக்கே வேதனையைச் செய்துகொண்டிருந்தமையாலும், அவ்விருளால் வெப்பம் அதிகரித் திருந்தமையாலும், அவள் 'என்பொருட்டால் ஏழுலகுஞ் சூழ் இருளாய் வேகின்ற ஆழ்துயரம்' என்றாள்; தமயந்தி பொருட்டாகவே இருள் மிகுந்து எரிச்சலைச் செய்து அவளுக்கு வேதனையுண்டாக்கியது. எனினும் அஃதென்னது குறித்துச் செய்கிறதென்பது விளங்காமையின் அவள் 'ஏதென்றறிகிலேன்' என்றுங் கூறினளென்க. துன்பமேலிட்டவர் தங்கள் துயரத்தைத் தங்கள் அருமைக்காதலரிடத்தே கூறுதல் இயற்கையாதலின், தமயந்தியும் தன் துயரத்தைத் தனக்கினியவனாகிய நளனை விளித்து அவனிடத்தே கூறினாள். இரவானது தமயந்தியைத் தன் உணவைப்போல விழுங்கிக்கொண்டிருந்தமையின், அவள், 'முன்னர்தான் இவ்விரவின் வாய்ப்பட்டு மீட்பாரின்றித்துயர் கொண்டு வருந்தினேம்; இப்போது நம் காதலனாகிய நளன் இந்நகரில் வந்திருந்துங்கூட நாம் ஏன் வருந்தவேண்டும்; அவனிடம் முறையிட்டால் விரைவில் அவன் நம் துயரத்தை நீக்குவான்' என்பது குறித்தே இங்ஙனம் நளனை விளித்து, "மன்ன! யான் இன்னும் இரவுக்கிரையோ ஓது" என்று தன்குறையைக் கூறி முறையிட்டாளென்க. "இன்னும்யான் இரவுக்கிரையோ" என்றதனால், 'நீ இங்கு வந்திருந்துங்கூட நான் இரவுக்கிரையாகலாமா? விரைவில் வந்து என்னை விடுதலை செய்' என்பது தானே அமையும்.

சூழ் இருள் - வினைத்தொகை. வேகின்ற துயரம் - மூன்றாம்வேற்றுமையுருபும் பயனும் உடன்றொக்கதொகை; இதில் வேகின்ற என்னும் பெயரெச்சம், துயரம் என்னும் காரியப் பெயரைக் கொண்டு முடிந்தது. அம்புபட்டபுண், சங்கு சுட்ட சுண்ணாம்பு, அரிசிவெந்த சோறு என்பவற்றிற்போல. 'அறிகிலேன்' என்பதில், கில்-என்பது ஆற்றற் பொருண்மையை உணர்த்தும் ஒருவகை இடை நிலை; இம்முற்றில் எதிர்மறை ஆகாரம் புணர்ந்துகெட்டது. 'பாழி வரை நெடுந்தோண் மன்னா' இன்னும் யான் இரவுக்கிரையோ ஓ ஓது! எனக் கூட்டுக. மூன்றாமடியி லுள்ள ஓ-இரங்குதற் பொருளில் வந்தது. 'இரையோ' என்பதிலுள்ள ஓகாரம் வினாப்பொருளது. இனி, "பாழி வரையோ என்னும் நெடுந்தோள் மன்னா? ஓ தின்னும் இரையோ இரவுக்குயான்" எனக்கொண்டு, "வலியமலையோ வென்று சொல்லக் கூடிய நெடுந்தோள் மன்னனே! ஐயோ! நான் இரவுக்குத் தின்னும் இரையோ" என்று பொருளுரைத்தலுமொன்று. இங்ஙன முரைத்தல்; முன்பின்வரும் செய்யுட்களின் பொருண் முடிபிற்குப் பொருந்தா திருத்தலின் சிறப்பன்றென்க.

இதில் ஊதைக் காற்று வந்தமை கூறப்படுகின்றது.

120. கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததா லூதை—பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போன் மருண்மாலை
உண்டுபோ கட்ட வுயிர்க்கு.

(இ-ள்) கருவிக்கும்-அறுத்துப் பிளக்கும் ஆயுதத்தாலும், நீங்காத-நீக்கப்படாத, கார்-கரிய, இருள் வாய்-இருளிலே, கார்வண்டு-கரிய வண்டானது, பருகி-தேனைக் குடித்து விட்டு, போகட்ட-போட்டு விட்ட, மலர்போல்-மலரைப்போல, மருள்-மயக்கத்தைச் செய்கின்ற, மாலை-அந்திப்பொழுதானது, உண்டு-வல்லமை யெல்லாவற்றையும் உட்கொண்டு, போகட்ட-போட்டுவிட்ட, உயிர்க்கு- தமயந்தியின் உயிரை மேலும் உண்பதற்கு, ஊதை - குளிர் காற்றானது, கங்குல் -இராத்திரியை, உருவி-நடுவே பிளந்து கொண்டு, புகுந்தது- (தமயந்தி இருக்குமிடத்தில்) வந்து நுழைந்தது; [எ-று.]

மாலைப்பொழுதில் வாட்டமடைந்திருந்த தமயந்தியின் உயிரை வருத்துதற்கு மிகுந்த இருளிலே குளிர் காற்றும் வந்தது என்பது இதன் கருத்து; இருள், எதனாலும் நீக்கக்கூடாததாய் மிகவுஞ்செறிந்திருந்ததால் அதனைக் 'கருவிக்கும் நீங்காதகாரிருள்' என்றார் புலவர். இத்தகைய இருள் மிகுந்த அந்த இரவையும் பிளந்து கொண்டு ஊதைபிரவேசித்தமையினாலே 'கங்குல் உருவிப் புகுந்ததால் ஊதை' என்றுங்கூறினர். இதனால், இவ்வூதையானது, அக் காரிருளினும்

மிக்க வன்மையுடைய தென்பது பெறப்படும். வண்டு, தேனைப்பருகி விட்டுச்சென்ற மலரானது சாரமற்றதாயிருக்கும்; அதைப் போல, மாலைக்காலமானது வன்மையையெல்லாம் கவர்ந்து விட்டபடியால் தமயந்தியின் உயிரானது எவ்வித வலிமையு மின்றி நிசாரமாயிருந்த உயிரை மேலும் வருத்துதற்கு ஊதைக் காற்று வந்தது. இது குறித் தே ஆசிரியர், "கார்வண்டு பருகிப் போகட்டமலர்போன் மருண் மாலை உண்டுபோகட்டவுயிர்க்கு ஊதை புகுந்தது" என்றார். ஊதை கருவிக்கும் நீங்காத காரிருள் வாய்க் கங்குல் உருவிப்புகுந்த வன்மை யுடையதாதலின் அவ்விருளைக் காட்டினும் அதிகமாகத் தமயந்தி யை வருத்தும் இயல்பினையுடையதாம். ஆதலின் இவ்வூதை புகுந்த மாத்திரத்தில் தமயந்தி முன்னினும் அதிகமாக வருத்த முற்றா ளென்க. ஊதைக் காற்றுக் கூடல் விருப்பை அதிகரிக்கச்செய்யும்; அதனால் ஒருதலைக் காம முடையவர்க்குத் துன்பமேலிடும்; இங்ஙனம் ஒருதலைக் காம முடையார்க்குக் குளிர்காற்று முதலியன துயர் செய்யு மென்பதை,

> " முத்துங் களபமுந் தண்பனி நீரு முயங்குமலர்த்
> தொத்துங் குளிரியுந் தூய்மலர்ப் பாயலுஞ் சூழ்ந்துபுறங்
> கத்துங் கடலுங் கதலியு மாலியுங் கங்குலுமிப்
> பத்தும் பெரும்பகை யாய்விட்ட வாமொரு பைந்தொடிக்கே"

என்னும் இரத்தினச் சுருக்கச் செய்யுளானுணர்க.

கருவிக்கும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புப் பொரு ளது. கருவிக்கு-நான்காம் வேற்றுமை விரி; இஃதாற்றற் பொருண் மையில் வந்தது; இது " நான்கா வதற்குரு பாகுங் குவ்வே, கொடை பகை நேர்ச்சி தகவது வாதல், பொருட்டு முறை யாதியி னிதற்கிதெ னல் பொருளே" என்ற (நன். பெ. சூ 41) ல் 'ஆதி' என்றதிலடங் கும். வாய்-ஏழனுருபு. புகுந்ததால் என்பதில் ஆல் அசை. போகட்ட என்பதற்குப் 'போகக்கெடுத்த' என்பது பொருளாம். கெடுத்த என் பது விட்ட, அல்லது இழந்த, அல்லது நீங்கிய என்ற பொருள் களில் அமைந்தது; ஆகவே, போகக் கெடுத்த என்பதற்குப் போக விட்ட என்பது திரண்ட பொருளாம். போக அட்ட என்பது அகரந் தொகுத்தலாய்ப் போகட்ட என்றாயது; இதில் போக அடு என்ற இரண்டுஞ் சேர்ந்து ஒரு சொன்னீர்மைத்தாய்ப் போகடு என்று பகு தியாம்; இதில் பெயரெச்சவிகுதியாகிய அ-வர, டகர வொற்றிரட் டிப் போகட்ட என்றாயது; இச்சொல் இக்காலத்தில் போட்ட என வழங்குகின்றது; போகட்ட என்பது பண்டையவழக்கு; இதனைச் சீவக சிந்தாமணி 951-ஆம் செய்யுளுரையில் நச்சினார்க்கினியர், 'போகட்ட வுடம்பையும்' என வரைந்திருத்தலானும், ஷை நூல் 1365-ஆம் செய்யுளில் திருத்தக்க தேவர் 'போகடாய்' எனப் பிர

யோகித் திருப்பதனாலும், ஷை நூல் 2177-ஆம் செய்யுளில் 'போகடாத' எனக் கூறியிருப்பதனாலு முணர்க. உயிர்க்கு-என்பது நான்காம் வேற்றுமைப் பொருட்டுப் பொருளது. புகுந்தால் என்பதிலுள்ள ஆல்-அசை, உயிர்க்கு-உயிரை உண்பதற்கு; இசை எச்சம்.

அங்ஙனம் ஊதை புகுந்தவுடன் தமயந்தி
வருந்தினமை இதிற் கூறப்படுகிறது.

121. எழுந்திருக்கு மேமாந்து பூமாந் தவிசின்
விழுந்திருக்குந் தன்னுடம்பை மீளச்—செழுந்தரளத்
தூணோடு சேர்க்குந் துணையேது மில்லாதே
நாணோடு நின்றழிவா ணைந்து.

[இ-ள்.] (மேற் கூறியபடி ஊதைக் காற்று வந்தவுடனே விரகவேதனை மிகுந்து வருந்திய தமயந்தி) பூ-அழகிய மாந்தவிசின்-மாந்தளிர் பரப்பிய ஆசனத்தினின்றும், ஏமாந்து-விரும்பி, எழுந்திருக்கும்-(நளனையே இடைவிடாது தியானித்துக்கொண்டிருந்தபடியால் அந்த எண்ண முதிர்ச்சியே நளன் வடிவமாக எதிரே தோன்றி உருவெளித் தோற்றமாக நின்றபடியால் அவன் மெய்யாக வந்துவிட்டானென்றே நினைத்துச் சந்தோஷித்து அவனை எதிர்கொண்டழைப்பதற்காக) எழுந்திருப்பாள். (அங்ஙனம் எழுந்து போனமாத்திரத்தில் அவ்வுருவம் இல்லாமற்போகவே மனம்வாடி) விழுந்திருக்கும்-வீழ்ந்து கிடப்பாள், மீள-திரும்பவும், (எழுந்து) தன் உடம்பை-தன்னுடைய தேகத்தை, (அது விரகாக்கினியால் நெருப்பாயிருந்தமையால் அவ்வெப்பந் தணியுமாறு) செழும்-செழுமையாகிய, தரளத் தூணோடு-முத்துப் பதிப்பிக்கப்பட்ட ஸ்தம்பத்தோடு, சேர்க்கும்-சேர்ப்பாள், ஏதும் துணையில்லாது-ஒரு துணையுமில்லாமல், நைந்துநின்று-மனம் வருந்தி நின்று, நாணோடு-(தான் அச் சமயத்தில் செய்யும் செய்கைகளெல்லாம் தனக்கு வெட்கத்தை யுண்டாக்கியபடியால் அந்த) வெட்கத்தினாலும், அழிவாள்-வாடுபவளாயினாள்; [எ-று.]

ஊதைக்காற்று வந்தவுடனே விரகவேதனை அதிகப்பட அதிகப்படத் தமயந்திக்கு நளன் மீது அதிக சிந்தனை யுண்டாயிற்று; அச்சிந்தனையால் நளனுடைய உருவெளித்தோற்றம் எதிர்ப்பட்டது; அதனைக் கண்டவுடனே அவள் நளனே வந்து விட்டானென்று நினைத்து, 'ஆசை வெட்கமறியாது' என்றதற்கிணங்கத் தானேபோய் அவனை எதிர்கொண்டழைப்பதற் கெழுந்தாள். உடனே அத் தோற்றம் காணாமற்போகவே, தன் புத்தி மயக்கத்தினாலேயே அச் செய்கை நிகழ்ந்ததெனக் கருதிச் சோபமுற்றுத் தவிசில் வீழ்ந்து படுத்தாள். அங்ஙனம் மாந்தளிர்த்தவிசிற்படுத்தும் விரகாக்கினி

யால் உடல் வெதும்பியபடியால் அவ்வெப்பத்தைச் சகிக்காமல் அதனைத்தணித்துக்கொள்ளுமாறு மீண்டும் எழுந்து முத்துக்கள் பதிக்கப்பட்ட தூணில் தன் உடம்பைச்சேர்த்தாள். இத் துயரங்களெல்லாம் நீங்குமாறு அங்கே தனக்குத் தேறுதல் சொல்வாரொருவரு மில்லாமையினாலே தனிப்பட்டு வருந்தினாள். மதிமயக்கத்தால் நடந்த இச் செய்கைகளெல்லாம் தனக்கு மிக்க மானக்கேட்டை உண்டாக்கியபடியால் வெட்கத்தையும் அடைந்தாள். விரகாக்கினியிருந்துள்ளவர்க்கு அதனைச் சாந்தப்படுத்தும்பொருட்டுத் தவிசு, சயனம் முதலியவற்றில் மாந்தளிர், வேறு குளிர்ந்த மலர்கள் முதலியவற்றைப் பரப்பிவைத்தல் வழக்கம்; ஆதலின், 'மாந்தவிசு' என்றார் ஆசிரியர். தூண்களில் அழகுசெய்யும் பொருட்டு முத்துக்களைப் பதித்துவைத்தல் இயற்கை; அவ்வாறு முத்துக்கள் பதிக்கப்பட்ட தூணை இங்கு 'செழுந்தரளத் தூண்' என்றது; தமயந்தியோடு அத்தருணம் பொருந்தி நின்றது நாணே யன்றி வேறொன்றுமின்மையால் 'துணையேது மில்லாது நாணோடு நின்றழிவாள்' என்றார் ஆசிரியர்.

எழுந்திருக்கும், விழுந்திருக்கும் என்பவற்றுள் இருக்கும் என்பது துணைவினை. இல்லாதே என்பதில் ஏ - அசை. நாணோடு என்பதில் ஓடுருபு கருவிப்பொருளில் மயங்கி வந்தது.

இதுவுமது.

122. விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சோரிகின்ற காரிருள்போற் சோரும்—புரிகுழலைத்
தாங்குந் தளருந் தழலே நெடிதுயிர்க்கும்
ஏங்குந் துயரோ டிருந்து.

[இ-ள்.] [இன்னும் அத் தமயந்தி] விரிகின்ற-பரந்திருக்கின்ற, மெல் அமளி-மெல்லியபடுக்கையில், வெள்-வெண்மையாகிய, நிலவின் மீது-சந்திரிகையின் மேல், சொரிகின்ற-பொழிகின்ற, கார் இருள்போல்-கரிய இருளைப்போல; சோரும்-[தன் சோகத்தால் தளர்ந்து] அவிழ்ந்து வீழ்கின்ற, புரி-சுருண்ட, குழலை-கூந்தலை, தாங்கும்-கையினாலே ஏந்துவாள், தளரும்-[அப்படி யேந்துதலினாலே அச்சுமையைப் பொறுக்கலாற்றாது உடல்] தள்ளாடுவாள், நெடிது-நீட்சியாகிய, தழலே-நெருப்பையே, உயிர்க்கும்-பெருமூச்சாக வெளிப்படுத்துவாள், துயரோடு இருந்து-இவற்றாலுண்டாகுந் துன்பத்துடனே யிருந்து, ஏங்கும்-அழுவாள்; [எ-று.]

விரக வேதனை யுடையார்க்குக் குழல் சோர்தலும், உடல் தள்ளாடுதலும், பெருமூச்சு விடுதலும், கண் கலங்கி யழுதலும் இயற்

கை. ஆதலின், தமயந்திக்கு முடித்த கூந்தல் அவிழ்ந்து அமளியில் வீழ்ந்தது; அதனைச் சேர்த்துமுடிக்கும் ஆற்றல் அச்சமயம் அவ ளிடத்தின்மையால் அவள், அங்ஙனம் சோர்ந்த குழலைக்கரத்தா லேந்தினாள்; அச்சமயம் அவளுடைய உடல் மிகவும்மெலிவுற்றிருந்த தாதலின், அக்கூந்தலைக்கரத்தால் தாங்கியபொழுது அச்சுமையைத் தாங்கமாட்டாது அவள் தளர்ந்தாள்; அவளுடைய தேகத்தி னுள்ளே விரகாக்கினியால் வெம்மையே மிகுந்திருக்குமாதலின், அவளால் விடப்படும் பெருமூச்சும் நெருப்பு மயமாகவேயிருந்தது. இங்ஙனம் தேகத்தளர்ச்சியும், உள் வெப்பும் அதிகரித்தமையால் அவளுக்குத் துயரம் அதிகரித்தது; அதனால் அவள் கண்கலங்கி அழவும் ஆரம்பித்தாள். அவளுடைய அமளியில் வெண்டுகில் விரிக் கப்பட்டிருந்தது. அதில் கரியகூந்தல், அவிழ்ந்து வீழவே அத் தோற்றமானது வெள்ளிய சந்திரிகையின் மீது காரிருள் சொரிந்த தோற்றம் போன்றிருந்தது. அவள் குழலைக் கரத்தால் தாங்கின மாத்திரத்திலேயே அவளுக்குத் தளர்ச்சியுண்டாகுமாதலின், 'தாங் குந்தளரும்' என்றார் புலவர். மூச்சு நெருப்பாகவே யிருந்ததென்பது தோன்ற 'தழலே நெடிதுயிர்க்கும்' என்றார்.

மெல், வெள் என்பன மை யீறுகெட்ட பண்புப் பெயர்கள். நிலவின் என்பதில் இன்-சாரியை. மீது-ஏழாம் வேற்றுமைச் சொல் லுருபு; இதிலுள்ள ஏகாரம்-அசை. கார், கருமை யென்னும் பண் புப் பெயர் விகாரம். புரிகுழல்-வினைத்தொகை. தழலே என்பதி லுள்ள ஏகாரம் தேற்றப் பொருளது. நெடிது-நெடுமை யென்னும் பண்படியிற் பிறந்த வினையுரிச் சொல்; இஃதிங்கே வினையை விசே டித்து வந்தமையின் இப்பெயர் பெற்றது; இதனைக் குறிப்பு முற் றென்றும், அதுவே இங்ஙனம் எச்சமாயிற் றென்றும் கொள்ளினும் அமையும்; இங்ஙனம் கொள்ளுமிடத்தும் இது வினையுரிச்சொல்லே யாகும். துயரோடு என்பதிலுள்ள ஓடு உருபு உடனிகழ்ச்சிப்பொரு ளது. துயர்வேறு, தமயந்தி வேறாய் அவள் அதனோடு கூடியிருந்த மையால் இங்ஙனம் உடனிகழ்ச்சிப்பொருளதாகவே கொள்ளல்சிறப் புடைத்தாம். இனித் துயர் தனக்குள்ளே நிகழ்வதாதலின், அதற் கும் அவளுக்கும் நீக்கத் தன்மையின்றெனக் கொண்டு, அவ்வுருபை விசேஷணப் பொருளதெனக் கொள்ளினும் அமையும்; விசேஷண மாவது குணத்தைவிளக்குவது; இங்ஙனங் கொள்ளும்போது 'துய ரோடிருந்து' என்பதற்குத், 'துயருள்ளவளா யிருந்து' என்பது பொருள்.

இதுவுமது.

123. மயங்குந் தேளியு மனநடுங்கும் வெய்துற்
றுயங்கும் வறிதே யுலாவும்—வயங்கிழைபோய்ச்

சோரும் துயிலுந் துயிலாக் கருநெடுங்கண்
நீருங் கடைசோர நின்று.

[இ-ள்.] [இன்னும் அத்தமயந்தி] மயங்கும்-மயக்கத்தை அடைவாள், தெளியும்-தெளிவாள், மனம் நடுங்கும்-மனங்கலங்குவாள், வெய்து உற்று - வெப்பம் பொருந்தி, உயங்கும் - வருந்துவாள், வறிதே-ஒரு காரணமுமில்லாமல் சும்மா, உலாவும்-அங்கு மிங்கும் திரிவாள், வயங்கு-பிரகாசிக்கின்ற, இழை-ஆபரணம், போய்-போக, [அதாவது கழன்று விழ] சோரும்-தளர்ச்சி யடைவாள், துயிலா-நித்திரை கொள்ளாத, கரு-கரிய, நெடு-நீண்ட, கண்-கண்களினின்று வடியும், நீர்-நீரானது, கடை-அக் கண்களின் நுனியில், சோர-வடிய, நின்று - நின்றுகொண்டே, துயிலும் - சோக நித்திரை கொள்வாள்.

தமயந்தி முதலில், நளனுடைய சேர்க்கை தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தை யடைந்ததால் மயங்கினாள்; பின்னர் அவன் தன்னுடைய சுயம்வரத்திற்கு வந்திருப்பதால் தன்னை மணந்து கொள்வானென்று தெளிவடைந்தாள்; அவ்வாறடைந்தும், அவன் தேவர் பொருட்டுத் தன்னிடம் தூது வந்தமையால் "அவர் தேவர்க்குத் தூதுவராய் நம்மிடம் வந்தாரே; நம் மீது விருப்பமுடையவராயிருந்தால் அங்ஙனம் வருவாரா? இப்படி அவர் தூது வந்தமையால் நம்மீது விருப்பமில்லாதவராயிருந்தாலு மிருத்தல் கூடும்; ஆதலால் அவர் நம்மை மணந்து கொள்வது அவ்வளவு உறுதியில்லை" என்று உடனே அவளுக்கோர் சந்தேக முதித்தது; அதனால் அவள் மீண்டும் மனநடுக்க மெய்தினாள்; அந்நடுக்கத்தால் அவளுடைய மேனி வெதும்பிற்று; அதனால், அவள் வருத்தமடைந்தாள். அங்ஙனம் வருத்தம் மிகவே இருக்கவும், படுக்கவும் அவளால் இயலாமையால் ஒரு காரியமுமில்லாமல் வீணே அங்கும் மிங்கும் உலாவத் தலைப்பட்டாள்; இவ்வாறு திரிந்து திரிந்து மேனி யிளைத்துப் போயினமையால் அவள் தேகத்திலணியப்பட்டிருந்த ஆபரணம் தானே கழன்று வீழ்ந்தது; அங்ஙனம் உடல் மெலிந்து திரிய அவளுக்கு நித்திரையும் வாராமற் போயிற்று; அப்படி அவள் நித்திரையுமற்றுச் சோர்ந்து வருந்தியதால் அவளுடைய கண்களில் நீர் பெருகி அவற்றின் ஓரங்களில் வடிந்தது. இவ்வாறு சோபம் அதிகரிக்கவே உலாவித்திரிந்த அவள், காலோய்ந்து ஓரிடத்திற் சோபமுற்று நின்றாள்; அச்சோபத்தால் கண்கள் சோர்ந்து மூடிக்கொண்டன. இவ்விதம் அவள் கண்களை மூடிக்கொண்டு நின்ற நிலை நித்திரை செய்வது போன்றிருந்தது; இதையே ஆசிரியர் 'சோர நின்று துயிலும்' என்றார். இது சோபத்தால் நிகழும் ஒருவிதக் கண்மயக்கம்; சோபநித்திரை யென்று சொல்லப்படும்; ஆனால் இது

நித்திரை யன்று; அறிதுயிலாய் நிகழ்வது; மிக்க மன வேதனை யுடையார்க்கு இச் செயல்களெல்லாம் நிகழ்தல் இயற்கை.

மன நடுங்கும் என்பதில் சினைவினை முதலொடு முடிந்தது. வெய்து-வெம்மை யென்னும் பண்படியிற் பிறந்தபெயர்; இதில் வெம்மை-பகுதி; து-பகுதிப் பொருள் விகுதி; பண்புப்பகுதியின் மை விகுதிகெட்டு முன்னின்ற மகரமெய் யகரமெய்யாகத் திரிந்தது. போகவென்னும் செயவனெச்சம், போய் எனச்செய்தனெச்சமாகத் திரிந்துவந்தது. கரு, நெடு என்பன கருமை, நெடுமை என்னும் பண் படிகளின் மை யீறுகெட்ட விகாரங்கள்; நீரும் என்பதிலுள்ள உம்மை அசைநிறைப் பொருளது; கண்ணீர்-நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத்தொகை; கண்களினின்றும் வெளிப்படும் நீர் என விரியும்; இனி, இதனைப் பொருட்பிறிதின் கிழமையில் வந்த ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளினு மமையும்; அங்ஙனங் கொள்ளின், கண்களினுடைய நீர் எனவிரித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

இதில், இரவில் வருந்தும் விரகிகளின்
உயிர்க்கும் காப்புண்டோ என்பது கூறப்படுகின்றது.

124. விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்டுக்
கழுதும் வழிதேடுங் கங்குற்-பொழுதிடையே
நீருயிர்க்குங் கண்ணோடு நெஞ்சுருகி வீழ்வார்தம்
ஆருயிர்க்கு முண்டோ அரண்.

[இ-ள்.] விழுதுபட-விழுதுஉண்டாக, திணிந்த-நெருங்கியதும், வீங்கு-அதிகரித்தது மாகிய, இருள்வாய்-இருட்டினிடத்திலே, பட்டு-அகப்பட்டு, கழுதும்-பேயும், (வழிதெரியாமல் மயங்கி) வழி தேடும்-செல்லும் மார்க்கத்தை ஆராய்ந்து தேடும்படியான, கங்குல் பொழுதிடை-இராக்காலத்தில், நீர் உயிர்க்கும்-நீரைச்சொரிகின்ற, கண்ணோடு-கண்களுடனே, நெஞ்சு உருகி-மனம் கரைந்து, வீழ்வார் தம்-படுக்கையில் வீழ்ந்து வருந்துகின்றவர்களாகிய விரகிகளுடைய, ஆருயிர்க்கும்-அரிய உயிருக்கும், அரண்-காவல், உண்டோ-உளதோ; (இல்லை என்றபடி) [எ-று.]

விரகதாபத்தையுடையார்க்கு அவ்விரகத்தை அதிகப்படுத்தி மிக்க துயரத்தைச் செய்யக்கூடிய இருள் மிகுந்த இரவில், அவ்வேதனையால் நீரொழுகுங் கண்ணோடு மனங் கரைந்து வீழ்ந்து வருந்துவாருடைய அரிய உயிருக்குக் காவலில்லையென்பது இதன் கருத்து. இது கவியின்கூற்று. இது வெளிப்படுத்தக்கூடாமல் மனத்தேநிகழ்ந்து ஒருதலைக்காமமுடையாரை வருத்தும் இயல்பினை

யுடைய துயரமாதலின், இத்துயரத்திற் குட்பட்டார் அடுத்திருப் போரிடத்தும் இதனைக் கூறுமல் நினைத்து, நினைத்து வருந்துவர்; சில சமயம் அவர், உயிர்ப் பாங்கியர்க்கு உண்மை கூறி அறத்தொடு நிற்றல் அகப்பொருட்டுறைகளில் ஒன்றெனினும், இராக் காலத்தில் தாமாத்திரம் துயரத்தால் நித்திரையிழந்திருக்க, மற்றையர் அயர்ந்து நித்திரை செய்வார்களாதலின் அஃதுமியலாமற்போம்; ஆதலின் அவர் தனித்து வருந்தி உயிர் சோருதல் இயற்கை; இதுபற்றியே புலவர், 'நெஞ்சுருகி வீழ்வார் தம் ஆருயிர்க்குமுண்டோ அரண்' என்றார். விழுது-ஆலவிருக்ஷம் முதலியவற்றில் திரள்திரளாக இறங் கும் வீழ்; இருட்டொகுதியும் ஆகாயத்திலிருந்து இவ்வகை விழுது இறங்கினதுபோலவே யிருக்குமாதலின், 'விழுது படத்திணிந்த வீங்கிருள்' என்றார். விழுதுபட என்பதற்கு விழுதின் தன்மை யுண்டாக எனப்பொருள் விரிக்கவேண்டும். திணிதல்-நெருங்குதல், வீங்குதல்-அதிகரித்தல். பேய் இருளில் சஞ்சரிக்கக்கூடியது; அங் ஙனமிருப்ப அக்கழுதும் வழிதேடும் கங்குல் என்றதனால் அவ்விரு ளின் மிகுதிப்பாடு விளங்கிற்று.

திணிந்த-பெயரெச்சம். வீங்கிருள்-வினைத்தொகை. வாய்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இடை-ஏழனுருபு; இதிலுள்ள ஏகாரம்-அசை. கண்ணோடு வீழ்வார்-மூன்றும் வேற்றுமைத் தொகா நிலைத்தொடர். தம்-சாரியை. வீழ்வார்தம் ஆருயிர் வலிமையிற் குறைவு பட்டதாதலின், ஆருயிர்க்கும் என்றதிலுள்ள உம்மை இழிவு சிறப்புப் பொருளது. உண்டோ என்பதின் ஏகாரம் இல்லை என எதிர் மறுத்தற் பொருளது.

இதில், அவ்விரவு நீங்கியமை கூறப்படுகின்றது.

125. பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாசம்
அலர்ந்ததேங் கோதையா ளாழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது.

[இ-ள்.] பூசுரர்தம்-பிராமணர்களுடைய, கைம்மலரும்-கரங்க ளாகிய மலர்களும், பூங்குமுதம்-அழகிய ஆம்பல்மலர்களும், முகிழ்ப்ப-குவியவும், காசினியும் பூமியிலுள்ளவர்களும், தாமரை யும்-தாமரைமலர்களும், கண்விழிப்ப-கண்திறக்கவும், (அதாவது, மலரவும்) வாசம்-வாசனை, அலர்ந்த-பரவிய, தேம்-தேன்நிறைந்த, கோதையாள்-மாலையை அணிந்த தமயந்தியின், ஆழ் துயரத்தோடு-ஆழ்ந்த துன்பத்துடனே, அற்றைப்பொழுது-அன்றைய இராக்கா லம், புலர்ந்தது-நீங்கிற்று; [எ-று.]

விடியற்காலத்தில் பிராமணர்கள் கைகுவித்துச் சூரியனை வணங்கி, அநுஷ்டானஞ் செய்வார்கள்; அல்லிமலர்கள் குவிந்து விடும்; உலகத்தாரெல்லோரும் நித்திரை தெளிந்தெழுவார்கள்; தாமரைமலர்கள் மலரும். ஆதலின், புலவர், "பூசுரர்கைம்மலரும் குமுதமும் முகிழ்ப்ப, காசினியுந்தாமரையுங் கண்விழிப்ப, புலர்ந்தது அற்றைப் பொழுது" என்றார். விரகிகளுக்கு விரகவேதனை இராவில் அதிகப்பட்டிருந்து அவ்விரவு நீங்கும்போது தானும் நீங்கிவிடும்; இராக்காலத்தில் அவர்கள், வேறுதுணையும் வேறுசெய்கைகளின் நிகழ்ச்சியும் இன்றித்தனித்திருப்பதால் அவர்களின் மனத்திலுள்ள காதலர் விருப்பமானது அதிகரித்து அவர்களுக்கு வேதனையைச் செய்யும்; பகற்காலத்தில் அவர்களின் சமீபத்தில் பலர் சஞ்சரிப்பும், பலசெய்கைகளின் நிகழ்ச்சியும் மிகுந்துண்டாமாதலின், அவர்களது மனம் பல விஷயங்களிலும் பிரிந்து செல்லும்; அப்போது அம்மனத்தில் திடமாகப் பற்றப் பட்டிருந்த காதலானது சிறிது தணியும்; அதனால் அவர்களுக்குத் துயரமும் குறைந்து விடும்; இதுவே விடியற்காலம் வந்தவுடன் துயரம் நீங்குவதற்குக் காரணமாம். ஆதலின், 'கோதையாள் ஆழ் துயரத்தோடு அற்றைப் பொழுது புலர்ந்தது' என்றுங்கூறினார் ஆசிரியர். அற்றை-அன்று, பொழுது-நேரம், இவ்விரண்டுஞ் சேர்ந்து அன்றைக்காலம் என்றாகும்; எனினும், இங்கு இரவின் நிகழ்ச்சியே கூறப்பட்டு வந்தமையின், காலம்என்பது இராப்பொழுதிற்குக் கொள்ளப்பட்டது. இனி, 'அற்றைப்பொழுது கழிந்தது' என்பதற்குப் 'பகலும் இரவும் கொண்ட அந்த நாளின் நேரம் நீங்கிற்று' எனப் பொருள் கூறினும் அமையும். எவ்வாறு கூறினும், 'அற்றைப்பொழுது கழிந்தது' என்றதனால் 'மறுநாள் உதயகாலம்வந்தது' என்பது பெறப்படும். புலர்தல்-கெடுதல், அஃதிங்கே நீங்குதற் பொருளில் வந்தது.

பூசுரர்-பூமிதேவர்கள்; பூ-பூமி, சுரர்-தேவர், பிராமணர்கள் உலகினுக்குத் தேவர்போன்று விளங்குபவராதலின், இப்பெயர் பெற்றனரென்க.

"முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித் திறம்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவ ருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம்"

என்ற வில்லி பாரதச் செய்யுளில் பிராமணர்களைப் பூதேவர் எனக் கூறப்பட்டிருத்தலை உணர்க. தம்-சாரியை. குமுதமும் முகிழ்ப்ப என்பதில் மகரம் விரித்தல் விகாரம். கைம்மலர்-இருபெயரொட்டுப்பண்புத்தொகை; இஃதணி வகைகளுள் உருவக வணியெனப்படும்; உருவக வணியாவது, "உவமையும் பொருளும் வேற்றுமையொழிவித் தொன்றென மாட்டினஃ துருவக மாகும்" என்ற தண்டி

யலங்காரம் பொருளணியியற் சூத்திரப்படி, உவமையாம்பொருளையும், உவமிக்கப்படும் பொருளையும் வேறுபா டொழிவித்து, ஒன்றென்பதோருள்ளுணர்வு தோன்ற வொற்றுமை கொளுத்துதலாம். கையும், மலரும் இங்ஙனமே அமைதல் காண்க; இவ்வகை உருவகத்துள்ளும் இது தொகையுருவக மெனப்படும். தொகையுருவகமாவது, ஆகியவென்னும் சொற்றொகுத்துக் கூறுதலாம்; இதில் அங்ஙனமே அச்சொல் தொகுத்திருத்தல் காண்க. இது விரிக்குங்கால் கையாகிய மலர் எனவிரியும். குமுதம், தாமரை முதலாகுபெயர்கள். காசினி-இடவாகுபெயர். கண்விழித்தல்-மலர்தல்; காசினியோர் மலர்தலாவது, தூக்கத்தால் வாடியிருந்தமை யொழித்து முகமலர்ச்சி யடைதலாம். அன்று பொழுதென்பது ஐச்சாரியை பெற்று அன்றைப்பொழுதென்றாய் வலித்தல் விகாரத்தால் அற்றைப்பொழுதென்றாயது. இச் செய்யுளில், "பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுதமும் முகிழ்ப்ப" என்றது புணர்நிலையணியாம்; புணர்நிலையணியாவது "வினைபண்பென வியையிருபொருட் கொன்றே, புணர மொழிவது புணர்நிலையாகும்" என்ற தண்டியலங்காரம் பொருளணியியல் சூத்திரப்படி வினையானும், பண்பானும் இரண்டுபொருளுக்கொன்றே பொருந்தச் சொல்லுதலாம்; கைம்மலர், குமுதம் ஆகிய இரண்டிலும் குவிதலாகிய ஒரேவினை அமைதல் காண்க; இங்ஙனம் அமைதலின், வினைப்புணர்நிலை, பண்புப்புணர்நிலை, என்னும் இரண்டு வகைகளுள் இது வினைப்புணர் நிலை யணியென்றுஞ் சொல்லப்படும். "காசினியுந் தாமரைங் கண்விழிப்ப" என்பதும் இவ்வணியைச் சார்ந்ததேயாம். எனினும் இவ்விரண்டற்கும் வேறுபாடுண்டு; முன்னையது முகிழ்த்தற் பொருளில் வந்தது; பின்னது மலர்தற்பொருளில் வந்தது; இன்னும் இவை ஒப்புமைக் கூட்ட வணியிலும் அடக்கப்படும். ஒப்புமைக்கூட்டமாவது, "கருதிய குணத்தின் மிகுபொருளுடன் வைத் தொருபொரு ளுரைப்ப தொப்புமைக்கூட்டம்" என்ற தண்டியலங்காரப் பொருளணியியற் சூத்திரப்படி, ஒருபொருளைச் சொல்லுமிடத்துத் தான்கருதிய குணமுதலாயினவற்றின் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுதலாம்; இவற்றுள் குமுதத்தோடு, உயர்ந்தபொருளாகிய பூசுரர் கைம்மலரும், தாமரையோடு உயர்ந்தபொருளாகிய காசினியும் ஒப்புமையாக எடுத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. இந்த ஒப்புமைக்கூட்டமும் புகழொப்புமைக்கூட்டமெனவும், பழிப்பொப்புமைக் கூட்டமெனவும் இருவகைத்தாம்; உயர்த்திக்கூறல் புகழும், தாழ்த்திக்கூறல் பழிப்புமாம்; இங்கே முகிழ்த்தலைச்சொன்னது பழிப்பு; மலர்தலைச்சொன்னது புகழ்ச்சி; கைம்மலர் குவிதல் நற்கருமமாயினும் குவிதற்றன்மை ஒன்றை மட்டும் நோக்கிக் குவிதலாகிய குமுதத்தின் இழி தன்மையோடு சேர்க்கப்பட்டதென்க. அங்ஙனம் சேர்க்காவிடின் பழிப்பொப்புமைக் கூட்டத்தில் முரண்படும்.

இதில் சூரியோதயங் கூறப்படுகின்றது.

126. வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கிழியத் தோன்றினான்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று.

[இ-ள்.] வல்லி-கொடிபோன்ற பெண்ணாகிய தமயந்தியினது, மணமாலை-கல்யாணத்திற்கறிகுறியாக அவளால் இடப்படும் மாலையை, வேட்டிடு-விரும்பியிருக்கின்ற, தோள்-தோள்களையும், வாள்-வாளாயுதத்தையும் உடைய, அரசர் முன்னே-அரசர்களுக்கெதிரில், செம்-செம்மையாகிய, கதிரோன்-கிரணங்களையுடைய சூரியன், குணவாயில்-கீழ்திசையில் உள்ள, குன்று-உதயகிரியின் மிசை, வில்லி-கருப்பு வில்லையுடைய மன்மதன், கணை இழப்ப-[காமுகர் மீது இரா முழுதும் எய்து அவர்களை வருத்திக் கொண்டிருந்த] புஷ்பபாணங்களைக் கைவிடவும், வெண்மதியம்-வெண்மையாகிய சந்திரன், சீர்-[இராக்காலத்தில் பிரகாசித்து ஒருதலைக்காம முடையாரை வருத்தி அடைந்திருந்த] சிறப்பை, இழப்ப-இழந்து ஒளி மழுங்கவும், [அச்சந்திரன் மறைந்தவுடன் வந்து கூடிக்காதலுடையாரை வருத்திக்கொண்டிருந்த] தொல்லை-அத்துன்பத்தையுடைய, இருள்-அந்தகாரமானது, கிழிய-பிளவுபட்டு நீங்கவும், தோன்றினான்-உதயமாயினான்; [எ-று.]

மன்மதன், காமுகர்மீது ஏவிக்கொண்டிருந்த புஷ்பபாணங்களைக் கைவிடவும், சந்திரன் ஒளியிழப்பவும், இருள் நீங்கவும், தமயந்தியின் மணமாலையை விரும்பியிருந்த தோள்களையுடைய அரசர்களுக்கு முன்னே சூரியன் கிழ்த்திசையில் உதித்தான் என்பது இதன் கருத்து. மன்மதபாணங்கள் பெரும்பாலும் புஷ்பங்களே; அந்த மலர்கள் இராக்காலத்திற்றான் அதிகமாகமலரும்; அப்போது அம்மலர்களின் வாசனை தென்றற்காற்றோடு சேர்ந்துபரவும். அதனால் காமுகர்க்குக் காமக்கிளர்ச்சி அதிக முண்டாய் வேதனை அதிகரிக்கும்; இப்படி மலர்களின் வாசனையால் அதிகரிப்பதையே, மன்மதன் புஷ்பபாணங்களைக் காமுகர்மீது ஏவியதாகவும், அதனால் அவர்கள் வருந்தியதாகவும் கவி வல்லோர் கூறுவர்; அம்மலர்களுக்கு உரித்தான தேவன் மன்மதனாதலின், அவற்றை அவனுக்குப் பாணங்களாக ஏற்படுத்திக் காமுகர் மீது போர்செய்தல் முதலிய சம்பந்தங்களைக் கற்பித்துச் சொல்வது தொன்றுதொட்ட வழக்கு. அவ்வகை மலர்கள் பகற்காலத்தில் வாசனை குறைந்து சுருங்கக் காமுகர்க்குக் காமக்கிளர்ச்சி குறைந்து வாதனை அடங்கும்; அது மன்மதன் போரைக் கைவிட்டது போலாம்; அது குறித்தே ஆசிரியர் 'வில்லி கணையிழப்ப' என்றார். வில்லி யென்பது பொதுவாக வில்லையுடைய

வன் எனப்பொருள் படுமேனும், இங்கு மன்மதனுடைய போர் நிகழ்ச்சியே பெரும்பான்மையும் கூறப்பட்டு வந்தமையின், அதற்கு மன்மதன் என்று பொருள் கூறப்பட்டது. சூரியோதயங் கண்டவுடனே சந்திரன் ஒளி யிழப்பது இயற்கையாதலின், 'மதியஞ் சீரிழப்ப' என்றார். இதற்கு முன் இருள் மிகுதியே பெரும்பான்மையும் கூறப்பட்டு வந்திருத்தலின், சந்திரன் இருந்ததாகச் சொல்வதற்கு இடமில்லையே! அங்ஙனமிருப்ப 'மதியஞ் சீரிழப்ப' என்றது எங்ஙனம் பொருந்தும்? எனின், 'இருள் மிகுதியாக வியாபித்தபோது சந்திரன் மேற்றிசையில் கீழே மறைந்தது எனினும் அதன் ஒளி அத்திசையிற் சிறிது பரவியிருந்தது; அவ்வொளியும் சூரியோதயத்தில் மறைந்தது; ஆதலின், ஆசிரியர் அங்ஙனங் கூறினாரென்க. சூரியனைக் கண்டவுடன் இருள் பிளவுபட்டு இருந்தவிடந்தெரியாமல் ஓடுமாதலின், 'இருள் கிழிய' என்றார். இருள், விரகிகளுக்கு மிக்க துன்பத்தைச்செய்து கொண்டிருந்ததாதலின், அதனைத், 'தொல்லை யிருள்' எனவுங்கூறினார். இங்குக் கூறியவையனைத்தும் சூரியோதயத்திற் கறிகுறிகளாதலின், இவை யுண்டாகச்'செங்கதிரோன் தோன்றினான்' என்றார் புலவர். அங்கு வந்திருந்த அரசர்களெல்லோரும் தமயந்தியின் மணத்தையே விரும்பிவந்திருந்தார்களாதலின், 'வல்லி மணமாலை வேட்டிடுதோள் அரசர்' என்று கூறப்பட்டார்கள். அப்போதேற்பட்ட சூரியோதயமானது, தமயந்தியின் சுயம் வரத்தைக் காட்டி அரசர்களுக்கே மிகுந்த மகிழ்ச்சியைச் செய்யக்கூடியதாயிருந்தபடியால்; 'அரசர் முன்னே செங்கதிரோன் தோன்றினான்' என்று கூறினார் ஆசிரியர். இங்ஙனம் இச் சூரியோதயம் அரசர்க்கு மகிழ்ச்சி செய்யக் கூடியதாயிருத்தலின், 'அரசர் முன்னே செங்கதிரோன் குணவாயிற் குன்று தோன்றினான்' என்பதை 'அரசர் முன்னே செங்கதிரோன் குன்றுகுண வாயில்தோன்றினான்' என மாற்றி 'அரசர்க்கெதிரே சூரியன் உதயகிரியில் நல்ல சுகம்பொருந்திய விடத்தில் உதித்தான்' எனப்பொருளுரைப்பினும் அமையும்; இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்துக் குணம்-சுகம், வாய் இடம். இவையெல்லாம் நிகழச் சூரியன் உதயமானது முக்கியமாகத் தமயந்தி துயர்நீங்கற் கேதுவாகலின், அவளுக்கு இச் சூரியோதயம் நளன் தோன்றியது போன்றது என்பது குறிப்பாய் வருவித்துப் பொருள் கொள்ளுதலும் அமையும்.

மதியம் என்பதில் அம்-சாரியை, இழப்ப, கிழிய என்பன வினையெச்சங்கள். வல்லி-உவமையாகு பெயர். வேட்டிடு என்பதில் இடு-பகுதிப் பொருள்விகுதி; இது துணைவினை யென்றுஞ் சொல்லப்படும். வாளரசர்-உடைமைப் பொருளில் வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகை; வாயில்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு வாய்,இல் என்னும் ஈருருபுகளுஞ்சேர்ந்து ஓருருபாய் வந்தன. "வில்லி கணை

கிழப்ப, வெண்மதியஞ் சிரிழப்பத் தொல்லை யிருள் கிழிய" என்பது பழிப்பொப்புமைக் கூட்டவணி. சூரியன் உதித்ததை நளன் தோன்றியதாகக் குறிப்பாற் கூறு மிடத்து அஃதொட்டணியாம்; ஒட்டணியாவது, கவி தன்னுற் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றினைச் சொல்வதாம்; இங்கு நளன் தோன்றியதாகச் சொல்லுதல் மறைத்து அதனை வெளிப்படுத்தற்குச் சூரியோதயத்தைக் கூறியிருத்தல் உணர்க.

இதில் அரசர், சுயம்வரத்திற்கு வந்தமை
கூறப்படுகின்றது.

127. முரசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசுங் கலந்து.

[இ-ள்.] [தமயந்தி சுயம்வரத்தை] முரசுஎறிந்த-பேரிகையை அடித்துத் தெரிவித்த, நாள்-நாளானது, ஏழு-ஏழாவதாக, முற்றிய பின்-முடிந்தபிறகு,[அதாவது முரசெறிந்ததிலிருந்து ஏழுநாட்கள் கழிந்த பிறகு எட்டாவது நாளில்] கொற்றம் - வெற்றியையுடைய, வரைசெறிந்த-மலையோடு உவமையாகப்பொருந்திய, தோள் - புயங்களையுடைய, மன்னர்-அரசர்கள், விரைசெறிந்த - வாசனை சேர்ந்திருக்கின்ற, மாலை - பூவாரங்கள், துவள - மார்பில் அசையவும், முடி-[அவர் சிரசில் அணியப்பட்டிருந்த]கிரீடங்கள், தயங்க-பிரகாசிக்கவும், வால்வளையும்-அவர்களுடைய வெண்மையாகிய சங்குகளும், காலை முரசும்-காலை நேரத்தில் அடிக்கப்படும் பேரிகைகளும், கலந்து -கலந்தொலிப்ப, வந்தார் [மேற்கூறியபடி சூரியோதயமான வுடனே குண்டினபுரத்தில்]வந்து சேர்ந்தார்கள்;[எ-று.]

முன்னே வீமன் முரசறைவித்த நாளில், 'இதற்கு ஏழாம்நாள் தமயந்தி சுயம்வர நாள்' என்று குறிப்பிட்டான்; அது இந்நூலின் 56-வது செய்யுளில் "மங்கை சுயவரநா ளேழென்று வார்முரச மெங்கு மறைகென் றியம்பினான்" என்பதனுலுணரப்படும். அதில் 'நாள் ஏழ்' என்பதை முரசறைந்த நாளிற்கு ஏழாவதுநாளென்றும், அதுவும் அதற்கடுத்த நாளிலிருந்து எண்ணப்பட்டு ஏழாவது எண்ணிக்கையில் வந்த நாளென்றுங் கொள்ளவேண்டும். இங்ஙனம் ஒரு பொருளை எல்லை வைத்து எண்ணுவதில் அதைச்சேர்த் தெண்ணுதலுமுண்டு; சேர்க்காமல் எண்ணுதலுமுண்டு; ஆதலின், இங்கு முரசெறிந்த நாளைச்சேர்க்காமல் மற்ற நாட்கள் எண்ணிக்கை யிடப்பட்டன. ஆகவே முரசெறிந்த நாளைச்சேர்த் தெண்ணுங்கால் சுயம்வர நாள் எட்டாவது நாளாகும். அது பற்றியே இச்செய்யுளில்', முரசெ

றிந்த நாளேழு முற்றியபின்' என்றார் ஆசிரியர். இதனுனே சுயம்வர நாள் எட்டாவது நாளென்பதும், அன்றே அரசர் வந்தா ரென்பதும் பெறப்படும். இங்ஙனமின்றி, முன்பாட்டிற் கூறிய நாட்களை ஏழென்று கொள்ளின், இதில் 'நாளேழு முற்றியபின்' என்றிருத்தலின் முன்னுக்குப் பின் முரணுகும். இங்ஙனம் சுயம்வர நாள் எட்டாவது நாளென்று பொருள் கொண்டதற்கேற்ப, 'முரசெறிந்த நாளேழு முற்றியபின்' என்பதற்கு, 'சுயம்வரத்திற்காக முரசறைந்து தெரிவித்த நாட்கள் எட்டில், ஏழு முடிந்தபிறகு' எனப்பொருள் கொள்ளினும் அமையும். இங்ஙனங் கொள்ளுமிடத்து, 'நாள் ஏழு' என்பதைக் காலம் தற்கிழமையில் இடமாய் நின்ற ஏழாம் வேற்றுமைத்தொகை யெனக்கொண்டு, நாளில் ஏழு என்று விரிக்கவேண்டும்; இதில் நாள் என்றது எட்டு நாட்களையுங் குறிக்கும். ஒவ்வொரு அரசரும் தமயந்திக் குரியவரோடு சண்டையிட்டு ஜெயங்கொண்டாவது அவளை வலிதில் மணஞ்செய்யக்கூடிய வல்லமை யுடையவர்க ளாதலாலும், அங்ஙனமே அவர்கள் பின்னே நளனோடு சண்டை யிட்டமையாலும் அவர்களைக் "கொற்ற வரை செறிந்த தோள் மன்னர் வந்தார்" என்றார் ஆசிரியர். ஒவ்வொருவரும் வருகின்ற வேகத்தால் மார்பின் மாலை மிக்கசையு மாதலின், 'மாலை துவள' என்றார். இதனால் அவர்கள், தமயந்தியின் விருப்பால் விரைந்தோடி வந்தார்களென்பது பெறப்படும். அவ்வாறு அவர்கள் விரைந்தோடி ஒருவரோடொருவர் நெருங்கி வருங்காலத்தில் அவர்களுடைய முடிகள் ஒன்றோடொன்று உராயும்; அப்படி உராய்வதால் அவற்றில் பிரகாசம் அதிகரிக்கும்; ஆதலின் இது குறித்தே புலவர், 'முடிதயங்க' என்றுங் கூறினார். உதய காலத்தில் இராஜாங்க நகரங்களில் சங்கும், பேரிகையும் முழங்குவது இயற்கை; ஆதலின், அரசர் சென்ற அந்நேரத்தில் அவை முழங்கின; இது குறித்தே, 'வால்வளையுங் காலை முரசுங் கலந்து மன்னர் வந்தார்' என்றார் புலவர். அந்த அந்த நேரத்தில் நடக்கும் நற்காரியங்களுக் கறிகுறியாக ஒவ்வொரு நாளிலும் காலை, மத்தியானம், மாலை என்னும் மூன்று நேரங்களிலும்' அரசன் அரண்மனை, கோவில் முதலியவற்றில் பேரிகை முழங்குவது வழக்கம்; ஆதலின், இங்கே காலையில் முழங்கின முரசு, 'காலை முரசு' எனப்பட்டது. இந்தச் சங்கும், முரசும் வந்த அரசர்களுக் குரியவைகளாய் அவர்களுடனே முழங்கி வந்தனவெனினும் அமையும்.

முரசெறிந்த என்பதில் செயப்பாட்டு வினை செய்வினையாக மாறி வந்தது. குறிப்பிட்ட விஷயத்தைக் கூறிய பின்னரே பறை சாற்றுவோர் முரசறைவார்க ளாதலின், 'முர செறிந்த' என்பதில் விஷயத்தைக் கூறியதுதானே அமையும். ஆதலின் அதற்கேற்ப, முர செறிந்த என்பதனோடு 'தமயந்தி சுயம்வரத்தைத் தெரிவித்த' என்னுஞ் சொற்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன.

'காளேழும்' என்பதின் உம்மை முற்றுப்பொருளது. வரை செறிந்த -உவமைத் தொகை. கலப்ப என்னும் செயவெனெச்சம், கலந்து எனச் செய்தெ னெச்சமாகத் திரிந்து வந்தது.

இதில் நளன் வந்து அவ்வரசர்களுக்கு நடுவில்
இருந்தமை கூறப்படுகின்றது

128. மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய்.

[இ-ள்] [மேலைப்பாட்டிற் கூறியவாறு அரசர்களெல்லோரும் அங்கே வந்து சுயம்வர மண்டபத்திற் சேர்ந்திருந்த பிறகு] முன்றில் -வீட்டின் வாயிலிலே, கன்று-எருமைக் கன்றுகள், குதட்டிய-சிறுக மென்று உதப்பித் தள்ளிய, கார்-கருமையாகிய, நீலம்-குவளை மலர்கள், குறுவிழிக்கு-அங்குள்ளமாதரின் சிறுவிழிகளாகிய கருவிழிக்கு, நேர்-நிகராய்க்கிடக்கின்ற, நாடன்-விதர்ப்ப நாட்டுக்கதிபனுகிய பீமனுடைய, கோதை-பெண்ணுகிய தமயந்தியின், பெருங்கண்ணின்-பெரிய கண்களின் மத்தியிலுள்ள, சிறுவிழிக்கு-சிறிய பார்வையாகிய கருவிழிக்கு [அதாவது அக்கருவிழியின் அன்பான பார்வையைப் பெறும்பொருட்டு] நோற்று இருந்த-தவஞ்செய்திருந்த, சேய்-இராஜகுமாரனுகிய நளன், அணைய-அத் தமயந்தியை மணந்து சேரும் பொருட்டு, மன்றல்-வாசனைபொருந்திய, அம்-அழகிய, தார்-மாலையை அணிந்த, மன்னர்நடு-அவ்வரசர்களுக்கு நடுவில், வந்து இருந்தான்-வந்தமர்ந்தான்.

நாட்டில்உழவர்களுடைய வீட்டின்முன்றிலிலே எருமைக் கன்றுகளுக்குக் குவளைகள் உணவுக்காக அவர்களால் கொண்டு வந்து போடப்படும். அவற்றை அக்கன்றுகள் சிறிது சிறிது மென்று கக்கும்; அப்போது குவளை மலர்கள் சிற்சில பாகங்கள் கடிக்கப்பட்டுக் குறைவுற்று நிலத்தில் வீழும்; அப்படிக் குறைவுபட்ட மலர்கள் சிறியனவா யிருக்குமாதலின், அவை, மாதருடைய கண்ணுக்கு நடுவிலிருக்கும் கருவிழிக்கு நிகராய் விளங்கும்; ஆதலின், 'முன்றில் கன்று குதட்டிய கார் நீலம் குறு விழிக்கு நேர் நாடன்'' என்றார் புலவர்; இதனுனே அந்நாட்டுயர்வு விளங்கும்.

"கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில"

என்றபடி, கண்களின் எதிர்நோக்கே ஆசையையும், சம்மதத்தையும் வெளிப்படுத்துவதாதலின், பெண்களிடமிருந்து அது பெற்றார் அவர்களுடை சேர்க்கை யின்பத்தைப் பெற்றவர் போலவர்; ஆதலின் நளன் தமயந்தியினிடத்தே அத்தகைய பார்வையைப்

பெறுதற்கு விரும்பித் தவஞ்செய்து கொண்டிருந்தான். அத்தவத்தின் பயனை முன் தேவர் பொருட்டு அவளிடம் தூது சென்ற காலத்தில் அப்பார்வையைப் பெற்றான்; அதுபற்றியே "கோதை பெருங்கண்ணின் சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய்" என்றார் ஆசிரியர். கண்ணின் சிறு விழியாவது கண்ணுக்கு நடுவிலிருக்கும் கருவிழியாம்; நேர்நோக்கில் இவ்விழியே எதிர்ப்படும். ஆதலின், ஆசிரியர் 'கண்ணின் சிறு விழிக்கு' என்றார். இங்ஙனம் நளன் அவளுடைய சம்மதத்தைப் பெற்றிருந்தாலும் மணம் முடிந்த பின்னரே அவளின் சேர்க்கையை அடையக் கூடியவனா யிருந்தபடியினாலே, அங்ஙனம் நோற்றிருந்த சேய், அணைய வந்திருந்தான் என்றுங் கூறினார். இதனால் அவனே தமயந்தியை மணஞ்செய்வான் என்பது பெறப்படும். இந்நிச்சயத்தால் அங்குக் கூடிய மன்னர்களுக்குள் அவனே சிறந்தவனென்றுங் கருதப்படுவான். ஆதலின் அச் சிறப்பு நோக்கி 'மன்னர் நடு வந்திருந்தான்' எனவு முரைத்தார் புலவர். ஒரு கூட்டத்திற் சிறந்தார் நடுவிலிருப்பது உலக இயற்கை.

நடுவணைய-ஏழாம் வேற்றுமைத் தொகை. குதட்டல்-வாயில் வைத்து மென்றும் மெல்லாமலும் உதப்பித்தள்ளுதல். நீலம்-குணவாகு பெயர்; நீலமென்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளை மலருக்காயிற்று. முன்றில்-இல்முன்; வீட்டின் முன்பக்கம் என்பது இதன் பொருள்; இங்ஙனம் இல்முன் என்பது முன்றில் எனமாறி வந்தது இலக்கணப் போலி யெனப்படும்; இலக்கணப் போலியாவது இலக்கண மில்லாததாயினும், இலக்கணமுடையது போலச் சான்றோரால் தொன்று தொட்டுவழங்கப்படுவது. குறு, சிறு என்பன மையீறு கெட்ட பண்புப் பகுதிகள். விழிக்கு நேர் - ஒப்புப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமை விரி. நாடன்-குறிப்பு வினையாலணையும் பெயர். கோதை - மாலை; இஃதாகு பெயராய் அதனையுடைய பெண்ணை உணர்த்திற்று. விழிக்கு நோற்றிருந்த என்பது நிமித்த காரண காரியப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமை விரி. இருந்த-பெயரெச்சம்; இது-சேய்என்ற பெயரோடு முடியும். கண்ணின் சிறு விழி யென்பதை ஆறும் வேற்றுமை யுருபு தொக்க தொகையாக வேனும் ஏழாம் வேற்றுமைப்பயன் றொக்க தொகையாக வேனும் கொள்ளவேண்டும். ஏழாம் வேற்றுமைப்பயன் தொக்க தொகையாகக் கொள்ளுமிடத்து, இன்-ஏழனுருபு. சேய் என்பது முருகனுக்கும் பெயராதலின் இதனை உவமையாகு பெயராகக் கொண்டு முருகக்கடவுளை நிகர்த்த நளன் எனக்கூறினும் அமையும்.

தமயந்தி மணப்பந்தலுக்கு வந்தமைக இதிற் கூறப்படுகின்றது.

129. சித்திலத்தின் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்தம்

மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தாள்
அருங்கேழ் மணிப்பூ ணணங்கு.

[இ-ள்] அரும்-அருமையான, கேழ்-நிறத்தினையுடைய, மணி இரத்தினங்களினாலாகிய, பூண்-ஆபரணங்களை யணிந்த, அணங்கு-தெய்வப்பெண் போன்ற தமயந்தி, [தன்னுடைய] மை-அஞ்சன மெழுதப்பெற்ற, தடம்-விசாலமாகிய, கண்-கண்கள். செல்ல- காதுகளுக்கு நேராகப்பாய, [அக்கண்களின் கருமை நிறம் பிரதிபலிப்பதனாலே அச்செவிகளி லணியப்பட்டிருந்த] நிலைத்தின்-மூத்துக்களையுடைய, பொற்றோடு-பொன்னாலாகிய காதணிகள், நீல மணி-நீலரத்தினம் பதித்த, தோடாக-தோடுபோல் விளங்க, [அத்தோற்றம் குவளை மலர் போன்றிருந்தபடியால்] வயம்-வெற்றி பொருந்திய, வேந்தர்-அரசர்களுடைய, சித்தம்-மனமானது; வண்டின்-அக்குவளை மலரிற் சேரும் வண்டைப்போல, மருங்கேவர-அத்தோடுகளின் பக்கத்திற் சேர, [அதாவது அத்தோடுகளை அம்மன்னர்கள் விரும்பி நினைத்துக் கொண்டிருக்க] பந்தர்க்கீழ்-பந்தலினிடத்தே, வந்தாள்-வந்து சேர்ந்தாள்;[எ-று.]

நித்திலப் பொற்றோடுகளானவை நீலமணித் தோடுகள் போல ஆகும்படி அவற்றிற்கு நேராக மைத்தடங்கண்பாய, அத்தோடுகள் நீலோற் பலங்கள்போல் விளங்கியபடியால், அவற்றை நோக்கிய அரசர்களுடைய சித்தம் அந்நீலோற் பலங்களில் சேரும் வண்டுகள் போல அவற்றின் சமீபத்திற்செல்லத் தமயந்தி பந்தரின் கீழ் வந்தாள் என்பது இதன் கருத்து. தமயந்தியைச் சேடிகள் அலங்கரித்துப் பந்தலுக்கு அழைத்து வந்தார்கள். அப்போ தவள் தலை குனிந்தபடியே இருமருங்கிலும் கூடியிருக்கும் அரசர் கூட்டத்தைக் கடைக்கண்களால் நோக்கினாள்; அப்போது கண்களின் கருவிழியின் ஒளியானது பொற்றோடுகளிற் பாய அவ்வொளியினால் அப்பொற்றோடுகள் நீல நிறம் பெற்று நீலமணித் தோடுகள் போலவிளங்கின. அவள் அங்ஙனம் நோக்கியதையும், தோடுகள் நிறம் மாறிப் பிரகாசித்ததையும் அரசர்கள் விருப்பத்தோடு நோக்கினார்கள். அங்ஙனம் நீலநிறமாக விளங்கிய தோடுகள் நீலோற்பலங்கள் போன்றிருந்தபடியால் அவற்றில் சென்ற அரசர்களுடைய சித்தங்கள் அவற்றிற் சேரும் வண்டுகள் போன்றிருந்தன. குலமகளிர் ஆடவரை நோக்குதல் கூடாமை யெனினும் ஒரு காரியத்தை முன்னிட்டு மனிதர் கூடிமிடத்து ஆங்கு எவரெவர் வந்துள்ளா ரென்பதை உணர்ந்து கொள்ளும்பொருட்டு நாணத்தோடு தலைகுனிந்து கடைக்கண்களால் நோக்குதல் இயற்கை; ஆதலின், தமயந்தியும், அக்கூட்டம் தன் மணத்தின் பொருட்டுக் கூடியதாதலாலும், அதில் தனக்குரிய நாயகன் வந்திருக்கின்றானா வென்பதையும், மற்றவர்கள் இன்னவர் இன்னவர்

என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டியிருந்தமையானும் அக் கூட்டத்தைக் கடைக் கண்களால் நோக்கினாள்.

இங்குச் சித்தத்திற்கும், வண்டிற்கும் கூறிய உவமை தொழிலுவமை யெனப்படும். பொற்றோடு நீலமணித் தோடாக என்பது இயைபிலுருவகம். தடங்கண்-பண்புத்தொகை. பந்தர்-மொழியீற்றுப்போலி, கீழ்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. பூண் அணங்கு -பூணை அணிந்த அணங்கு; இரண்டாம் வேற்றுமை யுருபும், பயனுமுடன்றொக்க தொகை.

இதில், தமயந்தியை அரசர் நோக்கினமை
கூறப்படுகின்றது.

130. பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த — மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மே னிறைந்து.

(இ-ள்.) பேதை-அறியாமைக் குணத்தையுடைய, மடம்-இளமை பொருந்திய, மயிலை-மயிலினை, சூழும்-சூழ்கின்ற, பிணைமான் போல்-பெட்டைமான்களைப்போல, கோதை-மாலையையணிந்த, மடம் -இளமை பொருந்திய, மானை-மானைநிகர்த்த தமயந்தியை; கொண்டு அணைந்த-அழைத்துக்கொண்டு வந்து அங்கே சேர்ந்த, மாதர்-தோழிப் பெண்களுடைய, மருங்கின்-இடைகளுக்கிடையில் தோன்றும், வெளிவழியே-வெளியின்வழியாக, மன்னவர்-அரசர்களுடைய, கண்-கண்கள், புக்கு-புகுந்து, மேல்மேல்-மேலும் மேலும், நிறைந்து -தமயந்தியின் மேனியழகிற்கூடி, நெருங்கின-செறிந்தன; (அரசர்கள் தமயந்தியின் அழகை நோக்கினார்கள் என்றபடி) [எ.று.]

முன்னே தமயந்தி பந்தலின் கீழ் வந்தவுடன் அவளுடைய சிரசு மேலே தெரிந்தமையால், அரசர்கள் அவளின்கடைக்கண்பார்வையையும் தோடுகள் நிறம்மாறியதையும்நோக்கினார்கள். பின்னர், அவளுடைய மேனியழகைநோக்க விரும்பிப் பார்த்தபோது அவளைத் தோழிகள் சூழ்ந்திருந்தமையால் நேர்நேராகப்பார்த்தல் இயலாமற்போயிற்று. அதனால், அங்ஙனம் சூழ்ந்து நின்ற மாதர்களின் இடைகளுக்கு நடுவே தோன்றிய வெளிவழியாக அவளைப் பார்த்தார்கள்; மாதர்களின் இடைகள் மெலிந்திருப்பனவாதலின், அவர்கள் சூழ்ந்து நின்ற போதும் அவர்களுடைய இடைகளுக்கு நடுவில் வெளிகள் தோன்றின. அவ்வெளிகள், அவர்கள், அவளைப் பார்த்தற்கு அனுகூலமாயிருந்தன.

பேதை-மையீறு கெட்டபண்படி; பேதைமையென்பது மகளிருடைக் குணம் நான்கினொன்று; இது மடம் என்று கூறப்படும்; இக்குணமாவது கபடற்ற தன்மையோடிருத்தலாம்; இது, மாதர்களுக்கு மற்ற குணங்களைக் காட்டிலும் சிறந்ததாம்; "பேதைமையென்பது மாதர்க் கணிகலம்" என்பதால் இஃதுணரப்படும்; இக்குணம் இங்கு மயிலுக்குக் கூறப்பட்டது, அதுவும் மாதர்க்குவமையாதலின் தமயந்தியைத் தோழிகள் சூழ்ந்திருந்த தோற்றம், மயிலைப் பெட்டை மான்கள் சூழ்ந்திருந்தது போன்றிருந்தது. மயில், மாதர்கட்குச் சாயலால் உவமையாதலின், இது பண்புவமையெனப்படும். மான், பார்வையால் உவமையாதலின் இது தொழிலுவமையாம். மான்-உவமையாகு பெயர்.

தமயந்தி மேற்கூறிய பந்தலில் தனக்கென்றமைக்கப்பட்டிருந்த மண்டபத்திற் சேர்ந்தமை இதிற் கூறப் படுகின்றது.

131. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்-மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

(இ-ள்.) மின்நிறத்து-மின்னல் போன்ற நிறத்தினையும், செய்ய தாள்-சிவந்த கால்களையும், வெள்ளை-வெண்மையாகிய, சிறை-சிறகுகளையுமுடைய, அன்னம்-ஓர் அன்னமானது, செம்கமலம்-சிவந்த தாமரை மலர்களையுடைய, பொய்கைவாய்-தடாகத்தில், போவதே போன்று-செல்வதையே நிகர்த்து, பொன்னின்-பொன்னாலாகிய, மடம்-இளமைபொருந்திய, பாவை-பதுமை போன்ற தமயந்தி, மன்னர்-அரசர்களுடைய, விழி-கண்களாகிய, தாமரை-செந்தாமரைமலர்கள், பூத்த-மலர்ந்திருக்கிற (அதாவது மன்னர்கள்செந்தாமரை மலர் போன்ற தங்கள் கண்களால் நோக்கிக் கொண்டிருக்கிற) மண்டபத்தே-சுயம்வர மண்டபத்திலே, போய்ப்புக்காள்-சென்று சேர்ந்தாள்; [எ-று.]

இங்கே மண்டபம் என்றது தமயந்தியிருத்தற்குத் தனியாக மேற் கூறிய பந்தலின் நடுவில் அமைக்கப் பட்டதாம். மணமுதலிய சிறப்புக்கள் நடக்குங் காலத்தில் ஆடவர் கூடியிருக்கும் சபையில் ஸ்திரீகள் வரவேண்டியிருந்தால் அவர்கள் தங்குதற்குப் பிரத்தியேகமாக மண்டபம் அமைப்பது வழக்கம்; இது சீவக சிந்தாமணிக் காந்தருவதத்தை,யிலம்பகம்முதலியவற்றில் இங்ஙனம்மண்டபம் அமைத்ததாகக் கூறப்பட்டிருப்பதால் உணரப்படும். ஆதலின், அவ் வழக்கம் பற்றியே இங்கு தமயந்திக்கும் மண்டபம் அமைக்கப்பட்ட

தென்க. மேற் கூறியபடி பந்தலுக்குட்சென்ற தமயந்தி பின்னர், இம் மண்டபத்தை யடைந்தாள். அரசர்கள் அம் மண்டபத்தில் எப்பொழுது தமயந்தி வந்து சேர்வாளோ என்று, அதனையே நோக்கிக் கொடிருந்தார்களாதலின் 'மன்னர் விழித்தாமரைபூத்த மண்டபத்தே' என்றார் ஆசிரியர்.

விழித்தாமரை-உவமை யுருவகம். இங்கே செம்மை, மென்மை, அழகு முதலியவற்றால் கண்களுக்குத்தாமரை மலர் உவமை கூறப்பட்டமையின் இது பண்புவமையாம். தாமரை பூத்த என்பதற்கேற்ப மண்டபத்தைத் தடாகமாக உருவகப்படுத்தவேண்டும்; இங்ஙனங் கொள்வது ஏகதேச உருவகமாம். அன்னம், நடையால் தமயந்திக்குவமையாயினமையின் இது தொழிலுவமை. செங்கமலப் பொய்கை, மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்திற்குவமை. இது தாமரை பூத்தலாகிய தொழில் பற்றி வந்தமையின் இதுவும் தொழிலுவமையாம்; பாவை-உவமையாகுபெயர். வெள்ளை-பண்புப்பெயர்; வெண்மையென்பதன்மை விகுதிபோய் வெள் என நின்று ஐவிகுதி பெற்று, ளகரவொற்றிரட்டி வெள்ளையென்றாயது. செய்யதாள் வெள்ளைச் சிறை-முரண்தொடை; "சொல்லினும் பொருளினும் முரணுதல் முரணே" என்பதால் இதனையுணர்க. தாமரை-தாமரஸமென்ற வடசொல்விகாரம். மண்டபம் வடசொல், கமலம்-வடசொல். பொய்கைவாய் என்பதில், வாய் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு.

மண்டபத்தைச்சேர்ந்த தமயந்தியின் கடைக் கண்
செல்லு மிடத்தே பாணத்தைச் செலுத்துதற்கு
மன்மதன் ஆயத்தமாய் நின்றான் என்பது
இதிற் கூறப்படுகிறது.

132. வடங்கோள் வனமுலையாள் வார்குழைமே லோடும்
நெடுங்கட் கடைபார்த்து நின்றான்—இடங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னாவம் பின்னேயிட்
டேவாளி நாணின்மே லிட்டு.

(இ-ள்) பூவாளி-மலர்ப்பாணங்களை யுடைய, வேந்தன்-அரசனாகிய மன்மதன், (தமயந்தி அங்கு வந்து சேர்ந்தவுடனே அவளை விரும்பிய அரசர்கள் மீது தான் பாணப் பிரயோகஞ் செய்தற்குச் சமயம் வாய்த்த படியால் இதுதான் தருணமென்று) இடங்கண்டு-அந்தச்சமயத்தை உணர்ந்து, தன்-தன்னுடைய, பொன்-அழகிய, ஆவம்-அம்புக்கூட்டை, பின் இட்டு-பிற்பக்கமாகியமுதுகிற்சேர்த்து, ஏவாளி-ஏவுதலையுடைய மலர்ப்பாணங்களை, நாணின்மேல்-வில்நாரியின் மீது, இட்டு-தொடுத்துக்கொண்டு, வடம்கொள்-முத்துமாலையை அணிந்த, வனம்-அழகுபொருந்திய, முலையாள்-தனங்களையு

டைய தமயந்தியினது, வார்-நீட்சி பொருந்திய, குழைமேல்-காதுக ளின் மீது, ஓடும்-பாய்கின்ற, நெடும் கண்கடை-நீண்ட கண்களின் ஓரங்களை, பார்த்து நின்றான்-நோக்கி (அவைசெல்லுமிடத்தேபா ணங்களை ஏவுதற்கு ஆயத்தமாகி) நின்றான்; [எ-று.]

தமயந்தி அம்மண்டபத்தைச்சேர்ந்தவுடன் அரசர்கள் அவளை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்களாதலின், அவள் கடைக் கண்ணால் அவர்களை நோக்கிய மாத்திரத்தில் மேலும் அவர்களுக்கு ஆசை அதிகரிக்கும்; அதனால் மிக்கவேதனையுண்டாம்; அந்தச்செய் கைக்கு அதிதேவதை மன்மதனாதலின் அந்த வேதனை அம் மன்மத னுடைய பாணங்களால் உண்டாவதாகக் கூறப்படும். ஆதலின், இங் கே மன்மதன் வில் அம்புகளோடு தமயந்தியின் கடைக்கண் நோக்கத் தைப்பார்த்து, அது செல்லுமிடத்தே தானும் பாணங்களை ஏவுவ தற்கு ஆயத்தமாகி நின்றான் என்றார் ஆசிரியர். இதில் மன்மதன் தமயந்தியினுடைய கடைக்கண் நோக்கும் குறிப்பின்படி ஏவல்செய் பவனாக அமைந்தானென்பது குறிப்பாலமையும்.

குழை-காதணி; அஃதாகு பெயராய் அதனை யுடைய காதை யுணர்த்திற்று; கண்கடை என்பதில் வருமொழிமுதல் வல்லினம் வர ணகரம் டகரமாயிற்று. இடம்-இங்கே சமயத்தை உணர்த்திற்று. வேந்தன்-இறைமைத் தன்மை யுடையவன்; மன்மதன் உலகத்தில் சம்சார பந்தத்தில் அகப்பட்ட எல்லோரையும் அடக்கியாளும் திற மை பெற்றவனாதலின் வேந்தன் எனப்பட்டான். பின்னே என்பதில் ஏ-அசை. ஏவாளி-ஏவுதலையுடைய அப்பு; இதிலுள்ள ஏ-அல்லீறு கெட்டதொழிற் பெயர்; ஏவல் வாளி என்பது ஏவாளியென விகாரப் பட்டு நின்றது. நின்றான் என்பது தமயந்தியின் முன் அவன் பணிவை விசேடித்தது.

தோழி ஒருத்தி, தமயந்திக்கு அரசர்களைக்
குறிப்பிட்டுக் காட்டுதல்.

133. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கோடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

(இ-ள்.)இயல் அணங்கு-நற்குணம்பொருந்திய தெய்வப்பெண் போன்ற பெண்ணாகிய ஒருதோழி, தேர்-இரதங்களையுடைய, வேந் தர் தம்மை-அவ்வரசர்களை, தெரிந்து (இன்னவர் இன்னவர் எனத் தான்) தெரிந்துகொண்டு, தார்-வெற்றி மாலையை அணிந்த, வேந்தன் -வீமராஜன், பெற்ற-குமாரத்தியாக அடைந்த, தனி-ஒப்பற்ற, கொ டிக்கு-பூங்கொடி போன்ற தமயந்திக்கு,முன் நின்று-எதிரில் நின்று,

மன்னர்-அந்த அந்த அரசர்களுடைய, குலமும்-வம்சத்தையும், பெயரும்-பெயரையும், வளம்-வளம்பொருந்திய, நாடும்-நாட்டையும், இன்ன-இப்படிப்பட்ட, பரிசு என்று-தன்மை யுடையன வென்று சொல்லி, காட்டினாள்-அடியில் வருமாறு சுட்டிக் காட்டினாள்; [எ-று.]

சுயம்வரகாலத்தில் வந்திருப்பவர்களை இன்னார் இன்னாரென்று பெண்ணிற்குக் காட்டவேண்டியது முறைமை; ஏனெனில், பெண் தனக்குரிய நாயகனைத் தெரிந்து கொள்ளற்கென்க. இங்ஙனம் காட்டாவிடின் பெண் தனக்கு விருப்பமான நாயகனைத் தேர்ந்தெடுத்தல் இயலாதாம். ஆதலின், இங்கு கலியாணத்திற்குமுன் தோழிப் பெண் தமயந்திக்கு அரசர்களைக் காட்டத்தொடங்கினாள். ஒருவனை, அவனது குலத்தாலும் நலத்தாலுமே ஒரு பெண் விரும்புவாளாதலின் இங்குத் தோழி அரசர்களுடைய குலம்,பெயர் முதலியவற்றை முற்கூறிப் பின்னர், அவர்களைச் சுட்டிக்காட்டத் தொடங்கினாள். இயல் அணங்கு-நற்குணம் பொருந்திய தெய்வமாது போன்ற தோழிப்பெண்; இயல்-இலக்ஷணம், நற்குணம்; அணங்கு-தெய்வப்பெண்; அணங்கென்பதுவமையாகு பெயராய் அவ்வணங்கைப் போன்ற பெண்ணை யுணர்த்திற்று. இனி, இயலணங்கு என்பதை, இயற்றமிழ்க்குரிய தெய்வமாகிய சரஸ்வதி எனப்பொருள் கொண்டு அவளே வந்து தமயந்திக்கு அரசர்களைக் காட்டினாளெனக் கூறுவாருமுளர்; 150-ஆஞ் செய்யுளில், 'காவலரைத் தன்சேடி காட்ட'' என வருதலால் இது முரண் படுதல் பற்றிப் பொருந்தாமை யுணர்க.

தோழி அரசர்களின் தன்மைகளையெல்லாம் உள்ளபடி உணர்ந்து கூறுதற்கேற்ற அறிவினை யுடையவளாதலின் அதற்கேற்ப, அவளை, 'இயலணங்கு' என்றார் ஆசிரியர். அணங்கு, கொடி என்பன உவமையாகு பெயர்கள். இன்ன-இகரச் சுட்டினடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; இதில், இ-பகுதிச்சுட்டு, அ-பெயரெச்ச விகுதி, ன்-சந்தி, மற்றொரு-ன்-சாரியை. பரிசு-தன்மை; இஃதாகு பெயராய்க் குல முதலியவற்றின் மேனின்றது. முன்-இடமுன்.

சோழநாட்டரசனைக் காட்டல்.

134. பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னிற்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னார்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண்.

(இ-ள்.) பொன்னின்-பொன்னைப் போல, சுணங்கு-தேமல், அவிழ்ந்த-விரிந்திருக்கின்ற, பூண்-ஆபரணங்களைத் தரித்த, முலையாய்-தனங்களையுடைய தமயந்தியே!, சூழ்-பகைவர் சூழ்கின்ற, அமரில்-யுத்தத்தில், துன்னார்-பகைவர்களுடைய, கணம்-கூட்டமானது,

கவிழ்ந்த-வீழ்வதற்கு ஏதுவான, வேலன்-வேலாயுதத்தை யுடைய வனுகிய, இவன் - இம்மன்னன், பொன்னி - காவிரியாற்றினுடைய, அமுதம்-நீரினது, புதுக் கொழுந்து-புதிய திவலைகள், பூங்கமுகின் -மலர்களையுடைய பாக்குமரங்களின், சென்னி-உச்சியை, தடவும் -தடவுகின்ற, (நீர் வளமிகுந்த) திரு-செல்வம் பொருந்திய, நாடன் -சோழநாட்டரசன், காண்-நீ பார்ப்பாயாக; [எ-று.]

கொழுந்து-இளங்கிளையாம்; அஃதிங்கே நீருக்குக் கூறப்பட்டமையின் நீரினின்றும் மேற் பாகத்திற் பல பிரிவுகளாகச் சிதறும் நீர்த்திவலைகளை யுணர்த்திற்று. கொழுந்து, மரம்,சசெடி முதலியவற்றின் மேற்பாகத்தில்உற்பத்தியாதல்போலநீர்த்திவலையும் நீரின் மேற்பாகத்தில் உற்பத்தியாவதாதலின் கொழுந்தெனப்பட்டது. வெள்ளம் மிகுந்து பெருகிய காலத்தில் மேலுயர்ந்து மரங்களின் உச்சியிலும் நீர்த்திவலைகள் பரவுதல் இயற்கை. இதனால் காவிரியாற்றின் வெள்ளமிகுதி கூறப்பட்டது. இங்ஙனம் வெள்ள மிகுதி கூறவே அந்நாடு நீர்வளம் மிக்க தென்பதும், காவிரியைக்கூறியதனால் அது சோழநாடென்பதும், இந்நாட்டரசனென்றதனால் அவன் சோழனென்பதும்; 'துன்னார்கணங்கவிழ்ந்த வேலன்' என்றதனால் அச்சோழன் போரிற் சிறப்புற்று வெற்றி பெற்ற வேல்வல்லானென்பதும் பெறப்படும்.

"மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும், வன்மைக்கினமாத்திரிபவுமாகும்" என்ற விதிப்படி அமுதம்புது என்பது அமுதப்புது என்றாயது. "பூப் பெயர் முன்னினமென்மையும் தோன்றும்" என்ற விதிபற்றிப் பூகமுகு, பூங்கமுகு என்றாயது. கணங் கவிழ்ந்த-காரியப் பொருளில் வந்த பெயரெச்சம், இது நோய் தீர்ந்த மருந்து என்பது போல அமைந்தது. காண்-அசை யெனினுமமையும். வேலன்-வினையாலணையும் பெயர். எவரும் தம்முடைய நாடு முதலியவற்றை முதன்மையாகக் கருதுதல் இயற்கை யாதலின், இங்குப் பற் பலதேசங்களையும், அவற்றின் அரசர்களையும் கூறப்புகுந்த புலவர் தாமிருந்து இந் நூலை இயற்றிய நாடாகிய சோழநாட்டையும், அந்நாட்டுக் கதிபனையும் முன்னே சிறப்பித்துக் கூறினர்.

பாண்டியனைச் சுட்டிக்காட்டல்.

135. போர்வாய் வடிவேலாற் போழப் படாதோருஞ்
சூர்வாய் மதரரிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டால்
திரித்தகோ விங்கிருந்த சேய்.

(இ-ள்.) போர்வாய்-யுத்தத்தில், வடி-கூர்மை தங்கிய, வேலால் -வேலாயுதத்தினாலே, போழப்படாதோரும்-பிளக்கப்படாத வலிமையையுடைய வீரரும், (தான் பாய்ந்தமாத்திரத்தில்)சூர்வாய்-சுழற்சியைப்பொருந்தும்படியான, மதர்-களிப்பினையுடைய, அரி- (சிவந்த) இரேகைகள்பொருந்திய,கண்-கேத்திரங்களையுடைய, தோகாய்-மயில்

போன்ற தமயந்தியே!, கேள்-நீ கேட்பாயாக, இங்கு இருந்த இவ் விடத்தில் வீற்றிருக்கிற, சேய்-இராஜகுமாரன், பார்வாய்-பூமியில், பருத்தது ஓர்-பருத்ததாகிய ஒரு, மால்-மேகங்கள் தங்கியிருக்கின்ற, வரையை-மலையை, (மேருவை) பண்டு-முன்னே, ஒருகால்-ஒருசமயத்தில், செண்டால்-பந்தினால், (அடித்து) திரித்த-நிலை குலைந்து பெயரச் செய்த, கோ-பாண்டியராசனுவான்; [எ-று.]

"மால்வரையைப் பண்டொருகால் செண்டால் திரித்தகோ" என்றதனுனே இவன் பாண்டியன் என்பதுதானேபோதரும்; மேருவைச் செண்டாலடித்தவன் உக்கிரபாண்டியன்; இக்கதை திருவிளையாடற் புராணத்திற்காணப்படும். இங்குக் கூறியவனை உக்கிர பாண்டியனென்றே கொள்ள வேண்டும். அன்றி அவன் வழி வந்தானொருவனெனக்கூறின், மேருவைச் செண்டாலடித்த உக்கிர பாண்டியன் செய்கையைச் சிறப்பினுல் அவனுக் கேற்றிக்கூறியதாகக் கொள்ள வேண்டும்; இங்ஙனம் ஒரு குலத்தில் ஒருவன் செய்த புகழ்ச்செய்கையை அவன் வழி வந்தாரெல்லோருக்கும் கூறுதல் இயற்கை; இங்ஙனம் ஒருவன் சிறப்பு, பெயர் முதலியவற்றை மற்றொருவனுக்குக் கூறுதல் ஆகுபெயர்வகையுள் அடக்கப்படும். இவ்வாறு கொள்ளும் போது, 'திரித்தகோ' என்பதற்கு 'திரித்தகோவின் வழியில்வந்தவன்' எனப்பொருள் விரிக்கவேண்டும். "பண்டொருகால்" என்ற குறிப்பினுல் முன்னே மேருவைச் செண்டாலடித்த உக்கிரபாண்டியனிருந்தானென்பதும், இங்குக் கூறியவன் அவன் வழிவந்தானொருவனென்பதும் பெறப்படும். எத்தகைய வீரரும் தமயந்தியினுடைய கண்பார்வை தங்கள் மீது பட்டமாத்திரத்திலே சுழற்சியடைவார்கள் ஆதலின், 'வடிவேலாற்போழப்படாதோரும் சூர்வாய்மதர் அரிக்கண்' என்றூர் ஆசிரியர்.

போர் வாய் என்பதில் வாய்-ஏழனுருபு. போழப்படாதோரும் என்பதிலுள்ள உம்மை உயர்வுசிறப்புப்பொருளது. சூர்த்தல்என்னுந் தொழிற்பெயர் தல்லீறு கெட்டு முதனிலைத்தொழிற்பெயராய்ச் சூர் என நின்றது. தோகாய்-விளி வேற்றுமை விரி; தோகை என்னும் பெயர் ஈற்றைகாரங்கெட்டு ஆய் என்னும் விளியுருபு பெற்று வந்தது. மால் வரை என்பதற்குப் பெரிய மலையெனப் பொருள் கூறலாமெனினும், முன் பருத்த என்னும் உரிச்சொல் வந்திருத்தலால் அங்ஙனங்கூறல், கூறியது கூறலாமென்று, கொள்ளப்படுமாதலின் மால் மேகமாகக் கொள்ளப்பட்டது.

சேர மன்னனைக் குறித்துக் கூறுதல்.

136. வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போற்
குன்றருவி பாயுங் குடநாடன்—நின்றபுகழ்
மாதே யிவன் கண்டாய் மானத் தனிக்கோடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து.

(இ-ள்.) நின்ற-நிலைபெற்ற, புகழ்-கீர்த்தியையுடைய, மாதே-பெண்ணே!, இவன்-இந்த அரசிளங்குமரன், வென்றி-வெற்றி பொருந்திய, நிலமடந்தை-பூமி தேவியினுடைய, மெல்-மெல்லிய, முலைமேல் - தனத்தின்மீது, (அணியப்பட்ட) வெள்துகில்போல் - வெண்மையான வஸ்திரம் போல, குன்று - கொல்லிமலையில், அருவிபாயும் - அருவியானதுபாயப் பெற்ற, குடநாடன் - குடநாட்டிற்கதிபதியும், மானம் - பெருமைபொருந்திய, தனி-ஒப்பற்ற, கொடியின்மீது - துவஜத்தின்மீது, சிலை-வில்லின் வடிவத்தை, உயர்த்த - ஏற்றிவைத்த, (அதாவது கொடியில் சிலைவடிவம் அமைத்து மேலே தூக்கிய) வேந்து - அரசனுமாகிய, சேரன்; [எ-று.]

கொல்லி மலையைப் பூமிதேவிக்குத் தனமாகவும், அதன் மேலிருந்து நடுவில் வழியும் அருவியை அத்தனத்தின் மேலிடப்படும் வஸ்திரமாகவும் உருவகப்படுத்தினார் ஆசிரியர். 'வென்றி நிலமடந்தை' என்றதனால் இங்குக் குறித்த பூமி சேரன் வெற்றியினால் தனக்குள்ளடக்கப்பட்டு ஆண்டதென்பது பெறப்படும். குன்று பருமையாலும், வடிவத்தாலும் தனத்திற்குவமை. அருவி நிறத்தாலும், உருவத்தாலும் வெண்டுகிலுக்குவமை. குடநாடு-மேல்நாடு; குடக்கு-மேற்கு, குடநாட்டுக்குச்சிறந்தகிரி கொல்லிமலையாதலின், குன்று என்பதற்குக்கொல்லிமலையென்று பொருள் கொள்ளப்பட்டது. சேரனுக்கு விற்கொடியாதலின், 'கொடியின் மீது சிலையுயர்த்த வேந்து' என்றார் ஆசிரியர். கண்டாய் என்பதும் மீதே என்பதில் ஏ என்பதும் அசை.

யதுகுலத்தரசனைக் காட்டல்.

137. ஆழிவடி யம்பலம்ப நின்றானு மன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும்—நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய்.

(இ-ள்.) வடி-கூர்மையாக்கப்பட்ட, அம்பு பாணத்தை, ஆழி-சமுத்திரத்தில், அலம்ப-கழுவும்படி, நின்றானும்-நின்றவனும், (அதாவது நின்று கழுவியவனும்) அன்று-அந்தக் காலத்தில், ஒரு கால்-ஒரு சமயத்தில், ஏழ் இசை-ஏழுவகையான சுரங்களையுடைய, நூல்சங்கத்து-சங்கீதசாஸ்திர சபையில், இருந்தானும்-தலைவனாயிருந்தவனும், நீள் விசும்பில்-நீண்ட விண்ணுலகத்திலுள்ள, நல் தேவர்-நல்லதேவர்களுக்கு, தூது-தூதுவனாகி, நடந்தானும்-சென்றவனும், பாரதப் போர்-பாரதயுத்தத்திலுள்ள வீரர்களை, செற்றானும்-உபாயத்தால் கொன்றொழித்தவனும், இச் சேய்-இந்தக்குமாரன்; [எ-று.]

இங்குக்கூறியவன், மதுராநகரத்தையாண்டு வந்த யதுவமிசத்தரசனவன். ஆழி வடியம்பலம்பநின்றவனும், ஏழிசை நூற் சங்கத்திருந்தானும் யதுகுலத்தானகிய ஹைஹயன் மரபிற் றோன்றிய கார்த்த வீரியார்ச்சுனன்; இவன் ஒரு காலத்தில் நருமதாநதிசங்கமத்தருகே, தன்னிடம் அகப்பட்டிருந்த இராவணனை மீட்கவந்த இராக்ஷதரைக் கொன்று கடலிலே ஆயுதத்தைக் கழுவினன்; மற்றொரு காலத்தில், நாரதமுனிவருக்கும், விசுவாவசு என்னுங் கந்தருவனுக்கும் சங்கீதத்தில் தர்க்கம் நேர்ந்தபோது அச்சங்கீத சபையில் தலைவனா யிருந்தான். நீள் விசும்பில் நற்றேவர் தூது நடந்தானும், பாரதப்போர் செற்றானும் ஸ்ரீ கிருஷ்ணன். இவர் பாண்டவர் பொருட்டுத் துரியோதனனிடத்தில் தூது நடந்ததும், பாண்டவர்க்குத் துணையாய் நின்று பாரதப்போரை முடித்ததும் உலகப்பிரசித்தம். இங்கே 'நற்றேவர்' என்று கூறியது பாண்டவர்களை; அவர்கள் தேவர்களின் அமிசமாகவே பிறந்தவர்களாதலின் தேவர் எனப்பட்டார். கார்த்த வீரியார்ச்சுனனுடைய செய்கையையும், கிருஷ்ணனுடைய செய்கையையும் அவர்களுக்குப் பின் தோன்றிய யதுகுல மன்னனொருவன் மேல் ஏற்றிக் கூறினர் ஆசிரியர். இங்ஙனங் கூறியது குலச்சிறப்புவிளங்கற்கென்க. மிக்ககீர்த்தி பெற்றவர்களுடைய செய்கையை அவர்களுடைய குலத்திற் பிறந்த ஒருவன் மேல் சிறப்பு நோக்கி இங்ஙனம் ஏற்றிக் கூறுதல் புலவர்களுடைய வழக்கம். கிருஷ்ணன் நளனுக்குப் பிற்காலத்தவனா யிருக்க அவனுக்கும் பிற்பட்ட ஒருவனை இங்ஙனங் கூறிய தென்னையோ வெனின், அவன், இக்கவிக்கு முற்பட்டவனாதலின் கவிவழக்காற்கூறியதென்க; இராமாயணத்தில் கம்பர், சடையப்பவள்ளலைக் கூறியது போலவும், இந்நூலில் இவ்வாசிரியர் முரணை நகரையும் சந்திரன் சுவர்க்கியையும் கூறியது போலவும் இதைக் கொள்ள வேண்டும்.

ஆழி-ஆழத்தையுடையது. அலம்பநின்றான் எனவே கழுவினன் என்பது தானே அமையும். அன்று சேய்மைச்சுட்டு; இது முன் சென்ற காலத்தைக் குறிக்கும். ஒரு கால் என்பது அக்காலத்திலே அச்செய்கை நடந்த சமயத்தைக் குறிக்கும். போர் என்ப தாகுபெயராய்ப் போரிலுள்ள வீரரைக் குறிக்கும். மகாவிஷ்ணு பூமி பாரம் தீர்த்தற்பொருட்டுக் கிருஷ்ணனாக அவதரித்துப் பாண்டவர் துரியோதனதியர் ஆகிய இருவகையார்க்கும் போர் நிகழச்செய்து அப்போரில் ஐம்பத்தாறுதேசத்திலுள்ள அரசர்களையும் படைகளுடன் குழுமுவித்து முடிவில் பாண்டவர் தவிர மற்ற எல்லோரையுமே ஒழிவித்தனராதலின் அச்செயலுக்கேற்ப ஆசிரியர் அக்கிருஷ்ணனைப் 'பாரதப்போர் செற்றான்' என்றார். கண்டாய்-அசை.

தருநாடனைக் கூறல்.

138. தெரியலிவன் கண்டாய் செங்கழுநீர் மோட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இராவெல்லாம்

பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.

(இ-ள்.) தெரியல்-மாலையை அணிந்த, இவன்-இவ்விராஜகுமாரன், செங்கழுநீர்-செங்கழு நீரின், மொட்டை-அரும்பை, அரவின்-பச்சைப் பாம்பினுடைய, பசும்தலை என்று-பசுமையாகிய தலையென்று நினைத்து, அஞ்சி-பயந்து, இரவு எல்லாம்-இராத்திரி முழுவதும், பிள்ளைக் குருகு-குஞ்சாகிய அன்னம், இரங்க-ஒலியிட்டுக் கதற, பேதை-அறியாமையை யுடைய, புள்-அதன் தாயாகியபறவை, (அக்குஞ்சு உறங்கும் பொருட்டுத்) தாலாட்டும்-தாலாட்டிக் கொண்டிருக்கின்ற, வள்ளை-வள்ளைக் கொடிகள் மிகுந்திருக்கும், (நீர்வளம் பொருந்திய மருதநிலத்தையுடைய) குருநாடர்-குருநாட்டிலுள்ளவர்களுக்கு, மன்-அரசன், கண்டாய்-நீ அறிவாய். எ-று.

நீர்த்தடாகத்தின் ஓரத்திலுள்ள செழித்த செடிகளில் பச்சைப் பாம்புகள் தலையை நீட்டிக் கொண்டிருப்பது இயற்கையாதலின் அவற்றைப்போன்றிருக்கும் செங்கழுநீர் அரும்பைக்கண்டு அத்தடாகத்திலுள்ள அன்னக்குஞ்சு பயந்து கதறும். அங்ஙனம் அது தூங்காமற் கதறவே, அதன் காரணத்தை உணராமல் தாய்ப்பறவை அக்குஞ்சைத் தூங்கவைக்கும்பொருட்டு இரா முழுவதும் ஓயாமல் தாலாட்டிக்கொண்டிருக்கும். இங்ஙனம் அன்னக்குஞ்சு செங்கழுநீர் அரும்பைப் பச்சைப்பாம்பின் தலையென்று மயங்கியதாகவும், அதன் தாய் அக்காரணத்தையுணராமல் தாலாட்டியதாகவுங் கூறியதனால் இது மயக்கவணியாம்; இங்ஙனம் கூறியதனால் குருநாடு நீர்வளம் மிக்க மருதநிலத்தையுடையதென்பது பெறப்படும். இந்நாடு ஆதியிலே சந்திரகுலத்திற்பிறந்த குருவென்பவனால் அமைக்கப்பட்டதாதலின் குருநாடெனப்பெயர் பெற்றது. 'பிள்ளைக்குருகிரங்கப் பேதைப்புள் இரவெல்லாம் தாலாட்டும்' என இயைக்கக் குருகு என்பதற்கு நாரை எனப்பொருள் கூறினும் அமையும். செங்கழுநீர்ப்பூ-நீர்ப்பூவகைகளில் ஒன்று; இதன் அரும்பு பச்சைப்பாம்பின் தலையைப் போன்றிருக்கும்; அரவு என்பது பெரும்பான்மையும் ஸர்ப்பத்தை உணர்த்து மெனினும் பாம்பின் பொதுப் பெயராதலின், அதற்கு இங்கே பச்சைப்பாம்பெனப் பொருள் கொளப்பட்டது. 'பசுந்தலை' என்று கூறியவதனால், பச்சைப்பாம் பென்பது தானே போதரும். பிள்ளையென்னும் பெயர் இங்குப் பறவைக்குஞ்சுக்கு வந்தது. 'பேதைப்புள்' என்ற குறிப்பால் அது பெண்பறவை என்பது பெறப்படும்.

'தெரியிலிவன்' எனவும் பாட பேதமுண்டு; அங்ஙனங்கொள்ளின் 'தெரியில்' என்பதற்கு 'ஆராயுமிடத்து' எனப்பொருளுரைக்க வேண்டும். இயல்பு பற்றியகாலவழுவமைதியால் காண்பாய் என்பது

கண்டாய் என வந்தது. 'கண்டாய்' என்பதற்குப் 'பார்த்தனையா' எனப் பொருளுரைத்தலு மொன்று; இனி அதனை அசை யெனினும் அமையும். இரங்குதல்-ஒலித்தல்; அஃதிங்கே கதறுதற் பொருளில் வந்தது. வள்ளை-ஒருவகை நீர்க் கொடி.

மத்திர தேசத்தரசனைக் கூறல்.

139. தேமருதார்க் காளை இவன் கண்டாய் செம்மலர்மேல்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத்-தாமரைதன்
பத்திரத்தா லேற்கும் படுகர்ப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன்.

(இ-ள்.) தேம்-வாசனை, மரு-பொருந்தியிருக்கின்ற, தார்-மாலையையணிந்து, காளை-குமாரனாகிய, இவன்-இம் மன்னன், தாமரை-தாமரைக் கொடியானது, தன்-தன்னுடைய, செம்மலர் மேல்-சிவந்த புஷ்பத்தின்மேலே, காமரு-விரும்பும்படியான, சங்கு-சங்கமானது, ஈன்ற-பெற்ற, கதிர்-பிரகாசம் பொருந்திய, முத்தை - முத்தினை, (அது நழுவிக்கீழே விழுங்காலத்தில்) பத்திரத்தால் - இலையினாலே, ஏற்கும் - தாங்கிக்கொண்டு பிரகாசத்தைச் செய்கின்ற சிறப்பினையுடைய, படுகர்-பள்ளங்களையுடைய, பழனம் - மருத நிலமானது, சூழ்ந்த - சூழ்ந்திருக்கப் பெற்ற, மத்திரத்தார் - மத்திர தேசத்தாருடைய, கோமான்-அரசனது, மகன்-குமாரனாவான் [எ-று.]

சூல் முதிர்ந்த சங்குகள் தாமரைமலர்களில் ஏறி முத்துக்களையீனும். தாமரைமலரின் இதழ்கள் வழவழப்புடையன வாதலின் அம்முத்துக்கள் அவற்றில் நில்லாமல் நழுவிக் கீழே விழும்; அங்ஙனம் விழுங்காலத்தில் அம்மலர்களினடியில் தாமரையிலைகள் விரிந்திருக்குமாதலின் அவற்றின்மீது வீழ்ந்து தங்கிப் பிரகாசிக்கும். இத்தகைய காட்சியையுடைய நீர்ப் பள்ளங்கள் ஆங்காங்கே அமைந்திருக்க மருதநிலம் விளங்குமாதலின், "கதிர்முத்தைத் தாமரைதன் பத்திரத்தா லேற்கும் படுகர்ப்பழனம்" என்று மருத நிலத்தைச் சிறப்பித்துக் கூறினார் ஆசிரியர். இதனால் மத்திர தேசமானது மிக்க நீர்வளமும், நிலவளமும் பொருந்திய தென்பது பெறப்படும்.

தேமருவு, காமருவு என்பன ஈற்றுகரங்கெட்டுத் தேமரு, காமரு எனநின்றன. காமுதல் என்னுந் தொழிற் பெயர் தல்லீறும் உகரச் சாரியையுங் கெட்டுக் காம் எனப்பகுதி மாத்திரமாய் நின்று மரு என்பதனோடு புணர்ந்தது; காமுதல்-விரும்புதல், மருவுதல்-பொருந்துதல்; காமுதல் மருவு என்பதற்கு விரும்புதல் பொருந்திய தன்று பொருளாம்; ஆதலின், 'காமரு' என்பதற்கு 'விரும்பும்படியான' என்று பொருள் வரையப்பட்டது. குமாரனைக்காளை என்றது

உவப்பினால் வந்த மரபுவழுவமைதி. கண்டாய் என்பதை மேலைச் செய்யுட்களிற் கூறியவாறே கொள்க. ஈன்ற-பெயரெச்சம். கதிர் முத்து-இரண்டாம் வேற்றுமைத் தொகை. பத்திரம்-வடசொல்.

மச்சநேசத்தரசனைக் கூறல்.

140. அஞ்சாயன் மானே இவன்கண்டா யாலைவாய்
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த- செஞ்சாலிப்
பச்சைத்தாள் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன்.

(இ-ள்) அம்-அழகிய, சாயல்-நிறத்தினையுடைய, மானே-(பார்வையால்)மானைப் போன்றவளே!, இவன்-இவ்விராஜ குமாரன், ஆலைவாய்-கரும்பை ஆட்டும் ஆலையினின்றும் பெருகுகின்ற, வெம்-விருப்பத்தையுடைய, சாறு- கருப்பஞ்சாறானது, பாய-பாய்தலினாலே, விளைந்து எழுந்த-செழிப்பாக உற்பத்தியாகி நெல்விளையப் பெற்று வளர்ந்தோங்கிய, செம்சாலி-செந்நெற் பயிர்களின், பச்சைத்தாள்-பசுமையான தாள்களால், (அதாவது அத்தாள்களை மெல்லுவதால்) மேதி-எருமைகளினுடைய, கடைவாயில்-வாயின் கடைப்பாகத்தில், பால் ஒழுகும்-பால்போல வெளுத்த இரசம் ஒழுகுகின்ற, மச்சத்தார்-மச்ச தேசத்தாருடைய, கோமான்-அரசனது, மகன்-புத்திரன்.

மருத நிலத்தில் ஆலைகளிற் கரும்பையிட்டு ஆட்டிச் சாறெடுக்கப்படும். அப்பொழுது அவ்வாலைகளினின்றும் வெளிப்படும் சாறானது பெருக்கெடுத்தோடி நிலங்களிற் பாய்ந்து அவற்றிலுள்ள செந்நெற் பயிர்களைச் செழிப்பாக வளர்ந்தோங்கச் செய்யும்; அவற்றின் பசுந்தாளை எருமைகள் கடித்துத் தின்னும்பொழுது அவற்றில் பால் பிடித்திருக்கும். அரைவிளைச்சலான நெற்கள் மெல்லப்படுவதால், அந்த எருமைகளின் கடைவாயில் பால் போன்ற இரசம் பெருகி வழியும். கருப்பஞ்சாற்று மிகுதியும், நெற்செழிப்பும், எருமையின் நுகர்ச்சியும் கூறப்பட்டதால் இந்நாட்டின் நீர்வளமும், நிலவளமும் மேம்பட்டனவென்று விளங்கிற்று. இந்நாட்டில் நீர்வளம் மிகுந்திருப்பதால் எவ்விடத்தும் பற்பலவகை மீன்கள் அதிகரித்திருக்கும்; இக்காரணம் பற்றியே இந்நாடு மச்சநாடெனப்பட்டது.

மான்-உவமையாகு பெயர். கண்டாய் என்பதற்கு முன் பாடல்களிற் பொருள் கொண்டது போலக்கொள்க. ஆலைவாய் என்பதில் வாய்-ஏழனுருபு. வெம்மையென்னும் பண்படி மையீறுகெட்டு வெம் என நின்றது. இஃதிங்கே விருப்பத்தை உணர்த்திற்று. சாறு-ஸாரம் என்னும் வடசொல் விகாரம். சாலி-ஸாலீ என்னும் வடசொற்றிரிபு. மச்சம்-மத்ஸ்யம் என்னும் வடமொழித் திரிபு. பச்சை-பசுமையென் பதன் மையீறு கெட்டு, ஐ விகுதிபெற்றுத் தன்னொற் றிரட்டியது.

வாய்க்கடை யென்பது கடைவாய் என முன் பின்னாக மாறிற்று. இஃது இலக்கணப்போலி யெனப்படும். கோமான் என்பதில் மான்-பெயர் விகுதி.

அவந்தி நாட்டரசனைக் கூறுதல்.

141. வண்ணக் குவளை மலர்வவ்வி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்தப் பைங்குவளை-உண்ணா
தருங்கடா நிற்கு மவந்திநா டாளும்
இருங்கடா யானை யிவன்.

(இ-ள்.) இவன்-இந்த இராஜகுமாரன், வண்ணம்-அழகு பொருந்திய, குவளை மலர்-நீலோற்பல மலரை, வவ்வி, வாயாற்கவ்வி, வண்டு-வண்டுகள், எடுத்த-உயர்த்திப்பாடிய, பண்ணில்-பாட்டில், செவிவைத்து-காதைச்சேர்த்து, (அப்பாடலின் இனிமையை அச்செவியின் வழியாகக் கிரகித்து அந்த ஆனந்த பரவசத்தால்) அப்பைங்குவளை-(முன்னே தின்னும் பொருட்டு வாயிற்கவ்விய) அந்தப் பசுமையான நீலோற்பலத்தை, உண்ணாது-தின்னாமல், அருங்கடா-அருமையான எருமைக் கடாக்கள், நிற்கும்-மௌனமாய் நிற்கின்ற, அவந்திநாடு-அவந்திதேசத்தை, ஆளும்-ஆட்சி புரிகின்ற, இரு-பெரிய, கடாயானை-ஆண்யானை போன்றவன்; [எ-று.]

தின்னுதற்கு நீலோற்பலத்தைப் பறித்து வாயிற் கவ்விய எருமைக் கடாக்கள், வண்டுகளின் இசையைக் கேட்டவுடனே அவ்வானந்தத்தின் மூழ்கி மனம் ஸ்தம்பித்து அந்நீலோற்பலத்தை மெல்லாமல் நிற்கும். ஒன்றில் மனமுழுவதையும் செலுத்தியவர்கள், வேறெந்த விஷயத்திலும் புத்தியைச் செலுத்தாமல் ஸ்தம்பித்து நிற்பது உலகவியற்கை, இவ்வாறு எருமைக்கடாக்களும் வண்டின் இசையைக்கேட்டு, வாயிலுள்ள இரையை மெல்லாமல் நிற்குமென்றதனால் அந்நாட்டில் நீர்வளமிக்க மருத நிலமும், சோலையும் செழித்திருக்குமென்பது பெறப்படும். இங்ஙனம் எருமைக் கடாக்களே இசையில் மிக்க விருப்பமுடையனவா யிருந்தன வென்று கூறியதனால் அந்நாட்டிலுள்ளார் சங்கீதத்தில் அளவற்ற அவாவுடையவர்களா யிருப்பார்களென்பது சொல்லாமலே அமையும்.

எடுத்தல்-உயர்த்துதல்; அஃது இங்கே உயர்த்திப்பாடுதலை உணர்த்திற்று. அவந்திநாடு-மாளவதேசம். யானை-அவந்தி தேசாதிபதிக்கு உவமையாகு பெயராய் வந்தது.

பாஞ்சால மன்னனைக் காட்டல்.

142. விடக்கதிர்வேற் காளை இவன்கண்டாய் மீனின்
தோடக் கொழியப் போய்நிமிர்ந்த தூண்டில்—மடற்கமுகின்

சேந்தோடு பீறித்தேன் செந்நெற் பசுந்தோட்டில்
வந்தோடு பாஞ்சாலர் மன்.

(இ-ள்.) விடம்-விஷம் பொருந்திய, கதிர் பிரகாசமுள்ள, வேல்-வேலாயுதத்தையுடைய, காளை-குமாரனாகிய, இவன்-இம்மன்னன், மீனின்-மச்சங்களின், தொடக்கு-சிக்குதல், ஒழிய-நீங்க, (அதாவது மீன்பட்டுத் தூக்கும்போது அம்மீன் தான் சிக்கிக் கொண்டிருந்த முள்ளை விட்டுப் பறிபட்டு வீழ்ந்துவிட விசை கொண்டு தூக்கிய வேகத்தால்) போய்-மேலே சென்று, நிமிர்ந்த-உயர்ந்த, தூண்டில்-தூண்டிலின் முள்ளானது, மடல்-பாளைகளையுடைய,கமுகின்-பாக்கு மரத்தின், செம்தோடு-சிவந்த பூவிதழ்களை, பீறி-கிழிக்க, (அவற்றிலிருந்து வடியும்) தேன்-தேனானது, செந்நெல் செந்நெற்களின், பசும் தோட்டில்-பசுமையான குருத்திலைகளிலே, வந்து ஓடு-வந்து பாய்கின்ற, (மருதநிலச் சிறப்பையுடைய) பாஞ்சாலர்-பாஞ்சால தேசத்தாருடைய, மன்-இறைவன்; [எ-று.]

தடாகங்களில் தூண்டில்போட்டு மீன் பிடிப்பவர்கள், அத்தூண்டிலில் மீன் சிக்கியதுணர்ந்து அதனை விசைகொண்டு மேலே தூக்குவார்கள்; நீரைவிட்டு வெளியில் வந்தவுடனே சில மீன்கள் கனத்தால் முள்ளினின்றும் பறி பட்டு நீரில் வீழ்ந்துவிடும். அங்ஙனம் விழவே அம்மீன்களின் கனத்தால் அத் தூண்டிலில் ஏற்பட்டிருந்த வளைவு நிமிர்வதாலும், தூண்டிற்காரர் முன்னே சுண்டி இழுத்த விசையாலும், அத்தூண்டில் மிக்க விசையாக மேலே நிமிர்ந்து கரையில் நிற்கும் கமுகமரங்களின் பாளை களிற்றுக்க, அதன் முள்ளினால் அப்பாளைகளிலுள்ள மலர்கள் கிழிந்து அவற்றிலிருந்து தேனொழுகும். அத்தேன், அக்கமுக மரங்களி னடியிலிருக்கும் செந்நெற் பயிர்களின் குருத்திலைகளிற் பாயும். இங்ஙனம் தேன் பாயும் பாஞ்சாலநாடெனவே, அந்நாடு நீர் வளமும், நில வளமும் மிக்க தென்பது விளங்கும்.

ஆயுதங்களை விடந்தோய்த்துச் செய்தல் இயல்பு; ஆதலின், 'விடக்கதிர்வேல்' என்றார் புலவர். கண்டாய் அசை. தொக்கு-சிக்கு; தொழிற் பெயர். தூண்டில் என்பது அதின் நுனியிலுள்ள முள்ளைக் குறிக்கும். பசுந்தோட்டில் என்பதில் தோடு-இலை. செந்நெல் என்பது சிவந்தநெல்லா லுண்டாகிய பயிரை உணர்த்திநின்றது.

கோசல நாட்டரசனைக் காட்டல்.

143. அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலில்
சென்னே லரிவார் சினையாமை-வன்முதுகில்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சோல்லாயிச் சேய்.

(இ-ள்) தேன்-தேனினுடைய இனிமையானது, இருந்த-பொருந்தியிருக்கின்ற, சொல்லாய்-வார்த்தையை உடையவளே!, இச்சேய் இவ்விராஜ குமாரன், அன்னம்-அன்னப் பறவைகளை, துயில்-தூக்கத்தி னின்றும், எழுப்ப- (ஓசையானது) எழுப்பும்படி, அம்-அழகிய, தாமரை வயலில்-தாமரைகள் நிறைந்தவயல்களிலே, செந்நெல்-செம்மையான நெற்கதிர்களை, அரிவார்-அறுக்கிற பள்ளர்கள், சினை ஆமை- கருக்கொண் டிருக்கின்ற ஆமைகளின், வன்முதுகில்-வலிமை பொருந்தியமுதுகிலே, கூன் இரும்பு-அரிவாளை, தீட்டும்-கூர்மையாக்கும் பொருட்டுத் தீட்டுகின்ற, குலம்-மேலான இனத்திற்சேர்ந்த, கோசல நாடன்-கோசல நாட்டரசன்; [எ-று.]

வயல் ஓரங்களில் தாமரைகள் மலர்ந்திருக்கும்; அம்மலர்களில் அன்னங்கள் நித்திரை புரியும்; அப்போது பள்ளர்கள் நெற் கதிர்களை அறுக்கும்பொருட்டு அரிவாளை ஆமையின் முதுகில் தீட்டுவார்கள்; அவ்வாறு தீட்டுவதாலுண்டாகும் ஓசையைக் கேட்டு மேற்கூறிய அன்னங்கள் நித்திரை விட்டெழும். இங்ஙனங் கூறியதால் அந்நாட்டின் மருதநிலச் சிறப்பு விளங்கும். ஆமை முதுகில் பள்ளர்கள் அரிவாளைத் தீட்டுதல் வழக்கம். இறந்துபோன ஆமையின் முதுகோட்டிலேயே அவர்கள் பெரும்பாலும் அரிவாளைத் தீட்டுவதுண்டு. ஆதலின் இங்கே 'சினையாமை வன்முதுகில்' என்பதை, 'சினையாயிருந்து இறந்துபோன ஆமையின் முதுகில்' என்று கொள்ள வேண்டும்; உயிருடனிருக்கும் ஆமையின் முதுகில் என்று கொள்ளலாகாது. உயிருள்ள ஆமையின் முதுகில் அரிவாள் தீட்டுதல் அசம்பாவிதமாம். சினையாமையின் முதுகு வன்மையாயிருக்குமாதலின் இங்கு அதனைக் கூறினார் ஆசிரியர்.

எழுப்ப என்னும் வினையெச்சம், அரிவார் என்ற முற்றோடும், தீட்டும் என்ற பெயரெச்சத்தோடும் முடியும். செந்நெல்-ஆகு பெயராய்க் கதிரை உணர்த்திற்று. கூனிரும்பு-வளைவாகிய இரும்பு; கூன்-வளைவு; இரும்பு என்பதாகு பெயராய், அதனாலாம் கருவியை உணர்த்திற்று. குலம்-வமிசம்; இதனை இராஜகுமாரனுக்கடையாக்குக. தேன் என்பது அதன் இனிமையை உணர்த்திற்று. "முக்காலத்தினு மொத்தியல் பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே" என்ற விதிப்படி, 'தேனிருக்கும்' என முக்காலத்திற்கும் பொருத்தமாக இருக்கவேண்டியது, 'தேனிருந்த' என இறந்தகாலங் காட்டி வந்தது காலவழுவமைதியென்க. சேய்-செம்மை யென்னும் பண்புப்பெயரின் விகாரம்; "ஈறு போதல்......" என்னும் சூத்திர விதி பற்றி இங்ஙனமாயது; இச்சொல் முதலிற் பண்பாகுபெயராய்ச் செந்நிறமுடைய முருகக்கடவுளையுணர்த்திப் பின்பு உவமையாகு பெயராய் அக்கடவுளைப் போன்ற இராஜகுமாரனை யுணர்த்திற்று; இஃதுஇங்ஙனம் வந்தால் இருமடியாகு பெயரெனப்படும்.

மகத தேசத்தரசனைக் கூறல்.

144. புண்டரிகந் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியுந் தெண்ணீர் மகதயர்கோன்-எண்டிசையில்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னாவம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாயிச் சேய்.

(இ-ள்.)எண்திசையில் - எட்டுத்திக்குகளிலும் உள்ள, போர்வேந்தர்-யுத்தத்தில் வல்லவராகிய அரசர்கள், கண்டறியா-பார்த்தறியாத, பொன்-பொன்னாற்செய்யப்பட்ட, ஆவம்-அம்புக்கூட்டை, பின் உடைய - முதுகின்புறத்திலுள்ள, தேர் - இரதத்தையுடைய, வேந்தன்-அரசனாகிய, இச்சேய்-இவ்விராஜகுமாரன், புண்டரிகம்-செந்தாமரை மலர்கள், தீஎரிவபோல்-அக்கினி பிரகாசிப்பதுபோல, விரிய-மலர, (அதன்மேல்)பூம்புகைபோல்-அழகிய புகையைப்போல, வண்டு-வண்டுகள், இரியும்(தேனைக்குடித்து அதைவிட்டுநீங்கி மேற்பாகத்தில், பறந்து திரிகின்ற, தெண்ணீர்-தெளிவான நீர் வளத்தையுடைய, மகதயர்கோன்-மகத தேசத்தார்க்கு மன்னன்;[எ-று.]

தடாகங்களில் உள்ள தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்திருப்பது அக்கினி சொலிப்பதுபோன்றிருக்கும்; அம்மலர்களிற் சேர்ந்து தேனைப்பருகி அவற்றினின்றும் நீங்கி மேலே பறக்கும்வண்டுகள் அந்த அக்கினியிலிருந்து கிளம்பும் புகையைப் போன்றிருக்கும். இத்தகைய தாமரைகள் மலர்ந்த நீர்ப்பெருக்கையுடைய மகதம் என்றதனால் அந்நாடு நீர்வளம்மிக்கதென்பது பெறப்படும். அரசர்களுடைய முதுகில் அம்புக்கூடு கட்டப்பட்டிருக்கும்; அவர்கள்யுத்தஞ்செய்யுங்காலத்தில் தோற்றோடுவார்களாயின் அவர்கள் முதுகு எதிரிகளுக்குத் தெரியும்; அதனால் அங்கே கட்டப்பட்டிருக்கும் அம்புக்கூடும் தெரியும்; இங்ஙனம் அவர்கள் புறமுதுகு காட்டியோடாமல் வீரத்தோடு எதிர்த்து நின்று பகைவர்களிடம் யுத்தம் புரிந்து ஜெயம் பெறுவார்களாயின் அவர்களுடைய முதுகையும், அம்புக் கூட்டையும் எதிரிகள் காணுதல் முடியாது. இவ்வாறு புறமுதுகிடாதவனே சுத்த வீரனாவான்; ஆதலின் இவ்வரசன் அஷ்டதிக்குகளிலுமுள்ள அரசர்களுக்கும் சண்டையில் பின்னிடாதவன் என்பது தோன்ற "எண்டிசையில் போர்வேந்தர் கண்டறியாப் பொன்னாவம் பின்னுடைய தேர்வேந்தன்" என்றார் ஆசிரியர். இதனால் இம்மன்னன் ஒப்பற்ற வீரனென்பது பெறப்படும்.

நிறத்தாலும் உருவத்தாலும் தாமரை மலருக்கு நெருப்பும், வண்டுக்குப் புகையும் உவமை கூறப்பட்டன; இவை பண்புவமையெனப்படும். புண்டரிகம்-புண்டரீகம் என்னும் வடசொல் விகாரம். எரிவ - எரிவது என்பதன் விகாரம். இரிதல்-நீங்குதல்.

தெண்ணீர்-பண்புத்தொகை. மகதம்-வடசொல். எட்டுத் திசை-கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பன. திசை-திசா என்ற வடசொற்றிரிபு. போர்-தொழிற்பெயர்; பொருதல் என்பது தல்லீறுகெட்டு முதனிலைதிரிந்து போர் என்றாயது. வேந்தன்-முற்றெச்சம்; வேந்தனாகிய இச்சேய் மகதயர் கோன் எனக்கூட்டவேண்டும். கண்டாய் என்பதை மேலைச் செய்யுட்களிற் கொண்டதுபோலக் கூட்டிப் பொருள் கொள்க.

அங்க நாட்டதிபனைக் காட்டல்.

145. கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்-வான் கடல்வந்
தந்தோ வெனவெடுக்கு மங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய்.

(இ-ள்.) செந்தேன்-சிவந்ததேன் போன்ற (இனிமை வாய்ந்த), மொழியாய்- சொல்லையுடையவளே!, இசேய்-இந்தராஜகுமாரன், கூன்-வளைவான, சங்கின் பிள்ளை-சங்கின் பிள்ளையானது, கொடிப் பவளக்கோடு-கொடியாகிய பவளத்தின்கொம்பில், இடறி-தடுக்குதலுற்று, தேன்கழியில்-தேனோடு கலந்திருக்கும் உப்புக்கழியில்,(அதாவது சமுத்திரத்தின் பக்கத்தில் வந்துபாயும் உப்பாற்றிலே) வீழ்-வீழ்ந்து அங்குள்ள உவர்ச் சேற்றிலமுழ்ந்தி வெளிப்பட முடியாமல் வருந்த, (அதுகண்டு) வான்கடல்-பெரிய சமுத்திரமானது, (அதன் வருத்தத்திற்கு) அந்தோ என-ஐயோ என்று இரங்கி, திரைக்கரத்தால்-அலையாகியகையினால், எடுக்கும்-ஏந்துகின்ற, (கடல் வளத்தையுடைய) அங்கநாடு-அங்கதேசத்தை,ஆளுடையான்-ஆளுதலையுடையவன்; [எ-று]

சமுத்திரத்தில் வாழும் சங்கின் பிள்ளையானது நீரில் சஞ்சரிக்குங்காலத்தில் ஆங்குள்ள கொடிப்பவளக் கொம்பில் இடறி அவ்வேகத்தால் அச்சமுத்திரத்தில் வந்துபாய்ந்து கொண்டிருக்கும் உப்பாற்றின் சேற்றில் வீழ்ந்து, அதை விட்டு வெளியேற முடியாமல் வருந்தும்; அப்போது சமுத்திரத்தின் அலையானது அவ்விடத்தில் மோதித் திரும்புகையில் அவ்விளஞ்சங்கை ஏந்திக்கொண்டு வந்து விடும்; அலை இரைந்து செல்வது சமுத்திரம் சங்கின் பொருட்டு ஐயோவென்றிரங்கினதாகக் குறிப்பிடப்பட்டது. அலை சமுத்திரத்திற்குக் கையாக உருவகிக்கப்பட்டது. இவ்வாறு சங்கு சமுத்திரம் முதலியவற்றின் செய்கைகளைச் சிறப்பித்துக் கூறியவதனால் அங்கதேசம் கடல்வளம்மிக்கதென்பது பெறப்படும்.

கழி உப்பாறு; இதில் மருதநிலச் சார்பான வெள்ளமும் வந்து பாயக் கூடுமாதலின் அங்கிருந்துவந்த தேனுங் கலந்திருக்கும்; அது பற்றியே தேன் கழி யென்று சிறப்பித்தார் ஆசிரியர். ஆள்தல் என்னுந் தொழிற் பெயர் தல்லீறு கெட்டுப் பகுதியளவாய் ஆள் என நின்று உடைய வென்பதனோடு புணர்ந்து ஆளுடைய வென்றாயது.

கலிங்க தேசத்தரசனைக் கூறல்

146. வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்-புள்ளோடு
வண்டிரியச் செல்லு மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்டெரியற் றேர்வேந்தன் றான்.

(இ-ள்.) தண் - குளிர்ச்சிபொருந்திய, தெரியல் - மாலையை அணிந்த, தேர்-இரதத்தையுடைய, வேந்தன்-இவ்வரசன், வெள்வாளை-வெண்மை நிறம்பொருந்திய வாளைகளென்கின்ற, காளைமீன்-இளம் பருவமுள்ள மீன்கள், மேதிக்குலம்-எருமைக் கூட்டத்தை, எழுப்ப-மடிகளில் மோதி எழுப்பிவிட,(அவை எழுந்து)கள்வார்ந்த-தேன் ஒழுகுகின்ற, தாமரையின் காடு-தாமரை வனத்தை, புள்ளோடு-பறவைகளுடனே, வண்டு-வண்டுகள், இரிய-பயந்தோடுங்கும்படி, உழக்கி-கலக்கிச்சிதைத்து, செல்லும்-போவதற்கிடமாகிய, மணி-முத்தைப்போல் தெளிந்த, நீர்-நீர்த் தடாகங்களை யுடைய, கலிங்கர்கோன்-கலிங்க நாட்டார்க் கதிபதி; [எ-று.]

தடாகங்களில் நீர் பெருகி இருப்பதால், எருமைகள் களித்து அவற்றிற் போய்ப்படுத்திருக்கும். அப்போது நீரிற் களித்து விளையாடும் வாளைமீன்கள் அவ்வெருமைகளின் பால்மடியிற் பாயும்; அப் பாய்ச்சலால் அவ்வெருமைகளுக்குச் சிறிது உபத்திரவ முண்டாகும். அதனால் அவை பயந்தெழுந்து வெளியேறியோடும்; அங்ஙனம் ஓடும் வேகத்தால், தாமரைகள் சிதையும்; அத்தாமரையிற் சேர்ந்திருந்த பறவைகளும், வண்டுகளும் பயந்து அதைவிட்டு நீங்கிப் பறக்கும். ஆசிரியர் இவற்றைக் கூறியதன் மூலம் நீர்வளத்தை விளக்கிக் காட்டியபடியால் அந்நாடு நீர் நிறைந்த தடாகங்கள் மலியப் பெற்றதென்பது விளங்கும். தாமரையின்காடு - ஆறன்தொகைப் பொருளது.

வாளை மீன்-இருபெய ரொட்டுப் பண்புத்தொகை; காளைமீன் என்பதும் அங்ஙனமே கொள்ளப்படும். மேதிக்குலம்-ஆறாம்வேற்றுமைத்தொகை எழுப்ப-வினையெச்சம்; இது, செல்லும் என்னும் பெயரெச்சத்தோடு முடியும். வார்ந்த-பெயரெச்சம். காடு உழக்கி-இரண்டாம் வேற்றுமைத்தொகை. புள்ளோடு வண்டு-உடனிகழ்ச்

இப் பொருளில் வந்த மூன்றும் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர். இரிய-வினையெச்சம். நிறம்பற்றி நீருக்கு முத்து உவமை கூறப்பட்டது. தேர்வேந்தன்-இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன்றொக்க தொகை. செல்லும் என்னும் பெயரெச்சம் நீர் என்னும் இடப்பெயர் கொண்டு முடிந்தது. தான்-அசை.

கேகயர் கோனைக் கூறுதல்.

147. அங்கை வரிவளையா யாழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க்-கங்கையிடைச்
சேல்குளிக்குங் கேகயர்கோன் தெவ்வாடற் கைவரைமேல்
வேல்குளிக்க நின்றானிவ் வேந்து.

(இ-ள்.) வரி-கீற்றுக்களையுடைய, வளை-வளையலை யணிந்த, அங்கையாய்-அழகியகையையுடையவளே, தெவ்-பகைவர்களுடைய, ஆடல்-போர் செய்தலையுடை, கை-புஜமாகிய, வரைமேல்-மலையின் கண், (யுத்தஞ் செய்யுங்காலத்திலே)வேல் தன்னுடைய வேலாயுதமானது, குளிக்க-அழுந்தும்படி, (அதனை யேவி ஜெயங்கொண்டு) நின்றான்-போர் முகத்தில் நின்றவனாகிய, இவ்வேந்து - இவ்வரசன், ஆழித்திரை-கடலின் அலையானது, கொணர்ந்த - கொண்டு வந்து ஒதுக்கிவிட்ட, செம்கண்-சிவந்த கண்களையுடைய, மகரத்தை-சுறாமீனை, சேல் - கெண்டைமீன், தீண்டி-தொட்டு, போய் - சென்று, கங்கை இடை-கங்காநதியிலே, குளிக்கும்-அமிழ்கின்ற, (அக்கங்கை நீர்வளம் பெருகிய) கேகயர்கோன் - கேகய நாட்டாருடைய அரசன்; [எ-று.]

கங்கை சமுத்திரத்தில் பாய்வதால் அச்சமுத்திரத்தின் அலை அக்கங்கைநீரோடு எதிர்த்து மோதும்போது அவ்வலையுடனே சமுத்திரத்தில் வாழும் சுறா மீன் கங்கையில் கலக்கும். அப்போது கங்கையிலுள்ள சேல்மீன் அச்சுறாவின்மீது உராய்ந்து சென்று அக்கங்கா ஜலத்தில் மூழ்கும். இயற்கையில் அச்சுறாவைப் பரிசித்துக் கங்கை நீரில் சஞ்சரிக்கும் சேல்மீனை, அச்சுறாவைத் தொட்டதோஷம் நீங்கக் கங்கையில் மூழ்கினதாகக் குறித்தார் ஆசிரியர். இழிந்தவரைத் தொட்ட மாத்திரத்தில் அத்தீட்டு நீங்க உயர்ந்தோர் புண்ணிய தீர்த்தத்தில் மூழ்குதல் இயற்கை. இங்கே கங்கையில் வாழும் சேல் உயர்ந்ததும், உவர்ச்சமுத்திரத்தில் வாழும் சுறா தாழ்ந்ததுமாதலின், சேல் அந்தச்சுறாவைத் தொட்ட தோஷம் நீங்கக் கங்கையில் மூழ்கிற்றென்க. இவ்வாறு கங்கைக்கும் சமுத்திரத்திற்கும் சம்பந்தம் கூறப்பட்டமையின் கேகயதேசம், கடலிற் கங்கை பாயும் முகத்துவாரத்தை யுடையதென்பது பெறப்படும். "தெவ்வாடற் கைவரைமேல் வேல்குளிக்க நின்றானிவ்வேந்து" என்றதனால், இந்

நாட்டரசன் போர்முகத்து எதிர்த்து நின்ற பகைவரை வெல்லும் வேல்வல்லா னென்பது விளங்கும்.

வரி-வளையவில் அலங்காரத்திற்காக இடப்படும் கீற்று. மகரம்-முதலையெனினுமாம், இடை-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. கேகயம் கைஹஹயம் என்னும் வடசொற்றிரிபு. வேல் குளித்தல்-வேல் அழுந்துதல்.

காந்தார தேசத்தரசனைக் காட்டல்.

148. மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றில்-போநீள்
கழைக்கோ தையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்.

(இ-ள்.)மழை-மேகம்போன்ற, (கரிய)கோதை-கூந்தலையுடைய, மானே - மான்போன்ற பார்வையுடைய பெண்ணே!, இமன் - இந்த அரசன், மா-சிறந்த, நீர்-நீரையுடைய, நெடும் கயத்து-நீண்டகுளத்திலே, வள்ளைக்கொடிமீது-வள்ளைக்கொடியின் மேல், ஏகும்-நடந்து தள்ளாடிச் செல்கின்ற, அன்னம்-அன்னப் பறவையானது, தனிக் கயிற்றில்-(இரு மருங்கும் நாட்டப்பட்ட மூங்கில்களினிடையிற் றொடுத்த)ஒற்றைக் கயிற்றில், போம்-(தள்ளாடி நடந்து)போகின்ற, நீள்-நீண்ட, கழைக்கோதையர்-(மூங்கிலிலேறி விளையாடும்) கழைக் கூத்திகளாகிய பெண்களை, ஏய்க்கும்-நிகர்த்திருக்கும்படியான (நீர்வளம்மிக்க), காந்தாரநாடன்-காந்தாரநாட்டிற் கதிபன்; [எ-று.]

குளத்தின் நீரின்மேல் வள்ளைக்கொடி கயிறுபோலப் படர்ந்திருக்கும்; அந்தக் கொடியின்மேல் அன்னம் ஏறி நடந்து செல்லும்; அவ்வாறு நடக்கும்போது அது தள்ளாடிவீழ்வதுபோல் அசைந்தசைந்து காலை உறுதியாக ஊன்றி அக்காலின் பலத்தைக்கொண்டே செல்லும். இவ்வாறு செல்லும் தோற்றமானது, இரண்டு மூங்கில்களை இருபக்கத்திலும் நாட்டி, அவற்றினிடையில் ஒற்றைக் கயிற்றைநீளத்தொடுத்து, அதன்மேல் தள்ளாடி நடந்துசெல்லும்கழைக் கூத்தியின் ஆட்டத்தைப்போன்றிருக்கும். இவ்விதமான கயிற்றில் கழைக்கூத்திகள், தலையில் ஐந்தாறு பானைகளை அடுக்கிச் சுமை சேர்த்துக்கொண்டு, தாங்கள் விழாதிருப்பதற்கு ஆதரவாயிருக்கும் பொருட்டு ஒரு மூங்கிலை மார்பிற்சேர்த்து, அதன்நடுப்பாகத்தைப் பிடித்துக் கொண்டு தாங்கள் சாயும் பக்கத்தில் அந்த மூங்கிலைத் தூக்கித் தூக்கி உடலை நிலைக்கச் செய்து அடிமேல் அடிவைத்து நடந்து காட்டிக் கழைக் கூத்தாடுவது வழக்கம்; இன்னும் உயர்ந்தவோர் மூங்கிலை நட்டு அதன் உச்சியில் ஏறிநின்று கழைக் கூத்திகள்

பலவிதமான விளையாட்டுக்களைச் செய்து முடிவில் அம்மூங்கிலிற் றெடுத்து நாலாபக்கங்களிலும் கீழே கொண்டுவந்து கட்டப்பட்டிருக்கும் கயிறுகளில் ஒரு கயிற்றிற் பாய்ந்து கீழிறங்குவதும் ஒருவகைக் கழைக் கூத்தாம். இவ்வாறு அவர்கள் மூங்கில்களிலேறியே பலவிதமான வேடிக்கைத் தொழில்களைச் செய்பவர்களாதலின் கழைக்கூத்திகள் என்னப்பட்டார்; கழை-மூங்கில்; அதிலேறி விளையாடுவோர் கழைக்கூத்திகள் அல்லது கழைக்கூத்தர்கள்; இவர்கள் குறவர் வகுப்பைச் சார்ந்த ஒருவகை ஜாதியர்.

நீரின்மேற் படர்ந்த வள்ளைக்கொடி, மூங்கிலிற் கட்டிய கயிற்றையும், அக்கொடியின்மேல் நடந்துசென்ற அன்னங்கள் கழைக்கூத்திகளையும் நிகர்த்தன. இவை வடிவையும் தொழிலையும் பற்றி ஒன்றற்கொன் றுவமையாயின. இங்ஙனம் நீர்வாழ் பிராணிகள் வள்ளைக்கொடியில் ஏறிப்பாயும் செய்கையைக் கழைக்கூத்திகளின் செய்கைக்கு உவமித்திருப்பதை,

"கூடினார்க ணம்மலர்க் குவளையங் குழியிடை
வாடுவள்ளை மேலெலாம் வாளையேறிப் பாய்வன
பாடுகால் கயிற்றிற்பாய்ந்து பல்கல ஞெலிப்பபோந்(து)
ஆடுகூத்தி யாடல்போன்ற நாரைகாண்ப வொத்தவே"

என்னும் சீவகசிந்தாமணி நாட்டுச் சிறப்புச் செய்யுளானு முணர்ந்து கொள்க. அக்குளங்களின் நீர் மிகவும் பரிசுத்தமுடையதென்பது விளங்க 'மாநீர்' என்றார் புலவர். கயம்-கசம். தான்-அசை, நீள் கழைக்கோதையர் என்பதில், 'நீள்' கழைக்கு அடை. ஏய்க்கும்-உவமவுருபு. மழைக்கோதை - உவமைத்தொகை. மான்-உவமையாகு பெயர்.

சிந்து நாட்டரசனைக் காட்டல்.

149. அங்கை நெடுவேற்க ணாயிழையாய் வாவியின்வாய்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச் - செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் போன்விளைக்குந் தண்பணைசூழ்
மாச்சிந்து நாட்டானிம் மன்.

(இ-ள்.) அங்கை-உள்ளங்கையையும், நெடுவேல் - நீண்ட வேலாயுதத்தையும், (நிகர்த்த) கண் - கண்களையுடைய, ஆயிழையாய்-ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணங்களை யணிந்தவளே!, இ மன்-இந்த அரசன், வாவியின்வாய்-தடாகங்களிலே, சங்கம்-சங்குகள், (தாமிருந்ததான இடத்தைவிட்டு) புடை - பக்கத்தில், பெயர - ஊர்ந்துசெல்ல, (அதனாலே) கலங்கி-அசைதலுற்று, செங்கமலப்பூ-செந்தாமரை மலரினின்றும், சிந்தும் - சொரிகின்ற, நாள்தேறல்-

புதிய தேனானது, (பாய்ந்து) பொன்-பொன்னைப் போன்ற நெல்லை, விளைக்கும்-விளையச்செய்கிற, தண்-குளிர்ச்சி பொருந்திய, பணை-வயல்கள், சூழ் - சூழ்ந்த, மா - சிறப்புப்பொருந்திய, சிந்துநாடன் - சிந்து தேசாதிபன்; [எ-று.]

தடாகங்களிலே சங்குகள் ஊர்ந்து செல்லும்போது அவற்றின் பாரத்தைத் தாங்கமுடியாமல், செந்தாமரை மலர்கள் அசையும்; அவ்வசைவினால் அவற்றிலுள்ள தேனானது சிந்தித் திரண்டு நீரோடு கலந்துபோய் வயல்களிற் பாயும்; அதனால் அங்கு நெற்கள் செழிப்பாக வளர்ந்து விளையும்.

அங்கை-அகங்கை என்பதன் விகாரம்; அகங்கை என்பதற்கு உட்பக்கக்கை என்று பொருள்; அஃது உள்ளங்கை என வழங்கும்; உள்ளங்கை என்பதில், அம்-சாரியை; உள்ளங்கையையும் கண்ணுக்குவமை கூறுவது வழக்கம்; 'இவ்வளவு கண்ணாள்' என்று ஔவை அகங்கையைக் கண்ணுக்குவமையாகக் காட்டிக் கூறியிருத்தலால் இஃதுணரப்படும். இனி, 'அங்கை நெடுவேற்கண்' என்பதற்கு, 'அழகிய கையில் வைத்திருக்கக்கூடிய நீண்ட வேலை நிகர்த்த கண்' எனப் பொருள்கூறினும் அமையும். ஆயிழை-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ஆய்-விளியுருபு. தான் - அசை. பூச்சிந்து-நீக்கப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத் தொகை. பொன்-நெல்லுக்கு உவமையாகுபெயர். வயல்களிலுண்டாம் விளைவைத் திருவென்று கூறுதல் நாட்டு வழக்கமாதலின், அவ்வழக்கம் பற்றி இங்கு நெல்லைப் பொன் என்றார் ஆசிரியர் எனினும் அமையும். இங்கே பொன்-திரு. அது நெல்லுக் காயிற்று.

நளன் வடிவங்கொண்டு வந்திருந்த நான்கு தேவர்களைக் கண்டு தமயந்தி சஞ்சலப்படல்.

150. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்
றூசலா டுற்றா ளுளம்.

[இ-ள்.] (மேற்கூறியபடி சொல்லி) காவலரை- (சுயம்வரத்துக்கு வந்திருந்த) பூலோகத்து அரசர்களை யெல்லாம், தன் சேடி-தன்னுடைய தோழி, காட்ட - காட்டிக்கொண்டுவர, பூவரைந்த-மலர் சூட்டப்பெற்ற, மாசு இல்லா - குற்றமில்லாத, பூங்குழலாள்-அழகிய கூந்தலையுடை தமயந்தி, கண்டு-பார்த்துக்கொண்டே வந்து, மற்று-பின்பு, ஈர்இருவர்-நால்வராய், நளன்உருவாய்ச் சென்றிருந்தார்-நளன் வடிவமாகி ஆங்குச் சென்றிருந்தவர்களாகிய, தேவர்

அவரை-தேவர்களென்னும் அவர்களை, காணாநின்று-பார்த்து, உளம்-மனமானது, ஊசலாடு உற்றாள் - ஊசலாடுதலைப் பொருந்தினாள்; (அதாவது மனம் ஊசலாடுவதைப் போல அங்குமிங்கும் அலைந்து சஞ்சலப்படுவதைப் பொருந்தினாள்;)[எ-று.]

இங்குக் கூறிய தேவர்கள் நால்வரும் யாவரெனில், முன்னே நளனைத் தமயந்தியிடம் தூதனுப்பிய இந்திரன், அக்கினி, இயமன், வருணன் ஆகியவர்கள்; இவர்கள் அங்ஙனம் அவனைத் தூதனுப்பிப் பார்த்தும் தமயந்தி தங்களை விரும்பாமல் நளனையே விரும்பியதை யறிந்தார்களாதலின், அவளை வஞ்சித்தாவது பெறவேண்டுமென்னுங் கருத்தினால் நளன்வடிவந்தாங்கிச் சுயம்வரமண்டபத்திற்சேர்ந்திருந்தார்கள். இப்படி யிருக்கும் போது மேற்கூறியவாறு ஒவ்வொரு ராஜகுமாரனையும் பார்த்துக்கொண்டு வந்த தமயந்தி, இங்குங் கூறிய தேவர்களும், நளனும் ஒரே வடிவமுடையவர்களாயிருக்கண்டு, "இவர்களில் நாம் விரும்பிய நளன் யாவனோ, அவனைத் தெரிந்து நாம் எப்படி மாலை யிடுவது" என்றெண்ணி மனங்கலங்கினாள்.

சேடி-சேடீ என்னும் வடசொற்றிரிபு. உரு-ரூபமென்ற வடசொல்லின் விகாரம். மற்று-இடைச்சொல்; இஃதிங்கே பின் என்னும் பொருளைத்தந்து நின்றது. காணாநின்று-உடன் பாட்டு இறந்தகால வினையெச்சம்; இதில், காணாநில்-பகுதி. ஊசலாடு என்பதில், ஆடு தல்லீறு கெட்ட தொழிற் பெயர்.

தமயந்தியின் மணத்திற்கு உலகத்திலுள்ள எல்லா அரசர்களுமே வந்தன ரெனல்.

151. பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து.

[இ-ள்] (மேற்கூறியபடி தமயந்தி கலங்கி நிற்குந் தருணத்தில் முன்னுரைத்தபடி) வானவரும்-(இந்திரன் முதலிய) தேவர்களும், பொன்தேர்-அழகியதேரையுடைய, நளன் வடிவமாகி, நளன்உருவாய் போந்து-(தாமிருக்குமிடம் விட்டுச்)சென்று, வந்து இருந்தார்-(தமயந்தியால் சூட்டப்படும்மாலையைப் பெறுவதற்குச் சுயம்வரமண்டபத்தில்) சேர்ந்திருந்தார்கள். (இவர்களே இவ்வாறு தமயந்தியின் விருப்பத்தால் வெட்கங்கெட்டு மானிட வடிவத்தையும் தாங்கி வந்திருந்தார்களென்றால்) பூணுக்கு-ஆபரணங்கட்கு அழகு அளிக்கும்-அழகைக் கொடுக்கின்ற, பொன் தொடியை-பொன்னாலாகிய வளையலையணிந்த தமயந்தியை, கண்டக்கால்-மனத்தினால் நோக்குவார்களாயின், நீள்நிலத்து-நீண்ட இப்பூமியிலுள்ள, நல்வேந்தர் - நல்ல

அரசர்களில், எவர் - எவர்தாம், நாண் உக்கு - வெட்கங்கெட்டு, நெஞ்சு உடைய - மனக்கலக்கமுற்று, வாராதார்-வாராதிருப்பவர்?; (எல்லோருமே பேராசை கொண்டு வந்திருந்தார்கள் என்றபடி); [எ-று.]

இந்திரன் முதலிய தேவர்களும் தமயந்தியின் மண மாலையைப் பெற விரும்பி, 'பிறப்பில் நம்மிலும் இழிந்தவனான நளன் வடிவத்தைக் கொள்ளுகின்றோமே' என்றவெட்கஞ்சிறிதுமின்றி அத்தமயந்தியால் விரும்பப்பட்ட நளனது வடிவத்தைத் தாங்கி வந்திருந்தார்களென்றால், பூலோகத்திலுள்ள அரசர்களில் எவர்தாம் அவளை நினைத்தமாத்திரத்தில் அவ்வாறு வெட்கங்கெட்ட செய்கைகளைச் செய்துகொண்டுவாராமலிருப்பவர்? எல்லோருமே வந்திருந்தார்கள் என்பது இதன் கருத்து. "நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் நீணிலத்து மற்றேவர் வாராதார்" என்று அரசர்க்கு நாணக்கேடும், நெஞ்சுடைதலும் சொன்னதனால், தேவரும் வெட்கங்கெட்டு நெஞ்சுடைந்து வந்தார்களென்பது தானே அமையும். வெட்கங்கெடுதலாவது பிறர் பார்த்து நகைக்கத்தக்க செய்கைகளை நாணமின்றிச் செய்தலாம்; நெஞ்சுடைதலாவது தமயந்தியின் விருப்பத்தால் மனமிளகி, 'அவள் கிடைப்பாளோ கிடைக்கமாட்டாளோ' என்று கலங்குதலாம். அரசர்கள் தமயந்தியின் விருப்பாற் செய்த வெட்கங்கெட்ட செய்கைகளாவன: மனிதர் எப்பொழுதுமே செய்து கொள்ளாத நூதன அலங்காரங்களைச் செய்துகொள்ளுதலும், தங்கள் அலங்காரத்தைத் தாங்களே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொள்ளுதலும், அடிக்கடி கண்ணாடியிற் பார்த்துத் தங்கள் மீசைகளை முறுக்கிக் கொள்ளுதலும், காலை ஆட்டிக்கொண்டிருத்தலும், உதட்டைக் கடித்தலும், மனிதர் நடக்காதவிதமாக நடத்தலும், வீண் தற்புகழ்ச்சி பேசுதலும், இன்னும் இவைபோன்ற செய்கைகளுமாம். "ஆசை வெட்கமறியாது" என்றபடி இக்குணங்கள் மனிதர்க்கு இயற்கையில் ஏற்படக் கூடியவைகள். இத்தகையரை நல்வேந்தர் என்றது இவர்களுடைய செங்கோன்மையைப்பற்றியென்க. நெஞ்சுடைய என்பதற்கு, மனவுறுதியுள்ள என்று பொருளுரைத்தலுமொன்று. தமயந்தி இயற்கையழகுடையவளாதலின் அவளுக்கு ஆபரணங்கள் அழகளிப்பனவன்றாம்; அவளது இயற்கையழகே அவற்றிற்கழகைக் கொடுக்கும்; இதுபற்றியே ஆசிரியர் 'பூணுக்கழ களிக்கும் பொற்றொடி' என்றார். இங்ஙனமிருப்ப அவள் நகைகளை ஏன் சுமையாக அணிந்தாளெனில், மங்கலத்தின் பொருட்டென்க. அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என்னும் நால்வகைத் தேர்வீரர்களில் நளன் முதன்மை பெற்ற அதிரத வீரனாதலின், அவனைப், 'பொற்றேர் நளன்' என்று உயர்ந்த அடை கொடுத்துக் கூறினார் ஆசிரியர். இனி நளன்

தேர்ச்சாரத்தியஞ் செய்வதில் வல்லவனாதலின், 'பொற்றேர் நளன்', என்பதற்கு 'அழகிய தேரை ஓட்டுவதில் வல்லவனாகிய நளன்' என்றுரைத்தலுமாம். நளன் பின்னால் ருதுபர்ணனுக்குத் தேர்ப் பாகனாக அமைதலால் இஃதுணரப்படும்.

இச் செய்யுளில் 'வானவரும் நளனுருவாய்ப் போந்து வந்திருந்தார்' என்றதனால் 'பூலோகத்திலுள்ள எல்லா அரசர்களும் வந்திருந்தார்கள்' என்றதை விளக்கியது தண்டாபூபி காரியமாம்; இவ்வாறு கூறியது தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேரணி என்று சொல்லப்படும். தண்டாபூபிகார்யமாவது, ஒரெலி தடியை விழுங்கியது பெறப்படுதலால் அத்தடியிற் கட்டியிருந்த பணியாரமும் விழுங்கியது பெறப்படுதல் போல்வதாம். தண்டம்-தடி; பூபிகம்-பணியாரம். இவ்வலங்காரத்தை வடநூலார், காவ்யார்த்தா பத்யலங்கார மென்பர். பொற்றொடி-மூன்றும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பின்னே 'வாராதார் எவர்' என வருதலால் அதற்கேற்ப, 'கண்டக்கால்' என்பதற்கு, 'மனத்தால் நோக்குவார்களாயின்' என்று பொருளுரைக்கப்பட்டது. இங்கே நோக்குதல் எண்ணுதலாம்; இது 'நோக்கநோக்கம்' என்று கூறப்படும்; நோக்கநோக்கமாவது கண்பார்வையல்லாத பார்வையாம்; அது தியானித்தல்; இது சீவக சிந்தாமணி நச்சினார்க்கினியர் உரையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இனி, 'கண்டக்கால்' என்பதற்குக், கண்ணால் பார்த்தால்' என்றும் பொருளுரைக்கலாம். இவ்வாறு கொள்ளுமிடத்து தமயந்தியின் உருவத்தையோ உருவப் படத்தையோ அரசர்கள் முன்னே கண்டு அவள்மீது ஆசைகொண் டிருந்தார்க ளென்றும், அவ் விருப்பத்தால் வந்தார்களென்றும் கொள்ளவேண்டும். வேந்தர் ஏவர்-ஏழாம் வேற்றுமைத் தொகை; வேந்தரில் எவர் என விரியும். "ஏ இருவழியும்" என்றதனால் ஏவர் என்பதில் ஏ-முதலில் வினாவாயிற்று. மற்று-அசை. ஏவர் வாராதார்-எதிர்மறை யெச்சம். வானவரும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புப் பொருளது; இதற்கேற்ப, 'வானவரும் வந்திருந்தார்' என்ற தொடருக்குப்பின், 'இவர்களே இவ்வாறு தமயந்தியின் விருப்பத்தால் வெட்கங்கெட்டு மானிட வடிவத்தையுந் தாங்கி வந்திருந்தார்க ளென்றால்' என்னுஞ் சொற்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. போந்து என்பது செல்லுதற் பொருளிலும், வந்து என்பது சேர்தற் பொருளிலும் வந்தன. இனிப்போந்து என்பதை அசையாகக் கோடலு மொன்று

தமயந்தி நளனை அறிதற் பொருட்டுக் கடவுளை வேண்டுதல்.

152. மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளாகிற் கடிமாலை—அன்னந்தான்

சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

[இ-ள்] (இங்ஙனம் எல்லோரும் வந்து கூடியிருக்கும்போது மேற் கூறியபடி தேவர்களும் நளனும் ஒரே வடிவமுள்ளவரா யிருத்தல்கண்டு நளனை எவ்வாறுணர்ந்து அவனுக்கு மாலை சூட்டுவ தென்று மனங்கலங்கிய தமயந்தி அந்நளனை அறிந்துகொள்ளற் பொருட்டு) சூழ்-உயிர்களை விடாது வந்தடைகின்ற, விதியின் மன்னவனை-விதிக்குத் தலைவனான கடவுளை, தன்மனத்தே-தன்னுடைய மனத்திலே, வைத்து-கொண்டு தியானித்து, யான்-நான், மின்னும்-பிரகாசிக்கிற, தார்-மாலையை யணிந்த, வீமன் தன்-வீமராஜனுடைய, மெய்ம்மரபில்-சத்தியமுள்ள குலத்தில், (உதித்த) செம்மை சேர்-நற்குணம் பொருந்திய, கன்னிஆகில் - கன்னியாயிருப்பேனானால், அன்னம்-அன்னமானது, சொன்னவனை- முன்னே எனக்குக் கூறிய அந்நளனுக்கே, கடிமாலை-மணமாலையை, சூட்ட-சூட்டுதற்கு, அருள் என்றாள்-கிருபை செய்வாயாக என்று வேண்டினாள்; [எ-று.]

குலஸ்திரீகள், ஒருவனை நாயகனாக நினைத்தபின் மற்றொருவனுக்கு எவ்வகைக் காரணத்தைக் கொண்டும் மாலையிடக்கூடாதாதலாலும், அங்ஙனம் செய்யின் அவர்களுடைய கற்புக்குப் பங்கம் வருமாதலாலும் தமயந்தி, தான் விரும்பிய நளனுக்கே மாலைசூட்ட விரும்பினாள். எனினும், தேவர்கள் நளன் வடிவந் தாங்கி வந்து அவளுக்கு மயக்கத்தைச் செய்தபடியால் அவள் உண்மையான நளன் இன்னவன் என்று உணர முடியாதவளாயிருந்தாள். அதனால் அவள், "நமக்கு நன்மை தீமைகளை நம் பழவினைக்குத் தக்கவாறு ஏற்படுத்தக்கூடிய தெய்வமே நாயகனையும் நியமிக்கக்கூடிய தாதலின், அது செலுத்தியபடியே நாம் முன் நினைத்த நாயகனையே இப்போது தெரிவிக்குமாறு அதனையே வேண்டுவோம்" என்று விதிக்கடவுளைப் பிரார்த்தனை செய்தாள். எப்பொழுதும் குலமகளிர்க்குத் தீங்கு நேராதாதலால், "வீமன் றன் மெய்ம்மரபிற்செம்மை சேர்கன்னியானாகில், அன்னந்தான் சொன்னவனைக் கடிமாலை சூட்ட அருள்" என்று மேலும் அவள் தன் குலத்தின்மேல் ஆணையிட்டுக் கூறினாள் என்றபடி.

விதி-தெய்வகட்டளை; அதாவது மனிதர் முற்பவத்திற் செய்த வினைகளுக்குத் தக்கவாறு அவற்றின் பயனாக நன்மை தீமைகளை வகுத்து அவற்றை அவர்களிடம் அடையும்படி தெய்வம் செய்வது; இக்கட்டளை மனிதர்க்குத் தெய்வத்தால் விதிக்கப்படுவதாதலின் விதியெனப்பட்டது. இந்த விதியை ஏற்படுத்தக்கூடிய தெய்

வத்தையே இங்கு, 'விதியின் மன்னவன்' என்றார் ஆசிரியர். தேவ நியமிப்பு, பழவினையையுடைய உயிர்களிடம் சென்றடைதல் தவறா தாதலின், அவ்விதிக்கு, 'சூழ்' என்ற அடை மொழி கொடுக்கப் பட்டது. இனி, பதிவிரதைகளுக்கு நாயகனே தெய்வமாதலின், இங்குத் தமயந்தி தனக்கு நாயகனாகக் குறித்த நளனையே தெய்வ மாக நினைத்துத் தன் நோக்கம் நிறைவேறுமாறு கிருபை செய்யும் படி வேண்டினாளெனக் கொண்டு, "சூழ்விதியின் மன்னவனை" என்பதற்கு, "தான் நளனுக்கு மனைவியாகும்படி வந்தடைந்த வழியினாலே நளமகாராஜனைத் தனக்கு நாயகனாகவும் தெய்வமாக வும் மனத்தில் தியானித்து" என்று பொருள் கூறினும் அமையும். "குறில் வழி யத்தனி யைந்நொது முன் மெலி மிகலுமாம்" என்ற விதிப்படி மெய்பரப-மெய்ப்பரப என மெலிமிக்குப் புணர்ந்தது. செம்மை-நல்லொழுக்கத்திற்குப் பண்பாகு பெயர். கன்னி-அழியா வியல்லையுடையவள்; புருடர் தீண்டப்பெறாதவள். கடி-உரிச்சொல்; இஃதிங்கே கலியாணமென்ற பொருளில் வந்தது. சொன்னவனை-உருபுமயக்கம்; நான்கனுருபு இரண்டனுருபாக மயங்கி வந்தது. விதி வடசொல்; மனம்-மநஸ் என்ற வடமொழித் திரிபு.

தெய்வ கிருபையால் தமயந்தி சில குறிகளைக்கொண்டு
நளனை இன்னானென் றறிதல்.

153. கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு.

(இ-ள்) (மேற்கூறியபடி தெய்வத்தை வேண்டிய பின்னர், அத்தெய்வ கிருபையால்)நறு-நல்ல, (வாசனை பொருந்திய) தாமரை-செந்தாமரை மலரை, விரும்பும்-விரும்பி அதில் வீற்றிருக்கின்ற, நன்னுதலே-அழகிய நெற்றியை யுடையவளாகிய இலக்குமியையே, அன்னாள்-நிகர்த்தவளாகிய தமயந்தி, ஆங்கு-(அப்படி வேண்டிநின்ற) அவ்விடத்தில், (அந்த ஐவரில் ஒருவனுக்கு) கண் இமைத்தலால்-கண்கள் இமை கொட்டுதலாலும், அடிகள்-பாதங்கள், காசினியில்-பூமியில், தோய்தலால்-படிதலாலும், வண்ணம்-அழகு பொருந்திய, மலர்மாலை-பூமாலையானது, வாடுதலால்-வாட்டமடைவதாலும், எண்ணி-(இவற்றை நன்றாக) ஆலோசித்து, (இவன்தான் நளன் என்று) நளன் தன்னை-தான் விரும்பியிருந்த நளமகாராஜனை, அறிந்தாள் - தெரிந்துகொண்டாள்; எ-று.

தேவர்க்குக் கண்ணிமைத்தலும், கால் நிலந்தோய்தலும், மாலை வாடுதலுமில்லை; மனிதர்க் கிவையுண்டு. மனிதர்க்கும்,

தேவர்க்கும் இவ்வேறுபாடுண்டெனினும், தமயந்திக்கு முன்னே தோற்றுதிருந்து தெய்வத்தை வேண்டியபின் தோன்றிற்று. அதனால், அவள் அக்குணங்கள் இல்லாதவர்களைத் தேவர்களென்றும், அவைகளையுடையவனை மானிடனென்றும் உணர்ந்து, அக் குறிப்பினால் நளனை இன்னானென்று தெரிந்துகொண்டாள்.

இமைத்தலால், தோய்தலால், வாடுதலால் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. காசினி-காச்யபீ என்ற வடசொல் லின் சிதைவு; பூமி, ஒரு காலத்தில் கசியபமுனிவர்க்குப் பரசு ராமனால் தானஞ்செய்யப்பட்டது; அதனால் இப்பெயர் பெற்ற தென்க. இலக்குமியிருப்பது செந்தாமரையாதலின், தாமரை யென்பதற்குச் செந்தாமரை யென்று பொருளுரைக்கப் பட்டது. நன்னுதல்-பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டுதல்.

154. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

(இ-ள்) (மேற்கூறியபடி நளனைத் தெரிந்துகொண்டபின்பு) பொன்-இலக்குமியை நிகர்த்த தமயந்தி, விண் அரசர் எல்லாரும்-தேவலோகத்து மன்னர்களான (இந்திரன் முதலிய) தேவர்கள் யாவரும், வெள்கி-வெட்கத்தையடைந்து, மனம் சுளிக்க - மனம் வருந்தவும், கண் அகல்-இடம் அகன்ற, (அதாவது விசாலமான) ஞாலம்-பூமியிலுள்ள ஜனங்கள், களிகூர-சந்தோஷ மிகவும், மண் அரசர்-பூலோகத்து மன்னர்கள், தம்மனத்தே-தங்கள் மனத்திலே, வன்மாலை வலியமயக்கத்தை, சூட-கொள்ளவும், வயம்- வெற்றி பொருந்திய, வேந்தை-நளமகராஜனுக்கு, பொன்மாலை - அழகிய மலர்மாலையை, சூட்டினாள்-தோளில் இட்டாள்; [எ-று.]

தமயந்தி நளனுக்கு மாலைசூட்டினாள்; அதைக்கண்டு தேவர்கள் வெட்கி மனம் வருந்தினார்கள்; உலகத்தார் யாவரும் சந்தோஷ மடைந்தார்கள்; பூலோகத்து அரசர்களெல்லோரும் மனமயக்கங் கொண்டார்கள் என்பது இதன் கருத்து. தேவர்கள் தமயந்தியை ஏமாற்றியாவது மணம் புரிந்துகொள்ளவேண்டுமென்று நளனுருவம் பெற்று வந்திருந்தும் அவள் நளனையே தெரிந்து அவனுக்கு மாலை சூட்டியபடியால் வெட்கமுந் துக்கமுங் கொண்டார்கள்; உலகத் தார் நளனுக்குத் தக்க மனைவி வாய்த்தாளே என்பதைப்பற்றிச் சந்தோஷ மடைந்தார்கள். பூலோகத்தரசர்கள், 'நாம் தமயந்தியை விரும்பி வந்தும் அவள் நம்மை விரும்பவில்லையே' என்று நாண

மடைந்ததால் மனமயக்கம் பொருந்தினார்கள். நளன் தன் புஜத்தில் ஒருமாலை சூடியபொழுது மற்றையரசர்களும் தங்கள் அவயவமொன்றில் ஒரு மாலை சூட்டினார்கள் என்று ஒருவகைப் பரிகாசந் தோன்றச் சிலேடையாக "மன்னரசர் வன்மாலை தம்மனத்தே சூட" என்றார் ஆசிரியர். மால்-மயக்கம். ஐ-சாரியை.

களிக்க, களிகூர, சூட என்பன காரணகாரியப் பொருட்டில் வந்த செயவெனெச்சங்கள்; சூட்டினாள் என்ற வினைமுற்றோடு முடியும்; சூட்டினாள் என்பது காரணம்; களிக்க முதலியன அதனாலாம் காரியங்கள். ஞாலம்-இடவாகு பெயர். கூர என்ற வினையெச்சத்தில் கூர்-என்ற உரிச்சொல் பகுதி. வேந்தை-உருபு மயக்கம்; நான்கனுருபு இரண்டனுருபாக மயங்கி வந்தது. பொன்-உவமையாகுபெயர். பொன்மாலை என்பதைப் பொன்னாற் செய்த மாலையெனினும் அமையும். மன்மாலை யென்றும் பாடம்; அது சிறப்பன்று.

நளன் மாலைபெற்றவுடன் மற்றையரசர்கள்
முகம் வாடுதல்.

155. திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம் போய்
வெண்டாமரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது.

(இ-ள்.) ஒள்-பிரகாசம் பொருந்திய, தாரை-வலிமையையுடைய, கோ-மேன்மைபெற்ற, மாலை-மாலையை அணிந்த, வேலான்-வேலாயுதத்தைக் கரத்திற் றரித்த நளன், குலம்மாலை-(தான் பிறந்த) குலத்திற்கும் (புகுந்த) குலத்திற்கும் மாலைபோல அலங்காரஞ் செய்பவளான, வேல் - வேலாயுதம்போன்ற (கூரிய), கண்ணாள் - கண்களையுடையவளாகிய தமயந்தியினது, பூமாலை-(மணத்திற்குரிய) மலர்மாலையை, பெற்று இருந்தபோது - அடைந்திருந்த சமயத்தில், திண்தோள்-வலிமையான தோள்களையுடைய, வயம்-வெற்றி பொருந்திய, வேந்தர்-அரசர்களுடைய, செம்தாமரை முகம் - (இயல்பிற்) செந்தாமரை மலரைப்போல விளங்கிய முகங்கள், போய்-(அவ்வியல்பு)நீங்கி, வெள் தாமரை ஆய்-வெண்டாமரை மலர்போலாகி, வெளுத்த-வெண்மைநிறத்தை அடைந்தன; [எ-று.]

முன் செய்யுளிற் கூறியபடி மற்ற அரசர்கள், நளன் சுயம்வர மாலையைப் பெற்றது கண்டு, வெட்கி, மனமயக்கத்தை அடைந்து, பின்னர், அவ்வெட்கத்தால், முகம் வெளுத்துப்போயினர். நாணத்தால் முகம் வெளுத்தல் இயல்பாதலின், செந்தாமரை மலர் போலச் சிவந்த ஒளியுடன் பிரகாசித்த அரசர்களுடைய முகங்கள் வெட்கத்தை யடைந்த மாத்திரத்தில் வெளுப்படைந்து விட்டன.

அரசர்களுடைய முகங்கள் பலவாயினும் ஜாதி யொருமை பற்றி முகம் என ஒருமையாய் வந்தது. இங்ஙனம் வரினும், பன்மையே யாதலின், 'வெளுத்த,' என்ற பலவின்பால் முற்றைக் கொண்டது; இனி முகம் - பால்பகா வஃறிணைப் பெயராதலின் இங்ஙனம் பலவின்பால் முற்றைக்கொண்ட தெனினும் அமையும். தாரை-கூர்மையெனினும் அமையும். வேலுக்கு மாலைசூட்டி அதனைப் பூஜித்துக் கையிலெடுப்பது வீரர்களுடைய செய்கை; இங்ஙனம் வேலுக்கு மாலை சூடுதல் சிந்தாமணி முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளன; ஆதலின் இங்கு, 'மாலைவேல்' என்பதற்கு 'மாலையை அணிந்தவேல்' எனப் பொருள் கூறப்பட்டது. 'ஒண்டாரைக் கோமாலைவேல்' என்பதற்கு 'ஒள்ளிய கூர்மையை யுடைய வச்சிராயுதம்போன்ற இயல்பினையுடையவேல்' எனப் பொருள் கூறலுமொன்று; இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்து, கோ-வச்சிராயுதம், மாலை-இயல்பு. மாலைவேற்கண்ணாள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மாலையாகிய வேற் கண்ணாள் என விரியும். தாரை-தாரா என்ற வடசொற் றிரிபு. போது-பொழுது என்பதன் மரூஉ.

நளன் தமயந்தியோடு சுயம்வர மண்டபத்தினின்று புறப்படுதல்.

156. மல்லன் மறுகின் மடநா குடனாகச்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலா னளன்.

(இ-ள்.) நல்மாலை-நல்ல மாலையை அணிந்த, வேலான்-வேலையுடையவனாகிய, நளன்-நளமகாராஜன், மல்லல்—வளப்பம்பொருந்திய, மறுகில்—வீதியில், மடம்-இளமை பொருந்திய, நாகு-பசுவானது, உடன்ஆக-கூடவர, செல்லும்-நடக்கின்ற, மழவிடைபோல்-இளமையான விருஷபம் போல, செம்மாந்து-களிப்படைந்து, மெல் இயலாள்-மெல்லிய தன்மையுள்ள தமயந்தியினது, பொன்மாலை-அழகிய மாலையை, பெற்ற-சூடிய, தோளோடு-புயங்களுடனே, புறப்பட்டான்-அவ்விடத்தைவிட்டுச் செல்பவனாயினான்; [எ-று.]

இளங்காளையானது கன்னிப்பசுவுடனே வீதியில் இறுமாந்து செல்வதுபோல நளன் தமயந்தியினது மணமாலையைப் பெற்ற தோளுடனே, அவளும் உடன்வரக் களிப்படைந்து மற்ற அரசர்களுக்கு முன்னே மிக்க தலையெடுப்போடு புறப்பட்டான் என்பது இதன் கருத்து. ஒரு பசுக்கூட்டத்திலுள்ள இளம்பசுவை வலிமையும் இளமையு முள்ள காளையே தனக்குரிமையாகச் சேர்த்துக் கொண்டு இறுமாப்போடு மற்றையெருதுகளுக்கு முன்னிலையிற்

செல்லும்; அவ்வாறு செல்லினும், மற்றைப்பெருநதிகள் வன்மையற்றவைகளாதலின் ஒடுங்கிப் போயிருக்கும். ஆதலின், மற்ற அரசர்கள் ஒடுங்கி, முகம்வாடி யிருப்பத் தமயந்தியை மணமுடித்துக் களிப்புடன் சென்ற நளனுக்கு அவ் விளங்காளை உவமை கூறப்பட்டது.

நாகு-எருமை, சங்கு, நத்தை, பசு, மரை யிவற்றின் கன்னிப் பெண்ணை யுணர்த்தும் பொதுக்குண வாகுபெயர்; பின் மழவிடையென்றதனால் அதற்கேற்ப அது இளம்பசுவெனக் கொள்ளப்பட்டது; மழ-மழவு என்னும் பண்புப் பெயரின் விகாரம்; இஃதிளமை குறிக்கும் உரிச்சொல்லெனவும் படும். செம்மாந்து-இதில் செம்மா-பகுதி; இதன் செயவெனெச்சம்- செம்மாப்ப; செயினெச்சம் செம்மாப்பின், செம்மாந்தால். ஏமாந்து, இறுமாந்து முதலியவைகளுக்கும் இப்படியே கொள்க. ஓடு உருபு ஓர் விசேஷக் குறியான பொருளில் வந்தது; மாலையை அணிந்திருந்தது இங்கு, விசேஷம்; இஃது அடைமொழிப் பொருளென்று சொல்லப்படும். வேலான்நளன் - இருபெயரொட்டு.

தேவர்கள் திரும்பிச் செல்லும் வழியில்
கலிபுருஷனைக் காணுதல்.

157. வேலை பெறுவமுதம் வீமன் திருமடந்தை
மாலை பெறுதகலும் வானாடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கும்
இருங்கலியைக் கண்டா ரெதிர்.

(இ-ள்.) வேலை - திருப்பாற்கடலினால், பெறு-பெறமுடியாதவோர், அமுதம்-அமிருதம் போன்றவளான, வீமன் திருமடந்தை-வீமனது அழகிய மகளான தமயந்தியினுடைய, மாலை - மணமாலையை, பெறாது - அடையாமல், அகலும்-நீங்கிச் செல்கின்ற, வானாடர் - விண்ணாட்டினராகிய தேவர்கள், வேலை - கரையை, பொரும்-மோதுகின்ற, கலி-ஒலிக்கின்ற, நீர்-நீரையுடைய கடலாற் சூழப்பட்ட, ஞாலத்தை-பூமியிலுள்ளோரை, புல்நெறியில்-இழிவான வழியில், ஆக்கும்-செலுத்துகின்ற, இரும்-பெரிய, கலியை-கலிபுருஷனை, எதிர்-எதிரில், கண்டார்-பார்த்தார்கள்; [எ-று.]

நளனுருக்கொண்டு சுயம்வர மண்டபத்தில் வந்திருந்த தேவர்கள், தமயந்தி நளனுக்கே மாலை சூட்டிய துணர்ந்து வெட்கித் தம் மூலகத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்; அவ்வாறு செல்லும்போது வழியில், தமயந்தியின் மணமாலையைப் பெறவிரும்பி வந்த கலிபுருஷனைக் கண்டார்களென்பது இதன் கருத்து. பாற்கடலில் உண்டாகிய அமுது தேவர்களால் விரும்பப்பட்டு அவர்களிடமே சேர்ந்திருப்பது. தமயந்தி வேலையாற் பெறப்படாமல் வீமனாற் பெறப்

பட்டு நளனிடம் சேர்ந்த அமுது. ஆதலின், தமயந்தி அவ்வேலை யமுதினுஞ் சிறந்தவளாவாள்; தேவர்களையும் இவள் விரும்பா திருந்தமையே இவளுடைய சிறந்த தன்மையை விளக்கும். இதுபற்றியே, ஆசிரியர், 'வேலை பெறா அமுதம்' என்றார் தமயந்தியை. 'வேலைபெறா அமுதம் வீமன் திருமடந்தை' என்பதற்கு, 'வேலைபெறாதவளும் அமுதம் போன்றவளுமாகிய வீமன் பெற்ற இலக்குமி' எனப் பொருள் கூறினும் அமையும்; அங்ஙனம் கொள்ளுமிடத்து, அமுதம் என்றதற்குச் சிறப்புக் கூறினபடியே திருப்பாற்கடலிற் பிறந்த இலக்குமியினுஞ் சிறந்தவள் தமயந்தி யென்க.

மடந்தை-பெண்ணின் பெயர்; அஃதிங்கே மகளை யுணர்த்திற்று. வேலை-வேலா என்ற வடசொற்றிரிபு. நீர்-ஆகுபெயராய்க் கடலை யுணர்த்தும். ஞாலம் இடவாகுபெயர். கலிக்குப் பெருமை யாவது, உலகத்தவரை இழிவான வழியிற் செலுத்துதலாம். இருங்கலி என்பதற்குக் கரிய நிறமுடைய கலிபுருஷன் எனினும் அமையும். கலி-கலியுகத்துக்குத் தலைவன், பாவத்திற்குரிய தெய்வம், ஒழுக்கந் தவறுவோரை வருத்துபவன்; இவனைச் சனியினது அம்சமென்ப; இனிச் சனியெனவே கூறுதலு மொன்று; நைடதவுரையில் கலி யென்பதற்கு யாண்டும் சனியெனவே பொருள் கூறப்பட்டுளது.

நளனுக்குத் தமயந்தி மாலை சூட்டியவுடன், இந்திரன் அரசர்களை நளனோடு போர் செய்யும்படி தூண்டிவிடப் போர் நிகழ்ந்து, தேவரும், அரசரும் நளனுடன் யுத்தஞ்செய்து அவனுக்குத் தோற்ற வரலாறு நைடதத்திற் கூறப்பட்டுள்ளது. ஆசிரியர் இதில் விரிவஞ்சி அதனைக் கூறாது விடுத்தனர் போலும். முன்னோர் செய்யுளுரையில் போரைப் பற்றிய விஷயம் கூறப்பட்டிருக்கிறது; இவ்விஷயம் இந்நூலில் இல்லை யெனினும் நைடதம் முதலியவற்றில் இருப்பது கொண்டு அங்ஙன முரைத்தாம்.

கலி, தமயந்தியின் சுயம்வரத்துக்குச் செல்லுதலைக் கூறுதல்.

158. ஈங்குவர வென்னென் றிமையவர்தங் கோன்வினவத்
தீங்கு தருகலியுஞ் செப்பினான்—நீங்கள்
விருப்பான வீமன் திருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான்.

(இ-ள்.) ஈங்கு-இவ்விடத்தில், வரவு-நீவருதல், என் என்று-என்ன காரணமென்று, இமையவர் தம்-தேவர்களுடைய, கோன்-அரசனாகிய இந்திரன், வினவ-வினவ, தீங்குதரு-தீமையைக் கொடுக்கின்ற, கலி-கலிபுருஷன், நீங்கள் விருப்பான-நீங்கள் விரும்பிய, வீமன்-வீமனது, திருமடந்தையோடு-அழகிய பெண்ணாகிய தமயந்

தியுடனே, இருப்பான்-சேர்ந்திருத்தற்கு, (அதாவது அவளை மணஞ் செய்து அவளுடன் கூடியிருப்பதற்கு) யான் வருகின்றேன்-நான் வருகிறேன், (என்று) செப்பினான்-சொன்னான்; [எ-று.]

இந்திரன், 'இங்கு நீ வருதற்குக் காரணமியாது?' என்று வினவ, கலிபுருஷன் அவனையும், மற்றவர்களையும் நோக்கி, "நீங்கள் தமயந்தியை விரும்பிச் சுயம்வரத்துக்கு வந்ததுபோல நானும் அவளை விரும்பிச் சுயம்வரத்திற்கு வந்தேன்" என்றான் என்பது இதன் கருத்து.

வரவு-தொழிற்பெயர். இமையவர் தம் என்பதில் தம் சாரியை. கலியும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சப்பொருளது, செப்பு-தெலுங்கிலிருந்து வந்த திசைச் சொல். விருப்பு-விரும்பு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஆனவென்னும் பெயரெச்சத்தில், இன், என்ற இறந்தகால இடைநிலை முதல் தொக்கது. மடந்தையோடும்-என்பதில் உம்-அசை, இருப்பான்-வினையெச்சம்; பான்-வினையெச்ச விகுதி; இதுவே எதிர்காலங் காட்டும். என்று என்பது இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. நீங்கு-குவ் விகுதி பெற்ற பண்புப் பெயர். தருகலி-வினைத் தொகை. "குறியதன் கீழாக் குறுகலு மதனோ, டுகர மேற்றலு மியல்பு மாந்தூக்கின்" என்ற (நன். உயி-பு-22-ஆம் சூ.) விதிப்படி வினா என்பது வின எனக் குறுகி அதனோடு உகரமேற்று வினவு என்றாய் வினையெச்ச விகுதியாகிய அகரஞ் சேர்ந்து வினவ என்றாயது.

சுயம்வரத்தில் தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியதாக
இந்திரன் கலிபுருஷனுக்குக் கூறுதல்.

159. மன்னவரில் வைவே னளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான்—உன்னுடைய
உள்ளக் கருத்தை யொழித்தே குதியென்றான்
வெள்ளைத் தனியானை வேந்து.

[இ-ள்.] [மேற்கூறியபடி சொன்ன அக்கலியை நோக்கி,] வெள்ளை-வெண்மையான, தனி-ஒப்பற்ற, யானை-[ஐராவத மென்னும்] யானையை யுடையவனான, வேந்து-தேவர்க்கிறைவனென்னும் இந்திரன், மன்னவரில்-அரசர்களுள், வை-கூர்மைதங்கிய, வேல்-வேலாயுதத்தையுடைய, நளனே-நளமகாராஜனே, மதி-சந்திரன் போன்ற, வதனம்-முகத்தையுடையளாகிய, கன்னி-அழியாவியல்புள்ள பெண்ணென்னும் தமயந்தியினது, மணமாலை-கலியாணத்திற்குரிய மாலையை, கைக்கொண்டான்-புயங்களிற் கொண்டான், [ஆதலால்] உன்னுடைய - உனது, உள்ளக்கருத்தை - மனத்தின் எண்ணத்தை, ஒழித்து-நீக்கி, ஏகுதி-செல்வாயாக, என்றான்-என்று கூறினான்; [எ-று.]

தமயந்தியின் சுயம்வரம் முடிந்து அதில் நளனே தமயந்தியின் மணமாலையைப் பெற்றானாதலின், இனி நீ செல்வதிற் பயனில்லை; உனதெண்ணத்தை விடுத்து உனக்குரிய விடஞ் சேர்வாயாக என்று, இந்திரன் கூறினான் என்பது இதன் கருத்து.

வை-கூர்மையைக் குறித்தலால் இங்கு, உரிச்சொல். நளனே என்பதில் ஏகாரம் பிரிநிலைப் பொருளது. மதிவதனம்-உவமைத் தொகை. வதனம்-வடசொல். கன்னி-அழியா வியல்பை யுடையவள். கை இங்கே தோளை யுணர்த்திற்று, மாலை சூட்டப்பெற்றது அதுவே யாதலின். ஏகுதி-ஏவலொருமை முற்று; இ-விகுதி, த்-எழுத்துப் பேறு.

கலிபுருஷன், நளனையும், தமயந்தியையும் வருத்துவேன் என்று கூறுதல்.

160. விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசற் கீந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றே னென்றான் கொதித்து.

[இள்.] [அதுகேட்டுக் கலிபுருஷன்] கொதித்து-மனஸ்தாப மடைந்து, விண் அரசர்-வானுலகத்திறைவராகிய தேவர்கள், நிற்க-மணமாலை பெறாமல் அவமானமுற்று நிற்கும்படி, [செய்து அந்த] வெறிதேன்-வாசனையையும் தேனையுமுடைய, மணமாலை-கலியாணத் திற் குரியமாலையை, மண் அரசற்கு-பூவுலகத்தரசனாகிய நளனுக்கு, ஈந்த-கொடுத்த [அதாவது சூட்டிய], மடமாதின்-இளமை பொருந் திய பெண்ணாகிய தமயந்தியினது, எண்ணம்-பிரியமான நினைவை, கெடுக்கின்றேன்-நான் கெடுத்து விடுகிறேன், மற்று-பின்னரும், அவள் தன்-அவளுடைய, கேள்வனுக்கும்-கணவனாகிய அந்நளனுக் கும், கீழ்மை-தாழ்வான நிலைமையை, கொடுக்கின்றேன்-கொடுக் கிறேன், என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

தேவர்களையும் மதிக்காமல் தமயந்தி பூவுலகத்திலுள்ள ஓர் மன்னனுக்கு மாலை சூட்டியதனால், அவளுடைய விருப்பத்தைக் கெடுத்து, அவளால் விரும்பப்பட்ட அம்மன்னனையுந் தாழ்மைப் படுத்துகின்றே னென்று கூறினான் கலிபுருஷன் என்பது இதன் கருத்து.

வெறிதே என்றும் பாடம்; அங்ஙனங் கொள்ளின் 'விண்ணரசர் மாலை பெறாமல் வெறிதே நிற்க' என மாற்றிப் பொருளுரைக்க வேண்டும். இங்கு, 'மடமாது' என்பதற்குப் பேதைப்பெண் எனப் பொருள் கொண்டு, 'தமயந்தி உயர்வு தாழ்வறியாமல் மண்ணர சனுக்கு மாலை சூட்டியதனால் மிகவும் பேதை' என்று கலிபுருஷன் இகழ்ந்துரைத்தானெனக் கூறினும் அமையும். எண்ணம் தொழிற்

பெயர்; அம்-விகுதி. இங்கு எண்ணமாவது நளனுடன் கூடி வாழ்தலாம். கேள்வன்-கேண்மையை யுடையவன்; கேண்மை-நண்பு. கேள்வன் என்பதில், கேண்மையென்னும் பண்படியாகிய கேள்-பகுதி, அன்-விகுதி, வ்-பெயரிடைநிலை; சந்தியெனினுமாம். கெடுப்பேன், கொடுப்பேன் என எதிர்காலத்தில் வரத்தக்கவை. கெடுக்கின்றேன், கொடுக்கின்றேன் என நிகழ்காலத்தில் வந்தது விரைவு பற்றி வந்த காலவழுவமைதி. அவள் தன் என்பதில், தன் சாரியை, மற்று-பின்னென்னும் பொருளது.

நளன், தமயந்தி இவர்களுடைய குணத்திசயங்களை
இந்திரன் கலிக்குக் கூறிப்போதல்.

161. வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கண்
தூய்மையு மற்றவன் றோள்வலியும்—பூமா
நெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனான்
அடுங்கொற்ற வச்சிரத்தா னாங்கு.

[இ-ள்.] அடும்-பகைவரைக் கொல்லுகின்ற, கொற்றம்-வெற்றியையுடைய, வச்சிரத்தான் - வச்சிராயுதத்தையுடையவனாகிய இந்திரன், அவன்-அந்த நளனுடைய, வாய்மையும்-சத்தியத்தையும், செங்கோல்-செம்மையாகிய அரசாட்சியின், வளனும்-சிறப்பையும், மனத்தின் கண்-மனத்தினிடமாகவுள்ள, தூய்மையும்-பரிசுத்தத்தையும், தோள்வலியும் - புஜபலத்தையும், பூ-தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, மா-இலக்குமியை நிகர்த்தவளாகிய தமயந்தியினது, நெடுங்கற்பும்-நீண்ட (அதாவது அதிகரித்த) பதிவிரதாதருமத்தையும், ஆங்கு-அப்பொழுது, அவற்கு-அக்கலிபுருஷனுக்கு, நின்று-(சிறிது பொழுது எதிரில்) நின்று, உரைத்து-(விவரமாகச்) சொல்லி, போனான்-சென்றான்; [எ-று]

மேற்கூறியபடி கலிபுருஷன், தமயந்தியையும், நளனையும் வருத்துவேன் என்று கூறியதைக் கேட்ட-இந்திரன் அவ்விருவருடைய நற்குணங்களையும் அக்கலியினிடம் விவரமாக உரைத்துச் சென்றான், என்பது இதன் கருத்து. இதனால் இந்திரன் கலியை நோக்கி, "நீதி தவறி நடப்போரிடத்தில் மட்டுமே உன் சாமர்த்தியம் செல்லும்; இவர்கள் சத்திய முடையவர்களா யிருப்பதனால் இவர்களிடத்தில் உன் மிடுக்குச் செல்லாது" என்பதை விளக்கிக் காட்டினான் என்பது குறிப்பாகப் பெறப்படும்.

கோல்-ஆகுபெயராய் அரசாட்சியை உணர்த்திற்று. வளன்-வளம் என்பதன் போலி, "மகரவிறுதி யஃறிணைப்பெயரின், னகரமோடுறழா நடப்பனவுளவே" என்னும் (நன்-எழுத்தியல் 67 ஆம். சூ.) விதிபற்றி வந்தது. மனத்தின் கண் என்பதில், இன்-சாரியை, கண்-ஏழனுருபு, மா-இங்கு இலக்குமிக்குப் பெயராதலின் வட

சொல். கற்பு-கணவன்வழி நிற்கக் கற்றல்; கற்றல் என்பது கற்றலாலுண்டாம் ஒழுக்கத்தை யுணர்த்தும்.

கலிபுருஷன் நளனையும் தமயந்தியையும்
பிரிப்பே னென்றல்.

162. செருக்கதிர்வேற் கண்ணியுடன் தேர்வேந்தன் கூட
இருக்கத் தரியே னிவரைப்—பிரிக்க
உடனாக வென்று னுடனே பிறந்த
விடநாக மன்னான் வெகுண்டு.

(இ-ள்.) (இந்திரன் மேற்கூறியவாறு சொன்னதைக் கேட்டவுடனே மேலும் பொறாமை கொண்டு) உடனே பிறந்த-(பிறக்கும் பொழுது) கூடத்தோன்றிய, விடம்-விஷத்தையுடைய, நாகம் அன்னான்-சர்ப்பத்தைப் போன்றவனாகிய கலி, வெகுண்டு-கோபித்து, செரு-போர்செய்யவல்ல, வேல்-வேலாயுதத்தைப் போன்ற, கண்ணியுடன்-கண்களை யுடையவளாகிய தமயந்தியோடு, தேர்-இரதத்தையுடைய, வேந்தன்-நளமகாராஜன், கூடவிருக்க-ஒன்றாகக் கூடியிருக்க, தரியேன்-நான்மனம் பொறேன், (ஆதலால்) இவரை-இவர்களை, பிரிக்க-பிரிப்பதற்கு, உடன் ஆக-என்னுடன் நீயும் சேரக்கடவாய், என்றான்-இந்திரனை நோக்கிக் கூறினான்; [எ-று.]

நளன், தமயந்தி ஆகியவர்களின் நற்குணங்களை, இந்திரன் எடுத்துக்கூறக்கேட்ட கலிபுருஷன் மேலும் பொறாமைகொண்டு கோபமுற்று, இத்தகைய தம்பதிகளைக் கூடி வாழ வொட்டாமல் நான் செய்கிறேன்; நீயும் அதற்குதவி புரியவேண்டுமென்று இந்திரனை நோக்கிக் கூறினானென்பது இதன் கருத்து. துர்க்குணமுடையார்க்குப் பிறரது நற்செய்கைகளிலும் பொறாமை யுண்டாய், அவர்கள், அந்நல்லோர்க்கு நலம் புரியாமல் தீங்கே செய்ய நாடுவது உலகியற்கை. ஆதலின், கலிபுருஷனும் இங்கே இவர்களுக்குக் கேடு செய்ய நாடினான் என்பது பொருள்.

உடனே பிறந்த விடநாகமன்னான் என்ற உவமை பிறவியிலேயே கொடுமை வாய்ந்தவனென்பதை விளக்கும். மகளிர் கண் மிகக்கூரியதாய்-ஆடவரது நெஞ்சிற்பாய்ந்து அவரைத் தன் பத்திற்குள்ளாக்குவதாதலின், அதற்கு அக்குணமே வாய்ந்த வேலாயுதம் உவமையாகக் கூறப்பட்டது. கண்ணி-என்பதில் இ-பெண்பால் விகுதி. நாகம்-சந்தனமரத்தில் அல்லது மலையில் வாழ்வது. வெகுண்டு என்பதில், வெகுள்-பகுதி.

இதில் சூரியோதயங் கூறப்படுகின்றது.

163. வெங்கதிரோன் றானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாட் காண வருவான்போல்—செங்குமுதம்

வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நன்னெஞ்சில்
தீயடங்க ஏறினன் தேர்.

(இ-ள்.) வெம்-வெப்பமாகிய, கதிரோன் தானும் - கிரணங்களையுடைய சூரியனும், விதர்ப்பன்-விதர்ப்ப தேசத்துக் கதிபதியான வீமராஜனது, திருமடந்தை-அழகிய பெண்ணாகிய தமயந்தியின், மங்கலம்நாள்-திருக்கலியாணம் நடக்கும் தினத்தை, காண-பார்த்தற்கு, வருவான்போல்-வருகின்றவனைப்போல, செங்குமுதம்-சிவந்த அல்லிமலர், வாய் அடங்க-முகங்குவியவும், மன்னற்கும்-நளமகாராஜனுக்கும், வஞ்சிக்கும்-வஞ்சிக்கொடிபோன்ற தமயந்திக்கும், நல்நெஞ்சில்-எப்பொழுதும் நன்மையே பொருந்தியிருக்கின்ற மனத்திலே, (எழுந்த) தீ-காதல் வெப்பானது, அடங்க-தணியவும், தேர் ஏறினன்-தன் தேரின் மீதேறிப் புறப்பட்டான், (உதயமாயினன் என்றபடி;) [எ-று.]

சூரியனுக்கு அல்லி பகையாதலால் அவனுதயங்கண்டவுடனே அதுமுகங் குவிந்தது; அல்லி இரவில் சந்திரனைக் கண்டு மலர்தலும், பகலில் சூரிய வெப்பம் பட்டமாத்திரத்தில் குவிதலும் இயற்கை; வாயடங்க என்பதற்கு வாய் மூட என்றும் பொருள் கூறலாம்; சிறந்த வீரனொருவனைக் காணின் அவனுடைய எதிரிகள் வாயொடுங்குதல் இயற்கையாதலின், அல்லியும் தனக்கு விரோதியாகிய சூரியனைக் கண்டமாத்திரத்தில் வாயொடுங்கிற்றென்க. தமயந்தியும் நளனும் சுயம்வரத்தால் தம்பதிகளென நிச்சயிக்கப் பட்டார்களெனினும் மணமுடிக்கப் பெறுமையால் அன்றிரவு பிரிந்தே யிருந்தார்கள்; அதனால் அவ்விருவர் மனத்திலும் 'எப்பொழுது நாம் நெருங்கியிருக்கப் பெறுவோமோ' என்ற விருப்பம் மேலிட்டிருந்தது; அவ்விருப்ப மிகுதியால் மனத்தில் காதல்-வெப்பம் அதிகரித் திருந்தது; சூரியோதய மானவுடனே 'இன்று மணம் நடக்கும்; இனி நாம் சேர்ந்திருப்போம்' என்ற சந்தோஷ முண்டாயிற்று; அதனால் முன் ஏற்பட்டிருந்த காதல் வெப்பம் நீங்கிற்று. பிரிவுத் துயரானது மனத்தை வெதுப்பு மாதலின் அஃதிங்கே தீயாக உருவகஞ் செய்யப்பட்டது. சுயம்வரம் முடிந்தவுடன் இரவாயிற்று; அவ்விரவிற்றான் தேவர்கள் வழியில் கலிபுருஷனைக் கண்டு அவனோடு மேற்கூறியபடி வார்த்தையாடினார்கள். பின் எல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள். தமயந்தியுடன் சுயம்வர மண்டபத்தை விட்டுப் புறப்பட்ட நளன் தன்னுடைய வாசஸ்தானஞ் சேர்ந்தான்; தமயந்தி அந்தப்புரஞ் சேர்ந்தாள். அதன் மேல் அவ்விரவு நீங்கிச் சூரியோதயமாயிற்று. இங்ஙனம் இயற்கையாகச் சூரியன் உதித்ததைத் தமயந்தியின் திருமணங் காண உதித்ததாகக் காரணங் கற்பித்துக் கூறியது ஏதுத்தற்குறிப்பேற்றவணி.

திருமடந்தை என்பதை இலக்குமிபோன்ற பெண் என உரைப்பினும் பொருந்தும். குமுதம்-முதலாகுபெயர். வஞ்சி-ஒருவகை நீர்க்கொடி; மெல்லிதாகி ஓல்கித்துவண்டு, பணிந்து நிற்கு மியல்பினால் இது தமயந்திக்கு உவமையாயிற்று. மன்னற்கும், வஞ்சிக்கும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன. வாயடங்க, தீயடங்க என்பன வினையெச்சங்கள் இவற்றில் கண்ணும்மைகள் தொக்கன.

தமயந்திக்கு மணவலங்காரஞ் செய்தல்.

164. இன்னுயிர்க்கு நேரே இளமுறுவ லென்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல்—மென்மலரும்
சூட்டினார் சூட்டித் துடிசே ரிடையாளைப்
பூட்டினார் மின்னிமைக்கும் பூண்.

(இ-ள்.) (வண்ணமகளிர்) இளமுறுவல்-இவளுடைய புன்சிரிப்பொன்றே, இன் உயிர்க்கு-ஆடவர்களின் இனிய உயிர்க்கு, நேர்-சமமானதாகும், (அதாவது ஆடவர்கள் உயிரைப்போல விரும்பத் தக்கதாகும்) என்கின்ற-என்று எதிர்ப்பட்டோர் கூறுதற்குத் தகுதியான, (அப்புன்முறுவல் முதலிய அழகுகளைப் பெற்ற) பொன்-இலக்குமி போன்ற தமயந்தியினது, அழகை-வனப்பினை, தாமே-(அவளை அலங்கரித்தற் கேற்பட்ட) தாங்களே, புதைப்பார் போல்-மறைப்பவர்களைப்போன்று, துடி சேர்-உடுக்கையின் வடிவம் பொருந்தியிருக்கின்ற, இடையாளை-இடையினை யுடையவளாகிய அத்தமயந்திக்கு, மென்மலரும்-மெல்லிய மலர்மாலைகளையும், சூட்டினார்-அணிவித்தார்கள், சூட்டி-அங்ஙனம் அணிவித்து, (மேலும்) மின் இமைக்கும்-பிரகாசத்தை வீசுகின்ற, பூண்-ஆபரணங்களையும், பூட்டினார்-பூணுவித்தார்கள்;[எ-று]

தமயந்தியின் புன்சிரிப்பொன்றே ஆடவர்கள் உயிரைப்போல நினைத்து ஆவல் கொள்ளத்தக்கதாகு மென்றதனால், மற்ற அவயவங்களில் அவர்களுக்கேற்படும் ஆவலுக்கு அளவேயில்லை யென்பதாயிற்று. ஆகவே; அத்தமயந்தியினுடைய அவயவங்களெல்லாம் ஆடவர்க்கு மிகுந்த ஆவலை யுண்டாக்குமென்றும், அந்த ஆவலால் அவர்கள் அவ்வவயவங்களை மிகுதியாக நோக்குவார்களென்றும், அங்ஙனம் நோக்குவதால் தமயந்திக்குத் திருஷ்டி தோஷமுண்டாகுமென்றும் கருதி, அலங்காரஞ் செய்தற் கேற்பட்ட வண்ணமகளிர் தாங்களே அவ்வாறு செய்யாமல், மலர்களாலும், ஆபரணங்களாலும் அவளுடைய அழகை மறைத்தார்கள். அவர்கள் தமயந்திக்கு மலர்களையும், ஆபரணங்களையும் சூட்டி அலங்காரஞ் செய்ததையே இங்ஙனம் அழகை மறைத்ததாக ஆசிரியர் கூறினார். இங்ஙனம் கூறியது ஏதுத் தற்குறிப் பேற்றவணி யெனப்படும். இது

னால் தமயந்தியின் பேரழகு தொனிக்கும். 'பொன்னழகைத் தாமே, புதைப்பார்போல் மலரும் பூணும் சூட்டினார் பூட்டினார்' என்றதனால், இயற்கை யழகுள்ள அவளுக்கு மலரும், பூணும் அவசியமில்லை யென்பதும், அங்ஙனமிருப்ப அவர்கள் இவற்றைச் சூட்டியது மங்கலத்தின் பொருட்டென்பதும், அவ்வாறு செய்ததும் அழகுக்கழகு செய்தது போலாகு மென்பதும் பெறப்படும். ஆசிரியர் இங்குக் கூறியவாறே கம்பரும்,

"அமிழ்ினைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழமை யுடைத்து மாதோ"

எனக்கூறியிருத்தல் காண்க. இனி, 'இளமுறுவல் இன்னுயிர்க்கு நேர்' என்பதற்கு, 'புன்னகையொன்றே ஆடவரின் உயிரைக் கொள்வதற்குப் பொருந்தியதாகும்' எனப்பொருள் கொண்டு, இதுவே இத்தன்மை யுடையதாயிருக்கும்போது மற்ற அவயவங்கள் ஆடவரை என்ன பாடுபடுத்தமாட்டாவென்று, சிந்தித்து, ஆடவர்க்கிரங்கி, அவர்களின் உயிரைக் கொள்ளை கொள்ளா திருக்கும் பொருட்டு அவ்வண்ணமகளிர் அவற்றை மறைத்தனர் எனினும் அமையும். இளமுறுவல் என்பதை அன்மொழித் தொகையாகக் கொண்டு 'புன்சிரிப்பையுடைய தமயந்தி யொருத்தியே ஆடவருயிரைக் கொள்ளை கொள்ளுதற் கேற்றவள்' எனப் பொருள் கோடலு மொன்று.

'வண்ணமகளிர்' என்ற எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. வண்ணமகளிர் - அலங்காரஞ் செய்கின்ற பெண்கள்; வண்ணம்- அலங்காரம். நேரே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைப் பொருளது; இந்த ஏகாரத்தை முறுவலோடுங் கூட்டலாம்; அங்ஙனங் கூட்டியுரைக்குமிடத்து இதனை இழிவு சிறப்புப் பொருளதெனினும் அமையும். பொன் உவமையாகுபெயர். தாமே என்பதிலுள்ள ஏகாரம் உயர்வு சிறப்புப் பொருளது. போல், தற்குறிப்பேற்றத்தின் உருபாகிய இடைச்சொல். மலரும் என்பதிலுள்ள உம்மை எதிரது தழுவியது. பூண் என்பதில் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொக்கது. இடையாளை-உருபுமயக்கம்.

தமயந்திக்கும் நளனுக்கும் திருமணம்.

165. கனிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்
அணிமொழிக்கு மன்ன லவற்கும்—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றேவரு மோவ்வார் மகிழ்ந்து.

[இ-ள்.] கணி-சோதிட சாஸ்திரி, மொழிந்த - சொல்லிய, நாளில்-அந்த நல்ல நாளிலே, அணி மொழிக்கும்-அழகிய சொல்லை யுடைய தமயந்திக்கும், [வீமராஜன் முதலியோர்] கடிமணமும் செய்தார்-சிறந்த கலியாணத்தைச் செய்தார்கள், மற்ற எவரும் ஒவ்வார் [தங்களுக்குத் தாங்களே ஒப்பாவதன்றி] வேறே எவரும் நிகராகாத சிறப்பினையுடைய அவ்விருவரும், பணிமொழியார்-வணக்கமான சொற்களையுடைய சேடிமார், குற்றேவல் செய்ய-சிறிய ஏவற்றொழில்களைச் செய்துவர, மகிழ்ந்து-சந்தோஷித்து, கொழும் பொன் அறை-[தங்கட்குத் தங்குமிடமாக அமைக்கப்பட்டிருந்த] உயர்ந்த பொன்னாலாகிய அறையில், புக்கார்-சேர்ந்தார்கள்! [எ-று]

சோதிடன் கூறிய அந்நாளிலே-நளனுக்கும், தமயந்திக்கும் வீமன் முதலியோர் கலியாணஞ் செய்துவைக்க அவ்விருவரும் மகிழ்ச்சியடைந்து பணிவிடைக்காரிகள் குற்றேவல் செய்ய, தாங்கள் வசிப்பதற்கென் றேற்பட்டிருந்த பொன்னறையிற் சேர்ந்திருந்தார்கள் என்பது இதன் கருத்து. மேற்கூறியபடி தமயந்திக்கு அலங்காரஞ் செய்த நாளே சோதிடன் கூறிய நன்னாளாக அமைந்திருந்தபடியினாலே அந்நாளிலேயே மணம் நிறைவேறியது. கலியாணம் முடிந்தபின் தம்பதிகள் தனித்துச் சந்தோஷமாக வசிப்பதற்குத் தனியான அலங்கார மாளிகையை அவர்க்குரியார் சமைத்து அதில் வேண்டிய சௌகரியங்களையும் ஏற்படுத்துவது வழக்கம்; ஆதலின் தமயந்திக்கும், நளனுக்கும் அவ்வாறே பணிவிடைக்காரிகள் அமைந்த தனி மாளிகை ஏற்படுத்தப்பட்டிருந்த தென்க.

கணி-கணிப்பவன்; கணித்தல் - கிரகசஞ்சாரத்தைக் கொண்டு காலத்தைக் கணக்கிடுதல். மணமுஞ் செய்தார் என்பது சுயம்வரம் நடத்தியதன்றிக் கலியாணமுஞ் செய்தார் என்று பொருளாவதால் மணமுஞ் செய்தார் என்பதிலுள்ள உம்மை, இறந்தது தழுவியதாம். அணிமொழி-பண்புத்தொகையன்மொழி. குறுமை + ஏவல் = குற்றேவல்; பண்புப் பெயர் ஈறுபோய்த் தன்னொற்றிரட்டியது. கொழும் பொன் என்பதில் கொழுமை உயர்வை உணர்த்திற்று. அறை-வரையறுக்கப்பட்ட இடம். ஏவர்-ஏ என்னும் வினாவடியாகப் பிறந்த பலர்பாற் பெயர். அண்ணல்-பெருந்தன்மை; பெருமையிற் சிறந்தவன் எனினுமாம்.

நளன் மீதும், தமயந்திமீதும் மன்மதன்
பாணங்களை எவினானென்பது இதிற்
கூறப்படுகிறது.

166. செந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னாகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வேந்தியும்
நஞ்சுந் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சுந் தொடுத்தா னவன்.

[இ-ள்.] செந்திருவின்-செம்மையான இலக்குமியை நிகர்த்த தமயந்தியின், கொங்கையிலும் - தனங்களிலும், தேர்வேந்தன் - இரதத்தையுடைய அரசனாகிய நளனது, ஆகத்தும்-மார்பிலும், வந்து உருவ-வந்து பாய்ந்து ஊடுருவிச் செல்லும்படி, வார்சிலையை-நீண்ட கருப்புவில்லை, கால்வளைத்து-காலால் வளைத்து நாணேறிட்டு, வெந்தீயும் வெப்பமான நெருப்பையும், நஞ்சும் - விஷத்தையும், தொடுத்தனைய-தொடுத்தாற் போன்றிருக்கிற, நாமம்-அச்சத்தைச் செய்யும், மலர்வாளி - புஷ்ப பாணங்கள், அஞ்சும் - ஐந்தையும், அவன் - அப்பாணங்களையுடைய மன்மதன், தொடுத்தான் - எய்தான்; [எ-று.]

தமயந்தியும், நளனும் மணஞ்செய்து தனியறையைச் சேர்ந்தவுடனே அவர்களுக்குக் காதலை யுண்டாக்கும் பொருட்டு மன்மதன் இதுதான் தருணமென்றுணர்ந்து அவர்கள்மீது மலர்ப் பாணங்களை யேவினு னென்பது இதன் கருத்து. இவர்கள் தனியறையிற் சேர்ந்த மாத்திரத்தில் இவர்களிடத்தே ஆசை அதிகரிக்கும்; அதனால் தமயந்திக்குத் தனம் விம்மும்; நளனுக்கு மார்பு பூரிக்கும்; இச் செய்கைகள் மன்மத பாணத்தால் நிகழ்ந்தனவாகக் கூறப்படுதல் இயற்கை. மன்மதன் இச்செய்கைகளுக் குரிய தேவனாதலின் இவற்றை அவன்மேலேற்றியே கூறுவர் ஆன்றோர் ஆதலின், ஆசிரியரும் ஈண்டு இங்ஙனம் கூறினர்.

"நெஞ்சி லரவிந்த நீள்சூதங் கொங்கையிலே
துஞ்சும் விழியில் சோகமாம்—வஞ்சியர்தம்
சென்னியிலே முல்லை திகழ்நீல மல்குலிலே
அன்னவே ளெய்யுமியல் பாம்.''

என்று இரத்தினச் சுருக்கத்தில் மதன் கணையெய்யு மியல்பு கூறப்பட்டிருத்தலின், இங்குத் தமயந்தி கொங்கையில் மாமலர்க் கணையையும், நளன் மார்பில் தாமரை மலர்ப் பாணத்தையும் மன்மதன் எய்தானெனக் கொள்ளல் வேண்டும். மன்மத பாணங்கள் ஐந்தும் முன் ஓரிடத்திற் கூறப்பட்டுள்ளன. முழங்காலை வில் நடுவில் தாக்கி அதன் நுனியைக் கையாற் பிடித்திழுத்து வளைத்தல் இயல்பு ஆதலின், கால் வளைத்து என்பதற்குக் காலால் வளைத்து எனப் பொருள் கூறப்பட்டது. இனி, கால் என்பதை நுனியெனக் கொண்டு நுனியைப்பற்றி யிழுத்து வளைத்து எனப் பொருள் கூறினும் பொருந்தும். வெந்தீயும் நஞ்சும் தொடுத்தனைய என்பதற்குத் தீயையும் நஞ்சையும் சேர்த்துச் செய்தாற்போன்ற எனக் கூறினும் அமையும்.

செந்திரு-உவமையாகு பெயர். தொடுத்தது அனைய என்பது தொடுத்தனைய எனத் தொகுத்தலாயிற்று. அஞ்சும் என்பதிலுள்ள உம்மை முற்று.

நளன், தமயந்தி இவர்களின் சேர்க்கை
இதிற் கூறப்படுகின்றது.

167. ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
இருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று.

[இ-ள்.] [மேற்கூறியபடி காதல் மிக்க காலத்தில்] பொரு-போர் செய்யத்தக்க, வெம்கனற்கு-வெவ்விய நெருப்போடு, ஏயும்-நிகர்த்திருக்கின்ற, வேலானும் - வேலாயுதத்தையுடைய நளனும், காரிகையும்-அழகிய பெண்ணாகிய தமயந்தியும், ஒருவர் உடலில்-ஒருவருடைய தேகத்தில், ஒருவர் ஒதுங்கி-ஒருவர் ஒன்றித்து, இருவர் எனும்-இரண்டுபேர் என்கின்ற, தோற்றம்இன்றி-தோற்றமில்லாதபடி, புனற்கு-தண்ணீரில், புனல்கலந்தாற் போன்று-தண்ணீர் சேர்ந்ததை யொத்து, சேர்ந்தார்-கூடினார்கள்; [எ-று.]

தமயந்தியும், நளனும் மேற்கூறியபடி பொன்னறையிற் சேர்ந்திருந்தவுடன் காதல் மிகுந்து, நீரோடு நீர் கலந்தாற் போன்று, இருவரென்னும் பேதந்தோற்றாமல் ஈருடம்பும் ஒருடம்பாகும்படி கூடினார்கள் என்பது இதன் கருத்து. நீரோடு நீர் கலந்தாற் பேதமென்பதே தோற்றாது; அதேபோல் இவ்விருவரும் சேர்ந்தபோது பேதந்தோற்றா திருந்ததென்க. இதனால், அவ்விருவரின் மனமொத்த அன்புமிகுதி விளங்கும். இங்ஙனம் இருவரும் ஒன்றுபடுதலே இல்லற வின்பமாம்; "காத லிருவர் கருத்தொருமித் தாதரவுபட்டதே யின்பம்" என்றார் ஔவைப்பிராட்டியாரும்.

கனற்கு-உருபுமயக்கம்; மூன்றனுருபு நான்கனுருபாக மயங்கி வந்தது. காரிகை-அழகு; அஃதாகுபெயராய்ப் பெண்ணை யுணர்த்திற்று. புனற்கு-என்பது, ஏழனுருபு நான்கனுருபாக மயங்கிவந்த உருபுமயக்கமேயாம். புனற்கே-என்றதில், ஏ-அசை, ஒதுங்கல்-பதுங்கல்; இஃதிங்கே ஒன்றித்தற் பொருளில் வந்தது. ஒருவருடல்-ஆறன்தொகை.

இதில், தமயந்தியின் சேர்க்கை கூறப்படுகின்றது.

168. குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தன்
மழைமேலும் வாளோடி மீள - விழைமேலே
அல்லோடும் வேலா னகலத் தோடும்பொருதாள்
வல்லோடுங் கொங்கை மடுத்து.

(இ-ள்.) [முன்னுரைத்தவாறு இருவர்க்கும் சேர்க்கை நிகழ்ந்த காலத்தில்] குழைமேலும்-[காதுகளில் அணியப்பட்டிருக்கும்] குண்டலங்களின் மீதும், கோமான்-நளமகாராஜனுடைய, உயிர்

மேலும்-ஆவியின் மீதும், கூந்தல் மழைமேலும்-கூந்தலாகிய மேகத்தின் மீதும், வாள் ஓடிமீள-கண்ணாகிய வாளாயுதமானது ஓடி ஓடித் திரும்பும்படி, [அதனைச் சுழற்றி] விழைமேல்-[சேர்க்கையில் இளைக்காமல் ஜெயம்பெற வேண்டுமென்னும்] ஆசைப் பெருக்கத்தினால், அல்ஓடும்-இருளானது ஓடிப்போகத்தக்க, [பிரகாசமுள்ள] வேலான்-வேலாயுதத்தையுடைய நளமகாராஜனது, அகலத்தொடு-மார்புடனே, வல்லோடும்-சொக்கட்டான் காயானது [நாம் உருவத்தில் இவற்றிற் கிணையாகமாட்டோம் என்று நாணி] ஓடுகின்ற அழகுவாய்ந்த, கொங்கை-தனங்களை, மடுத்து-நெருக்கி, [அதாவது மோதவிட்டு] பொருதாள்-[தமயந்தி] யுத்தஞ் செய்தாள்; [எ-று.]

புணர்ச்சிவகைகளுள் இதில் பெண் புணர்ச்சி கூறப்பட்டது. தமயந்தி கூடலில் தான் இளைக்கா திருத்தலாகிய ஜெயத்தைப் பெற விரும்பியதனால், தன்னுடைய கண்கள், காதணிகளின் மேலும் நளனது பிராணன்மேலும், தனது கூந்தலின் மேலும் சென்று வரும்படி அவற்றை நாலாபக்கங்களிலும் சுழற்றி நளனது மார்பின் மேல் தன் கொங்கைகளழுந்தப் புல்லினாள் என்க. சேர்க்கைக் காலத்தில் காதல் மிகுதியால் கண்கள் பற்பல அவயவங்களையும், அணிகளையும் பார்த்தல் இயல்பு. அதனையே இங்கு ஆசிரியர் அவற்றின்மேல் ஓடி மீண்டதாகக் கூறினார். கண்கள் குழையின் மேற் செல்லுதலாவது அடிக்கடி அவற்றின் பக்கம் திரும்புதலாம். நளனின் உயிர்மேற் செல்லலாவது அடிக்கடி அவனைப் பார்த்து அவனுடைய ஆவியை ஆசையால் துடிக்கச் செய்தலாம். கூந்தல் மேற் செல்லுதலாவது, முன்பக்கமாகச் சோர்ந்து தொங்கும் கூந்தலில் அடிக்கடி பார்வை விழுதலாம். 'விழைமேலே' என்பதை, 'இழைமேலே' எனக்கொண்டு, 'ஆபரணங்களின் மீதும் ஓடிமீள' எனவும் பொருளுரைக்கலாம். இங்ஙனங் கொள்ளும்போது 'வாள் ஓடி இழைமேலே மீள' என மாற்றிக் கொள்ளவேண்டும். குழையை நோக்கியது போல ஆபரணங்களையும் அவள் நோக்கினாளென்க. இங்ஙனம் உண்டாகிய தமயந்தியின் சேர்க்கையை, யுத்தஞ்செய்ததாக ஆசிரியர் உருவகஞ் செய்தார். தமயந்தி கண்களாகிய வாளைக் குழையிலும், நளனுயிரிலும், தன் கூந்தலிலும் சென்று மீளும்படி சுழற்றி, யானைகளாகிய கொங்கைகளை நளன் மார்பில் மோதவிட்டு யுத்தஞ் செய்தாளென்க. வாளைச் சுற்றுங் காலத்தில் அது மேற்கூறிய இடங்களிலெல்லாம் சென்று மீளுதல் இயற்கை; உயிரின் மேற் செல்லுதலாவது அதனைக் கலங்கச் செய்தலாம். வீரர்கள் யுத்தஞ் செய்யுங்காலத்தில் வாளைச் சுழற்றி எதிரிகளின் மேல் யானைகளைப் பாயவிட்டுப் போர்புரிதல் வழக்கம்.

குழைமேல், உயிர்மேல், மழைமேல், இழைமேல் என்பவற்றிலுள்ள மேல் என்பது ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இழை

மேல் என்பதை, விழைமேல் எனக்கொள்ளும் போது மேல்-மூன்றும் வேற்றுமையில் வந்த சொல்லுருபு; கோய்மேற் படுத்தான், கோபத்தின் மேற் போயினான் என்பன போல் இது வந்ததெனக் கொள்க; விழைவு என்பது ஈறுகெட்டு விழை என நின்றது. ஓடும் என்பதில் உம்-அசை.

தமயந்தி சேர்க்கையால் நிகழ்ந்த குறி இதிற் கூறப்படுகின்றது.

169. வீரனக லச்சேறுவின் மீதோடிக் குங்குமத்தின்
ஈர விளவண்ட லிட்டதே—நேர்போருத
காராரு மேல்லோதிக் கன்னியவள் காதலெனும்
ஓராறு பாய வுடைந்து.

(இ-ள்.) (அங்ஙனம் கலந்தகாலத்தில்) நேர்பொருத-நேரே சேர்ந்த, கார் ஆரும்-கருமை நிறம் பொருந்திய, மெல்ஓதி-மென்மையான கூந்தலையுடைய, கன்னி அவள்-அழியாவியல்பை யுடையவளாகிய அத்தமயந்தியின், காதல் எனும்-ஆசை யென்கின்ற, ஓர் ஆறு - ஒரு நதியானது, பாய-பாய்வதனால், உடைந்து - மடையுடைந்து, வீரன் - வீரத்தன்மையையுடையவனாகிய நளனது, அகலம்-மார்பாகிய, சேறுவின் மீது-வயலில், ஓடி - அவ்வாற்றின் வெள்ளமானது விரைந்து சென்று, குங்குமத்தின்-குங்குமச்சாந்தின், ஈரம்-குளிர்ச்சி பொருந்திய, இளவண்டல்-மெல்லிய வண்டலை, இட்டது-உண்டாக்கிற்று; [எ-று.]

தமயந்தி அதிகரித்த ஆசையுடனே சேர்ந்தபடியால் அவள் மார்பிலணியப்பட்டிருந்த குங்குமச் சாந்து வேர்வையுடனே கலந்து இளகி நளன் மார்பிற் படிந்த தென்பது இதன் கருத்து. இதில் தமயந்தியின் காதல் ஆறாகவும், அக்காதன்மிகுதி வெள்ளமாகவும், குங்குமச்சேறு வண்டலாகவும், நளன்மார்பு கழனியாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. ஆற்றின் புது வெள்ளம் வயல்களிற் பாயுங்காலத்தில் வண்டல் படிவது இயற்கை. வண்டல்-இளஞ்சேறு, ஆற்று வெள்ளம் உடைதலாவது அணையைக்கடந்து செல்லல்; இங்கே காதல் வெள்ளத்திற்கு நாணம் அணையாயிருந்தது; அந்நாணத்தை மீறிச் சென்றது காதலென்க. இட்டதே என்பதில் ஏ-அசை.

இதில் நளன் சேர்க்கை கூறப்படுகின்றது.

170. கோங்கை முகங்குழையக் கூந்தன் மழைகுலையச்
சேங்கயற்க ணோடிச் சேவிதடவ—அங்கை
வளைபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளைபூசற் கோல்யானை வேந்து.

(இ-ள்.) பூசல்விளை-யுத்தத்தை யுண்டாக்குகின்ற, கொல்-எதிரிகளைக் கொல்லும், யானை - யானையை யுடைய, வேந்து-நள மகாராஜன், (தமயந்தியின்) கொங்கை முகம்-தனங்களின் முகங்கள், குழைய-கட்டு விட்டிளகவும், மழை கூந்தல்-மேகத்தை நிகர்த்த கூந்தலானது, குலைய - அவிழ்ந்துசோரவும், செம்கயல் - சிவந்த சேற்கெண்டையை யொத்த, கண் - கண்கள், ஓடி - பக்கங்களிற் பாய்ந்து, செவிதடவ-காதுகளைத் தீண்டவும், அம்கை-அழகிய கைகளிலணியப்பட்டுள்ள, வளை-வளையல்கள், பூசல்ஆட-ஒன்றோ டொன்று தாக்கவும், மடந்தையுடன்-அத்தமயந்தியாகிய பெண்ணுடனே, சேர்ந்தான்-கூடினான்;

இதில் ஆண்புணர்ச்சி கூறப்பட்டது. மேற்கூறிய சேர்க்கைக்குப் பின் நளன் தமயந்தியின் கொங்கை முகங்குழைய; கூந்தல் சோர, கண் விசாலித்துச் செவிகளின் பக்கத்திற் பாய்ந்து புரள, கைவளைகள் ஒன்றோடொன்று மோதியொலிப்ப அவளோடு சேர்ந்தானென்க. சேர்க்கைக் காலத்தில் கண் மிக மலர்ச்சியடையும்; அங்ஙனமாகவே அதன் ஒளி பக்கங்களிற் பாயும்; அதனையே இங்கு, 'கண் ஓடிச் செவிதடவ' என்றார் ஆசிரியர்.

குழைய, குலைய, தடவ, ஆட என்பன வினையெச்சங்கள். அங்கைவளை-ஏழன் உருபும் பயனும் தொக்க தொகை. கூந்தல்மழை யென்பது மழை கூந்தல் எனவும், விளைபூசல் என்பது பூசல்விளை எனவும் மாற்றப்பட்டன.

நளன் தமயந்தியுடனே அந்த நெடுங்காலம்
தங்கியிருந்ததை இதில் கூறப்படுகின்றது.

171. தைய றளிர்க்கரங்க டன்றடக்கை யாற்பற்றி
வையமுழுது மகிழ்தூங்கத்—துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாணுதலுந் தானும்
புணர்ந்தா னெடுங்காலம் புக்கு.

(இ-ள்.) (நளன்) தையல் - தமயந்தியாகிய பெண்ணினது, தளிர் - தளிரைப்போன்ற, கரங்கள் - கைகளை, தன்-தன்னுடைய, தடக்கையால்-விசாலம் பொருந்திய கைகளால், பற்றி-பிடித்து, வையம் முழுதும் - பூமியிலுள்ளவர்களெல்லோரிடத்திலும், மகிழ் தூங்க-சந்தோஷம் நிலைபெற்றிருக்க; துய்ய-பரிசுத்தமான, மணம்-கலியாணத்தை, முடித்ததற்பின் - முடித்த பிறகு, வாணுதலும் தானும்-ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளாகிய தமந்தியும் தானுமாக, புக்கு-தனக்கென்றேற்பட்டிருந்த விடத்திற் புகுந்து, (மேற்கூறியபடி மணமொத்த சேர்க்கைகள் நிகழ) நெடுங்காலம்-நீண்டகாலம், புணர்ந்தான்-(அவளோடு) கூடியிருந்தான்; [எ-று.]

கலியாணம் முடிந்தபிறகு நளன், தமயந்தியுடனே தனக் கென்றமைக்கப்பட்டிருந்த மாளிகையில் நெடுங்காலம் கூடியிருந்தா னென்பது இதன் கருத்து. நளன், தமயந்தியின் விருப்பால், மாமன் வீட்டில் இருக்கவேண்டிய தினங்களுக்கதிகமாகவே சில தினங்கள் தங்கியிருந்தான். அங்ஙனம் தங்கியிருந்த காலமே இங்கு நெடுங்காலமெனக் கூறப்பட்டது. இது காண்ட முடிவா தலின், இக் காண்டத்திலடங்கிய விஷயங்களை யெல்லாம் இதில் தொகுத்துக் கூறினார் ஆசிரியர்.

நளன் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. வையம்-இட வாகு பெயர், தூய்ய-குறிப்புப் பெயரெச்சம்; இதில் தூய்மை யென் னும் பண்படியின் மையீறு கெட்டது. ய்-பகுதி, அ-பெயரெச்ச விகுதி, யகாமிரட்டியது சந்தி; இனித் தூய்மை குறுகிற்றெனவுங் கொள்ளலாம், மணந்தான் என்பதில், தான்-அசை, வாணுதல் பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. நளன் வாணுதலும் தானும் புணர்ந்தான் என்பது, "திணைபால் பொருள் பல விரவின சிறப்பினும், மிகவினு மிழிபினு மொருமுடி பினவே" என்னும் (நன்-பொ - உள ஆம் சூ.) விதிப்படி ஆண்பாலும் பெண் பாலும் விரவி ஒரு முடிபேற்றதெனக் கொள்க; "தானுந்தேரும் பாகனும் வந்தென் னல லுண்டான்" என்பது இதற்குதாரணமாம்.

சுயம்வர காண்டம் முற்றுப் பெற்றது.

இரண்டாவது

கலிதொடர் காண்டம்

கலிதொடர் காண்டம் - கலிபுருஷன் நளனைத் தொடர்ந்த செய்தியைக் கூறும் பாகம்; காண்டம் என்பது கூட்டமாம்; அஃது இங்கே சரித்திரத்தின் ஒரு பாகத்தை உணர்த்திற்று. இதற்குச் சரித்திரத்தின் ஒரு பாகத்தை விளக்கும் செய்யுட்களின் கூட்டம் என்று பொருள் கொள்ளவேண்டும். காண்டம் வடசொல். கலி தொடர் எழுவாய்த்தொடர். (புணர்ச்சிவிதி-நன்-உயிர்-அ.) தொடர் காண்டம் - வினைத்தொகை: (புணர்ச்சிவிதி-நன்-உயிர்-கூக) கலி- வடமொழி உயர்திணைப் பெயர்.

காப்பு.

விஷ்ணு துதி.

1 முந்தை மறைநூன் முடியெனலாந் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம்—நந்தும்
புழைக்கைக்கு நேயப் பொதுவர்மக ளிர்க்கும்
அழைக்கைக்கு முன்சேல் லடி.

(இ-ள்) *நந்தும்-துன்பத்தையடைந்து கொண்டிருந்த, புழைக் கைக்கும்-யானைக்கும், நேயம்-அன்புள்ள, பொதுவர் மகளிர்க்கும்- இடையருடைய பெண்களுக்கும், அழைக்கைக்கு முன்-கூப்பிடுவ தற்கு முன்னாகவே, செல் அடி-சென்ற (விஷ்ணுவின்) பாதத்தை, முந்தை - முதன்மையான, மறைநூல்-வேதமாகிய நூலின், முடி எனலாம்-கிரீடம் என்று சொல்லலாம், தண்-குளிர்ச்சி பொருந்திய, குருகூர்-திருக் குருகூரில் உண்டாகிய, செந்தமிழ்-செவ்விய தமிழ் வடிவமாகிய, வேதம்-வேதத்தினது, சிரம்-சிரசு, எனலாம்-என்று சொல்லலாம், (அப்பேர்ப்பட்ட திருவடி எமக்குக் காவலாகும்;) [எ-று.]*

இக்காண்டம் இனிது முடிதற்பொருட்டு ஆசிரியர் கடவுள் வணக்கங் கூறினார். விஷ்ணு காத்தற்கடவுளாதலின் அவனுடைய துதி முதலிற் கூறப்பட்டது. புழைக்கை - கஜேந்திரனென்னும் யானை; இது முதலையினிடம் அகப்பட்டு வருந்தி ஆதிமூலமே யென்றழைத்தபோது விஷ்ணுவந்து இதனைக் காப்பாற்றினார்; இக் கதை பிரசித்தம். ஆயமாதர்களோடு விஷ்ணு கிருஷ்ணாவதார காலத்தில் திருவிளையாடல்களை நடத்தியதும் உலகறிந்த விஷயம். ஆகவே, இச்செய்யுளில், "புழைக்கைக்கும் நேயப்பொதுவர் மக

ளிர்க்கும் அழைக்கைக்கு முன்செல்அடி" என்றதனால் இங்குக் கூறியதெய்வம் அவ்விஷ்ணுவே என்பது பெறப்பட்டது. வேதத்தில் விஷ்ணுவினுடைய பாதப் பெருமை மிகுதியும் சொல்லப்படுவதனால் அவ்வாறு சொல்வதன் மூலம் அதில் விளங்கும் அப்பாதம். அதற்கு முடியாகக் கூறப்பட்டது. தமிழ் வேதத்திற்கும் இங்ஙனமே கொள்க. குருகூர்ச் செந்தமிழ் வேதமாவது:— குருகூரில் சடகோப முனிவரால் இயற்றப்பட்ட திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களாம்.

மறை-மறைவாயிருக்கத் தக்கது, இரகசியப் பொருள்க ளடங்கியது. மறைநூல்-இருபெயரொட்டு. புழைக்கை-துவாரம் பொருந்திய கை; அதாவது தும்பிக்கை; இஃதாகு பெயராய் இதனையுடைய யானையை உணர்த்திற்று. பொதுவர்-எவர்க்கும் பொதுவானவர் இழிகுலத்தார் முதல் உயர் குலத்தார் வரையிலுமுள்ள யாவர்க்கும் பால் நெய் முதலியவற்றை உதவிப் பொது உபகாரிகளா யிருத்தலினாலே இப்பெயர் பெற்றனர். அழைக்கை-தொழிற் பெயர் ஈற்றில், 'அப்பேர்ப்பட்ட திருவடி எமக்குக் காவலாகும்' என்பது இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது.

சிவன் துதி.

2. செக்கர் நெடுவானிற் றிங்க ணிலாத்துளும்பி
உக்க தெனச்சடைமே லும்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தா னெங்கட் குளன்.

[இ-ள்.] செக்கர்-சிவப்பான, நெடுவானில் நீண்ட ஆகாயத்தில், திங்கள்-சந்திரனுடைய, நிலா-சந்திரிகையானது, துளும்பி-ததும்பி, உக்கது என உதிர்ந்து வழிந்தோடியதுபோல, சடைமேல்-சிவந்த சடையின்மேலே, உம்பர் நீர்-உயர்ந்த நீரானது, மிக்கு ஒழுகும் - மிகுந்து பாய்ந்துகொண் டிருக்கின்ற, வெள்ளத்தான்-கங்கா வெள்ளத்தை யுடையவனும், வெள்ளிநெடும் கிரியான்-நீண்ட வெள்ளிமலையை யுடையவனும், மெய் அன்பர் - உண்மையான அன்பர்களுடைய, உள்ளத்தான் - மனத்தின் கண் எழுந்தருளி யிருப்பவனும் (ஆகிய சிவபெருமான்) எங்கட்கு - எங்களுக்கு, உளன் (இரக்ஷக கர்த்தாவாக) இருக்கின்றான்: [எ-று.]

இதில் சிவனை வணங்கினார் ஆசிரியர், இங்ஙனம் விஷ்ணுவையும் சிவனையும் சமத்துவமாகக் கருதி வணங்கியமையின் ஆசிரியர் மதவிகற்ப மில்லாதவரென்பது பெறப்படும். செவ்வானத்தில் சந்திரனுடைய காந்தியானது சிதறியதுபோலச் சிவபெருமானுடைய செஞ்சடையின்மீது கங்கை வெள்ளம் பாயுமெங்க. உம்

பர் நீர்-உயர்ந்தநீர்; உம்பர்-உயர்வு; ஆகவே ஆகாய கங்கையென்பது பெறப்படும். 'இரக்ஷக கர்த்தாவாக' என்பது இசை யெச்சம்.

நளன் தமயந்தியினுடனே தனது நாட்டிற்குத் தேரேறிப் புறப்பட்டுப் போதல்.

172. தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருநிழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினான் சென்று.

[இ-ள்] பவளம் கொழுந்து-பவளக்கொடியின் கொழுந்துகள், ஏறி-மேலேறி, செந்நெற்குலை-செம்மையான நெற் கதிரின்குலையை, சாய்க்கும்-சாயச்செய்கிற, நாடன்-நிடத நாட்டையுடையவனான நளன், தவளம்-வெண்ணிறமான, தனி-ஒப்பற்ற, குடையின்-தன்னுடைய குடையினது; வெள்நிழலும்-வெண்மையான நிழலும், தையல்-தமயந்தி யென்னும் பெண்ணினது, குவளை-நீலோற்பல மலர்போன்ற கண்களின், கருநிழலும்-கருமையான ஒளியும் கொள்ள-தன்னை உள்ளாக்கிக்கொண்டிருக்க, செழும்தேரில்-வேலைப்பாட்டின் வளமுள்ள இரதத்தின் மீது, ஏறினான்-ஏறித் தன் நாட்டிற்குப் புறப்பட்டுப் போனான்; [எ-று.]

நளன், முன்னே கூறியபடி கலியாண முடிந்தபின் சில தினங்கள்வரை குண்டினபுரத்தில் தமயந்தியுடனே தங்கி யிருந்து அதன்மேல் தன்னுடைய நகரமாகிய மாவிந்த நகரம் போய்ச் சேர்தற்கு, மாமன் முதலியோரிடம் விடைபெற்று மனைவியையும் அழைத்துக் கொண்டு தேரிலேறிப் புறப்பட்டுப் போயினான் என்பது இதன் கருத்து. 'தவளத் தனிக்குடையின் வெண்ணிழலும் தையல் குவளைக் கருநிழலும் கொள்ள, நாடன் தேரிலேறினான்' என்றதனால், 'நளன், ஒற்றை வெண் கொற்றக்குடை நிழலில், தமயந்தி மகிழ்ச்சியுடனே கண் திறந்து தன்னை நோக்கிக் கொண்டு வரப்புறப்பட்டா' னென்பது பெறப்படும். குடையொளியும், தமயந்தியின் கண்ணொளியும் நளனைச் சூழ்ந்துகொண்டிருந்தன. இதனாலேயே, 'வெண்ணிழலுங் கரு நிழலுங்கொள்ள' என்றார் ஆசிரியர். தமயந்தியின் கண்ணிழலும் நளன்மேற் பாய்ந்தது என்று சொன்னதனால் தமயந்தி உடன் செல்லும் விருப்ப மிகுதியால் கண்மலர்ந்து காதலனைப் பார்த்துக்கொண்டே சென்றாளென்பதும், அங்ஙனம் செல்வது கொண்டு பிறந்தகத்துச் சிறிதும் தனக்குப் பற்றிலாத் தன்மையைக் குறிப்பித்தாளென்பதும் பெறப்படும்.

பவளக் கொழுந்துகள், கடல்நீர் ஆற்றில் எதிரேறிப் பாயுங் காலத்தில் அதனால் ஒதுக்கப்பட்டவையென்க. குவளை-கண்ணுக்கு உவமையாகுபெயர். இது, நிறத்தாலும், வடிவாலும், மென்மை

யாலும், அழகாலும் உவமையாயிற்று. பவளம்-ப்ரவாளம் என்ற வடமொழித்திரிபு. தவளம்-வடசொல். சாய்க்கும்-செய்யுமென வாய்ப்பாட்டுப் பிறவினைப் பெயரெச்சம்; சாய்-பகுதி; இதுவே தன் வினைக்கும் பகுதியாம். ஏறினன் என்றதனால் புறப்பட்டுப் போயினமை தானே பெறப்படும்.

இது முதல் சில செய்யுட்களால் நளன் தமயந்திக்கு வழியிலுள்ள விநோதங்களைக் காட்டல் கூறப்படுகின்றது.

173. மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தடையப்
பொங்கி யெழுந்த பொறிவண்டு—கொங்கோ
டெதிர்கொண் டணைவனபோ லேங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண்.

[இ-ள்.] [மேற்கூறியவாறு புறப்பட்டுப் போகும்போது அங்கே மலர்கொய்த பெண்களையும் அவர்க்கெதிரே பறந்தொலித்த வண்டுகளையும் இன்னும் சிலவற்றையும் தமயந்திக்குச் சுட்டிக் காட்டி] முத்தின்-முத்துமாலையினுடைய, கதிர்கொண்ட-பிரகாசத்தைக் கொண்டிருக்கின்ற, பூண்-ஆபரணங்களையணிந்த, முலையாய்-தனங்களையுடைய தமயந்தியே! மங்கையர்கள்-பெண்கள், வாச மலர்-வாசனை தங்கிய மலர்களை, கொய்வான்-பறிக்கும்பொருட்டு, வந்து அடைய-இங்கே வந்துசேர, (அவர்களைக் கண்டு) பொங்கி எழுந்த-உயர்ந்து (அவர்களுக்கு முன்னே) எழுந்து பறந்த, பொறி வண்டு-புள்ளிகளுடைய வண்டுகள், கொங்கோடு-தேனோடு, எதிர் கொண்டு - எதிரிட்டு, அணைவனபோல் - சேர்கின்றவைபோல, ஏங்குவன-ஒலிக்கின்றவைகளை, காண்-பார்ப்பாயாக; [எ-று.]

நளனும் தமயந்தியும் செல்லும் வழியிலுள்ள சோலைகளில் ஸ்திரீகள் மலர்கொய்யச்செல்ல, அவர்களைக்கண்டு முகத்துக்கெதிரில் வாயிற்கொண்டதேனோடு பறந்த வண்டுகள், தேனைக் காணிக்கையாகக் கொண்டு எதிரே சென்றழைப்பன போன்றிருந்தன வென்க. மேலானவர் தம்மிடத்திற்கு வருங்காலத்தில் தாழ்ந்தோர் காணிக்கைகொண்டு எதிர் வந்து அவர்களை வரவேற்றல் இயல்பு. ஆதலின், சோலையிலுள்ள வண்டுகள் தங்களிடத்திற்கு வந்த, மேம்பட்டவர்களாகிய ஸ்திரீகளை மரியாதையுடன் வரவேற்றன வென்க. 'கொங்கோ டெதிர்கொண் டணைவனபோல்' என்பதற்கு 'அந்த ஸ்திரீகளின் தனங்களாகிய கொங்குமலர்களோடு எதிரிட்டுச் சேர்வன போல்' எனப்பொருள் கொண்டு, அவ்வண்டுகள் அவர்களுடைய தனங்களுக்கெதிரில் பறந்தொலித்தன எனினும் பொருந்தும். இப்பாட்டும் அடுத்த செய்யுளும் குளகமாதலின், இதிலுள்ள விஷயங்கள் அடுத்த செய்யுளில் "மின்னொடு வேற்கையான் காண் என்றான்." என முடியும்.

கொய்வான்-வினையெச்சம். 'வண்டுகள் எதிர் கொண்டணைவனபோல் ஏங்குவனகாண்' என இயைக்க. 'முத்தின் கதிர்கொண்ட பூண்' என்பதை, 'கதிர்கொண்ட முத்தின் பூண்,' எனவும் மாற்றிப் பொருளுரைக்கலாம்.

பெண்களுக்கு மரம் தாழ்தல் கூறப்படுகின்றது.

174. பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்
மின்னெடுவேற் கையான் விரைந்து.

[இ-ள்.] [இன்னும்] பாவையர்-பெண்களினுடைய கைதீண்ட-கரம் பட்டமாத்திரத்தில் [உலகத்தில்] பணியாதார்-வணங்காதவர்கள், யாவரே-எவர்கள்? பூவையர்-நாகணவாய்ப் பறவைகளுக்கு நிகராகிய பெண்கள், கை தீண்டலும்-கரங்களால் தொட்டவுடனே, அப்பூங்கொம்பு-அந்த மரத்திலுள்ள மலர்கள் நிறைந்த கிளைகள், மேவி-பொருந்தி [விரும்பி], அவர் பொன்னடியில் அந்தப் பெண்களுடைய அழகிய பாதங்களில், தாழ்ந்தன-வணங்கின; பூங்குழலாய்-மலர் சேர்ந்த கூந்தலையுடைய தமயந்தியே! விரைந்து சீக்கிரமாக, காண்-பார்க்கக் கடவாய், என்றான்-என்று கூறினான், மின்-ஒளிபொருந்திய, நெடுவேல்-நீண்ட வேலாயுதத்தைத் தாங்கிய, கையான்-கையையுடைய நளமகாராஜன்; [எ-று.]

சில மரங்கள் உத்தமஸ்திரீகளுக்குத் தாழ்ந்து மலர் கொடுத்தல் இயற்கை; அங்ஙனமே இங்குள்ள மரத்திலுள்ள கொம்பும் பெண்களுக்கு வணங்கி மலர் கொடுத்தது. இது மிகவும் அருமையான செய்கை யாதலின், நளன் இதனைத் தமயந்திக்கு முக்கியமானதாகக் காட்டினான். மலர்கொய்து தீர்ந்தவுடன் கிளைநிமிர்ந்து விடுமாதலின், அங்ஙனம் நிமிர்வதற்குள் அதனை அவளுக்குக் காட்ட நினைத்து 'விரைந்து காண்' எனக் கூறினான் என்பதாம்.

யாவரே என்பதிலுள்ள ஏகாரம் எதிர்மறைப் பொருளது; எல்லோரும் பணிவார் என்று பொருள்படும். தாழ்ந்தனவே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

வண்டோச்சி வேர்த்தவளைக் காட்டல்.

175. மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—செங்கையால்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து.

[இ-ள்.] [பின்னும் வண்டோச்சி மயங்கிய ஒருத்தியைக் காட்டி] வேந்து-நளமகாராஜன், மலர் கொய்வாள்-பூப்பறிப்பவளா

கிய, மங்கை ஒருத்தி-ஒரு பெண், வாள் முகத்தை-பிரகாசம் பொருந்திய தன் முகத்தை, பங்கயம் என்று எண்ணி-தாமரை மலரென்று நினைத்து, படி-[அம்முகத்தில்] மொய்க்கின்ற, வண்டை-வண்டினை, செங்கையால்-சிவந்தகையினால், காத்தாள்-படியவொட்டாமல் தூரத்திக் காவல் செய்தாள்; [அப்போது] அக்கைமலரை-அந்த மலரையொத்த கரத்தை, காந்தள் என-காந்தள் மலரென்று நினைத்து, [அவ்வண்டு அதிற் பாய்ந்தது] பாய்தலுமே-[அவ்வாறு] பாய்ந்தவுடனே, [அச்சங்கடத்தினால் அவள் வேர்த்தாள்] வேர்த்தாளை-[அவ்விதம்] வியர்த்த பெண்ணை, காண் என்றான்-பார்ப்பாயாக என்று கூறினான்; [எ-று.]

ஒரு பெண் மலர் கொய்யும்போது வண்டானது அவளுடைய முகத்தைத் தாமரை மலரென்று நினைத்து அதிற் பாய்ந்தது; அவள் உடனே சங்கடப்பட்டுத் தன் கையால் அதைத் தூரத்தினாள்; அப்போது அவ்வண்டு அக்கரத்தைக் காந்தள் மலரென்று நினைத்து அதில் மொய்த்தது. அவ்வாறாகவே அவள் ஒன்றும் செய்ய வியலாமல் மயங்கி முகம் வியர்த்தாள். இவ் விநோதத்தை நளன் தமயந்திக்குக் காட்டினனென்க. பெண்களின் முகம் தாமரை மலர்போலவும், கை காந்தள் மலர் போலவும் இருத்தல் இயல்பாதலின், இங்ஙனம் வண்டு மயங்குவதற் கேதுவாயிற்று.

'அவ்வண்டு அதிற் பாய்ந்தது' என்ற தொடரும், 'அச்சங்கடத்தினால் வேர்த்தாள்' என்பதும் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. வேந்து-அரசு; அஃதாகு பெயராய் அதனையுடையானை உணர்த்திற்று. வேர்த்தாள் என்பது வினையாலணையும் பெயர்.

ஒருத்தி தளிர் கொய்தலைக் காட்டல்

176. புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போல்
செல்லு மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போய்
அம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரிற் றேனே தெளி.

[இ-ள்.] [பின்னும் அங்குத் தளிர் கொய்வா ளொருத்தியைக் காட்டி] செம்மலரில் தேனே-சிவந்த மலரிலுள்ள தேன்போன்ற இனிமை பொருந்திய தமயந்தியே! புல்லும்-தன் துணையோடு சேர்ந்திருக்கின்ற, வரி-இரேகைகளையுடைய, வண்டை-வண்டினை, பார்த்து-கண்டு, புனம்-காட்டிலுள்ள, மயில்போல்-மயிலைப்போல, செல்லும்-மலர் கொய்தற்கு நடந்து செல்கின்ற, மடந்தை-பெண்ணொருத்தி, [நாம் செல்வதாலுண்டாம் அரவம் அவ்வண்டின் செவியுறு மேல் அதன் சேர்க்கைக் கிடையூறா மென்று கருதி அதன் சேர்க்கை கெடாதிருக்கும் பொருட்டு] சிலம்பு அவித்து-

தன்னுடைய பாதச் சிலம்பின் ஒலியையும் அடக்கிக் கொண்டு, மெல்லப் போய்-மிருதுவாகச் சென்று, அம்மலரைக் கொய்யாது-(வண்டு சேர்ந்திருந்ததாகிய,) அம்மலரையும் பறிக்காமல், அரும் தளிரை-மற்றொரு பக்கத்திலிருந்த அருமையான தளிர்களை, [கொய்தாள்] கொய்வாளை-அப்படிக் கொய்பவளை, தெளி-நீ பார்த்துத் தெரிந்து கொள்வாயாக; [எ-று.]

மலர் கொய்யச் சென்ற ஒருத்தி, தான் விரும்பிய மலரில் வண்டு துணையுடன் கூடியிருக்கக் கண்டு, அதன் கூட்டத்தைக் கலைத்தல் தோஷமென்று கருதிச் சந்தடி செய்யாமல்போய் அம் மலரைப் பறிக்காமல் பக்கத்திலிருந்த தளிரைப் பறித்தாள். அதனை நளன் தமயந்திக்குக் காட்டினனென்க. இதனால் கூட்டத்தைப் பிரித்தல் மகா தோஷமென்பது விளக்கப்பட்டது.

இச்செய்யுளிலிருந்து விஷயங்கள் தொடர்ந்து 184-ஞ் செய்யுளில் 'சேய் பாரென்றான்' என்று முடியும். இது முதல் அது வரை குளகமாம், 'செம்மலரில் தேன்' என்பதற்குச் 'சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமி' யெனினும் பொருந்தும், சிலம்பு-ஆகுபெயராய் ஒலிக்காயிற்று.

ஓர் ஆடவன், பெண்ணொருத்திக்கு மலர் சூட்டிய
விதம் இதிற் கூறப்படுகின்றது.

177. கோய்த மலரைக் கோடுங்கையி னலணைத்து
மோய்குழலிற் சூட்டுவான் முன்வந்து— தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினன் பாவையிடைக்
காதார மில்லா தறிந்து.

[இ-ள்.] [பின்னும் பெண்ணுக்கு மலர்சூடும் ஒருவனைக் காட்டி] கொய்த மலரை-பறித்த பூவை, கொடுங்கையினால்-உட்புறம் வளைவான கையினாலே, அணைத்து-சேர்த்துக்கொண்டுவந்து, [தனக்குரியவளுடைய] மொய்குழல்-நெருங்கிய கூந்தல் முடியில், சூட்டுவான்-சூட்டும் பொருட்டு, முன் வந்து-அவளுக்கெதிரில் வந்து, பாவை இடைக்கு-அப்பெண்ணினுடைய இடுப்பிற்கு, ஆதாரம் இல்லாது-ஆதாரமில்லாதிருப்பதை, அறிந்து-உணர்ந்து, [காம் கூந்தலில் இம்மலரைச் சூட்டினால் இதன் பாரத்தைச் சுமக்கலாற்றாது இடை முறிந்து போகுமென்று நிச்சயித்து] தையலாள்-அப்பெண்ணினுடைய, பாத அரவிந்தத்தே-தாமரை மலர்போன்ற பாதங்களிடையே, சூட்டினன்-சேர்த்தான் ஒருவன்; [எ-று.]

ஒருவன் மலர் கொய்து தன்பிரிய நாயகியின் கூந்தலிற் சூட்ட முன்னாலே சென்றான். அப்போது அவளுடைய தனங்களின் பாரமும், கூந்தலின் சுமையும் இத்தன்மையன வென்பது அவன்

புத்தியிற்பட்டது. அங்ஙனம் பட்டமாத்திரத்தில் அவன், "ஐயோ! இவற்றின் பாரமே அதிகம்; இப்பொழுதே இவற்றைத் தாங்க முடியாமல் இவளுடைய இடை தத்தளித்துக் கொண்டிருக்கின்றது; இத்தருணத்தில் நாம் மலர்ச் சுமையையும் கூந்தலில் ஏற்றிவிடுவோமானால் இடை நசித்தே போய்விடும்" என்றிரக்கங்கொண்டு அம்மலரைக் கூந்தலிற் சூட்டாமல் அவளுடைய பாதங்களிற் சூட்டினனென்க. அவன் இக்கருத்துக்கொண்டு இதனை இவ்விதம் சூட்டியதோடு, 'இம்மலர்கள் இவளுடைய பாதங்களில் வீழ்ந்து கிடக்கத் தக்கவை' எனக் கருதியும் சூட்டினனெனினும் அமையும்.

கொய்த-பெயரெச்சம். கொடுங்கை - வளைந்தகை; 'கொடுங்கையினலணைத்து' என்றதனாலேயே அதிகச் சுமையான மலரை அவன் கொண்டு வந்தானென்பது பெறப்படும். சூட்டுவான்-வினையெச்சம்; இதனை வினையாலணையும் பெயராகக்கொண்டு, 'மொய்குழலிற் சூட்டுவான் பாதாரவிந்தத்தே சூட்டினன்' எனக்கூறினும் அமையும். பாதம், அரவிந்தம்-வடமொழிகள். பாவை-உவமையாகுபெயர். 'இல்லாதது அறிந்து' என்பது 'இல்லாதறிந்து' எனத் தொகுத்தலாயிற்று. இதில் மொய் குழல் என்றது, முன்புறமாக வளைத்து முடியப்பட்டிருக்கும் ஒரு வகை மயிர்முடி என்க.

மணல் எக்கரின் விதம் கூறுதல்.

178. ஏற்ற முலையார்க் கிளைஞ ரிடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமால்—காற்றசைப்ப
உக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
எக்கர் மணல்மே லிசைந்து.

[இ-ள்.] (ஒரு மணல் எக்கரைக் காட்டி) காற்று அசைப்ப-வாயுவானது அசையச் செய்வதனாலே, உக்க-உதிர்ந்த, மலரோடு-மலர்களுடனே, வளை உகுத்த-சங்குகள் ஈன்ற, முத்தம்-முத்துக்கள், மேல் இசைந்து-மேலே பொருந்தி, எக்கர்-எக்கலான, மணல்-இம்மணற் பரப்பானது, ஏற்ற-தாங்கிய, முலையார்க்கு-தனங்களையுடைய பெண்களுக்கு, இளைஞர் - அவர்க்கேற்ற வாலிபர்கள், இடும்-உண்டாக்குகின்ற, புலவித்தோற்றம்-பிணக்கின் தோற்றத்தை விளக்கிக் காட்டுகின்ற, அமளிஎன - சயனத்தைபோல, தோற்றும்-விளங்கும்; [எ-று.]

ஆங்குள்ள மணற்பரப்பிலே, முன் நீர்பாய்ந்த காலத்தில் சங்குகள் ஈன்ற முத்துக்கள் பரவிக்கிடந்தன; அவற்றுடனே அவ்விடத்தில் நிற்கும் மரங்களின் மேலிருந்து காற்றினால் உதிர்ந்த மலர்கள் கலந்து சிதறிக் கிடந்தன. இந்தத் தோற்றமானது, இளைஞராகிய ஆடவரோடு பிணங்கிய பெண்கள் அணிந்திருந்த மலர்களையும் ஆபரணங்களையும் கோபத்தால் சிதறிய படுக்கை

யிடத்தைப் போன்றிருந்த தென்க. ஆடவர்களே, ஸ்திரீகளுக்குப் பிணக்கு வரும்படி செய்பவர்களாதலின், 'இளைஞரிடும்புலவி' என்றார் ஆசிரியர். புலவித்தோற்ற அமளியாவது அப்பிணக்கின் செய்கைகளைக் காட்டிக் கொண்டிருக்கும் சயனம் எனப் பொருள் கொள்ளவேண்டும்.

ஆல், ஏ-அசைகள். எக்கர்-வெள்ளம் பாயுங்காலத்தில் நீரால் ஒதுக்கப்படும் மணல்மேடு. 'உகுத்தவளை' என்பது, 'வளை உகுத்த' என மாற்றுக.

சோலை அழகு சொல்லல்.

179. அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக்—கலந்தொசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
அல்லென்ற சோலை அழகு.

[இ-ள்.] (சோலையைக் காட்டி) அல்-என்ற (சூரிய வெப்ப மில்லாமல் நெருங்கி யிருக்கின்ற காரணத்தால் இது) இருளே என்று பார்த்தோர் கூறிய, (சிறப்பு வாய்ந்த) சோலை அழகு-இந்தத் தோப்பின் அழகானது, அம்மலர்-அழகிய மலர்களுடைய, மேற் கொம்பு-மரங்களின் மேற் கிளையானது, அலர்ந்த-தன்னிடத்தே மலர்ந்த, மலர்சிந்தி - புஷ்பங்களைக் கீழே உதிர்த்துச் சிதறி, புலர்ந்து அசைந்து - வாடியசைய, பூ அணைமேல் - மலர்ச் சயனத்தின்மீது, புல்லிக்கலந்து-தழுவிப் புணர்ந்து, ஒசிந்த-இடை முதலியன தளர்ந்த, புல் என்ற - அற்பமான (அதாவது அழகு கெட்ட,) கோலத்து-வடிவத்தையுடைய, பூவையரைப் போன்றது-பெண்களை நிகர்த்திருக்கின்றது; [எ-று.]

புஷ்பசயனத்தில் பெண்கள் புருஷர்களுடனே கலந்து நீங்கிய சமயத்தில் கூந்தலிலும்,கழுத்திலும் அணியப்பட்டிருந்த மலர்மாலைகள் சிதைந்து கீழேவிழக் கூந்தல் சோர, இடை முதலியன மெலிந்து மேனியழகு கெட்டு நிற்பர். இவர்களைப்போலவே, சோலை, தன்னிடத்திலுள்ள மரக்கிளைகள் மலரை உதிர்த்து வாட்டமுற்றசைய அம்மலர்ப் பரப்பின்மேல் விளங்கியது. இதனால், இதற்கு அப் பெண்கள் உவமையாகக் கூறப்பட்டார்கள். கீழே உதிர்ந்து கிடந்த மலர்களின் பரப்பு மலர்ச்சயனம் போன்றிருந்தது. மலர்களை உதிர்த்துவிட்டு வாடியசைந்த மரக்கிளைகள் பெண்களின் அவயவங்களைப் போன்றிருந்தன. அவற்றையுடைய சோலை ஸ்திரீகளைப் போன்றது.

அசைய என்னும் செயவெ னெச்சம் அசைந்து எனச்செய்தெ னெச்சமாகத் திரிந்து வந்தது. புல்-அற்பம்; புல்லெனல்-அற்பமா யிருத்தல்; இஃதிங்கே சேர்க்கையினால் அலங்காரம் சிதைந்து நிற்கும் நிலையை உணர்த்தும். புல் என்ற என்பதற்கு அற்பமான எனப் பொருள் கொண்டதுபோல, அல் என்ற என்பதற்கு இருண்ட எனப் பொருள் கொள்ளலாம்.

ஆம்பற் பூமலர்ச்சி கூறப்படுகின்றது.

180. கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையால்
அங்கணைக்க வாய்நெகிழ்ந்த வாம்பற்பூ—கொங்கவிழ்தேன்
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார்.

[இ-ள்.] (மார்பில் அல்லிமலரைக் கையாற் சேர்த்தணைத்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டி) கொங்கைமுகத்து-தனங்களின் முன்பக்கத்திலே, அணைய - சேரும்படி, கூட்டி - சேர்த்து, கொடுங்கையால் - வளைந்த கையினாலே, அங்கு - அத் தடாகத்தினிடத்தே, அணைக்க-ஒரு பெண் அணைத்துக்கொள்ள, (அப்போது) வாய்நெகிழ்ந்த - முகம்மலர்ந்த, ஆம்பல் பூ-அல்லி மலரானது, (இருக்கும் நிலைமையை) கொங்குஅவிழ்-வாசனை வீசப் பெற்ற, தேன்-தேனை, வார்க்கின்ற-சிந்துகின்ற, கூந்தல்-கூந்தலை யுடைய அப் பெண்ணின், முகத்தை-சந்திரன்போன்ற வதனத்தை, மதியென்று-தனக்கு நேயமான சந்திரனென்று நினைத்து, பார்க்கின்றது என்னலாம்-அது நோக்குகின்றது என்றுரைக்கலாம், பார்-நீ பார்ப்பாயாக; [எ-று.]

தடாகத்திற் குளித்த ஒரு பெண் அல்லி மலரைக் கையா லணைத்து மார்போடு சேர்த்துக் கொண்டிருந்தாள்; அம்மலர் அவளுடைய முகத்துக்கு நேரே மலர்ந்து விளங்கிற்று. அப்படி அம்மலர் முகத்துக்கு நேரே யிருந்தது, அம்முகத்தைத் தனக்குச் சிநேகிதமாகிய சந்திரனென்று நினைத்துப் பார்ப்பது போன்றிருந் தது. அல்லி, சந்திரனைக் கண்டவுடன் செழித்து மலர்தல் இயற்கை யாகவே இங்ஙனம் உவமித்துக் கூறப்பட்டது.

வளைத்தணைக்கும் கையைக் கொடுங்கை எனல் மரபு; இன்னும் இது, குடங்கை யெனவும் வழங்குகின்றது; இதற்கு இவ்வளைந்த கை குடத்தை யணைக்கக் கூடியதா யிருத்தலின் குடங்கையெனப் பெயர்பெற்ற தென்க. தேன் வார்க்கின்ற கூந்தல்-இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அங்கு-அசை யென்னு மொன்று.

ஒரு பெண்ணைச் சிவனோடு உவமித்தல்.

181. கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மேல்
எய்தத் தனிவைத்த வேந்திழையாள்—வையத்தார்
உண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணனைப் போன்றனளே காண்.

[இ-ள்.] (குவளை மலரைக் கிழித்து நெற்றியிற் சேர்த்த ஒரு பெண்ணைக் காட்டி) கொய்த-தன்னாற் பறிக்கப்பட்ட, குவளை-நீலோற்பல மலரை, கிழித்து-சிறிதாகக் கிழித்தெடுத்து, குறுநுதல் மேல்-சிறிய நெற்றியின் மேல், எய்த-சேர்ந்திருக்கும்படி, தனி-தனியாக, வைத்த-சேர்த்த, ஏந்திழையாள்-தரித்த ஆபரணங்களை யுடையவளான அப்பெண், வையத்தார் - உலகத்திலுள்ளவர்கள், உண்ணா - உட்கொள்ள முடியாத, கடுவிடத்தை - கடுமையான விஷத்தை, உண்ட-முற்காலத்திலே உட்கொண்ட, ஒரு-ஒப்பற்ற, மூன்று கண்ணனை - மூன்று கண்களையுடைய சிவபெருமானை, போன்றனள்-நிகர்த்தனள், காண்-நீ பார்ப்பாயாக; [எ-று.]

நீரில் விளையாடிய ஒரு பெண் கருங்குவளை மலரைக் கிழித்து நெற்றியில் ஒட்ட வைத்தாள். அஃதொரு கண்ணைப்போ லமைந் திருந்தது. ஆகவே அவள் நெற்றியில் கண்ணையுடைய சிவ பெருமானைப் போன்று விளங்கினாள். இப் பாட்டிலும், முற் பாட் டிலும் நீர்ப்பூக் கொய்தல் சொல்லப்பட்டமையால் நீர் விளையாட் டுச் சொல்லியதாகும். வையம் என்பது எல்லா வுலகங்களையும் குறிக்கும். 'வையத்தார் உண்ணாக் கடுவிடத்தையுண்ட' என்று சொன்னதால் சிவபெருமான் எல்லோரினும் மேற்பட்டவரென்பது விளங்கும். இப்பெண் அவரைப் போன்றனள் என்றதனால் இவளும் பெண்களிற் சிறந்தாளென்ப.

ஏந்திழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி; இது ஈங்குப் பெண்பால் விகுதியோடு கூடி வந்தது.

நீர் விளையாடும் ஒரு பெண் செய்கை கூறப்படுகின்றது.

182. கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்—கெழுமியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல்.

[இ-ள்.] (அங்கே தாமரை மலரோடு முகத்தைச் சேர்த்த ஒரு பெண்ணைக்காட்டி இந்தப் பெண்) கொழுநன் - தன் நாயகன், கொழும் - கொழுமையான, தாரைநீர் - ஒழுக்காகப் பாய்கின்ற துருத்திநீரை, வீச-(மேலே) சிதற, கூசி-(அதனாலே) கூச்சமுற்று, கெழுமிய-தன்னோடுகூடிய, அக்கோமகற்கு-அந்த மேன்மையான

புருஷனிடத்தில், தான் நினைந்த-தான் எண்ணின, குற்றங்கள் அத்தனையும்-குற்றங்களெல்லா வற்றையும், பூமகட்கு-தாமரை மலரில் வாசஞ் செய்பவளாகிய இலக்குமிக்கு, சொல்லுவாள் போல்-கூறுகின்றவளைப்போல, செழுமுகத்தை-தன்னுடைய செழித்த முகத்தை, தாமரைக்கே-அந்த இலக்குமி குடியிருக்கும் தாமரை மலரினிடத்தே, சேர்த்தாள்-திருப்பி ஓட்டினாள்; [எ-று.]

நீர்விளையாடுங்காலத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் துருத்தியில் வாசனை நீரை நிரப்பி ஒருவர்மீதொருவர் பீச்சி விளையாடுவது வழக்கம். அப்படி விளையாடுங் காலத்தில் தன் புருஷன் முகத்தில் வீசிய நீரைத் தாங்கமாட்டாது ஒரு பெண் ஒதுங்கித் தாமரை மலரின் ஓரத்தில் தன் முகத்தைச் சாய்த்துச் சேர்த்தாள். அவள் அப்படிச் சேர்த்த விதமானது, தன் புருஷனிடத்தில் தான்கண்ட குறைகளை அத்தாமரை மலரில் இருக்கின்ற இலக்குமியிடம் முகத்தோடு முகம் வைத்துக் கூறுவது போன்றிருந்தது. தாமரை மலர் ஸ்திரீகளின் முகம் போன்றிருக்குமாதலாலும், இலக்குமிக்குரியதாதலாலும், அம்மிடத்தே இலக்குமியின் முகத்தைப் போலக் குறிக்கப் பட்டது. ஸ்திரீகள், தங்களுடைய கணவர்கள் தங்களுக்குச் செய்யும் குறைகளை உயிர்த் துணைவிகளிடம் சொல்லி மனதை ஆற்றிக்கொள்வது வழக்கம். இது, பிணக்குக் காலத்தில் புருஷர் மீது தோஷமல்லாத தோஷங் கற்பித்துக் கூறுவது. ஆதலின், இவளும் அங்ஙனம் கூறினளென்க.

தாரை-நீரொழுக்கு. தாமரைக்கு, கோமகற்கு என்பன உருபு மயக்கங்கள், 'இந்தப்பெண்' என்னும் எழுவாய் வருவித்துரைக்கப் பட்டது.

நீர்விளையாட்டில் மனைவியைக் காணாது
மயங்குவானைக் காட்டல்

183. பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த—மின்னுடைய
பூணு டிருமுகத்தைப் புண்டரிக மென்றயிர்த்துக்
காணு தயர்வானைக் காண்.

(இ-ள்.) (தன்மனைவியை நீரில் காணுமல் மயங்குமொருவனைக் காட்டி) பொன்-இலக்குமியை, உடைய - தமக்குச் சொந்தமாகவுடைய, வாசம் - வாசனை பொருந்திய, பொகுட்டு - கொட்டை பொருந்திய, மலர்-தாமரைமலர்கள், அலைய - அசைந்தாடும்படி, தன்னுடனே மூழ்கி-தன்னுடனே சேர்ந்து நீரில் அமிழ்ந்து; (பின்னர்) தனித்து எழுந்த-தனியாக நீரினின்றும் வெளியேறிய, மின் உடைய-பிரகாசமுள்ள, பூணாள்-ஆபரணங்களை யணிந்த தன் நாயகியின், திருமுகத்தை-அழகிய முகத்தை, புண்டரிகம் என்று-தாமரை

மலர் என்று, அயிர்த்து - சந்தேகங்கொண்டு, காணாது - அவளைக் காணாமல், அயர்வானை-வருந்துகின்ற இவனை, காண்-பார்ப்பாயாக; [எ-று.]

ஒருவன் நீர்விளையாடுங்காலத்தில், பக்கத்திலுள்ள தாமரை மலர்களெல்லாம் அசையும்படி தன் நாயகியோடு சேர்ந்து நீருக்குள்ளே மூழ்கினான். பின்னர், அந்நீரினின்றும் வெளியேறும்போது அவன் அவளை விட்டுப் பிரிந்து ஒரு பக்கத்தில் வெளியேறினான்; அப்பெண் மற்றொரு பக்கத்தில் தாமரை மலர்களுக்கிடையிலே தலையை நீட்டினாள். அப்போது அவளுடைய முகம் தாமரை மலர் போலவேயிருந்தது. அதனால் அவன் அதனைத் தாமரைப்பூ வென்றே நிச்சயித்துக்கொண்டு, தன்னுடைய மனைவி நீரை விட்டு வெளியேற வில்லையெனக்கருதி, 'நம் மனைவி ஏன் இன்னும் வெளி வரவில்லை' என்று மயங்கி வருந்தினான் என்பதாம்.

கூந்தலை முறுக்கும் ஒருத்தி நிலைமை
உரைக்கப்படுகின்றது.

184. சிறுக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கையான்
முறுக்குநெடு மூரிக் குழலும்—குறிக்கின்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
அரும்பாம் பணைமுலையா யாம்.

(இ-ள்.) (நீரில் மூழ்கி யெழுந்து கூந்தலிலுள்ள நீர் வடியும் பொருட்டு அதனைச் சேர்த்து முறுக்கிக்கொண்டு நின்ற ஒருத்தியைக் காட்டி) அரும்பு ஆம்-உருவத்தில் தாமரை யரும்பேயாகின்ற பணை-பருத்த, முலையாய்-தனங்களை யுடையவளே!' (இந்தப் பெண்ணினுடைய) சிறுக்கின்ற-சிறுத்து வருகின்ற, வாள் - ஒளி பொருந்திய, முகமும்-முகத்தையும், செங்காந்தள்-சிவந்த காந்தள் மலர்போன்ற, கையால் - கரத்தினாலே, முறுக்கும் (இப்போது) முறுக்கப்பட்ட, நெடு - நீட்சியான, மூரி-பெருமை பொருந்திய, குழலும்-கூந்தலையும், குறிக்கின்-குறித்து நோக்கினால், (இவ்விரண்டுஞ் சேர்ந்த தோற்றமானது) கரும்பாம்பு-இராகு வென்னும் கரிய பாம்பு, வெண்மதியை-வெண்மையான சந்திரனை, கைக்கொண்ட காட்சியாம்-பற்றிய தோற்றமாகும்; [எ-று.]

ஒரு பெண் நீர் விளையாடி வெளியேறியவுடன் நீர் வடியும் பொருட்டுக் கூந்தலை முறுக்கிப் பிழிந்தாள். அப்போது முறுக்கப் பட்டுத் திரண்டு கயிறு போலத் தொங்கிய கூந்தலின் பின்பாகமும், வட்டமாகப் பரவி முகத்தைச் சூழ்ந்திருக்கும் மேற்பாகமும் கரும் பாம்பாகிய இராகுவைப் போன்றிருந்தன. மேற்பாகம் பாம்பின் படம், கீழ்ப்பாகம் உடல்; அக்கூந்தலால் சூழப்பட்டிருக்கும் முகம் சந்திரனை நிகர்த்திருந்தது. ஆகவே இவ்விரண்டுங் கூடிய

தோற்றம் இராகு, சந்திரனை ஒரு பக்கத்தில் பற்றிக்கொண்டிருந்தது போல் விளங்கிற்று. கூந்தல் அதிகமாக வளர்ந்திருப்போர்க்கு முகம் சிறுத்திருப்பது இயற்கை. ஆதலின் 'நெடுமூரிக் குழலும்' என்றதற்கேற்பச், 'சிறுக்கின்ற வாண்முகமும்' என்று கூறினார் ஆசிரியர்.

குறித்தலாவது: இஃதின்னதாயிருக்கு மென்று யூகித்தல். அரும்பாம் என்பதற்கு, அரும்புதலாம். அதாவது உண்டாகி வளர்கின்ற என்றும் பொருளுரைக்கலாம். சிறுக்கின்ற, முறுக்கும் என்பன பெயரெச்சங்கள். முகமும், குழலும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன.

நீரில் மூழ்கிவரும் மற்றொருத்தியைக்
காட்டல்.

185. சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு.

(இ-ள்.) (புனலில் மூழ்கி யெழுந்து நெற்றியை மறைத்த கூந்தலைக் கையாலொதுக்கிக் கொண்டுவந்த பெண்ணொருத்தியைக் காட்டி) சோர்புனலில்-ஓடுகின்ற தண்ணீரில், மூழ்கி-குளித்து, எழுவாள்-எழுந்து வருகின்ற இப்பெண், சுடர்-பிரகாசம் பொருந்திய, நுதல்மேல்-நெற்றியின்மேல், (படிந்திருந்த) வார்-நீண்ட, குழலை-கூந்தலை, நீக்கி-கையால் ஒதுக்கிக்கொண்டு, வரும் தோற்றம்-வருகின்ற தோற்றமானது, விரைகொண்டு - விரும்புதலுற்று, எழுந்த-உதித்த, பிறை-இளஞ்சந்திரனது, மேகத்திடை-மேகத்தின் நடுவில், புரைகின்றது - வெளிப்படுகின்றதாகிய, பொற்பு என்னலாம்-அழகு என்று சொல்லலாம்; [எ-று.]

ஒரு பெண் நீரில் மூழ்கி யெழுந்த போது கூந்தல் நீரொழுக்கால் முன்பக்கமாகப் படிந்து முகத்தை மறைத்தது. அப்போதவள், நெற்றி தெரியும்படி கொஞ்சம் கூந்தலை ஒதுக்கித் தள்ளினாள்; அவ்வாறு தள்ளினமாத்திரத்தில் அக்கூந்தலுக்கு நடுவில் நெற்றியின் சிறிதுபாகந் தெரிந்தது. அப்படி விளங்கிய தோற்றம் சந்திரப்பிறை, மேகத்திலிருந்து வெளிப்படுவது போன்றிருந்தது என்பது இதன் கருத்து.

சோர்தல் - பாய்தல். எழுவாள் - வினையாலணையும் பெயர். விரைதல்-வேண்டுதல்; அஃதிங்கே விரும்புதற் பொருளில் வந்தது. புரைதல் - வெளிப்படுதல். 'என்னலாம் பொற்பு' என்பதை, 'பொற்புஎன்னலாம்' எனமாற்றுக.

மற்றொருத்தியின் விநோதச் செய்கை கூறல்.

186. பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டிற்
பெய்து முகமூன்று பெற்றாள்போல்—எய்த
வருவாளைப் பாரென்றான் மாற்றாரை வென்று
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய்.

(இ-ள்.) (இரண்டு தாமரை மலர்களைக் காதுகளிற் சேர்த்த ஒருத்தியைக் காட்டி) பொய்தல் - விளையாட்டிலே, கமலத்தின் போது இரண்டை-இரண்டு தாமரைப் புஷ்பங்களை, காது இரண்டில்-இரண்டு செவிகளில், பெய்து-அணிந்து கொண்டு, முகம் மூன்று - மூன்று முகங்களை, பெற்றாள் போல் - அடைந்தவளைப் போல, எய்த-நம்மோடு சேர்ந்து, வருவாளை-வருகின்ற இந்தப் பெண்ணை, பார்-பார்க்கக் கடவாய், என்றான்-என்று கூறினான், (யாரெனின்) மாற்றாரை-பகைவர்களை, வென்று-(வாள் வல்லமையினாலே) ஜெயித்து, (அங்ஙனம் ஜெயத்தை உண்டாக்கிய) செருவாளை-போருக்குரிய வாளாயுதத்தை, பார்த்து-நோக்கி, உவக்கும்-சந்தோஷிக்கின்ற, சேய்-இராஜ குமாரனாகிய அந்நளன்; [எ-று.]

176-ஆம் பாட்டிலிருந்து வந்த விஷயங்களைக் கூட்டி, இச்செய்யுளில் 'சேய் பார் என்றான்' என்பதனோடு முடிக்க.

ஒரு பெண், விளையாட்டின் பொருட்டு இரண்டு தாமரைமலர்களைப் பறித்து இரண்டு செவிகளிலும் தரித்துக்கொள்ள அவை அவளுடைய முகத்தின் இருமருங்கிலும் வேறு இரண்டு முகங்கள் போன்று விளங்கின. அதனால் அவள் மூன்று முகங்களைப் பெற்றாள் போன்று விளங்கினாள். வீரர்கள் யுத்தத்தில் ஜெயம் பெற்றபோது சந்தோஷித்து அவ்வெற்றிக்குக் காரணமாயிருந்த ஆயுதத்தை நோக்குதல் இயல்பு; ஆதலின், நளனையும், "மாற்றாரை வென்று, செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய்" என்றார் ஆசிரியர்.

எய்தி என்னும் செய்தெனெச்சம், எய்த எனச் செயவெனெச்சமாகத் திரிந்து வந்தது. இச்செய்யுள் 183-வதாக முன் அச்சுப் புத்தகங்களிற் சேர்க்கப்பட்டிருந்தது. எனினும் பொருண்முடிபு நாடி இதனை இங்குச்சேர்த்துக்கொள்ளப் பட்டது.

நீர்ப்பூ கொய்யும் ஒருத்தியைக் காட்டல்.

187. செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள்
முழுநீல மென்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேற்றடக்கை மன்.

[இ-ள்] (மேலும் செங்குவளை கொய்யப்போன ஒருத்தி அதனைக் கொய்யாமற் சென்றதைப் பார்த்து) வைஆரும்-கூர்மை பொருந்திய, வேல்-வேலாயுதத்தைத் தரித்த, தடக்கை-விசால மான கையையுடைய, மன்-நளமகாராஜன், (அவ்வாறு) செங்குவளை-செங்கழுநீர் மலரை, கொய்வாள்-பறிப்பாளாய், (தனக்கெதிரே யிருந்த அப்புஷ்பத்தின்மேல்) நோக்கு-தன்னுடைய கண்கள், செழுநீலம்-செழித்தநீலநிறத்தை, எறிப்ப - வீச, (அவ்வொளி பாய்ந்து அம்மலரும் நீலமலராகத் தோற்றியபடியினாலே அதனை) முழுநீலம் என்று-நிறைந்த நீலோற்பலமலரேயென்று, அயிர்த்து-சந்தேகித்து, முன்னர்-தனக்கெதிரிலிருந்த, கழுநீரை-அந்தச் செங்குவளைமலரை, கொய்யாது (இதுநாம் விரும்பிய செங்குவளை மலரன்று ஆதலால், இதனை நாம் பறிக்கக் கூடாது என்று) கொய் யாமல், போவாளை-போகின்ற அப்பெண்ணை, கோல் வளைக்கு-புள்ளிகளையுடைய வளையலை யணிந்த தமயந்திக்கு, காட்டினான்-நள மகாராஜன் காண்பித்தான்; [எ-று.]

ஒரு மாது, செங்கழுநீர்மலரைப் பறிக்க விரும்பி அதனி டத்தே சென்றாள். அப்போது அவளுடைய கருவிழிகளின் ஒளி அம்மலரின் மீதுபாய அந்நிறத்தால் அம்மலர் கருங்குவளை மலரைப் போல விளங்கிற்று. அதனால் அவள், அதனைக் கருங்குவளை மல ரென்றே நினைத்து 'இது நாம் விரும்பிய செங்கழுநீர் புஷ்பம் அன்று' எனப்பறிக்காமல் சென்றாள். இவ்விநோதத்தை நளன் தமயந்திக்குக் காட்டினான் என்க.

கொய்வாள்-முற்றெச்சம்; கொய்வாளாய்ப்போவாளை எனக் கூட்டவேண்டும். கோல்வளை-இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. கோல்-புள்ளி; இது வளையல்களின்மேல் அழகு செய்யும் பொருட்டு இடப்படும். நீலம்-குணவாகு பெயர்; நீலம் என்னும் நிறக்குணப் பெயர் அதனை யுடைய மலருக்காயிற்று.

நளனும், தமயந்தியும் கங்கையில்
நீராடுதல்.

188\. காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலனும்
வாவியு மாறுங் குடைந்தாடித்—தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
ஒழியா துறைந்தா ருவந்து.

[இ-ள்.] காவிபொரு-நீலோற்பலத்தை நிகர்த்த, நெடுங்கண்-நீண்டகண்களையுடைய, காதலியும் - நாயகியாகிய தமயந்தியும், காதலனும்-நாயகனாகிய நளனும், (மேற்கூறிய விநோதங்களைப் பார்த்துக்கொண்டே போய்ப் பூக்கொய்து) வாவியும்-குளங்களிலும்

ஆறும்-நதிகளிலும், குடைந்து-நீரை அசைத்து, ஆடி-நீரில்மூழ்கி விளையாடி, (பின்பு) கழியாத-நீங்காத, தேவின் சிந்தையுடன்-கடவுள் தியானத்தோடு, கங்கைநதி ஆடி-கங்கா வெள்ளத்தில் மூழ்கி, (அதனருகிலிருந்த வோர் சோலையில்) உவந்து-சந்தோஷித்து, ஒழியாது-நீங்காமல்; உறைந்தார்-தங்கினார்கள்; [எ-று.]

தமயந்தியும் நளனும் மேற்கூறியபடி பல விநோதங்களையும் பார்த்துக்கொண்டேபோய்ப் பூக்கொய்தல், நீர்விளையாடல் முதலிய வற்றையெல்லாம் செய்து முடிவாகக் கங்கையை அடைந்து அதில் ஸ்நானஞ் செய்து அதனருகிலுள்ள ஒரு சோலையில் தங்கினார் களென்பது இதன் கருத்து. வாவியும் ஆறும் வழியிலெதிர்ப்பட்டவைகள்; கங்காநதி மாவிந்த நகரத்தின் சமீபத்திலுள்ளது. 'தேவின் கழியாத சிந்தையுடன் கங்கை நதியாடி' என்றதனால், மற்றைய வாவி,நதி முதலியவற்றில் நீராடியது விளையாட்டின் பொருட்டென் பதும் கங்கையிலாடியது பக்தியின் பொருட்டென்பதும் பெறப்படும்.

வாவியும், ஆறும் ஏழாம் வேற்றுமைத் தொகைகள். நதியாடி-என்பதும் அதுவே. உறைந்தார்-உயர்திணைப் பலர்பால் வினை முற்று. பொரு உவமவுருபு. காதல்-ஆசை; அதனையுடையவன் காதலன்; அதன் பெண்பால் காதலி. தேவின் என்பதில் இன்-ஐந்தனுருபு; நீக்கப் பொருளது. தே-தெய்வத்தை யுணர்த்தும் ஓரெழுத் தொருமொழியாகிய பெயர்ச் சொல். சிந்தா, நதீ என்ற வடமொழிகள், ஆவீறு ஐயும், ஈ ஈறு இகரமும் ஆகிச் சிந்தை, நதி எனவந்தன.

பொழிற் சிறப்புக் கூறல்.

189. நறையொழுக வண்டுறையு நன்னகர்வாய் நாங்கள்
உறையு மிளமரக்கா வொக்கும்—இறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குற் றேமொழியாய் மென்முறுவற்
பொற்றொடியாய் மற்றிப் பொழில்.

[இ-ள்.] (மேற்கூடியபடி சோலையில் தங்கியவுடன் நளன் அச் சோலையைத் தமயந்திக்குக் காட்டி) இறை-பெருமை பொருந்திய, வளை-சங்குவளையல்களை யணிந்த, கை-கரங்களையும், சிற்றிடையாய்-சிறிய இடையினையுமுடையவளே!, பேர் அல்குல்-பெரிய அல்குலை யும், தே மொழியாய்-இனிமையான வசனங்களையும் உடையவளே!, மெல் முறுவல்-புன்சிரிப்பையும், பொற்றொடியாய்-பொன்னாலாகிய வளையலையுமணிந்தவளே!, இப்பொழில்-இந்தச் சோலையானது, நல் நகர்வாய்-நல்ல நகரத்திலே, நாங்கள்-நானும் என்னைச் சார்ந்த வர்களும், உறையும்-வசிப்பதாகிய, நறை ஒழுக-தேனானது வடிய,

வண்டு உறையும்-வண்டுகள் தங்குகின்ற, இளமரக்கா - இளமரங்கள் பொருந்திய சோலையை, ஒக்கும்-நிகர்க்கும். (என்று சொன்னான்) [எ-று.]

நளன் அந்தச் சோலையில் தங்கியவுடன், அது, தான் நகரத்தில் தன்னைச் சார்ந்தவர்களோடு விளையாடும் சோலை போன்றிருந்தபடியால் அதனை அதைப்போலவே இருக்கிறதென்று தமயந்திக்குக் காட்டினனென்க.

இப் பாட்டில் முடிபில்லா விடினும் சரித்திரத் தொடர்பை நோக்கி எழுவாயும் பயனிலையும் வருவித்துரைக்கப்பட்டன. நகர் வாய்-இதில் வாய் ஏழனுருபு. வண்டு உறையும், காங்கள் உறையும் என்பவற்றை இளமரக்கா என்பதனேடு கூட்டி முடிக்க. மற்று-அசை.

தமயந்தி பிணங்குதல்.

190. கன்னியர்தம் வேட்கையே போலுங் களிமழலை
தன்மணிவா யுள்ளே தடுமாற—மன்னவனே
இக்கடிகா நீங்க ளுறையு மிளமரக்கா
ஒக்குமதோ வென்று ளுயிர்த்து.

[இ-ள்.] (நளன் அவ்வாறு கூறக்கேட்டவுடனே) கன்னியர் தம் - மாதர்களினிடத் துண்டாகின்ற, வேட்கையே போலும் ஆசையையே நிகர்த்திருக்கின்ற, களி-களிப்பான, மழலை-குதலைச் சொற்கள், தன்-தன்னுடைய, மணி-அழகிய, வாயுள்ளே-வாயினிடமாக, தடுமாற-(பிணக்கினல்) தடுமாற்ற மடைய, உயிர்த்து-பெருமூச்சு விட்டு (நளனை நோக்கி) மன்னவனே-அரசனே! இக் கடிகா-இந்த வாசனை நிறைந்த சோலை, நீங்கள் உறையும்-நீங்கள் தங்கியிருக்கின்ற, இளமரக்கா-இள மரச்சோலையை, ஒக்குமதோ என்றாள். ஒத்திருக்கக் கூடியதோ என்று, (தமயந்தி) கூறினாள்; [எ-று.]

நளன், "இது, நாங்கள் நகரத்தில் விளையாடுகின்ற இளமரக்கா போன்றிருக்கின்றது" என்று கூறிய மாத்திரத்தில் 'அவனுக்கு அங்கே பல ஆசைநாயகிக ளிருப்பார்களென்றும், அவன் அவர்களோடு சேர்ந்து அச்சோலையில் விளையாடுவானென்றும் தமயந்தி நினைத்தாள்; அதனால் அவளுக்குப் பிணக்குண்டாயிற்று; பெருமூச்சு நிகழ்ந்தது. இப் பிணக்கினல் அவள் கோபித்து "இக் கடிகா நீங்களுறையு மிளமரக்கா ஒக்குமதோ" என்றாள். இனிக் கன்னியரின் வேட்கை மிகுதியே பிணக்காதலின், "கன்னியர் தம் வேட்கையே போலும்......ஒக்குமதோ வென்றாள்" என்பதற்கு, 'பெண்களின் காதல் மிகுதியா லேற்பட்ட பிணக்கே போலும்...... ஒத்திருக்கக் கூடியதோ வென்று கூறினாள்" எனப் பொருளுரைத்தலு மொன்று.

வாயுள்ளே என்பதில், உள்ளே-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. ஒக்குமதோ என்பதில், ஓகாரம் வியப்பும் கோபமும் தோன்ற நின்றது.

இதுவுமது.

191. தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன்மேல்
வெண்டரள மென்ன வியர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்றாள் கழன்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றான் கொடி.

[இ-ள்.] கழல்-வீரகண்டையைத் தரித்த, மன்னர்-அரசர்களுடைய, வெள்ளைக்குடை-வெள்ளை நிறமுள்ள குடையானது, சிவப்ப-(உதிரப்பெருக்கினால்) சிவப்பாகும்படி, நின்றான்-(யுத்த பூமியில்) நின்றவனாகிய வீமராஜனுடைய, கொடி-கொடிபோன்ற பெண்ணாகிய தமயந்தி, (மேற் கூறியபடி பிணங்கிக் கோபமொழி கூறியபின்பு) தொண்டைக்கனி-கொவ்வைக்கனி போன்ற, வாய்-வாயிலுள்ள உதடுகள், துடிப்ப-துடிக்கவும், சுடர்-பிரகாசம் பொருந்திய, நுதல்மேல்-நெற்றியின்மீது, வெண்தரளமென்ன-வெண்மை நிறமுற்ற முத்தைப்போன்ற, வியர்வு-வேர்வையானது, அரும்ப-உண்டாகவும், கெண்டை-கெண்டை மீனைப்போன்ற கண்களின், கடை-கடைப்பாகங்கள், சிவப்ப-சிவந்து போகவும், நின்றாள்-(கோபக்குறிப்போடு) நின்றாள்.

தமயந்தி, பிணங்கிக் கோபமொழி கூறியபின்பு இதழ் துடிக்கவும், நெற்றியிற் வியர்வரும்பவும், கடைக்கண் சிவப்பவும் கோபக்குறி காட்டி நின்றாளென்க. தமயந்தி, 'நளனுக்கு வேறு பெண்களின் சேர்க்கையிருக்கும்' என்று கருதியதால் அவளிடத்தே இத்தகைய கோபக்குறி உண்டாயிற்று. வீமராஜன் போர்க்களத்தில் நின்று யுத்தஞ் செய்யுங்காலத்தில் எதிரிகளுடைய குடைகளெல்லாம் இரத்தம் தெறித்துச் சிவப்பு நிறமுண்டாகும்படி செய்வான்; அதுபற்றியே ஆசிரியர், 'கழன் மன்னர் வெள்ளைக் குடை சிவப்ப நின்றான்' என்றார். இதனானே வீமராஜனது போர்த்திறம் விளங்கும்.

வாய்-இங்கு இதழ்களை யுணர்த்திற்று. கெண்டை-உவமையாகுபெயர். நின்றான் கொடி-ஆறாம் வேற்றுமைத் தொகை. கொடி-உவமையாகுபெயர். சிவப்ப-சிவ-பகுதி, செம்மை யென்னும் பண்படியின் விகாரமாம் சிவ-என்னும் பகுதியில் குச்சாரியை சேர்ந்து சிவக்க எனவும் வரும்; இப்பகுதி விகாரப்பட்டுச் செய்ய எனவும் வரும்.

இதுவுமது.

192. தங்கள் புலவித் தலையிற் றனித்திருந்த
மங்கை வதன மணியரங்கில்—அங்கண்

வடிகான்மேற் வால்வளைத்து வார்புருவ மென்னுங்
கொடியாடக் கண்டானோர் கூத்து.

[இ-ள்.] (மேலும்) தங்கள் - (தமயந்தியும் நளனுமாகிய) தங்களுடைய (அதாவது தங்களுக்கிடையில் நேர்ந்த), புலவித் தலையில்-ஊடலினால், தனித்து இருந்த-தனிப்பட்டிருந்த, மங்கை-தமயந்தியின், வதனம்-முகமாகிய, மணி அரங்கில்-அழகிய சபையில்; அம்-அழகிய, கண்-கண்ணாகிய, வடி-கூர்மையுள்ள, வாள்மேல்-வாளாயுதத்தின்மேல், கால்வளைத்து-கால்களை வளைத்து, வார்புருவம் என்னும்-நீண்ட புருவமென்கின்ற, கொடி—, ஓர் கூத்து-ஒரு கூத்தினை, ஆடக்கண்டான்-ஆடப்பார்த்தான். (நளன்); [எ-று.]

நளன், புலவியினால் தனித்திருந்த தமயந்தியின் முகமாகிய அரங்கில், கண்ணாகியவாளின் மேலேறிப் புருவமாகியகொடி ஒரு கூத்தாடக்கண்டானென்க. கழைக்கூத்தாடும் பெண்கள் வாளின் மேலேறியாடுதல் ஒருவகை ஆட்டம். இக்கூத்தாட்டத்தை இங்குப் புருவத்தின் மேலேற்றிக் கூறினார் ஆசிரியர். முகம் நாடக மேடையாகவும், கண் வாளாகவும், புருவம் பெண்ணாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. மேலும் தமயந்தி, கோபத்தினால் புருவத்தை நெறித்தாள். அச்செய்கையே இங்கு உருவகஞ் செய்து கூறப்பட்டது. பிணக்கு வந்தவுடன் தமயந்தி நளனை விட்டுச் சற்று விலகி இருந்தாள். அது பற்றியே ஆசிரியர், "புலவித்தலையிற் றனித்திருந்த" என்றார். மணி அரங்கில் என்பதற்கு இரத்தினங்களிற் கட்டப்பட்ட சபையெனினும் பொருந்தும். தலை ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு; இது மூன்றனுருபு வருமிடத்துமயங்கி வந்தது. கொடி-இது கொடியையும், சிலேடை வகையால் பெண்ணையும் உணர்த்தும்.

நளன், தமயந்தியின் பிணக்கைந் தீர்த்தல்.

193. சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டினான்—வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீல மாறாச் சிவப்பு.

(இ-ள்.) (இவ்வாறு தமயந்தி கோபித்தவுடனே) சில்-ஒலியையும், அரி-பருக்கைக் கற்களையும், (உடைய) கிண்கிணி சதங்கைகளை அணிந்த, மெல்-மெல்லிய, தெய்வமலர்-தாமரை மலரை நிகர்த்த, சீறடியை-சிறிய அவளுடைய பாதங்களை, தொல்லை-பழமையான, மணிமுடிமேல்-(தனது) இரத்தின கிரீடத்தின்மீது, சூட்டினான்-(அவளுடைய பிணக்குத்தீரும்படி நளன்) அணிந்தான், (அவ்வாறணிந்ததனால்) முழு-நிறைந்த, நீலம்-கரியநிறத்தை யுடைய, கோதை-கூந்தலையுடைய தமயந்தியின், முகத்தே-முகத்தினிட

மாக, (உள்ள) செழுநீலம் செழிப்பான குவளை மலர்களைப்போன்ற கண்கள், வல்லை-சீக்கிரமாக, சிவப்பு-(கோபத்தாலுண்டான)சிவப்பு நிறமானது, மாறு-மாறி, மலர்ந்த-மலர்ந்தன; [எ-று.]

தமயந்தி பிணக்கால் கோபித்தது கண்ட நளன், அக்கோபத்தைத் தணிக்கும்பொருட்டு உடனே அவளுடைய சிற்றடிகளை எடுத்துத் தன் கிரீடமீது சூட்டிப் பணிவைக்காட்டி, அவளிடத்தே, தான் அவ்வாறு கூறிய குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதனால் அவளுக் கேற்பட்ட கோபம் உடனே நீங்கிற்று. அவ்வாறு கோபம் நீங்கவே அதனாலேற்பட்டிருந்த கண் சிவப்பும் மாறிற்று. இங்ஙனம் குலமகனும் குலமகளும் கூடுங் காலத்தில் பெண்ணுக்குப் பிணக்குண்டாமாயின் அதனைத் தணித்தற்கு நாயகன் இத்தகைய செய்கைகளையும் செய்து அப்பிணக்கைத் தீர்த்துச் சேர்தல் இயல்பு. ஈதன்பின் மேலீட்டால் நிகழும் செய்கை என்க.

சில்-ஒலிக்குறிப்பு. தாமரை-இலக்குமி வாசஞ் செய்வதாதலின் தெய்வமலர் எனப்பட்டது. சிறுமை அடி, சீறடி யென்றுவது. நீலக்கோதை-பண்புத்தொகை யன்மொழி. செழுநீலம் என்பதில்-நீலம்-கண்ணுக்கு உவமையாகு பெயராய் வந்தது.

தமயந்தி ஊடல் தீர்ந்து நளனுடன்
கூடியது கூறப்படுகின்றது.

194. அங்கைவேன் மன்ன னகல மெனுஞ்செறுவில்
கொங்கையேர் பூட்டிக் குறுவியர்நீர்—அங்கடைத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு.

(இ-ள்.) (மேற்கூறியபடி பிணக்குத் தீர்ந்தவுடன்) கோதையரின்-எல்லாப் பெண்களினும், மேலான-சிறந்த, கொம்பு-பூங்கொம்புக் கொப்பாகிய தமயந்தி, அம்-அழகிய, கை-கரத்திலே, (தாங்கிய) வேல்-வேலாயுதத்தையுடைய, மன்னன்-நளமகாராஜனுடைய, அகலம் எனும்-மார்பு என்கின்ற, செறுவில்-வயலில், கொங்கை-தனங்களென்கின்ற, ஏர்பூட்டி-ஏரைக்கட்டி ஓட்டி, குறுவியர்-சிறிய வியர்வையாகிய, நீர்-நீரை, அங்கு-அவ்விடத்தில், அடைத்து-அடைத்துத் திருப்பிப் பாய்ச்சி, காதல்-ஆசையாகிய, வரம்பு-வரப்பை, ஒழுக்கி-ஒழுங்குசெய்து, காமம்-காமமாகிய, பயிர்-பயிரை, விளைத்தாள்-விளையும்படி செய்தனள்; [எ-று.]

தமயந்தி நளனுடைய மார்பென்னும் வயலிலே, தன் கொங்கையாகிய ஏரைநடத்தி, சிறுவியர்வையாகிய நீரைப்பாய்ச்சி, காதலாகிய வரப்பைத் திருத்திக் காமமாகிய பயிரை விளையச் செய்தா

ளென்க. தமயந்தி, தன்னுடைய கொங்கைகள் நளனுடைய மார்பிலே அழுந்தக் குறுவியர்வையுண்டாக, ஆசைமிகுந்து கூடி இன்பத்தையுண்டாக்கினுளென்பது இதன் கருத்து.

மார்பு வயலாகவும், கொங்கை ஏராகவும், வியர்வை நீர் தண்ணீராகவும், காதல் வரப்பாகவும், காமம் பயிராகவும் உருவகஞ் செய்யப்பட்டன. குறுமை, மையீறுகெட்டுக் குறு என நின்றது. அடைத்தல் வேறொருபக்கம் செல்லும் நீரை அணையிட்டுத் திருப்பிக் குறித்த விடத்திற் பாய்ச்சுதல். கொம்பு-தமயந்திக்கு உவமையாகு பெயர்.

நளனும், தமயந்தியும் கங்கையின்
அக்கரை சேர்தல்.

195. வேரி மழைத்துளிக்கு மேகக் கருங்கூந்தல்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்றான்—மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் கங்கைக் கரை.

(இ-ள்.) (அதன் மேல்) மூரி-பெரிய, திரை-தன்னுடைய அலைகள், மென்கிடங்கில்-(மாவிந்த நகரத்திற் கருகிலுள்ள) மென்மையான அகழியில், ஏற-ஏறிப்பாய, (அப்போது) சேல் ஏற (அதிலுள்ள) சேல் மீன்கள்-சிறிய நீர்ப் பரப்பில் பாய்ந்து திரிய, வாளை-வாளைமீன்கள், கரை யேறும்-(நிலைக்கொள்ள முடியாமல்) கரையில் பாய்கின்ற, கங்கைக் கரை-கங்கையாற்றின் அக்கரையை, (நளன்) வேரிமழை-தேன்மாரியை, துளிக்கும்-சொரிகின்ற, மேகம்-மேகத்தைப் போன்ற, கருங்கூந்தல்-கரிய கூந்தலைத்தலையுடைய, காரிகையும்-அழகுள்ள தமயந்தியும், தானும்-தானுமாக, போய்-(அக்கங்கையைக் கடந்து) சென்று, கண் உற்றான்-கண்டான்; [எ-று.]

நளன் தமயந்தியுடனே கங்கையைத் தாண்டி அக்கரை போய் மாவிந்த நகரத்தின் அருகில் சேர்ந்தான் என்பது இதன் கருத்து. முன், 'கங்கைநீராடி' என்றது கங்கையின் இக்கரையில் நீராடியதை; இப்போது சொன்னகரை கங்கையின் அக்கரை; இது, மாவிந்த நகரத்தின் அருகிலுள்ளது. "மூரித்திரை யேற மென்கிடங்கிற் சேலேற" என்றதனால் மாவிந்த நகரத்திலுள்ள அகழியில் கங்கை நீர் ஏறிப்பாயுமென்பதாயிற்று. அகழி, கங்கையினும் சிறிதாதலின், 'மென்கிடங்கு' என்பதில் மென்மை - சிறுமையை உணர்த்தும். மென்கிடங்கு-சிறிய நீரைக்கொள்ளும் அகழி. கங்கை வெள்ளத்தின் பெருமையை நோக்கி இது சிறிதெனப்பட்டது. சேல்-ஒருவகைக் கெண்டைமீன்; கண்ணுக்குவமை கூறப்படுவது. வாளை-வாள் போல் நீண்டிருக்கும் ஒருவகை மீன். சேல் சிறிது ஆதலின், சிறிது நீருள்ள விடத்திலேயே சஞ்சரிக்கும்; வாளை பெரிதாதலின்

ஆழமான நீரிலேயே சஞ்சரிக்கும். ஆதலின் கங்கை நீர் அகழியிற் பாய்ந்த போது சேல்கள் சிறிய நீர்ப்பரப்பில் ஏறிச் சென்றன; வாளைகள் ஆழ்ந்த நீரிலிருந்தபடியால் நிலைக்கொள்ள முடியாமல் தாவிக் கரையிற் பாய்ந்தன.

கூந்தலுக்குத் தேன் - சூடியமலர்களிலிருந்து வடிவதென்க. கூந்தலுக்கு மேகம் உவமை கூறப்பட்டதற் கேற்ப, மழை துளித்தல் கூறப்பட்டது. காரிகை - அழகு; அது பண்பாகுபெயராய் மாதை விளக்கிற்று. "நளன், தானும், காரிகையும் கண்ணுற்றான்" என்றது, ஆண்பாலும் பெண்பாலும் அடுக்கிச் சிறப்பினால் ஆண்பால் முடிபைக் கொண்டது. மேகம்-வடசொல்.

நளன், கங்கையின் அக்கரை சேர்ந்த பின்
தமயந்தியுடன், மாவிந்தநகரத்தருகுள்ள
ஒரு சோலையில் தங்குதல்.

196. சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியென—மாதரார்
ஐயுற்று நோக்கு மகன்பொழில்சென் றெய்தினான்
வையுற்ற வேற்றானை மன்.

(இ-ள்.) மேற்கூறியபடி கங்கையின் அக்கரை போய்ச் சேர்ந்தவுடன்) வைஉற்ற - கூர்மைபொருந்திய, வேல் - வேலாயுதத்தைத் தாங்கிய, தானை - சேனையையுடைய, மன் - நளமகாராஜன், சூதக்கனி - மாம்பழங்களின், ஊறல் - ரசத்தினை, ஏற்ற - ஏந்திய, சுருள்வாழை-சுருண்டவாழையின் குருத்திலைகளை, கோது இல்-குற்றமில்லாத, நறவு ஏற்கும்-மதுவை ஏந்திக் கொண்டிருக்கின்ற, குப்பி என்-குப்பிகளென்று, மாதரார்-பெண்கள், ஐயுற்று-சந்தேகங் கொண்டு, நோக்கும் - பார்க்கின்ற, அகன் பொழில் விசாலமான சோலையில், சென்று எய்தினான் - (தமயந்தியுடனே) போய்ச் சேர்ந்தான்; [எ-று.]

நளன் அதன்மேல், மாவிந்த நகரத்தருகிலுள்ள ஒரு விசாலமான சோலையிற் போய்ச்சேர்ந்தான் என்பது இதன் கருத்து. வாழைக்- குருத்துக்கள் மலர்ந்து தலைப்பக்கம் விரிந்திருக்கும்; அதற்குமேலே வளர்ந்திருக்கும் மாமரங்களின் கனிரசங்கள் வடிந்து அக்குருத்துக்களில் நிரம்பும், அப்படிக்கனிரசம் நிறைந்த அக்குருத்துக்கள் மது நிரப்பப்பட்ட குப்பிகள் போன்றிருக்கும், குப்பியாவது: தலைப்பக்கம் அகன்று மற்றப்பாகம் நீண்டிருக்கும் ஒருவகைக் கலம் இது மண்ணாலும் செம்பாலும் செய்யப்பட்டு வைத்திய முறைகளில் உபயோகப்படுவதுண்டு. இதில் மது முதலிய வற்றை நிரப்பி வைத்தலுமுண்டு.

ஊறல்-ஊறுவது. ஏற்ற-பெயரெச்சம். அகல் என்பது அகன் என வந்தது ஒருவகைப் போலி யெனக் கொள்ளப்படும்.

நளன் தமயந்திக்குத் தன் நகரத்தைக் காட்டுதல்.

197. வான்றோய நீண்டுயர்ந்த மாடக் கொடி நுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான்—வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையான்
நல்விளக்கே யெங்கள் நகர்.

(இ-ள்.) (அங்ஙனம் சோலையிற் றங்கிய அந்நளன், தன் நகரத்தைச் சுட்டிக்காட்டித் தமயந்தியினிடத்தில்) வான்-சிறந்த, தோன்றி-செங்காந்தள் மலர்கள், வில் ஒளி பொருந்திய, விளக்கே பூக்கும் விளக்கினது தன்மையையே உண்டாக்குகின்ற, (அதாவது காந்தள் மலர்கள், விளக்கைப் போல மலர்ந்திருக்கும் சிறப்பினை யுடைய) விதர்ப்பநாடு - விதர்ப்பதேசத்தை, ஆள் உடையான்-ஆட்சிபுரிகின்றவனை வீமராஜனது, நல்-நல்ல, விளக்கே - விளக்கைப் போலப் பிரகாசிக்கின்ற பெண்ணே, வான்தோய-ஆகாயத்தை அளாவும்படி, நீண்டு உயர்ந்த-நீட்சியாகி உயர்ந்திருக்கின்ற, மாடம்-மாளிகைகளிற் கட்டப்பட்டிருக்கும், கொடி-சீலைக் கொடிகள், நுடங்க-அசைந்தாட, தோன்றும்-காணப்படுகின்ற, இதடம்பதி-இந்த விசாலமாகிய நகரம், எங்கள் நகர்-எங்களுடைய மாவிந்தமென்னும் பதியாம் (என்று கூறினான்.) [எ-று.]

நளன் தமயந்தியுடன் சென்று மேற்கூறியபடி சோலையிற் றங்கியவுடனே, பக்கத்தில் காணப்பட்ட மாவிந்த நகரத்தைத் தன் பதி யென்று தமயந்திக்குக் காட்டினானென்பது இதன் கருத்து. விதர்ப்ப நாட்டில் செங்காந்தள் மலர்கள் எவ்விடத்தும் மலர்ந்து விளக்குகளைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அதனையே ஒரு சிறந்த வளமாக அந்நாட்டிற்கு ஆசிரியர் கூறினாரென்க. இனி, "வான்தோன்றி வில் விளக்கே பூக்கும்" என்பதற்கு, "ஆகாயத்தில் விளங்கிப் பிரகாசம் பொருந்திய விளக்குகள் காணப்படும்" என்று பொருள் கூறி 'அந்நாடு ஆகாயம்வரை உயர்ந்து பிரகாசிக்கும் விளக்குகளின் சிறப்பை யுடையதெனக் குறிப்பிடினும் அமையும்.

நீளல் நீட்டளவில் அதிகப்படல்; உயர்தல் மேலோங்குதல். மாடக்கொடி-ஆறும் வேற்றுமைத் தொகை. தான் இரண்டும் அசைகள். மற்று-அசை-தோன்றி-முதலாகு பெயர். விளக்கு-(பொருள்களை) விளங்கச் செய்வது; இது, தமயந்திக்கு உவமையாகுபெயர். எங்கள்-என்றது தனது முன்னோரை உளப்படுத்திய தன்மைப் பன்மை. ஆள்கை-விகுதி கெட்டு, ஆள்-ஆனது.

நளன், தமயந்தியுடன் சுகமாகப் பன்னிரண்டு
வருடங்கள்வரை வாழ்தல்.

198. பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுடன்
ஆறிரண்டாண் டெல்லை கழித்தா னடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ.

(இ-ள்.) (மேற்கூறியபடி சோலையிலிருந்து பின்பு தமயந்தியுடன் அரண்மனைக் கேகிச் சுகமாக வசித்து) அடையலரை-சத்துருக்களை, கூறு இரண்டா-(உடல் வேறு உயிர்வேறாகி) இரண்டு துண்டுகளாகும்படி, கொல் - கொல்லுகின்ற, யானை - யானையையுடைய, கோ - நளமகாராஜன், தையலுடன்-தமயந்தி யென்னும் பெண்ணுடனே, பொய்கையும் - குளங்களிலும், வாசம் - வாசனை பொருந்திய, பொழிலும்-தோட்டங்களிலும், எழில் - அழகுள்ள, அருவிச் செய்குன்றும்-அருவிகள் பொருந்தி யிருக்கின்ற கற்பித மலைகளிலும், ஆறும் - நதிகளிலும், திரிந்து - சஞ்சாரஞ் செய்து, ஆடி-விளையாடி, ஆறிரண்டு ஆண்டு எல்லை-பன்னிரண்டு வருஷ காலத்தை, கழித்தான்-(சந்தோஷமாகப்) போக்கினான்; [எ-று.]

நளன் தன் அரண்மனையிற் சேர்ந்து தமயந்தியுடனே வசித்துத் தினந்தோறும் பொய்கைகளிலும், சோலைகளிலும், செய்குன்றுகளிலும், ஆறுகளிலும் திரிந்து விளையாடிப் பன்னிரண்டு வருஷகாலம் வரை மிக்க சந்தோஷமாக வாழ்ந்திருந்தானென்க.

"கூறு இரண்டா" என்பதற்கு "உடல் இரு பிளவாகச் செய்து" எனப் பொருள் கூறினும் பொருந்தும். பொய்கையும், பொழிலும், செய்குன்றும், ஆறும் என்பவற்றில் 'இல்' என்னும் ஏழனுருபு தொக்கது செய்குன்று-செய்யப்பட்ட மலை; இது விளையாட்டின் பொருட்டு மனிதரால், மலையைப்போற் செய்யப்படுவது; இதில் அருவியும் ஏற்படுத்துவதுண்டு; அதனால், 'அருவிச் செய்குன்று' என்றார் ஆசிரியர். ஆறு-யாறு என்பதன் மரூஉ. ஆடி- என்பதற்கு, நீராடி எனப் பொருள் கொண்டால் அதைப் பொய்கைக்கும் ஆற்றுக்கும், திரிந்து என்பதைப் பொழிலுக்கும் செய்குன்றுக்கும் கொள்ளவேண்டும். ஆறிரண்டு ஆண்டு எல்லை-பண்புத் தொகைப் பன்மொழித் தொடர். அடையலர்-சேராதவர்; இது எதிர்மறை வினையாலணையும் பெயர்; இதில் அல்-எதிர்மறை யிடைநிலை.

தமயந்தி சந்ததிகளைப் பெறுதல்.

199. கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா னின்றெரிப்ப—ஞாலமென்னத்

தோன்றாத நுண்மருங்கு றேன்றச் சுரிகுழலாள்
ஈன்றாள் குழவி இரண்டு.

[இ-ள்] அப்படி வாழ்ந்திருக்கும் காலத்தில் மேற்கூறிய பன்னிரண்டு வருடங்களுக்குப்பின்) கோலநிறம்-அழகிய வண்ணமானது, விளர்ப்ப - வெளுப்படையவும், கொங்கை முகம்-தனக் காம்புகள், கருக-கருமையாகவும், மயிர்க்கால்-உரோமங்களின் அடிகளில், நீலநிறம்-நீலநிறமானது, நின்று-நிலைபெற்று, எறிப்ப-வீசவும், நூல் என்ன-நூலைப்போல, தோன்றாத (மெல்லிதாகிப் பார்ப்பவர் கண்களுக்கு) காணப்படாத, நுண்மருங்குல் - நுட்பம் பொருந்திய இடையானது, தோன்ற - (சற்றுப் பெரிதாகிப் பார்ப்பவர் கண்களுக்கு) வெளிப்படவும், (கருக்கொண்டிருந்து) சுரிகுழலாள் - சுருண்ட கூந்தலையுடைய தமயந்தியானவள், இரண்டு குழவி - இரண்டு குழந்தைகளை ஈன்றாள்-பெற்றாள்; [எ-று.]

கலியாணமாகிப் பன்னிரண்டு வருடங்கள் சென்ற பின்பு தமயந்தி இரண்டு குழந்தைகளைப் பெற்றாள் என்பது இதன் கருத்து. ஸ்திரீகள் கருக்கொண்டவுடன், நிறம் வெளுத்தலும், தனக்காம்புகள் மிகக் கறுத்தலும், மயிர்க்கால்கள் நீலநிறமடைதலும், இடை பருத்தலும் இயல்பு.

தோன்றாத நுண்மருங்குல் என்பது இடையின் மென்மையை விளக்கும். விளர்ப்ப, கருக, எறிப்ப, தோன்ற என்பன வினையெச்சங்கள்; இவற்றுள் எண்ணும்மைகள் தொக்கன. கோலம், நீலம் என்பன பண்புரிச் சொற்கள். நூலென்ன என்பதில், என்ன-உவமை யுருபு.

பன்னிரண்டு வருடமளவும் கலி, நளனைத் தொடர்வதற்குச்
சமயம் பார்த்திருந்தமை இதிற் கூறப்படுகின்றது.

200. ஆண்டிரண்டா றெல்லை யளவுந் திரிந்தேயும்
காண்டகைய வெங்கலியுங் காண்கிலான்—நீண்டபுகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோ னிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு.

[இ-ள்.] வெம் - கொடுமையே, காண்தகைய-தன்னிடத்திற் காணத்தக்க, கலியும்-கலிபுருஷனும், (முன்னே கூறியபடி நளனைத் தொடர்ந்து வருத்துதற்குச் சென்று நளனும் தமயந்தியும் சுகமாக வாழ்ந்து குழந்தைகளைப் பெற்றிருந்த அந்த) இரண்டு ஆறு ஆண்டு எல்லை அளவும்-பன்னிரண்டு வருட காலம் வரையிலும், திரிந்தேயும்-(அந்நளன் சென்ற விடங்களுக்கெல்லாம் சென்று) அலைந்து கொண்டிருந்தும், (அவனைப் பற்றுவதற்கு) நீண்ட புகழ்-அதிகரித்த கீர்த்தியையுடைய, செம் நெறியால்-செம்மையான ஒழுக்கத்தினால்,

பார்காத்த, பூமியைக் காப்பாற்றி அரசு செய்து வந்த, செங்கோல்-சாயாத கோலையுடைய, நிலவேந்தன் தன்-பூமிக்குரியவனாகிய நள மகாராஜனுடைய, நெறியால்-ஒழுங்கான நடக்கையினாலே, வேறு ஓர் தவறு-வேறே யாதொரு குற்றத்தையும், காண்கிலான்-காண முடியாதவனாயினான் (அதாவது காணாமலிருந்தான்); [எ-று.]

முன்னே. 'நளனையும் தமயந்தியையும் வருத்துவேன்' என்று தேவர்களிடம் சபதங்கூறிச் சென்ற கலிபுருஷன் உடனே நளனுடன் மாவிந்த நகரத்திற் புகுந்து பன்னிரண்டு வருஷகாலம் வரையிலும் அவனைப் பற்றுதற்குச் சமயம் பார்த்திருந்தும், நளன் ஒழுக்கத்திற் சிறிதும் தவறாதிருந்தபடியால் அவனைப் பற்றுவதற்கு ஏதுவில்லாமற் போயிற்று; அதனால் அக்கலிபுருஷன் அச்சமயத்தைக் காணாதவனாய் அங்கே காத்திருந்தான் என்பது இதன் கருத்து. கலி ஒழுக்கந் தவறுவோரிடத்திற்றான் சேரமுடியும்; மற்றையரிடத்தில் அணுகல் முடியாது என்பது பெறப்பட்டது.

எல்லையளவும் ஒன்பதிலுள்ள உம்மை முற்றும்மை. மற்றிரண்டும் சிறப்பும்மைகள். திரிந்தேயும் என்பதில் ஏகாரமும் சிறப்புப் பொருளதே; இதை அசையெனினுமாம். தவறு முதனிலைத் தொழிற்பெயர்; வேந்தன் தன் என்பதில், தன்-அசை. தவறும்-தவறு; இழிவு சிறப்பும்மை தொக்கது.

கலி, நளனிடத்தில் சேர்தல்.

201. சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தையெல்லாம்
தன்வயமே யாக்கித் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து.

[இ-ள்.] (இவ்வாறு கலிபுருஷன் காத்திருந்த காலத்தில்) சந்தி செய-சந்தியா வந்தனம் செய்யும் பொருட்டு, (ஒரு நாள் நளன்) தாள்-பாதங்களை, விளக்க-நீரைவிட்டுக் கழுவிச்) சுத்தி செய்ய, (அப்போது) தாளில், ஒரு பாதத்தில், (ஜலம் படாமல்) மறு-மாசு, (ஏற்பட) கண்டு-அதனைப் பார்த்து, புந்தி மகிழ- (தனக்குச் சமயம் வாய்த்ததென்று) சிந்தை சந்தோஷமடைய, புகுந்து-(அதன் வழியாக அரசனிடத்தில்) பிரவேசித்து, கலி-கலிபுருஷன், சிந்தை எல்லாம்-அரசனுடைய புத்தியை யெல்லாம், தன்வயமே ஆக்கி-தன் சுவாதீனத்திலிருக்கும்படி செய்து, பொன் அசலம் பொன் மலையை நிகர்த்த, மார்பன்-மார்பகத்தையுடைய நளனை, புகைந்து - கோபித்து, தமையனுடன் - (நளனுக்குத்) தமையன் முறைகொண்டவனாயிருந்த சிற்றரசனாகிய புஷ்கரன் என்பவனோடு, இருந்தான்-அவனுக்கு உதவி செய்பவனாயிருந்தான்; [எ-று.]

மேற்கூறியபடி கலிபுருஷன், தான் தொடரும் காலத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்க அவனுடைய எண்ணத்திற்கனுகூலமாக ஒருநாள் நளன் சந்தியாவந்தனம் செய்யும்பொருட்டு நீரை விட்டுக் கழுவிப் பாதங்களைச் சுத்தி செய்தான்; அப்போது ஒரு பாதத்தின் ஓரிடத்தில் ஜலம் படாமல் போய்விட்டது. அவ்விடம் புள்ளியாய் மாசுற்றிருந்தது. இங்ஙனம் நேர்வது ஒழுக்கங்கெட்ட செய்கையாதலால், இத்தோஷத்தைக் கண்டவுடனே கலிபுருஷன் சந்தோஷித்து நளனிடத்தே பிரவேசித்து, அவனுக்குத் தமையன் முறை பூண்டிருந்த புஷ்கரன் என்னும் ஒரு சிற்றரசனுக்கு அவனுடைய ஐசுவரியங்களை யெல்லாம் பறித்துக் கொடுக்க நாடி அவனோடு சேர்ந்திருந்தான் என்க. கலி புகுதலாவது ஒருவனிடத்திற் சேர்ந்து அவனுடைய புத்தியைத் தன் நோக்கம்போற் செல்லும்படி வசப்படுத்திக் கொள்ளுதலாம். இங்கே நளனிடத்திலும் அங்ஙனமே பிரவேசித்து அவனுடைய புத்தி முழுவதையும் வசஞ் செய்து கொண்டான். பின்னர்ப் புஷ்கரனைத் தனக்குத் துணைக் கருவியாகக்கொண்டு நளனைக் கெடுத்தற்கு அவனிடம் சேர்ந்தான்.

சந்தி-பகலும் இரவும் சந்திக்கும் காலம்; இது காலைக்கும் மாலைக்குமாகும். இக்காலத்திற் செய்யப்படும் மந்திரம் சந்தியெனப்படும். தண்ணீர்படாத விடம் மாசுடையதாதலின் மறு எனப்பட்டது. தான்-அசை. "இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும், உயர்திணை யிடத்து விரிந்துதொக்கும் விரவுப் பெயரின் விரிந்து நின்றும், அன்னபிறவு மாகுமைம்முருபே" என்னும் (நன். உரு-பு-16. ஆம்-சூ) விதிப்படி, மார்பற் புகைந்து இதில் மார்பன் என்னும் உயர்திணைப்பெயர் இரண்டன் தொகையில் ஈறு திரிந்து வந்தது. பொன்மலை மேருகிரி. செய என்னும் எச்சம் பின்னிகழும் பயனைக் குறித்தமையால் எதிர்காலத்ததாம். விளக்க என்னும் எச்சம் பின்வினைக்குக்காலக் குறியானதால் நிகழ்காலத்ததாம்.

நளனிடத்தில் கலி சேர்ந்த விதம்.

202. நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

[இ-ள்.] நாராயணாயநம என்று-நாராயணனுக்கு நமஸ்காரம் என்று சொல்லி, அவன் அடியில்-அந்த நாராயணனுடைய பாதங்களில், சேராரை-சேர்ந்து அவனைப் பூஜியாதவர்களை, வெந்துயரம்-கொடிய துன்பமானது, சேர்ந்தாற்போல்-அடைந்தது போல, பார் ஆளும்-பூமியை ஆளுகின்ற, கொற்றவனை-வெற்றியை யுடைய அரசனை, பார்மடந்தை-பூமிதேவியின், கோமானை-நாயகனாகிய விஷ்ணு

வென்னும் தன்மையுடையவனை, வாய்மை நெறி-சத்தியம் பொருந்திய வழிகளை, கற்றவனை-படித்தறிந்திருப்பவனாகிய நளனை, கலி-கலி புருஷன், (அந்நளன் காலைச் சரியாகப் பரிசுத்தம் செய்யாமையினாலே) சேர்ந்தான்-அடைந்தான்; [எ-று.]

நாராயணனைப் பூஜியாதவர்களைச் சம்சாரபந்த துன்பஞ் சேர்ந்து வருத்துவதுபோல, நளன் மகா உத்தமனா யிருந்தும் சந்தியாவந்தன காலத்தில் காலைச் சரியாகச் சுத்தி செய்யாத காரணத்தினாலே கலி அவனைச் சேர்ந்தான் என்பது இதன் கருத்து. நாராயணன் இரக்ஷகக் கர்த்தாவாதலினாலே அவனைப் பூஜிப்பவர்க்கு நன்மையே உண்டாகும்; இது போல் நல்லொழுக்கந்தவறாதவரிடத்திற் கலி சேரமாட்டான். 'நாராயணாயநம' என்பது விஷ்ணுவுக் குரிய மந்திரம்; இது, 'நாராயணனுக்கு நமஸ்காரம்' என்னும் பொருள் தரத்தக்க வடமொழித் தொடர் வாக்கியம்.

சேரார்-வினையாலணையும் பெயர். கொற்றவனை, கோமானை, கற்றவனை என்பன ஒரு பொருள் குறித்த பல பெயர்கள்; எல்லாம் நளனையே குறிப்பனவாம்; இவை "ஒரு பொருண் மேற்பல பெயர் வரி னிறுதி ஒரு வினை கொடுப்ப தனியுமொரோவழி" என்னும் (நன். பொது-41 ஆம் சூ.) விதியால் ஒருவினை கொண்டு முடிந்தன. பார்மடந்தை கோமான் என்பது நளனுக்கு உவமை யாகுபெயர்.

நளனுடைய அரசைச் சூதாடத்தால் வாங்கித் தருவதாகக் கூறிக் கலி, புஷ்கரனை அழைத்தல்.

203. நன்னெறியில் சூதா னளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகக்
கேதுவாய் நின்றா னெடுத்து.

[இ-ள்.] (மேற்கூறியபடி சேர்ந்த பின்பு புஷ்கரனிடம்) புலை-நீசத்துவமுள்ள, நரகுக்கு-நரகினுக்கு, ஏதுவாய்-காரணமாகி, நின்றான்-நின்றவனாகிய கலி, எடுத்து-குரலை உயர்த்தி, நல்நெறி இல்-நல்லவழி யில்லாத, சூதால்-சூது விளையாட்டினாலே, நளனை-நளனுக்கு, களவு இயற்றி-வஞ்சனையைச் செய்து, தன் அரசு-அவனது அரசாட்சியை, வாங்கித் தருகின்றேன்-நான் பறித்துக் கொடுக்கிறேன், மன்னவனே-புஷ்கரராஜனே.!, என்னுடனே போதுவாய்-என்னோடு வருவாயாக, என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

கலி, நளனிடத்திற் புகுந்து அவனுடைய புத்தியைத் தன் வசப்படுத்திக் கொண்ட பிறகு, அவனைக் கெடுக்கும் நோக்கமுடையவனைப் புஷ்கரனிடம் சென்று, அவனை நோக்கி, "மன்னனே! நீ என்னுடன் வருவாயானால் சூதாட்டத்தினாலே நளனுடைய அர